“போர் முறை இல்லாது... எதிர்ப்பு இல்லாது...” சுழலும் வியாழனின் இயக்கம்



நாம் பெற்று வளர்க்க வேண்டிய அழியாச் சொத்து

தீவிரவாதம் என்ற நிலையாகி மனிதனுக்கு மனிதன் கொன்று ரசித்து வாழ்வதும் அதே போல மனிதனையே புசித்திடும் நிலைகளும் வந்து விடுகின்றது,

தீவிரவாதிகளும் கொன்றவர்களைச் சும்மா விடுவதில்லை. பழி தீர்த்து அவனைக் கொன்று "அவனை உணவாக உட்கொண்டு வாழ்கிறேன்..." என்று சொல்கிறார்கள்.

1.அன்று ஒரு காலத்தில் ஆசியக் கண்டத்தில் இஸ்ரவேல் என்ற நாட்டில் யூதர்கள் இப்படிச் செயல்படுத்தி வந்தாலும்
2.அவர்களுக்குள் போர் வந்தால் பெண்களும் சரி ஆண்களும் சரி

3.உன்னைக் கொன்று உன் ஈரலை நான் விழுங்கப் போகின்றேன் என்பார்கள்.
4.சொல்வதோடு மட்டுமல்ல...! கொன்று அந்த ஈரலைப் பச்சையாகவே சாப்பிடுவார்கள்.

இதைப் போல வெறித்தனமான உணர்வுகள் கொண்டு அன்று செயல்படுத்தப்பட்ட நிலைகள் தான்.

ஆக... அந்த வம்சமே மற்றவர்களைக் கொன்று முழுமையாக அவர்களைத் தின்பது தான்.
1.அங்கே பரவிய அந்த உணர்வு தான்
2.உலகம் முழுவதற்கும் இப்பொழுது பரவிக் கொண்டிருப்பது.

புது வருடம் பிறந்து விட்டது முதல் தேதி என்று இவர்கள் கொண்டாடினாலும்... தீமைகளை உணர்த்தி தீமையிலிருந்து விடுபட வேண்டும் என்று இயேசு அதைச் சொல்லி இருந்தாலும் "அந்த வம்சம் தான் இரக்கமற்றுக் கொன்றது... அதை ரசித்து வாழ்ந்தது..."

இன்றைய நிலைகள் நடப்பது... அன்றைய இதனுடைய தொடர்ச்சி தான்...!

இதைப் போன்ற கொடுமைகளிலில் இருந்தெல்லாம் நாம் விடுபட வேண்டும் என்பதற்குத்தான் 25 வருடம் யாம் உங்களுக்குத் தொடர்ந்து அந்த மெய் ஞானிகளைப் பற்றி உபதேசித்து வருவது.

1.உங்கள் அனைவருக்குள்ளும் பரவச் செய்து அந்த அருள் மகரிஷிகள் உணர்வை ஏங்கிப் பெறும்படி செய்து செய்து கொண்டிருக்கின்றேன்.
2.அந்த மகரிஷிகள் உணர்வுகளை நாம் பெற்றால் ஒழிய இதிலிருந்து தப்ப முடியாது.
3.ஆகவே அருள் ஒளியைப் பெற்றுப் பிறவியில்லா நிலை அடைய வேண்டும்.

இன்றைய உலகச் சூழ்நிலையில் எந்தச் செல்வத்தையும் காக்கும் திறன் எவருக்கும் இல்லை.

1.ஆனால் என்றும் அழியாச் செல்வத்தை... அருள் ஞானச் செல்வத்தை.. அருள் சக்தியாக நமக்குள் உருவாக்கி விட்டால்
2.இதை யாரும் தடுக்க முடியாது... அதை அழித்திட முடியாது.

ஆறாவது அறிவின் துணை கொண்டு அந்த அருள் சக்திகளை வளர்க்க வேண்டும். அந்த ஒளியின் தன்மையாக நாம் அனைவரும் வளர வேண்டும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

பல கோடிச் சரீரங்களில் உயிர் கடவுளாக நின்று எண்ணியதை எல்லாம் உருவாக்கிக் கொண்டே உள்ளது. அதாவது
1.பரமாத்மாவாக மாறுவதைத் ஆன்மாவாக மாற்றித் தனக்குள் ஜீவான்மாவாக மாற்றுகிறது
2.அதுவே உள் நின்று கடவுளாக ஒவ்வொரு உணர்வுகளையும் உறுப்புகளையும் நமக்குள் உருவாக்குகிறது

இவ்வாறு உருவுக்கு உறுதுணையாக நம் உயிரின் செயலாக்கங்கள் எவ்வாறு இருக்கிறது...? என்ற நிலையைத் தெளிவாக எடுத்துரைத்தான் அன்று வியாசகன்.

ஆதியில் அகஸ்தியன் கண்டுணர்ந்த உணர்வின் தன்மையைப் பகுத்தறிந்து உணர்வின் செயலால் சாதாரண தன் இன மக்களுக்கு இது கிடைக்க வேண்டும் என்று இந்த 4000 ஆண்டுகளுக்குள் மிகத் தெளிவான நிலைகள் வியாசகன் கொடுத்தான்.

ஆனால் இதையெல்லாம் சாங்கிய சாஸ்திரமாக மாற்றப்பட்டு... மனிதனின் முழுமையின் உண்மை நிலைகளை அறியாதபடி...
1.மனிதனான பின் நாம் எங்கே செல்ல வேண்டும்...? என்ற நிலை தடுமாறி
2.கடவுளுக்கு நைவேத்தியம் செய்தால் நம்மைக் காப்பாற்றுவான் என்றும்
3.அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தால் அவன் மகிழ்ந்து எனக்கு உதவி செய்வான் என்றும்
4.இத்தகைய எண்ணங்களைத் தான் நமக்குள் உருவாக்கி விட்டார்களே தவிர
5.மனிதன் மகரிஷிகள் உணர்வைத் தனக்குள் எடுத்தால் தீமையான உணர்வுகளில் இருந்து மீள முடியும்
6.அந்த மகரிஷிகள் சென்ற இடத்தை நாம் அடைய முடியும் என்று உணர்த்தவில்லை.

அந்த மகரிஷிகள் வெளிப்படுத்திய உணர்வுகள்...
1.அவர்கள் சொன்னது அனைத்தையும் உங்களுக்குத் தினசரி பதிவாக்கி தெளிவாக்கி
2.அதன் உணர்வை நினைவாக்கி உங்களைக் காப்பதும்
3.உங்கள் மூதாதையர்களை விண் செலுத்திக் காப்பதும்

4.இந்த உடலை விட்டுச் சென்றால் நாம் எங்கே செல்ல வேண்டும்...? என்ற நிலையை உணர்த்தி வருகின்றேன் (ஞானகுரு).

நமது குருநாதர் மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் அனுபவத்தின் வாயிலாக இந்த உணர்வின் இயக்கங்களை எம்மை அறியச் செய்து எல்லோருக்கும் உணர்வைப் பதிவு செய்யும்படி சொன்னார்.

அந்த அருள் வழிப்படி ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் அறிந்து இந்த வாழ்க்கையில் தீமைகளை அகற்றித் தீமையற்ற உணர்வைத் தன்னில் விளைய வைக்க முடியும்.

வான்மீகி படித்தவன் அல்ல... வியாசகரும் படித்தவர் அல்ல. அதைப் போன்று தான் கிராமத்தில் வாழக்கூடிய படிப்பறிவில்லாத மக்களாக இருந்தாலும்
1.எம்முடைய உபதேச உணர்வுகளைப் பதிவு செய்து கொண்டால் போதும்
2.இந்த நினைவு உங்களைக் காத்திடும் எண்ணமாக வரும்.

எத்தகைய தீமையாக இருந்தாலும்... உங்களைக் காத்து மற்றவர்களைக் காத்தாலும்... அந்தத் தீமைகள் உங்களைச் சாடாது "உங்களைக் காக்கும் வலுவான எண்ணங்களை நீங்கள் பெற முடியும்..." என்பதற்கே இதை உபதேசிக்கின்றேன்.

"எத்தகைய தீமையை உருவாக்குபவரை" நீங்கள் உற்றுப் பார்த்தாலும் அதன் உணர்வை நுகர நேர்ந்தாலும் அவர்களுக்கு நீங்கள் உதவி செய்தாலும் அந்தத் தீமையின் உணர்வுகள் உங்களுக்குள் இணைந்து விடாது.

அதே சமயம் அந்த மகரிஷியின் உணர்வால் உங்களைக் காத்திட முடியும். தங்கத்தில் திரவகத்தை ஊற்றினால் எவ்வாறு அந்தத் திரவகம் அதில் சேர்ந்த செம்பையும் பித்தளையும் ஆவியாக நீக்குகின்றதோ... இதைப் போன்று
1.உபதேசம் கேட்கும் அனைவருக்கும் இந்த உணர்வின் ஆற்றல் மிக்க நிலைகள் எம்மால் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டு
2.எப்போது எந்த நிமிடத்தில் பிறருக்கு உதவி செய்கின்றீர்களோ
3.அவர்களின் வேதனைக் குரலைக் கேட்டு அவர்களுக்குப் பரிவான நிலைகள் கொண்டு உதவி செய்தாலும்
4.ஈஸ்வரா என்று உங்கள் உயிரை வேண்டி அந்த மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும்
5.அது எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் எங்கள் ஜீவான்மா ஜீவணுக்கள்

பெற வேண்டும் என்று பல முறை சொல்லி விட்டால்
6.திரவகம் போன்று இருக்கும் இந்த மகரிஷிகளின் அருள் உணர்வுகள் தீமையைக் கேட்டறிந்ததைத் தூய்மைப்படுத்தும்.

அதைத் துடைத்து விட்டு... தீமையில் வாடுபவர் அந்த மகரிஷிகளின் சக்தி பெற வேண்டும் அவர் நோய் நீங்க வேண்டும் அவர் எதிர்காலம் மகிழ்ந்திருக்க வேண்டும் என்ற இந்த உணர்வுகளை உங்களுக்குள் படைத்திடல் வேண்டும் (இது முக்கியம்).

இந்த உணர்வின் செயலாக வெளிப்படுத்துவதை இதே சூரியனின் காந்த சக்தி கவர்ந்து
1.எவர் கேட்டுணர்ந்தாலும் அவர் உடலிலும் புகுந்து
2.அந்தத் தீமையை அகற்றிடும் சக்தியாக விளையும்.

விநாயகர் தத்துவத்தில் இத்தகைய நிலையைத் தான் ஞானிகள் காட்டியுள்ளார்கள்.
1.தன் வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும்...?
2.தன் வாழ்க்கையில் வரும் நன்மைகளை எவ்வாறு காக்க வேண்டும்...?
3.பிறருடைய தீமைகளிலிருந்து நாம் எப்படி விடுபட வேண்டும்...?
4.தீமையில் வாடுவோருக்கு நாம் எவ்வாறு உதவி செய்ய வேண்டும்...?
5.தீமையான நிலைகள் தன்னைப் பற்றிடாது எவ்வாறு வாழ்ந்திட வேண்டும்...?
என்ற இந்த நிலையை
6.சாதாரண பாமர மக்களும் அறிந்துணர்ந்து கொள்வதற்குத் தான் விநாயகர் தத்துவம் தெளிவாகக் காட்டப்பட்டது ஞானிகளால்...!



தீமைகளிலிருந்து நாம் எப்படி விடுபட வேண்டும்...? தீமையில் வாடுவோருக்கு நாம் எவ்வாறு உதவி செய்ய வேண்டும்...? தீமை தன்னைப் பற்றிடாது எவ்வாறு வாழ வேண்டும் என்று பாமர மக்களும் அறிந்து கொள்வதற்குத் தான் விநாயகர் தத்துவம் காட்டப்பட்டது ஞானிகளால்...!



யாம் பதிவு செய்வதை எல்லாம்... “உள் உணர்வால்” அறிய வேண்டும் என்ற ஒரு கட்டாயத்திற்கு வாருங்கள்

வானியல் தத்துவத்தில் 27 நட்சத்திரங்கள் வெளிப்படுத்தும் சக்திகளில் வெள்ளிக்கோள் ஒளியான உணர்வுகளை எடுத்துக் கொள்கின்றது. கேதுக் கோள்

விஷத்தை எடுத்துக் கொள்கின்றது. கருகிய புகைகளை ராகுக் கோள் எடுக்கிறது. செவ்வாய்க் கோள் நாதங்களை எடுத்துக் கொள்கின்றது.

இந்த உணர்வலைகள் பிரபஞ்சத்திற்குள் பரவப்படும் பொழுது அதனதன் சக்தி கொண்டு அதனதன் நிலைகளை எடுத்துக் கொள்கின்றது.

இதைப் போன்று தான் மனிதர்கல் நமக்குள்ளும் ஒரு உணர்வின் தன்மை உயிருடன் மோதி ரத்தத்தில் கலக்கப்படும் பொழுது இணைகிறது.

1.பித்த சுரப்பிகள் பித்தத்தைக் கவர்கிறது... விஷத்தன்மைகள் அனைத்தையுமே அது கவர்கின்றது.
2.நுரையீரல் கல்லீரல் மண்ணீரல் அந்த அணுக்கள் அதைச் சுவாசித்து அதனின் மலங்களாக அந்தக் கூட்டைக் (உறுப்பு) கட்டுகிறது.

வியாழன் கோள் சனிக் கோள் போன்று நம் உடலில் உறுப்புகள் எப்படி மாறுகின்றது...? பிரபஞ்சத்தைப் போல உடலுக்கு உயிர் சூரியனாலும் அது நட்சத்திரம் தான். இந்தப் பிரபஞ்சத்திற்குச் சூரியன் ஆனாலும் அகண்ட அண்டத்திற்கு அது நட்சத்திரம் தான் என்று குரு காட்டுகின்றார்.

இந்தப் பிரபஞ்சம் எப்படி இயக்குகின்றதோ உடல் ஒரு பிரபஞ்சம். 2000 சூரியக் குடும்பங்கள் அது ஒவ்வொரு பிரபஞ்சமாக இருக்கின்றதோ ஒவ்வொன்றும் வெளிப்படுத்துவதை ஒன்றுடன் ஒன்று கலவையாகி எடுப்பதும் இப்படி ஒவ்வொன்றும் எடுத்து வளர்த்துக் கொள்கின்றது.

ஒவ்வொரு மனிதனை எடுத்துக் கொண்டாலும் அதுவும் ஒவ்வொன்றும் தனிப் பிரபஞ்சம் தான். அது இயற்கையில் கிரேதா யுகம்.
1.ஆனால் திரேதா யுகம் (உடலுக்குள்) பிறருடைய உணர்வுகளை நுகரப்படும் பொழுது உணர்வின் எண்ணங்கள் எப்படி மாறுகின்றது...?
2.உணர்ச்சிகள் உடலுக்குள் எப்படி மாறுகின்றது...?

நட்சத்திரங்கள் பால்வெளி மண்டலங்களாக மாற்றப்படும் பொழுது இந்த உணர்வுகளை மாற்றப்பட்டு சூரியன் தெளிவாக எடுத்துக் கொள்கின்றது. இதைப் போல் மனிதனான நாம் நம் ஆறாவது அறிவின் தன்மை கொண்டு பிறரின் உணர்வுகள் நம் உடலுக்குள் வந்து ரத்தத்தில் கலக்கப்படும் பொழுது ஒவ்வொரு உறுப்புகளும் அந்த விஷத்தின் ஆற்றலை எடுக்கின்றது... அதனதன் உணர்வுகளைப் பிரித்து எடுத்துக் கொள்கிறது.

வெள்ளிக் கோள் எப்படி ஒளியின் தன்மை பெறுகின்றதோ இதைப்போல
1.நம் உணர்வின் அறிவின் தன்மையை நமக்குள் அறிவு ஒளி என்று உணர்த்தும்
2..நமது அணுக்களை உருப் பெற வைக்கும் “சிறுமூளை பாகம்...” அதை இயக்குகின்றது...
3.உணர்வின் அறிவாக எடுத்து நமக்குத் தெளிவாக்குகின்றது.

சுவாசிப்பது நுரையீரலுக்கு வரும் பொழுது அதை எப்படிச் சுத்தமாக்குகின்றது...? கல்லீரல் மண்ணீரலுக்கு வரப்படும் பொழுது பிரபஞ்சத்தைப் போன்று எவ்வாறு சீராக இயங்குகின்றது...?

சூரியன் முதலில் வளர்ச்சி ஆவதற்கு முன்... ஒரு பிரபஞ்சமாக ஆவதற்கு முன்... எப்படி உயிரணு தோன்றிப் புழுவில் இருந்து மனிதனாக வரும் வரையிலும் ஒவ்வொரு அங்கங்கள் உறுப்புகள் மாறி மாறி... மாறி மாறி... ஒரு பிரபஞ்சம் என்ற நிலைகள் முழுமை அடைகின்றது.

சூரியன் எப்படி நஞ்சைப் பிரித்து நல்ல உணர்வுகளை எடுத்துக் கொள்கின்றதோ இதைப் போல மனிதனுக்குள் இருக்கும் ஆறாவது அறிவு நாம் நுகருவதற்குள் இருக்கும் நஞ்சைப் பிளந்து நல்ல உணர்வாக எடுத்துக் கொள்ளும் அறிவாகப் பெற்றதுதான் இந்த உடல் என்ற நிலையைக் குருநாதர் தெளிவாக்குகின்றார்.

ஒவ்வொரு மனிதனும் ஒரு பிரபஞ்சம்...! ஒவ்வொரு நட்சத்திரத்தின் உணர்வு கொண்டு அதன் வழியில் எதிர்நிலையாகி இயக்கிப் பொறிகளை உருவாக்கி அதற்குத் தக்க உடல்களை மாற்றி மாற்றி வந்தது.

1.யாம் உபதேசிக்கும் அருள் உணர்வுகளை உங்கள் கண் கருவிழி பதிவாக்குகின்றது.
2.அதை நுகரும் தன்மை வரப்படும் பொழுது அதை மீண்டும் எண்ணினால்
3.அதைப் பெற வேண்டும் என்ற உணர்வு எடுக்கப்படும் பொழுது
4.கண்ணுடன் சேர்ந்த காந்தப் புலன் அதைக் கவரும் தன்மை வருகின்றது.
5.கவர்ந்த உணர்வு உயிரிலே படும் போது அந்த உணர்ச்சிகள் தெரியும்.

இதற்கு முந்தி... மனிதன் எண்ணத்தில் எடுத்துக் கொண்ட உணர்வு கொண்டு தெய்வங்களை வணங்கப்படும் பொழுது அது எந்தெந்த உருவத்தைக் கண்டோமோ அது அலைகளாக மாறுகின்றது.

அதே தெய்வத்தின் உணர்வை எடுக்கப்படும் பொழுது ஒரு மனிதனில் பெற்ற அந்த உணர்வினைப் பெற்றால் அதே மனித உணர்வு வரப்படும் பொழுது
1.அவனுக்குள் வளர்த்துக் கொண்ட உணர்வு ஆவியாகவும் பேயாகவும் தெய்வமாகவும் காட்சி தருகின்றது.
2.இது மனிதனின் உடலில் விளைந்தது.

ஆனால் இப்போது ஞானிகளால் உருவாக்கப்பட்ட சப்தரிஷி மண்டலங்களின் உணர்வினை அறிவதற்கு உங்களுக்குள் பதிவு செய்கின்றோம். சூரியனால் கவரப்பட்ட சூனியப் பிரதேசத்திலிருந்து அந்தச் சூரியன் எப்படி வளர்ந்தது...? என்ற நிலையில் அந்தச் சூனிய மண்டலம் ஆதியிலே எப்படி உருவானது...? என்ற நிலைகளை நீங்கள் அறிய முடியும்.

1.அதை நுகரப்படும் பொழுது அறியும் ஆற்றல் வரும்... அறிய முயற்சி எடுங்கள்.
2.அகண்ட அண்டத்தின் உணர்வுகளை உங்களுக்குள் பதிவு செய்கின்றோம்.

அப்படி பதிவானாலும் சில நேரங்கள் சந்தர்ப்ப பேதங்களில் யாம் பதிவு செய்த உணர்வுகள் உங்களுக்குள் உண்டு. "அந்தப் பதிவின் துனை கொண்டு" நீங்கள் மீண்டும் எண்ணி எடுக்க முடியும்.

1.ஆனால் பல விதமான உணர்வுகள் ஆன்மாவிலே சேர்ந்திருக்கும் பொழுது சேர்க்கப்படும் பொழுது
2.இந்த உணர்வுகள் கலந்த பின் உடலின் ஈர்ப்பு அதிலே அதிகமான பின் பிற மண்டலங்களிலிருந்து வருவதைத் தடுக்கும்.
3.தடுத்தாலும் எப்படியும் பெற வேண்டும் என்று உள் உணர்வைச் செலுத்தி
4.அதை எல்லாம் பெற வேண்டும் என்ற ஏக்கத்தில் இருந்தால் நிச்சயம் நீங்கள் பெற முடியும்.
5.குருநாதர் எனக்குள் பதிவு செய்தது போன்றே உங்களுக்குள்ளும் பதிவு செய்கின்றேன்.

இதை நீங்கள் சீக்கிரம் வளர்த்துக் கொண்டால் அகண்ட அண்டம் எப்படி ஆனது...? என்ற அந்த உண்மையின் இயக்கத்தை அதில் சூரியக் குடும்பம் ஒரு பிரபஞ்சம் எப்படி உருவானதோ...? இதைப் போன்று பல சூரியக் குடும்பங்கள் எப்படி உருவானதோ அதை எல்லாம் உங்களுக்குள் உணர்வின் அறிவாக நீங்கள் தெளிவாக இது உதவும்.

1.குருநாதர் எனக்குக் காண்பித்த முறைப்படி வழிப்படி உங்களுக்குள்ளும் இதைப் பயிற்சியாகக் கொடுக்கின்றேன்.
2.நீங்கள் தியானத்தின் மூலம் நிச்சயம் பெற முடியும்... உணர முடியும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

உபதேசம் கொடுத்துக் கொண்டே வருகின்றேன் (ஞானகுரு). மீண்டும் அதை ஞாபகப்படுத்தும் நிலையாகத் திரும்பச் சொல்லும் பொழுது
1."சாமி சொன்னதையே திரும்பச் சொல்கிறார்..." என்ற நினைவு வந்துவிடும்.
2.அப்புறம் பார்க்கலாம் என்று "இதைக் கேட்பதை மறந்து விடுவார்கள்..."

ஒரு செடி கசப்பின் தன்மை கொண்டு உருவான பின் மீண்டும் அந்தக் கசப்பினை நுகர்ந்தால் தான் அந்தச் செடியின் தன்மை வளர முடியும். ரோஜாப் பூ தன்னுடைய நறுமணத்தை மறந்து விட்டோம் என்று மீண்டும் மீண்டும் அதை நுகர்ந்தறிந்தால் தான் ரோஜாப்பூ நறுமணம் அங்கே வரும்.

1.ஒரு மாடோ ஆடோ எந்த உணர்வைத் தனக்குள் உணவாக எடுத்துக் கொண்டதோ
2.அதை மீண்டும் நினைவு கொண்டு உட்கொண்டால் தன் இனமாக... உடலாகி... நோயற்றதாக வாழும்.

ஆனால் அந்தத் தாவர இனைத்தைப் புசித்த மாடு மாற்றுத் தாவரத்தை அது சாப்பிடுமே என்றால் இந்த உணர்வுக்கு எதிர்நிலையாகி மாட்டிற்கு நோய் வந்துவிடும்.

ஆகவே நுகர்ந்து பார்த்துத் "தன் இனம் அல்ல" என்றால் அதை உட்கொள்ளாது விலகிச் செல்கின்றது. இதைப் போன்று தான்
1.நாமும் தீமை என்ற நிலைகளைக் கேட்டறிந்தால் அந்தத் தீமையின் உணர்வுகள் நமக்குள் வராதபடி அதிலிருந்து விடுபட வேண்டும்
2.அவ்வாறு விடுபட வேண்டும் என்றால் அந்த மகரிஷிகளின் அருள் சக்தியைத் தனக்குள் புகுத்துதல் வேண்டும்
3அவ்வாறு புகுத்தி விட்டால் அது தீமை அடக்கிடும் சக்தியாக நமக்குள் மாறும்.

இதை நாம் எளிதில் கண்டுணர்வதற்குத் தான் அந்த மகரிஷிகள் தெளிவான நிலைகளில் மனிதனின் வாழ்க்கையில் வரும் தீமைகளை எவ்வாறு எளிதில் அகற்ற முடியும்...? என்று தெளிந்த மனம் கொண்டு வாழ்வதற்குச் சாஸ்திரங்களைக் கொடுத்துள்ளார்கள்.

அதாவது...
1.சூட்சமத்தில் மறைந்திருக்கும் உண்மைகளை நாம் அறிய முடியவில்லை
2.அதை அறிவதற்காக வேண்டி உருவமாக்கி... அதைக் கதைகளாக்கிக் காவியமாகப் படைத்துள்ளார்கள் மெய் ஞானிகள்.

எண்ணத்தால் நமக்குள் அதைப் பதிவு செய்து... அந்த எண்ணத்தின் துணை கொண்டு ஞானிகள் காட்டிய உண்மை வழிப்படி காற்றிலே மிதந்து கொண்டிருக்கும் அருள் உணர்வுகளைத் தனக்குள் எடுத்து அடிக்கடி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

1.எதுவுமே பதிவு செய்யாதபடி நினைவுக்கு வராது
2.பதிவு இல்லை என்றால் நினைவு ஏது...?

ஒருவர் என்னைத் திட்டினார் என்று பதிவு செய்து கொண்டால் தான் அது மீண்டும் நினைவுக்கு வரும். திட்டியது பதிவாகவில்லை என்றால் அந்த நினைவு வராது.

உதாரணமாக... இரயிலில் பயணம் செய்யும் பொழுது ஒருவர் நம்முடன் நல்லவராகப் பேசிக் கொண்டு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம்.


அப்படிப் பயணம் செய்யும் பொழுது அவர் உள் உணர்வுகளில் எதிர்பாராதபடி திடீரென்று பயத்தினால் துடிக்கின்றார்... பார்க்கின்றோம்... பதிவாக்குகின்றோம்.

“ஐயோ நல்ல மனிதன்...! இவ்வளவு நேரம் நன்றாகப் பேசிக் கொண்டிருந்தாரே... இப்பொழுது திடீரென்று அவர் துடித்து விட்டாரே...!” என்று அடுத்தாற்போல் போல் நாம் இதைத்தான் சொல்வோம்.

1.ஆகவே அவரைப் பற்றிய அந்தப் பதிவு இல்லை என்றால் நினைவு மீண்டும் வராது
2.அதே போல் பள்ளியில் பாடங்களைப் படிக்கும் போது அதிலே பதிவு இல்லை என்றால் படித்தது மீண்டும் நினைவிற்கு வராது.

ஆகவே எதிலுமே பதிவின் நினைவே நமக்குள் வருகின்றது. அதற்காக வேண்டித் தான் அருள் உணர்வுகளைத் திரும்பத் திரும்ப உங்களுக்குள் பதிவு செய்து அதை நீங்கள் நினைவு கொள்ளும்படிச் செய்கின்றேன்.

அவ்வாறு நினைவு கொண்டு மகரிஷிகளின் அருள் சக்திகளை எடுத்தால்
1.தீமையை நீக்கக்கூடிய சக்தியை நீங்கள் பெறலாம்
2.உயிரோடு ஒன்றலாம்... அழியா ஒளிச் சரீரம் பெறலாம்
3.மகரிஷிகள் வாழும் எல்லைக்குச் செல்லலாம்.





“போர் முறை இல்லாது... எதிர்ப்பு இல்லாது...” சுழலும் வியாழனின் இயக்கம்

27 நட்சத்திரங்களும் பிற மண்டலங்களில் இருந்து சக்திகளைக் கவர்ந்து நம் பிரபஞ்சத்திற்குள் அனுப்புகின்றது. இவ்வாறு ஒவ்வொரு கோளுக்குள்ளும் சென்று வரும் அந்தச் சக்திகள்

1.வியாழன் கோளுக்கு வரும் பொழுது எத்தகைய நட்சத்திரங்களின் மோதலின்

கலவைகளில் வருகின்றதோ
2.அது 27 உபக்கோள்களை வைத்து அவைகளைக் கவருகின்றது.

சூரியன் எப்படி எடுத்துக் கொள்கின்றதோ அதைப் போல் தனக்குள் அதை எடுத்து எடுத்து... கோள்களிலே வளர்ச்சி அதிகமாகி.. சுழற்சியின் ஈர்ப்பு வட்டத்தில் உபக் கோள்களை வியாழன் வளர்த்து வைத்திருக்கின்றது.

வளர்த்துக் கொண்ட உணர்வுக்குத் தக்கவாறு வியாழன் கோள் 27 நட்சத்திரங்களின் சக்தியை ஒன்றாகச் சமைத்து அதை ஆவியாக மாற்றி உறைபனியாக மாற்றிக் கொள்கின்றது.

இது கவர்ந்து கொண்ட உணர்வுகள் வெளிவரும் பொழுது
1.வியாழனின் சுழற்சி அதிகமாகும் பொழுது எல்லாவற்றையும் அதனுடன் இணைத்து
2.புதுவிதமான அணுக்களை இணைத்துக் கொள்ளும் ஒரு பாலமாக அமைகின்றது.

நம் உயிர் இந்த உடலுக்குள் இயங்கும் பொழுது எந்த உணர்வின் தன்மை பெற்றோமோ... உதாரணமாக வேதனை என்று வரப்படும் பொழுது அந்த உணர்வுகள் உயிருடன் சேர்க்கப்படும் பொழுது எதன் வலுவோ அதன் வழி நமக்குள் மாற்றுகின்றது.

உடலான இந்தக் கோளுக்கு நமது உயிர் குருவாக இருக்கின்றது. இதைப் போன்று தான் இந்தப் பிரபஞ்சத்திற்குச் சூரியன் ஆனாலும்
1.வியாழன் கோள் இந்தப் பிரபஞ்சத்திற்குக் குருவாக இருக்கின்றது.
2.அதனால் தான் குரு என்று காரணப்பெயராக வைத்தார்கள்.

அதற்குள் வரும் அனைத்தையும் இணைத்துப் புது விதமான அணுக்களாக மாறுகின்றது. இதற்குள் நட்சத்திரங்களின் மின்னல் கதிரியக்கங்கள் ஊடுருவினால் இரண்டும் ஆண் பெண் என்ற நிலைகளில் உருவாகும் பொழுது அணுக்களாக மாறுகின்றது... வளர்ச்சியடைகின்றது.

அப்படி வளர்ச்சி அடைந்த உணர்வின் தன்மை தான் சூரியன் கவரும் தன்மை வருகின்றது.

27 நட்சத்திரங்கள் சக்தியை வியாழன் எடுத்துத் தன் சுழற்சியின் வேகத்தில் வெப்பத்தின் தணல் கூடி ஆவியாக மாற்றி மேல் பரப்பில் உறையும் தன்மை வருகின்றது.

கரண்டை வைத்து நாம் ஐஸ் பெட்டியை (ஃபிரிட்ஜை) உருவாக்குவது போன்று அதே கரண்டை வைத்து சூட்டை உருவாக்குவது போன்று
1.வியாழன் கோள் பல விதமான உணர்வுகள் கொண்டு அமைதிப்படுத்திப் "போர் முறை இல்லாதபடி..."
2.அந்த உணர்வின் தன்மை வேக வைத்து அமைதியின் தன்மை "எதிர்ப்பு இல்லாதபடி..." உருவாக்குகின்றது.

அது தான் 27 நட்சத்திரத்தின் உணர்வை தனக்குள் சேர்த்துக் கொள்கின்றது.

ஆனால் ஜாதகங்களில் பல விதமாகக் காட்டியிருப்பார்கள் ஆனால் உண்மை எதிலிருந்து வருகிறது...? என்று தெரியாது.

கோள்களைப் பிரித்துத் தான் எழுத முடியுமே தவிர சூரியனுக்கு நேராக வரும் போது ஒரு கோளின் தன்மை இணைந்து சுழல் வட்டத்தில் வரும் என்று இப்படித்தான் அவர்கள் அதைப் பிரித்து காட்ட முடியுமே தவிர இயற்கையின் உண்மையின் இயக்கங்களைச் சொல்ல முடியாது.

1.இதையெல்லாம் மனிதனுக்கு உகந்த நிலைகளாக எழுதப்பட்டு மதத்திற்குத் தக்கவாறு ஜாதகத்தைப் பிரித்து
2.இந்த நேரத்தில் இதைச் செய்தால் ஆண்டவனுக்கு ஆகாது என்பார்கள்.
3.ஆனால் ஆண்டவன் அதை எல்லாம் மாற்றி அமைக்கும் சக்தி பெற்றவன் என்று
4.ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு இடத்திற்கும் தக்கவாறு ஜாதகத்தைக் குறித்து விட்டார்கள்.

இதை வைத்துத்தான் நாம் நல்ல நேரம் கெட்ட நேரம் பார்த்து அலைந்து கொண்டுள்ளோம்.

ஆக எது பதிவோ அந்த நினைவு நமக்குள் அந்த உணர்ச்சிகளை ஊட்டுகின்றது. எந்தெந்த நிலைகளை இப்படி எடுத்துக் கொள்கிறோமோ அந்தப் பதிவுதான் செயல் ஆகின்றதே தவிர நல்ல நேரமோ கெட்ட நேரமோ இல்லை.

1.அந்த கோள்களின் இயக்கத்தில் மனிதன்... இவர்கள் சொல்வது போன்று இல்லை.
2.ஆனால் சூரியன் எல்லாவற்றையும் கவர்ந்து வரும் போது தாவர இனங்களுக்கோ கல் மண் இவைகளுக்கோ அது சேரும்... அதனின் இயக்கமாகும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மனித வாழ்க்கையில் கஷ்டங்களும் சிரமங்களும் ஏற்பட்டால் அதைத் தீர்க்க "சாங்கிய சாஸ்திரத்தின்படி" இன்று முயற்சிக்கின்றார்கள்.
1.இங்கே கேட்டால் எனக்கு நல்லதாகும்... அங்கே கேட்டால் என்னுடைய கஷ்டங்கள் தீரும்
2.இன்ன இடத்தில் அல்லது இன்ன ஆலயத்தில் யாக குண்டம் இறங்கினால் எனக்கு நல்லதாகும்
3.கற்பூரத்தைக் கொளுத்தினால் எனக்கு நல்லதாகும் என்று
4.தனக்குள் எண்ணும் இத்தகைய எண்ணங்களை வலுக்கூட்டி விட்டு...
5.இன்றைய நிலைகளுக்கு (பிழைப்புக்கு) இதைப் பெற்றால் நல்லதாக இருக்கும் என்று எண்ணுவது "அது தீமையே..."

நெருப்புக்குள் ஒரு பொருளைப் போட்டால் அந்த மணம் சிறிது சிறிது நேரத்திற்கே இருக்கும்... அடுத்த கணம் மறைந்துவிடும்.

அதைப் போன்று தான் நம் உயிரின் நிலைகள் கொண்டு மேலே சொன்ன வழியில் எண்ணங்களைத் தோற்றுவிக்கும் பொழுது... இந்த உணர்வலைகள் படரும்... நினைவுகளைக் கூட்டும்... ஆனால் அடுத்து அது எல்லாமே அழிந்துவிடும்.

ஆனால் ஞானிகள் காட்டிய சாஸ்திர விதிப்படி நாம் செயல்படுவோம் என்றால்
1.மகரிஷிகள் சென்றடைந்த எல்லையை எளிதில் அடைய முடியும்.
2.அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ வேதனைப்படத் தேவையில்லை
3.பொருள்களை (செல்வம்) நாம் விரயமாக்க வேண்டியது இல்லை.
4.எங்கெங்கோ தேடிச் சென்று அவர் செய்வாரா...? இவர் செய்வாரா...? என்ற எதிர்பார்ப்பில்
5.மற்றவர்களை நாட வேண்டியதில்லை... அவர்களை எண்ணி ஏமாறவும் வேண்டியதில்லை.

ஞானிகள் உருவாக்கிக் கொடுத்த சாஸ்திர விதிப்படி ஒவ்வொரு ஊரிலும் தெருக்களில் மாரியம்மன் உண்டு... தெருவின் மூலைகளில் விநாயகனையும் அமைத்து இருப்பார்கள்.

முறைப்படி அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் ஈஸ்வரா...! என்று எண்ணினாலே போதும்...! மெய் ஞானிகள் காட்டிய சாஸ்திரங்களின் உண்மைகள் உங்களுக்குள் பதிவாகி
1.உங்கள் எண்ணங்கள் வலுவாகி... மகரிஷிகளின் உணர்வை உங்களுக்குள் வலுப்பெறச் செய்து... தீமைகளைச் சுட்டுப் பொசுக்க உங்களால் முடியும்.
2.மகரிஷிகளின் உணர்வுகளை நீங்கள் நுகரப்படும் பொழுது உங்கள் உயிரே கடவுளாக நின்று
3.தீமைகளைப் போக்கும் சக்தியாகப் பரப்பித் தீமையற்ற உணர்வாக மாறும்.

துருவ மகரிஷியுடனும் சப்தரிஷி மண்டலங்களுடனும் உங்கள் நினைவு கூர்மையாகி (கூர்மை அவதாரமாக) அது வலுவாகும் போது வராகனாக மாறி தீமையான நிலைகளைப் பிளந்து விடும்.


என்றும் அழியாத நிலைகள் கொண்டு பெரு வீடு பெரு நிலை என்ற நிலைகளில் தெளிவாக நாம் அடைய முடியும். ஆகவே உங்களை நீங்கள் நம்புங்கள்.

மனிதனாக உருவாக்கிய உயிர் நீங்கள் நுகர்ந்த உணர்வின் அறிவையே எண்ணங்களாக "ஓ..." என்று ஜீவனாக்கி... இயக்கி... உடலாக மாற்றிவிடுகிறது.

மனிதனான பின் எதைச் செய்ய வேண்டும் என்ற நிலையைக் கண்டுணர்ந்த மகரிஷிகள் தனக்குள் வலிமைமிக்க சக்திகளைப் பெற்று தீமைகளிலிருந்து நீக்கிடும் நிலைகளைக் காட்டினார்கள்.
1.அதை நாம் அனைவரும் எளிதில் பெற முடியும்
2.தீமைகளை நாம் எளிதில் அகற்ற முடியும்
3.அந்த மகரிஷிகளுடன் ஒன்றாக இணைய முடியும் என்ற தன்னம்பிக்கை கொண்டு உங்கள் வாழ்க்கையைச் செயல்படுத்துங்கள்.



மனிதனான பின் எதைச் செய்ய வேண்டும் என்ற நிலையைக் கண்டுணர்ந்த மகரிஷிகள் தனக்குள் வலிமைமிக்க சக்திகளைப் பெற்று தீமைகளிலிருந்து நீக்கிடும் நிலைகளைக் காட்டினார்கள். அதை நாம் அனைவரும் எளிதில் பெற முடியும். தீமைகளை நாம் எளிதில் அகற்ற முடியும்.



நாம் புறத்திலிருந்து சுவாசிப்பது உடலில் அணுக்களாக விளைந்து அடுத்த உடலுக்கு வித்திடும் விசித்திரம்

பேட்டரிகளை எல்லா வகைகளிலும் இன்று உபயோகப்படுத்திக் கொண்டு வருகின்றோம். அதனுடைய பயன்பாடுகள் முடிந்தபின் அதை மறு சுழற்சி செய்கின்றார்கள்.

வேண்டாத பாகங்களை நெருப்பிலிட்டுப் பொசுக்குகின்றார்கள். அப்போது புகைகள் வெளி வருகின்றது. இந்தப் புகைகளைச் சூரியனுடைய காந்த சக்தி கவர்கின்றது.

1.அது எந்தத் திசையை நோக்கிச் செல்கின்றதோ அந்தப் பக்கம் நாம் வந்து கொண்டிருந்தோம் என்றால் அதைச் சுவாசிக்க நேர்கிறது.
2.சுவாசப் பைகளுக்குள் சென்று அந்தக் கெமிக்கல் நமக்குள் இருக்கும் உறுப்புகளை உருவாக்கிய அணுக்களை மடியச் செய்கின்றது.
3.மடிந்து விட்டால் அந்த உறுப்பின் திறன் இழக்கப்படுகின்றது.
4.இதனால் நம்மை அறியாமலே மூச்சுத் திணறலும் கடும் நோய்களும் உருவாகின்றது.

ஆனால் அதே சமயத்தில் நாம் சுவாசித்த உணர்வுகள் அந்தக் கெமிக்கல் இரத்த நாளங்களிலே கலந்து விட்டால் சுத்திகரிக்கும் கிட்னிக்குள் புகுந்து வடிகட்டி வெளி வரும் பொழுது வடிகட்டும் திறனை இழக்கச் செய்து கிட்னியைச் செயலிழக்கச் செய்கின்றது. சுத்திகரிக்கும் நிலை தவறும் பொழுது ரத்த நாளங்கள் தெளிவாகும் நிலை இழந்து விடுகின்றது.

இதைப் போன்று நம்மை அறியாமலே வாழ்க்கையில் சந்தர்ப்பத்தால் நுகரும் இத்தகைய உணர்வுகள் தீமை விளைவிக்கும் சந்தர்ப்பமாகின்றது.

1.இப்படி நமக்குள் உருவாகும் உணர்வுகள் உடலுக்குள் பரவும் பொழுது
2.அது சிறுமூளை பாகம் வரை சுழன்று கொண்டிருக்கும்.

ஒரு கோழி கருவான பின் ஒவ்வொரு நிமிடமும் எப்படிக் கேறுகின்றதோ இதைப் போல ஒரு மனிதன் ஒரு காரியம் தனக்கு நடக்கவில்லை என்றால் அதனால் திரும்பத் திரும்ப வேதனையை நுகர்கின்றான்.

1.அது 48 நாட்கள் ஆனால் கோழி கருவுற்று முட்டையாக மாறுவது போல நாம் நுகர்ந்த உணர்வு கருவுற்று விடுகின்றது... முட்டையாக மாறுகின்றது.
2.இப்படி முட்டை ஆனபின் அதனுடைய செயலாக்கங்கள் உள்ளுக்கே அடைபட்டு இருக்கின்றது.
3.இரத்த நாளங்களில் அது சுழன்று வரும்பொழுது சிறுகச் சிறுக எல்லா உறுப்புகளிலும் ஊடுருவுகிறது.

எல்லா உறுப்புகளுக்கும் அணுக்களுக்கும் உணவாக கொடுக்கும் நிலை பெற்றது தான் நம் இரத்தங்கள். ஆனால் நாம் நுகர்ந்த வேதனை வெறுப்பு என்ற

உணர்வுகள் ரத்த நாளங்களிலே செல்லும் பொழுது அதை அந்த நல்ல அணுக்கள் ஏற்க மறுக்கின்றது.

அதன் வட்டத்தில் சென்ற பின் சோர்வடையத் தொடங்குகிறது... உடலும் சோர்வடைகின்றது. நம் எண்ண வலுவும் குறைகின்றது.

எதனைப் பெற வேண்டும் என்று எண்ணுகின்றோமோ அதை நுகர முடியாதபடி ஆனபின் பலவீனமாகி நல்ல உடலை உருவாக்கிய அணுக்களுக்கு ஆகாரம் செல்வதில்லை. சோர்வடைந்தால் மீண்டும் நலிந்து கொண்டுதான் இருக்கும்.

ஒரு சிலர் நிறையச் சாப்பிடுவார்கள். ஆனால் சோர்வின் தன்மை வரும் போது உறுப்புகளில் அஜீரண சக்தி ஏற்படும். அது அதிகரித்து விட்டால் உடல் நலியும். நல்ல அணுக்கள் வாடும் தன்மை வருகின்றது.

இது எல்லாம் இயற்கையில் நடக்கும் சில நிகழ்ச்சிகள்.

இதை அணுக்கள் இருதய வாயிலில் ஊடுருவி விட்டால் என்ன நடக்கிறது...? இருதயம் அழுத்தம் கொடுத்து எல்லா இடங்களுக்கும் ரத்தத்தை அனுப்பும் சக்தி பெற்றது.

1.ஆனால் இருதயத் துடிப்பிற்குள் சென்று அதிலே வெறுப்படையச் செய்யும் அந்த அணு நுழைவாயிலில் புகுந்து விட்டால் போதும்.
2.வெறுப்பின் உணர்ச்சிகள் அங்கே அணுவாக மாறி இந்த உணர்ச்சிகளை அதன் வழி பரப்பிக் கொண்டிருக்கும்.
3.அப்படிப் பரப்பும் பொழுது சிறு மூளையில் அதன் உணர்ச்சிகளைத் தூண்டும்.
4.பின் உயிரான காந்தப் புலனுக்குள் இந்த உணர்வின் தன்மை இயக்குகின்றது.
5.பின் கண் காது மூக்கு உடல் என்ற நிலையில் இந்த உணர்ச்சிகளை உயிர் அணுக்களாக ஒலி அலைகளாக மாற்றுகின்றது.
6.அதன் வழி எதனின் உணர்வு கொண்டு மூச்சாக வெளியிடுகிறோமோ அதைச் சூரியனுடைய காந்த சக்தி கவர்ந்து கொள்கிறது.
7.அதை ஈர்க்கும் சக்தி பெறுகின்றது... நமது ஆன்மாவாக மாற்றுகின்றது... சுவாசித்த பின் ரத்த நாளங்களில் கலந்துவிடுகிறது.

முட்டைகள் பொரித்துக் குஞ்சுகளாக ஆன பின் கோழி அதற்கு சத்தத்தை எழுப்பிக் கூவி இரை எடுத்து உண்ணும்படி எப்படிக் கற்றுக் கொடுக்கின்றதோ அதைப் போல்.. நமக்குள் உருவான அந்த அணுக்கள் தன் இரைக்காக ஒலிகளைப்

பரப்பப்படும் போது உயிர் நமது ஆன்மா வழி நுகர்ந்து உணவை ஊட்டிச் சாந்தப்படுத்தும்.

வேதனையான உணர்வை எடுத்துக் கொண்ட பின்
1.அது எனக்கு வேண்டாம் மகிழ்ச்சியின் நிலைகள் பெற வேண்டும் என்று எண்ணினால்
2.அந்த உணர்வு மீண்டும் துடிக்கும்... உணர்வின் வேகம் அதிகரிக்கும்,
3.எந்த உறுப்பில் எந்தப் பாகத்திலே அந்த அணுக்கள் தேங்கி இருக்கின்றதோ
4.அந்த உறுப்பிலே வேதனை என்ற உணர்வின் ஒலிகளை எழுப்பிக் கொண்டே இருக்கும்.
5.நல்ல செயல்களைச் செயல்படுத்தும் சிந்தனை இழந்து விடும்... நம் அங்கங்களை இயக்கும் சக்தியும் குறையும்.

யாரையோ குறை கூறி வெறுப்பாகின்றோம்... யாரோ எவரோ என்று இருக்கலாம். ஆனால் நுகர்ந்த உணர்வின் அறிவு அந்தக் குறையை உருவாக்கும்.

யாரை எண்ணி இந்த உணர்வைத் தனக்குள் உருவாக்குகின்றோமோ அதன் அணுக்களாக மாறுகின்றது. நாளடைவில் கரு முட்டையாகின்றது. முட்டையாக மாறி எந்தெந்த உறுப்புகளில் தேங்கி வெடித்து அணுவாக மாறுகின்றதோ
1.அதனை இருப்பிடமாக வைத்து அதன் துணை கொண்டு உணர்ச்சிகளை உந்தி
2.இரத்த நாளங்கள் வழியாக உயிருக்கு அனுப்பி இந்த உணர்ச்சிகளைத் தூண்டி
3.யாரைக் குறையாக எண்ணினோமோ அவரின் உணர்வுகளை உணவாகக் கொடுத்து உடல் உறுப்புகளைக் குறையாக்கி விடும்.

அப்போது அந்த வேதனையான உணர்விலிருந்து நாம் தப்ப முடிவதில்லை. அதைத்தான் கீதையிலே நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய் என்று சொல்வது.

ஒருவரைப் பற்றிக் குறையான உணர்வு வரப்படும் பொழுது அவர் வாழ்க்கையில் தொழில் செய்யும் பொழுதும் எத்தனையோ அதிலே வலிகள் வேதனைகள் வரும். அவரில் விளைந்த உணர்வுகள் இங்கே இருக்கும்.

அந்தக் குறையைத் தான் நுகர முடியுமே தவிர சொல்லால் செயலால் அன்பு கொண்டு பண்பு கொண்டு பாசமான உணர்வை அவர் வைத்திருந்தால் அதைத் தடுத்து விடும்.

1.ரேடியோ டிவிக்களில் ஒலி... ஒளி அலைகளைப் பரப்பினாலும்
2.எந்த ஸ்டேஷனில் திருப்பி வைக்கின்றோமோ அதைத்தான் எடுக்கும்.

இப்படிச் சந்தர்ப்பத்தில் நாம் எடுக்கும் உணர்வின் தன்மை நம் உடலில் அணுக்களாக விளைந்து விட்டால்... தன் இனத்தின் தன்மையாகப் பெருக்கப்படும் பொழுது இந்த உணர்வின் எண்ணங்கள் அதிகரித்து நமக்குள் அது உருவாகி வளர்ச்சியாகி... அந்த எண்ணத்தின் வழியே அடுத்த சரீரத்தை உருவாக்குகின்றது.

இன்றைய செயல் நாளைய சரீரம்...!

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

மனிதனான நாம் இப்போது எல்லோருக்கும் பல நன்மைகள் செய்திருப்பினும் நன்மை செய்வதருடைய நிலைகள் கடைசியில் என்ன ஆகிறது...?

தன் குடும்பத்திலோ அல்லது ஒரு ஆயிரம் பேருக்கோ நன்மை செய்கின்றார் என்று வைத்துக் கொள்வோம்

அதிலே ஒருவர் மிகவும் வேதனைப்படுகின்றார் என்றால்
1.அந்த வேதனைப்படுவர் உணர்வுகளைச் சுவாசித்து அந்த உணர்வு கொண்டு அவருக்கு இரக்கப்பட்டு
2.பரிவுடன் அதிகமாக உதவி செய்ய நெருங்கும் போது அவருக்குள் விளைந்ததை இவர் நுகரப்படும் போது
3.அந்த வேதனை உணர்வுகள் இவருக்குள் ஊடுருவி... அவரின் நோயை இங்கே உருவாக்கி விடுகின்றது.

காரணம்... கூர்மையாகப் பார்த்துத் தான் அந்த வேதனையை உணர்கின்றார்... உதவி செய்கின்றார். அப்படி உற்றுப் பார்த்து "அவரின் நிலைமை இப்படி ஆகிவிட்டதே..." என்று பக்தியில் கடவுளே... தெய்வமே... முருகனே... விநாயகனே...! என்று அந்த உணர்வின் தன்மை சொல்லி அங்கே நுகரப்படும் பொழுது இது உருப்பெற்று விடுகின்றது.

இது கூர்மை அவதாரமாக மாறி அவன் உடலில் உருவான தீமை இங்கே உருவாகி அதே நைந்திடும் உணர்வாக நோயாக இங்கே விளைந்து விடுகின்றது.

நாம் என்ன செய்வோம்...?
1.கஷ்டப்பட்டவருக்கு அனைத்து உதவியும் செய்தேனே...

2.கடவுளே...! எல்லோருக்கும் நான் நன்மை தானே செய்தேன்... எனக்கு இவ்வாறு நோய் வந்து விட்டதே...! என்று
3.அந்த வேதனையை நோக்கியே மீண்டும் சென்று
4.எந்தத் தெய்வம் காக்கும் என்று எண்ணினோமோ "அவன் காப்பான்..." என்ற நோக்கத்திலேயே குறைகளை எல்லாம் சொல்லி
5.அது நிறைவேறும் என்ற நோக்கத்தில் (எதிர்பார்த்து) வேதனைகளை அதிகமாகச் சுவாசித்து
6.நிறைவுபெறும் எண்ணமே இல்லாது அழிந்திடும் உணர்வு கொண்டு அதையே நொந்திடும் உணர்வாக வளர்ந்து விடுகிறது.

ஆனாலும்... நாம் இப்படி வேதனைப்படும் பொழுது... நமக்கும் இதே போன்று இன்னொருவர் உதவி செய்ய வருவார். "அடப்பாவமே...! இவர் எல்லோருக்கும் உதவி செய்தார்... இவருக்கு இப்படி ஒரு துன்பமா...?" என்று எண்ணும் போது... தன் கதைகளை எல்லாம் சொன்னால் அவர் கூர்ந்து கேட்டால்
1.ஆகா... நீயாவது எனக்கு இரக்கப்பட்டாயே...! என்று
2.கடைசியில் இறந்த பின் நம் ஆன்மா இவர் உடலுக்குள் தான் போகும்.

இப்படி இந்த உணர்வின் தன்மைகள் மாறி மாறி மீண்டும் பூமியின் தன்மைகளில் தேய்பிறைக்கே வந்து கொண்டுள்ளோம்.

பல கோடிச் சரீரங்களில் கூர்மையின் நிலையாக தன்னைக் காட்டிலும் வலிமையான நிலைகளைப் பெற்றுப் பெற்று
1.அதனின் உணர்வின் தன்மை கொண்டு உடல்கள் மாற்றமாகிப் பரிணாம வளர்ச்சி ஆகி மனிதனான பின்
2.இரக்கம் ஈகை பண்பு பரிவு என்ற நிலைகளில் எல்லோருக்கும் உதவி செய்யும் பண்புடன் வளரக்கூடியவன்
3.மற்றவருடைய நோய்களைக் கூர்மையாக எடுத்து உணர்வின் தன்மை அவருக்கு உதவி செய்தாலும்
4.புவியின் ஈர்ப்புக்குள்ளே தான் மீண்டும் சுழலும் நிலை வருகின்றது.

இதிலிருந்து மீளும் மார்க்கம்...?

இதற்குண்டான விளக்கங்களை யாம் இப்போது சொல்ல வந்தால்
1."நன்மையே செய்யக்கூடாது" என்று நீங்கள் சொல்கின்றீர்களா...? என்ற இந்த வினாவில் தான் எல்லோரும் உட்கார்ந்து இருப்பீர்கள்...!

2.நன்மை செய்தவர் இப்படியானால் “எந்தக் கடவுள் நம்மை எப்படிக் காப்பாற்றப் போகிறார்...?” என்ற இந்த கேள்விக்குறியில் தான் இங்கே இருப்பீர்கள்.

அதனால் தான் இந்தப் பிள்ளை யார்...? (பிள்ளையார்) நீ சிந்தித்துப் பார்...! என்று விநாயகன் உருவமாகக் ஞானிகள் காட்டினார்கள்.


ஆதிமூலம் என்பது உயிர் ஒவ்வொரு சரீரத்திலும் சேர்த்துக் கொண்ட வினைகளுக்கு நாயகனாக இந்த மனித உடல் பெற்றது. இந்த கணங்களுக்கெல்லாம் இந்தக் குணங்களுக்கெல்லாம் ஈசனாக இருந்து இயக்கியது உயிர்... கணேசா...!

நாம் எதை எதையெல்லாம் சுவாசித்தோமோ மூஷிகவாகனா. அதற்கொப்ப அடுத்தடுத்து உடல்கள் மாறி மாறி வந்தது. இந்த மனித வாழ்க்கையில் நாம் எதைச் சுவாசிக்க வேண்டும்...?

மான் புலியை பார்த்து அதனுடைய கடுமையான உணர்வுகளைச் சுவாசித்து அந்த உணர்வுகளைத் தன் உடலுக்குள் விளைய வைத்து இந்த உடலை விட்டுப் பிரியும் போது கூர்மையாக அந்தப் புலியையே எண்ணி
1.புலியின் உணர்வைச் சுவாசித்த நிலைகள் கொண்டு மூஷிகவாகனா
2.அந்தப் புலியின் உணர்வே இதை வாகனமாக அழைத்துச் சென்று தன்னுடன் அணைத்து
3.இதனுடைய தசைகளை அது உணவாக எப்படி உட்கொண்டதோ அதைப் போல
4.புலியின் உணர்வை இந்த மான் அதிகமாகச் சுவாசிக்கப்படும் பொழுது தன் இனமான சத்தைத் தனக்குள் கவர்ந்து
5.மானின் உயிரான்மா இந்தப் புலியின் உணர்வின் துணை கொண்டு புலியாக உருவாக்கச் செய்து விடுகின்றது.

இது இயற்கையினுடைய சில நியதிகள்... கடவுளின் செயலும் இது தான். ஒன்றுக்குள் ஒன்று செல்லப்படும் பொழுது உணர்வின் செயலாக கடவுளாக உள் நின்று இயக்குகின்றது.

இதை எல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.



இரக்கம் ஈகை பண்பு பரிவு என்ற நிலைகளில் எல்லோருக்கும் உதவி செய்யும் பண்புடன் வளரக்கூடியவன் மற்றவருடைய நோய்களைக் கேட்டறிந்து அவருக்கு உதவி செய்தாலும் புவியின் ஈர்ப்புக்குள்ளே தான் மீண்டும் சுழலும் நிலை வருகின்றது. இதிலிருந்து மீள வேண்டும்.



சுழிக் காற்று பற்றிய முக்கியமான உண்மை

கிராமப்புறங்களில் சில இடங்களில் பார்க்கலாம்... சுழிக் காற்றுகள் சுழன்று வரும். மனிதன் இருக்கும் பக்கம் அது வரப்படும் பொழுது அதில் சிக்கினால் அதைச் சுவாசிக்கும் பொழுது... பின்னாடி பார்த்தால் காக்கா வலிப்பு போன்று வரத் தொடங்கிவிடும்.

இத்தகைய உணர்வு வரப்படும் பொழுது சில உடல்களில் தாக்கினால் ஆவிகள் ஆடத் தொடங்கும்.

1.ஏனென்றால் மனிதனில் உருப்பெற்ற இந்த உணர்வுகள் மிகச் சக்தி வாய்ந்த நிலை.
2.அது சுழன்று வருவதைப் பார்த்தால் அதிலிருந்து நாம் விலகிச் செல்வதே நல்லது.

மந்திர ஒலிகளால் உருவாக்கப்பட்டு அதன் வழி மடிந்த இந்த ஆன்மாக்கள் வந்தால் இத்தகைய நிலையாக வந்து விடும்.

ஒரு சமயம் பூலாங்கிணறு என்ற இடத்திலே நான் சுற்றுப்பயணம் வரும் பொழுது அங்கே ஒரு பெண்ணுக்கு ஆவி பிடித்துள்ளது. எங்கே கூட்டிச் சென்றாலும் ஒன்றும் முடியவில்லை என்றார்கள்.

அந்த இடத்திலே எமக்குக் காட்டுகின்றார் குருநாதர்.
1.எம்முடன் இருக்கும் பொழுது குரு உபதேசித்ததை நினைவுக்குக் கொண்டு வந்து
2.இது எத்தகைய ஆவியாக இருக்கும்...? என்று எண்ணும் பொழுது
3.ஏவல் பில்லி சூனியத்துடன் செயல்பட்டு அதனால் மடிந்த ஆவியின் உணர்வலைகள்
4.எவ்வாறு அந்தப் பெண்ணின் உடலுக்குள் சுழல்கிறது...? என்பதனை எம்மை அங்கே அறியும்படி செய்கின்றார்.

இது எல்லாம் சந்தர்ப்பத்தில் வருவது தான்... எல்லா இடங்களிலும் இதைக் காண முடியாது.

உற்றுப் பார்த்த உடனே கிறு... கிறு... என்று ஒரு சுழல் காற்று வருகின்றது. அங்கே அருகில் இருந்த வாழை மரக்கன்றுகள் துணிமணிகள் அனைத்தையும் தூக்கிச் சென்று விட்டது. அந்த வீடும் ஓட்டு வீடு.. ஓடுகளையும் தூக்கிச் சென்று விட்டது.

இந்தப் பெண் படுத்த இடத்தை விட்டு நகரவே நகராது. அது படுக்கையிலே தான் இருக்கும். வீட்டின் ஓடுகளை எல்லாம் தூக்கிச் சென்றவுடன்... எழுந்து உட்கார்ந்து சுயநினைவுடன் வருகின்றது.

1.இந்த ஆவிகளில் பல விதம் உண்டு என்று குருநாதர் காட்டுகின்றார்
2.அதிலே மந்திரத்தால் தாக்கப்பட்டு அந்த உணர்வுகள் எதிர்மறையானால் இத்தகைய சுழல் காற்றுகள் வரும்.

மனிதன் மேல் வெறிகொண்டு சென்றால் இத்தகைய ஆவிகள் பரவும் இடங்களில் வெள்ளாமையும் சரியாக இருக்காது. குடும்பத்திலும் பல தொல்லைகள் ஏற்படும்.

இதெல்லாம் எப்படி வருகிறது...? என்று தெரியும்படி குருநாதர் உணர்த்துகின்றார். அந்த இடத்தில் இதற்கு மாற்று வழி செய்யாது விட்டுவிடு என்றார். விட்டவுடன் அந்தப் பெண்ணின் உடலில் மறுபடியும் வருகின்றது.

உடனே விறைத்தது போன்று படுக்கின்றது. மறுபடியும் குருநாதர் சொன்ன முறைகளை எண்ணத்தால் எண்ணி எதிர் அலைகளைப் பாய்ச்சப்படும் பொழுது மறுபடியும் அதே சுழல் காற்று வருகின்றது.

அக்கம்பக்கத்தில் எல்லாம் இருக்கும் எல்லாவற்றையும் வேகமாக அடித்து நொறுக்குகின்றது. பின் அந்த உடலில் மீண்டும் வராதபடி கட்டுப்படுத்த குருநாதர் சொன்ன முறைப்படி ஒலிகளைப் பாய்ச்சினேன்.

1.அந்தப் பெண்ணின் உடலில் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் படர வேண்டும் என்று
2.கொஞ்சம் அதிகமாகவே எடுத்து நீ சொல்லிக் கொண்டே இரு என்றார்.

அவ்வாறு சொல்லிக் கொண்டே இருந்தபின்... ரொம்ப நேரம் வரையிலும் வெளியிலே அடித்து விளாசுகின்றது. பக்கத்தில் இருக்கும் வீடுகளை எல்லாம் தூக்கிச் சென்று விட்டது. அங்கே இருப்பவர்கள் எல்லாம் பயந்துவிட்டார்கள்.

பின் அதற்கு என்ன செய்வது...? என்று சிலதுகளைச் செய்தேன். அந்த அம்மாவிற்கு வயது அப்பொழுது 60. ஆனால் இளமையிலிருந்து இதனுடைய தாக்குதல் இருந்திருக்கின்றது.

இது போன்று சில ஆவியின் சேஷ்டைகள் மனித உடலில் இருந்து அதைக் கெடுக்கச் செய்யும். மற்ற தாவர இனங்களில் இணைவதில்லை.

1.இந்த ஆவி மீண்டும் மனித உடலுக்குள் புகுந்தது என்றால் புலியின் ஈர்ப்பு வட்டத்திற்குள் சென்று கொடூர மிருகமாக மாறும்.
2.ரத்தத்தை உணவாக உட்கொள்ளும் ஆவியின் நிலை அடைகின்றது.

குருநாதர் இதையெல்லாம் காட்டுகின்றார். நகருக்குள்ளும் மலைப் பகுதிகளுக்குள்ளும் சென்று இயற்கையின் உண்மை நிலைகள் எவ்வாறு இயங்குகிறது...? என்ற நிலையை அறிந்து அதன் வழி சில உண்மைகளை அறியக்கூடிய நிலை வந்தது.

இதை யாம் தெரியப்படும் பொழுது
1.உங்களுக்குள் உபதேசித்தால் கம்ப்யூட்டரில் ரெக்கார்ட் செய்தது போன்று ஆகின்றது.

2.செவி வழி இந்த உணர்வுகளை ஓதும் பொழுது உங்கள் எலும்புக்குள் ஊழ்வினை என்ற வித்தாகப் பதிவாகிறது.

சந்தர்ப்பத்தில் ஏதாவது இப்படி அசம்பாவிதங்கள் வந்தால் இந்த உண்மையை அறிய முடிகின்றது. அடுத்த கணம் தியானத்திலே அந்த உயர்ந்த சக்திகளை எடுத்துத் துருவ நட்சத்திரத்தின் சக்தியை நுகர்ந்து அதனுடன் இணைக்கப்படும் பொழுது இத்தகைய சந்தர்ப்பங்களையும் நாம் மாற்றி அமைக்க முடியும்.

ஏனென்றால் மனித வாழ்க்கையில் எத்தனையோ கொடூரமான நிலைகள் கொலை கொள்ளை நடக்கின்றது. அதனால் தாக்கப்பட்டு உயிர்கள் மடிகின்றது. அந்த உணர்வலைகள் அங்கே படர்கின்றது.

மனிதனுக்குள் இது சாடியபின் மனிதன் தன் செயலிழந்து இயங்குவதை நாம் காண முடிகின்றது. இதைப் போன்ற நிலையிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும் என்பதற்குத்தான் இதனை உங்களுக்குள் பதிவு செய்கின்றேன்.

மனிதரிலிருந்து வெளிப்பட்ட இத்தகைய ஆவிகள் அது படர்ந்துள்ளது. மனித உடலுக்குள் புகுந்து பேயாக மாறி மடிந்த பின் உணர்வுகள் மாற்றப்பட்டு மனித உடலுக்குள் புகாது மனித உணர்வுகள் தணிந்தபின் மிருக உணர்வுகளாக மாறி விடுகின்றது.

மிருகங்களிலோ பட்சிகளிலோ இணைந்து அதன் கருவாக மாறி உருமாற்றி விடுகின்றது. உயிர் அழிவதில்லை... ஆனால் உடல்கள் மாறுகின்றது.

இந்த உயிர் இருக்கும் போது அதற்குள் கலந்து கொண்ட உணர்வுகளுக்கொப்ப உடல் பெறவில்லை என்றாலும் இத்தகைய ஆவித் தன்மைகள் சில இடங்களில் அதிகமாகவும் உண்டு.

ஒரு உடலுக்குள் சென்று அந்த உணர்வுகள் அந்த உடலை அழித்து விஷத்தன்மையான அணுக்களை உருவாக்கி அது வளர்ச்சி பெற்ற நிலையில் அந்த உயிர் அதற்குத் தக்க உடலுக்குள் சென்று உடல்களை மாற்றி விடுகின்றது என்பதனைத் தெளிவாக உணர்த்தினார் குருநாதர்.

எல்லோரும் இந்த உண்மையின் உணர்வை உணர்ந்து
1.மனிதனான நாம் உடலை விட்டுச் சென்றால் கீழான நிலைகளுக்குச் சென்று

பிறக்காமல்
2.உடலுக்குப் பின் பிறவி இல்லா நிலையை அடைதல் வேண்டும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

தைப்பூசம் என்றால் முருகனுக்கு நன்னாள். அதாவது நம் ஆறாவது அறிவின் தன்மை கொண்டு எதையெல்லாம் நமக்குள் சேர்க்கப்பட வேண்டும் என்று உணர்த்தும் நாள் அது.

முருகன் ஆலயத்திற்குச் செல்லும் பொழுது "காவடிகளை" எடுத்து ஆடுகின்றோம். காவடியில் "மயில் தோகைகளை" வைத்துள்ளார்கள்... முருகனுக்கு உகந்தது அந்த மயில் என்று வைத்திருக்கின்றோம்.

அதனின் உட்பொருள் என்ன...?
1.மயில் தன்னுடைய வாழ்க்கையில் விஷ ஜந்துக்களை உணவாக உட்கொண்டாலும் அது மகிழ்ச்சியாகத் தோகை விரித்து ஆடுகின்றது
2.அதே சமயம் அந்த நஞ்சினையும் உள் அடக்குகின்றது.

இதைப் போன்று தான் ஆறாவது அறிவு கொண்ட நாமும் நஞ்சினை அடக்கும் சக்தி பெற்றவர்கள்.

கருணைக்கிழங்கு இருக்கிறது என்றால் அதை வேக வைத்து அதில் உள்ள நஞ்சினை நீக்குகின்றோம். தொக்கி உள்ள நஞ்சினை நீக்கப் புளி காரம் உப்பு இவைகளை வைத்து அடக்குகின்றோம்.

அதாவது
1.ஆறாவது அறிவின் துணை கொண்டு முதலில் கருணைக்கிழங்கில் நஞ்சு இருக்கிறது என்றும் அறிந்து கொள்கின்றோம்
2.அதை நீரிலே இட்டு வேக வைத்துக் கொதிகலனாக்குகிறோம்
3.அந்த நீரின் சத்து விஷமான கிழங்குக்குள் ஊடுருவி அதனுடன் இரண்டறக் கலந்து இருக்கும் விஷத்தன்மைகள் ஆவியாக மாற்றுகின்றது.
4.புளியை இணைத்தபின் தொக்கி உள்ள விஷத்தன்மையை அடக்குகின்றது.
5.மிளகாய் சீரகம் உப்பு மற்ற பொருள்களை இணைக்கப்படும் பொழுது சுவை மிக்கதாக உருவாகின்றது.

அதைத்தான்.. ச ர ஹ ண ப வா... குகா... என்று சரணம் அடையச் செய்யும் சக்தியாக மனித உடலான குகைக்குள் இருக்கின்றது. நாம் சுவையாக உணவை

உட்கொண்டாலும் அதில் மறைந்திருக்கும் நஞ்சின் தன்மையை மலமாக மாற்றிவிட்டு நல்ல உணர்வினை உடலாக மாற்றுகின்றது.

இது தான் சரஹணபவா குகா கந்தா கடம்பா கார்த்திகேயா. உடலில் இருந்து வரக்கூடிய ஆறாவது அறிவை இப்படித் தெளிவாக்குகின்றார்கள் ஞானிகள்.

1.இந்த உடலான குகைக்குள் நின்று.. வருவதை அணைத்து... தீமையான நிலைகளை நீக்கிவிட்டு சரணமடையச் செய்யக்கூடிய சக்தியாக...!
2.இந்த உடலான குகைக்குள் நின்று... கந்தா வருவதனைத்தையும்... கடம்பா உருவாக்கி... கார்த்திகேயா...!
3.நாம் அந்தக் கருணைக்கிழங்கு குழம்பைச் சுவையாக வைத்து எப்படி மகிழ்ச்சியாக உட்கொள்கின்றோமோ
4.அதைப்போன்று தீமையான உணர்வுகளை மலமாக மாற்றிவிட்டு நல்ல உணர்வுகளை உடலாக மாற்றுகின்றது.

இவ்வாறு நல்ல உடலாக மாற்றிய இந்த உணர்வின் சக்தியைத்தான் கார்த்திகேயா தெரிந்திடும் நிலை.

கருணைக்கிழங்கில் இருக்கும் நஞ்சினை அறிந்து... அந்த நஞ்சினை நீக்க அதை வேக வைத்து மற்ற நிலைகளை இணைத்துச் சுவையாக்குவது போன்று.. வாழ்க்கையிலும் அந்த நிலையைச் செயல்படுத்த வேண்டும்.
1.அது தான் முருகு – மாற்றி அமைக்கும் சக்தி
2.முருகா – அழகு படுத்தும் மகிழச் செய்யும் நிலையாக “மகிழ்வாகனா...” என்று
3.மயிலை வாகனமாக வைத்து அதன் கீழ் பாம்பினை வைத்துக் காட்டி உள்ளார்கள்.

இதை நினைவுபடுத்தும் நாளாகத் தைப்பூசம் அன்று காவடி எடுத்து “மயில் தோகைகளை அதில் வைத்து” ஆனந்தக் கூத்தாடி நாம் மகிழ்கின்றோம். அந்த மயில் எவ்வாறு நஞ்சினை நீக்கியதோ இதைப் போன்று
1.நமது வாழ்க்கையில் எத்தனை தீமைகள் வந்தாலும்... எத்தனை பேருடன் நாம் பழகினாலும்
2.சந்தர்ப்ப பேதத்தால் அறியாது வரக்கூடிய அந்த நஞ்சின் தன்மைகளை நீக்க
3.ஆறாவது அறிவின் துணை கொண்டு துருவ் நட்சத்திரத்தின் சக்தியைச் சேர்ப்பித்து
4.அந்த நஞ்சினை அடக்கி மகிழச் செய்யக்கூடிய சக்தியாக நாம் உருவாக்க முடியும்.

அப்படி உருவாக்கும் சக்தியை நினைவுபடுத்தி... எல்லோரும் அதைப் பெறக்கூடிய நன்னாள்தான் தைப்பூசம். அனைவரையும் ஒன்று சேர்க்கும் நாள் தைப்பூசம். நம்முடைய முன்னோர்கள் மூதாதையர்களின் உடலை விட்டுப் பிரிந்து சென்ற ஆன்மாக்களை விண் செலுத்தும் நாள் தைப்பூசம்.





குருநாதர் எமக்குச் சொல்லிக் கொடுத்த அனைத்தையும் நீங்கள் பெற வேண்டும் என்பதுதான் "என்னுடைய ஒரே ஆசை..."

ஒன்றுக்குள் ஒன்று கலந்துள்ள நஞ்சின் தன்மை எதனின் நஞ்சாக அடைகின்றதோ அதனின் நிலையில் நம்மை அடக்கி ஆளுகின்றது என்பதை ஞானிகள் காட்டினார்கள்.

எப்படி...?

விநாயகர் ஆலயத்தில் பார்த்தோமென்றால் இரண்டு பாம்புகளைப் பிணைத்துக் காண்பித்து இருப்பார்கள்.
1.விஷத்தின் தன்மை வரப்படும் பொழுது அது எப்படி ஒடுக்குகின்றது...?

2.ஒரு அணுவின் தன்மை எப்படிப் பிணைந்து கொள்கின்றது...? என்ற தத்துவத்தையும் காட்டி இருக்கின்றார்கள்.

ஆனால் அதில் உள்ள பொருளைக் காணாத நிலையில் தான் நாம் இன்று இருக்கின்றோம்.

நீங்கள் அனைவரும் அந்த மெய் ஞானிகள் அருள் சக்தி பெற்று இருள் சூழ்ந்த நிலையிலிருந்து மீண்டு
1.சகோதர உணர்வுகளைப் பிரித்தாளும் சக்தியாக வருவதை வெல்லும் சக்தியாக
2.நீங்கள் எடுக்கும் அருள் உணர்வுகள்... உங்கள் மூச்சுலைகள் படர்ந்து
3.இந்த நாட்டிற்குள்ளும் உலகிலும் படர்ந்துள்ள நச்சுத்தன்மைகள் அகல வேண்டும் என்ற நிலைக்குத் தான்
4.குருநாதர் உணர்வுகளை உங்களுக்குள் ஆழமாகப் பதியச் செய்து ஒளி பெறும் சக்தியாக வளர வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

உங்களுடைய மூச்சலைகள் இருள் நீக்கிப் பொருள் காணும் அருள் சக்தியாக வளர வேண்டும் என்ற நிலைக்குத்தான் குரு உணர்வுகளை ஆழமாகப் பதிவு செய்கின்றோம்.

1.கல்வி அறிவில்லாதவனான எனக்கு... மூடனான எனக்குள் இருந்த இருளை நீக்குவதற்கு
2.குருநாதர் கண்டுணர்ந்த பேருண்மைகளை உபதேசித்து என் உணர்வுக்குள் அவர் காட்டிய நிலைகள் கொண்டு
3.கருக்களாக உருப் பெறும் அணுக்கள் ஒவ்வொன்றுக்கும் உபதேசித்த உணர்வு தான்
4.அதற்குள் இருந்து அந்த ஞானத்தின் நிலைகளை நான் நுகர முடிகின்றது... அந்த அலைகளைப் பரப்ப முடிகின்றது.

இந்த உபதேசத்தைக் கேட்டுணர்ந்தோர் இதைப் பின்பற்றிப் பாருங்கள். மனிதன் என்ற தன்னிலை அடைய முடியும்... உங்களால் நிச்சயம் முடியும்... உங்களை நம்புங்கள்.

உயிரை ஈசனாக மதித்துப் பழகுங்கள். உங்கள் உடலை அவன் படைத்த கோவிலாக சிவனாக மதியுங்கள்... ஆலயமாக மதியுங்கள்.

இந்த உடலான ஆலயத்திற்குள் எண்ணிலடங்காத தெய்வங்கள் உண்டு. அந்த உயர்ந்த தெய்வ நிலைகள் அனைத்தையும் சேர்த்து அந்த வலுவின் நிலைகள் கொண்டு வர முடியும்.

குழம்பிற்குள் நாம் பல பொருள்களை இணைத்து அதை ருசியாகக் கொண்டு வருகின்றோம். அதைப் போல்
1.உங்களுக்குள் பலவாறு பல நிலைகள் கொண்ட உணர்வுகள் வந்தாலும் அது அனைத்தையும் அடக்கிட
2.அந்த உணர்வின் தன்மை ஆற்றல் பெற்ற அந்த அகஸ்தியனுடைய அருள் ஒளியை நீங்கள் பருக வேண்டும்.
3.அவன் சமப்படுத்தியது போன்று ஒளியின் தன்மையாக உங்கள் எண்ணங்கள் ஒளியின் சுடராகப் பிரகாசிக்க வேண்டும்.

உங்கள் சொல்லைக் கேட்போர் உணர்வுகளில் மகிழ்ச்சி தாண்டவமாட வேண்டும். அனைவரும் மகிழ வேண்டும் என்ற இந்த (இச்சை) இச்சா சக்தி தான் என் குரு காட்டிய நிலைகள் கொண்டு அதுவே எனக்குள் கிரியை ஆகி என் உடலுக்குள் இயக்கி அது தான் சொல்லாக வெளி வருகின்றது.

1.இதை நீங்கள் அனைவரும் பெற வேண்டும் என்பதுதான் என் குருநாதர் ஆசைப்படி எனது ஆசையாக அமைகின்றது.
2.நீங்கள் அனைவரும் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்று நான் ஆசைப்படுகின்றேன்
3.நீங்கள் அருள் ஒளி பெற வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்
4.உங்களை அறியாது வந்த தீமைகள் அகல வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

நான் எண்ணிய இந்த ஆசையை என் உயிர் எனக்குள் அதைப் படைக்கின்றது.

இதைப் போன்று நீங்களும் ஒவ்வொரு நிமிடமும் ஈஸ்வரா என்று உயிரை எண்ணி வானை நோக்கி ஏகி மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்று ஏங்கி உங்களுக்குள் வரும் தீமைகளை நீக்குங்கள்.

அதன் வலுக் கொண்டு நீங்கள் பார்ப்போர் அனைவருக்கும் மகரிஷிகளின் அருள் ஒளி பெற வேண்டும் அவர்கள் அறியாத இருள்கள் நீங்க வேண்டும் மெய்ப் பொருள் கண்டுனரும் சக்தி அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் தீமையை

நீக்கிடும் ஆற்றல்மிக்க சக்தியாக உருப் பெற வேண்டும் என்று நீங்கள் எண்ணிச் செயல்படுங்கள்.

1.அப்படிச் செய்தால் அதே உணர்வுகள் உங்களுக்குள்ளும் விளைந்து
2.அதனின் உணர்வாக உங்கள் உயிர் உங்களை ஆண்டு
3.அதனின் உணர்வின் ஒளியாக உங்களுக்குள் சேர்த்து
4.இந்த உடலை ஒளிச் சரீரமாக... உங்களை ஆண்டு கொண்டிருக்கும் உயிர் அதைச் செயல்படுத்துவான்,

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

இன்றைய காற்று மண்டலத்தில் பரவியிருக்கும் நஞ்சானது ஞானிகள் உணர்வுகளை அடைத்துக் கொண்டு... யாரும் அதை நுகர விடாது தடுத்துக் கொண்டிருக்கின்றது.

நம் ஆன்மாவில் நஞ்சான உணர்வுகள் வரும் போது
1.ஞானிகள் உணர்வை நாம் பெற வேண்டும் என்றால்
2.இதைக் கடந்து உணர்வுகள் வெளிச் செல்வதில்லை.
3.நஞ்சு அதிகரிக்கப்படும் பொழுது ஞானிகள் நிலைகளை அங்கே அடைய முடிவதில்லை
4.அந்த நஞ்சின் உணர்வுக்குள்ளேயே மீண்டும் சிக்கப்பட்டு ஞானிகள் உணர்வைப் பெறும் தகுதியை இழக்கச் செய்து விடுகிறது.

நமக்குள் இருக்கும் ஒவ்வொரு மனிதனின் நல்ல உணர்வுகளில் நஞ்சு கலந்த பின் தீமையே வருகின்றது... நல்லதை அழித்திடும் உணர்வுகளாகப் பரவுகின்றது.

உதாரணமாக... நஞ்சின் தன்மை ஒரு குடம் பாலுக்குள் விட்டு விட்டால் அந்தப் பாலைக் குடிப்போர் அனைவரும் நஞ்சின் தன்மையே அடைந்து விடுகின்றனர்.

ஆனால் அந்த ஒரு குடம் பாலில் பல ஆயிரம் குடம் நல்ல பாலை விடப்படும் பொழுது நஞ்சின் தன்மை சிறுத்து அந்தப் பாலிற்கே வீரிய சக்தி கொடுக்கின்றது.

இன்றைய உலகில் வாழும் மக்கள் வேதனை என்ற உணர்வை அடிக்கடி எடுத்து அதை விளைய வைத்துக் கொண்டால் அந்த மூச்சுலைகள் வெளிப்படுவதைச் சூரியனின் காந்த சக்தி கவர்ந்து கொள்கிறது. அதனால் இந்தக் காற்று மண்டலமே விஷத்தின் தன்மையாக மாற்றி விடுகின்றது.

அதிலே வாழும் நமக்குள்ளும் அந்த உணர்வின் சத்து நம் ஆன்மாவில் வலுவாகி நல்ல குணங்களைச் செயலற்றதாக மாற்றி... உணர்ச்சிகளைத் தூண்டும் நிலையும்... சிந்தனயற்றதாக உருவாக்கும் நிலையும்... இங்கே உருவாக்கி விடுகின்றது.

இதைப் போன்ற நிலையில் இருந்து நாம் மீள வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்...?

உலகில் யார் யாரிடம் எல்லாம் நாம் பழகினோமோ...
1.அவர்கள் அனைவருக்கும் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி படர வேண்டும் என்று
2.அவர் பட்ட வேதனை உணர்வு நமக்குள் வளராது தடைப்படுத்த வேண்டும்.

நாம் சந்தித்த அனைவருக்கும் இந்த உயர்ந்த நிலைகள் பெற வேண்டும் என்று நாம் எண்ணுவது போல் அனைவரும் அதே ஏகோபித்த நிலை வரப்படும் பொழுது
1.அது சிறு புள்ளியாக கோலத்தில் அடக்குவது போன்று அடக்கி
2.உயர்ந்த பாதையின் தன்மை ஒன்றாக இணைத்து அதை உள்ளடக்கி விடுகின்றது.

ஏகோபித்த நிலைகள் கொண்டு நாம் வெளிப்படுத்தும் மூச்சலைகள் அந்த மகரிஷிகள் உணர்வுகள் ஏகமாகப் படரப்படும் பொழுது தீமைகள் மறையப்படுகின்றது.

நமது குருநாதர் காட்டிய அருள் வழியில் அந்த மகரிஷிகளின் உணர்வுகளை நமக்குள் சேர்ப்பித்து
1.அதை எல்லோருக்கும் கிடைக்க செய்ய வேண்டும் என்ற உணர்வைக் கலந்து
2.நம் எண்ணத்தால் அலைகளாகப் பரப்பச் செய்யப்படும் பொழுது நமக்குள் இருக்கும் தீமைகளை அகற்றும் சக்தியாகிறது.

ஏனென்றால் ஒவ்வொரு மகரிஷியும் "பல லட்சம் நல்ல உணர்வுகளை" வலுக்கொண்டதாக உருவாக்கியவர்கள்.

நாம் அனைவரும் அந்த மகரிஷிகளின் உணர்வை ஏகோபித்த நிலையில் எண்ணி அதை மூச்சலைகளாகப் பரப்பப்படும் பொழுது... பல ஆயிரம் குடம் பால்களை நாம் ஊற்றுவது போன்று...

1.மகரிஷிகளின் உணர்வலைகள் காற்றுக்குள் கலந்து அலைகளாகப் படர்ந்து
2.இந்தப் பூ மண்டலமே அது தூய்மைப்படுத்தும் சக்தியாக வலுக்கொண்டதாக மாறுகின்றது.
3.அந்தத் தூய்மையின் வீரிய உணர்வுகள் இந்த நஞ்சுகளை மாற்றுகின்றது.

ஆக... ஒரு குடம் பாலில் நஞ்சினை பட்டாலும் அதிலே ஆயிரம் குடம் நல்ல பாலை ஊற்றப்படும் பொழுது நஞ்சற்ற நிலையாக ஆவது போன்று நாம் இடும் மூச்சலைகள் இந்தக் காற்று மண்டலத்தை நஞ்சற்ற நிலையாக மாற்றி... நல்ல உணர்வுகளை நுகரும் சக்தியாக வருகின்றது.

மகரிஷிகளின் அருள் உணர்வுகளை ஆழமாகப் பதிவு செய்து
1.நமக்குள் இருக்கும் எல்லா உணர்வுகள் – அது ஒன்றுடன் ஒன்று ஒன்றச் செய்து இணையச் செய்து
2.ஒவ்வொரு உறுப்புகளிலும் அருள் உணர்வுகளை இணையச் செய்து மகிழ்ச்சியூட்டும் நிலையாகப் பெருக்க வேண்டும்.

இது போன்று எல்லா மனிதர்களுடைய உணர்வுகளையும் கலந்து மகிழ்ச்சியூட்டும் நிலையாக நாம் செயல்படுத்தும் போது இந்தப் பூ மண்டலம் சுத்தமாகின்றது... நம் உடலுக்குள் இருக்கும் உறுப்புகளான இந்த மண்டலமும் தெளிவாகின்றது.

உயிருடன் ஒன்றி ஒளியின் சரீரம் பெற்ற... மகரிஷிகளுடன் நம் நினைவாற்றலை இணைக்கின்றது. அங்கே சீராக நாம் இணைக்கப்படும் பொழுது நமக்குள் தடையாக வரும் நிலைகளைப் பிளந்து... ஒருக்கிணைந்து இயக்கி... தெளிந்திடும் அறிவின் தன்மையை நமக்குள் வருகின்றது.

கோலங்களிடப்படும் பொழுது
1.அதற்குள் புள்ளிகள் அமைந்து அது வெளியே வர முடியாது தடைப்படுத்தப்படுவது போன்று
2.நமக்குள் இருக்கும் தீமைகள் அது ஒன்றுக்குள் அடங்கி... தீமை இயக்க முடியாதபடி அடங்கி விடுகின்றது.

தெளிந்த மனதும் பகைமைகள் வளர்ந்திடாது ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழும் உணர்வினை இது வளர்த்துவிடும்.
1.தனக்குள் ஒளியின் சுடராக வளர்த்திட்ட அருள் ஞானிகள் உணர்வினைக்

கவர்ந்து

2.அதை நமக்குள் இணைத்து உருவாக்கும் நந்நாள் தான் “தைப்பூசம்...”





மூன்று சக்திகளின் இயக்கம் தான் இயற்கை

ஓர் விஷமான ஆவியின் நிலைகள் விஷமற்றதைத் தாக்கப்படும் பொழுது அந்தத் தாக்குதல் தாங்காது வெப்பமாகி அணுக்களாகச் சிதறுண்டு பரவுகின்றது ஆதியில்,

அவ்வாறு தாக்கி அணுக்களாகப் பரவிய நிலைகளைத் தான் நாம் அறிந்து கொள்வதற்காக இதை உண்மையில் கண்டுபிடித்த அகஸ்தியன் சாதாரண தன் இன மக்கள் கண்டு கொள்வதற்காகக் காரணப் பெயர்களை வைத்தான்.

1.வெப்பத்தை வைத்துத் தான் நாம் பல பொருள்களைச் சமைக்கின்றோம்.
2.மனித உடலில் அந்த வெப்பம் இருந்தால் தான் அணுக்களும் இயங்குகின்றது.
3.மரத்திற்கு வெப்பம் இருந்தால் தான் அதுவும் வளர்கின்றது.

கடல் நீரிலே வாழும் உயிரினங்கள் இருப்பினும்
1.பூமியின் வெப்ப அலைகள் அதனால் ஏற்படும் காந்த அலைகள் நீருக்குள் பரவும் பொழுது தான்
2.அந்த மீன்களில் உள்ள உயிரில் வெப்ப நிலைகள் ஊடுருவி அது தனக்குள் கவரும் ஓட்டத்தில் எலக்ட்ரானிக்காக மாற்றி
3.அதனால் தனக்குள் வெப்பத்தை உருவாக்குகின்றது.

இதைப் போன்று தான் விண்ணின் ஆற்றலில் ஆரம்பத்தில் ஏற்பட்ட வெப்பம் அது நகர்ந்து செல்லும் பொழுது காந்தமாக அமைகின்றது.

வெப்பம் காந்தம் விஷம் ஆதியிலே இந்த மூன்றும் ஒன்றாக உருப் பெறும் சந்தர்ப்பத்தால் தான் உலகமே இயக்கச் சக்தியாக மாறுகின்றது.

1.வெப்பம் உருவாகும் சக்தி...
2.காந்தம் தன்னுடன் எப்பொருளையும் ஈர்த்துத் தன்னுடன் இணைத்துக் கொள்ளும் சக்தி.
3.அதனுடன் சேர்ந்த விஷமோ எப்பொருள் அதனுடன் கவர்ந்ததோ அந்தப் பொருளின் மணத்தையும் குணத்தையும்
4.உணர்ச்சிகளைத் தூண்டி அது இயக்கச் சக்தியாகச் செயல்படுகின்றது.

இதனைச் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் தான் "ஆதிசக்தி விஷம்... ஆதிபராசக்தி வெப்பம்... ஆதிலக்ஷ்மி காந்தம்..." என்று காரணப் பெயரை வைத்து அழைக்கின்றார்கள்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

விஞ்ஞான அறிவு வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் தான் வாழ்ந்திட... இளம் குழந்தைகளைத் திருடிச் செல்கின்றார்கள்.

திருடுவதற்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை என்றாலும் ஒன்றும் அறியாத குழந்தைகளை ஏமாற்றிக் கடத்தி அழைத்துச் சென்று... கண்களை எடுத்து வியாபாரம் செய்கின்றார்கள்... மூளையையும் எடுக்கின்றார்கள்.

முதுமை அடைந்த மனிதனை இளமையாக்குவதற்கு அதை இன்ஜெக்ஷன் ஆக உருவாக்கப்பட்டு பொருளுக்குத் தக்கவாறு விஞ்ஞானிகள் இவ்வாறு செயல்படுத்துகின்றார்கள்.

1.பொருள் இருந்தால் போதும்
2.இந்தப் பூமியிலே வாழ்ந்தால் போதும்
3.இன்றைக்கு எனக்கு மகிழ்ச்சி தேவை என்ற நிலைகள் கொண்டு
4.ஒவ்வொரு மிருகமும் மற்றொன்றை எப்படி இரக்கமற்று வீழ்த்தித் தன் உணவுக்காகப் புசிப்பது போன்று தான்
5.இன்றைய மனிதனுடைய செயல்கள் வந்து விட்டது.

மிருகங்களோ ஒன்றை ஒன்று அடித்தாலும் அது பரிணாம வளர்ச்சியில் உள்ளது. ஆனால் மனிதனோ பரிணாம வளர்ச்சியில் வென்று முதிர்ச்சி பெற்றவன். இது போன்ற மிருக நிலைகளுக்கு நம்முடைய செயலாக்கங்கள் சென்றால் மீண்டும் இழி நிலையான கீழ் நிலைக்குத் தான் செல்வோம்.

பௌர்ணமி தேய்ந்து கடைசியில் அது முழுமையாக இருள் சூழ்கின்றது. மீண்டும் சிறுகச் சிறுக ஒளி பெற்று மற்ற கோள்கள் மறைப்புகளிலிருந்து விடுபட்டுப் பூரண நிலைகள் பெறுகின்றது.

இதைப் போல மனிதன் மற்ற உணர்வின் எண்ணங்களுக்கு அடிமையாகி அதன் வழியில் தான் கீழ் நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறான்.

இன்று உயிரைக் காக்கக்கூடிய படித்த டாக்டர்களாக இருந்தாலும் அவர் கண்டுபிடித்த விஞ்ஞான நுட்பங்கள் கொண்டு வருபவருடைய நோய்களை அறிந்து உறுப்புகளை மாற்றி குணப்படுத்தக்கூடிய வல்லமை உடையவர்களாக இருந்தாலும்
1.தொழில் அடிப்படை என்று வரும் போது... பொருள் (பணம்) வேண்டும் என்ற நிலையே அதிகமாக வளர்ந்து விட்டது.
2.பண வசதியற்றவன் ஒருவன் சிக்கினால் அவன் நோய் தீர்க்க என்று வரும் போது அவனுக்கு நோயே இல்லை என்றாலும்
3.அவனுக்குத் தெரியாமலே அவனுடைய உடலில் இருக்கக்கூடிய நல்ல உறுப்புகளை எடுத்து... கடைசியில் அவன் உயிரை வாங்கி விடுகின்றார்கள்.

இந்த அளவிற்கு விஞ்ஞான அறிவுகள் சென்றுவிட்டது.

தான் வாழ வேண்டும் என்ற நிலை இருந்தாலும் வாழ வேண்டிய மற்றவர்களின் உடல் உறுப்புகளைத் திருடி விற்கும் நிலைக்கு வந்து விட்டார்கள். திருடியதற்காக... கொடுக்கும் பணத்தை ஏற்றுக் கொள்கின்றான்.

சிந்தித்துச் செயல்பட்டு மனிதனைக் காத்திடும் நிலைகள் கொண்டு வளர்ந்த டாக்டர்கள் இதையெல்லாம் செய்ய அனுமதிக்கிறார்கள். அதைப் பின் தொடர்ந்து... நாட்டைக் காக்க வேண்டும் என்ற அரசியல்வாதிகளும் இதற்கு உறுதுணையாக இருக்கின்றார்கள்.

1.இந்த மனித உடல் வாழ்க்கை தான் சிறந்தது என்று எண்ணுகின்றனர்
2.ஆனால் உலகை விட்டுச் சென்றால் எங்கே போகின்றோம்...? எந்த நிலையில் இருப்போம் என்பதை அறவே மறந்து விட்டார்கள்.

காரணம்... இந்த வாழ்க்கையில் எதையெல்லாம் யாரையெல்லாம் எப்படி எல்லாம் இம்சிக்கின்றோமோ இம்சைப்பட்டவருடைய கண் கூர்மையான நினைவாற்றல் கொண்டு யாரால் ஏற்பட்டது...? என்று எண்ணப்படும் போது
1.யார் இத்தகைய திருட்டுத் தொழிலைச் செய்தாலும் அந்த உணர்வலைகள் ஊடுருவி
2.இந்த உடலுக்குள் இருக்கும் உயிர் அதிலே இருக்கக்கூடிய காந்தங்கள் நுகரப்பட்டுப் பதிவு செய்து
3.அவன் பட்ட இம்சையின் உணர்வுகள் உடலுக்குள் புகுந்து "அதே இம்சையைக் கொடுக்கும்..." என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

அதிலிருந்து யாரும் தப்ப முடியாது.

மற்றவர்களை இம்சிக்கலாம் அதை ரசிக்கவும் செய்யலாம்... ஆனால் இந்த உணர்வுகள் நமக்குள் விளைந்த நிலைகள் கொண்டு உயிருடன் ஒன்றச் செய்து "நீ இதை அனுபவி..." என்ற நிலையில் இதைப் பல காலம் வேதனைப்படும்படியாக வரும்.

இந்த நிலையிலிருந்து மீட்டிக்கொள்ள... ஒவ்வொரு நொடியிலும் மகரிஷிகள் காட்டிய அருள் வழியில் வழி நடந்திடல் வேண்டும்.

பக்தி என்ற நிலையில் மூட நம்பிக்கை கொண்டு... அசுரத்தனமான எண்ணம் கொண்டு... தெய்வத்திற்கு ஒரு குழந்தையைப் பலி கொடுத்தால் என்னை அந்தத்

தெய்வம் காக்கும் என்ற நிலையிலும்... மற்ற உயிரினங்களைப் பலி கொடுத்தால் தெய்வம் காக்கும் என்ற நிலையிலும் செயல்பட்டுக் கொண்டுள்ளார்கள்.

கல்வியில் சிறந்து மனிதனைக் காத்திடும் நிலை வந்தாலும்...
1.தன்னைக் காத்திட "எதை வேண்டும் என்றாலும் செய்யலாம்...!" என்று
2.பிறருடைய துன்பத்தை அறியாது... துன்பத்தை உருவாக்கும் நிலை தான் இன்று உருவாகிக் கொண்டுள்ளது.

அன்று ஞானிகள் ஊர் தோறும் முச்சந்தியிலே விநாயகரை வைத்துக் காட்டியுள்ளார்கள். ஒவ்வொரு தெரு மூலையை எடுத்துக் கொண்டாலும் மாரியம்மன் தெய்வத்தை வைத்திருக்கின்றனர்.

நாம் சிந்தித்துப் பார்க்கும் நேரங்களில்
1.தன்னை அறியாது ஏற்படும் தவறுகளையும்
2.நல்லது செய்தாலும் அதிலே இன்னொரு தீய விளைவுகள் எப்படி மாறி (மாரி) வருகின்றது...? அதை எப்படி நீக்க வேண்டும்...? என்பதை உணர்த்துவதற்கு
3.மாரியம்மனையும் விநாயகரையும் திரும்பும் பக்கம்... நினைக்கும் பக்கம்... பார்க்கும் பக்கம்... எல்லாம் உருவாக்கிக் கொடுத்தார்கள் அன்றைய ஞானிகள்.

ஆனால் பின் வந்தோர் அனைவரும் என்ன செய்தார்கள்...?

தன்னக் காத்திட பூதகணங்களாக உருவாக்கி... அந்தப் பூதங்கள் தான் நம்மைக் காக்கும் என்று பலி பீடங்களை அமைத்து உயிர்ப் பலிகளை இடச் செய்து அது தான் நம்மைக் காக்கும் என்று அசுர உணர்வுகளை வளர்த்துக் கொண்டு... மனித நேயமற்ற நிலைகளுக்குக் கொண்டு சென்று விட்டார்கள்.


அன்று வாழ்ந்த அகஸ்தியன் நஞ்சு உருவாகும் உணர்வின் எண்ணங்களை அழித்து நஞ்சினைத் தனக்குள் அடக்கி உணர்வின் தன்மை ஒளியாக மாற்றி விண் சென்றான்.

விண்ணிலே உருப்பெற்ற உயிரணு பூமியின் ஈர்ப்புக்குள் வந்து உடல் பெற்ற பின் ஒவ்வொரு உடலிலும் சேர்த்துக் கொண்ட வினைகளுக்கு நாயகனாக அடுத்தடுத்து உடல்களை எப்படி மாற்றி வந்தது...?

ஒவ்வொரு நிலையிலும் தான் சுவாசித்த உணர்வுகள் மூஷிகவாகனா... அதாவது எண்ணி எடுத்துக் கொண்ட உணர்வின் மணங்களை நுகர்ந்து


1.அதுவே வாகனமாக இந்த உடலை அழைத்துச் சென்று அந்த உடலைக் காத்திடச் செய்தது
2.காத்திட்ட உணர்வுகளை எல்லாம் வினையாகச் சேர்த்து அதனின் அடிப்படையில் ஞானம் வளர்ந்து
3.அந்த உணர்வுக்கொப்ப உடலை மாற்றி அமைத்து மனிதனாக வந்தது என்பதை உணர்ந்தவன் அகஸ்தியன்.

மனிதனான பின் இந்த வாழ்க்கையில் வரும் தீய வினைகளை நீக்கி நல் வினையை நாம் எப்படிச் சேர்க்க வேண்டும்...? இந்த உடலுக்குப் பின் எப்படி விண் செல்ல வேண்டும்...? என்பதைச் சாதாரண மனிதனுக்கும் உணர்த்துவதற்கே திரும்பிப் பார்க்கும் இடங்களில் எல்லாம் விநாயகனை அன்று வைத்தார்கள் ஞானிகள்.



நல்லதைக் காப்பதற்காகச் சாதாரண நிலைகளில் அகஸ்தியனால் அன்று தன் இன மக்களுக்காகக் கொடுக்கப்பட்டது தான் விநாயகர் தத்துவம்

வாழ்க்கையில் எதையெல்லாம் யாரை எல்லாம் எப்படி எல்லாம் இம்சிக்கிறோமோ இம்சைப்பட்டவருடைய கண் கூர்மையான நினைவாற்றல் கொண்டு யாரால் ஏற்பட்டது? என்று எண்ணப்படும் போது யார் இத்தகைய திருட்டுத் தொழிலைச் செய்தாலும் அந்த உணர்வலைகள் ஊடுருவி இந்த உடலுக்குள் இருக்கும் உயிர் அதிலிருக்கக்கூடிய காந்தம் நுகரப்பட்டுப் பதிவு செய்து அவன் பட்ட இம்சையின் உணர்வுகள் உடலுக்குள் புகுந்து "அதே இம்சையைக் கொடுக்கும்..." என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.



நம் எண்ணத்தால் அகண்ட அண்டத்தையும் அளந்தறிய முடியும்

நாம் இந்தச் சூரிய குடும்பத்தில் தான் வாழ்கின்றோம் என்று நினைக்கின்றோம். இங்கிருந்து ராக்கெட்டிலே நாம் மற்ற கோள்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் எவ்வளவு காலம் ஆகின்றது...?

1.எண்ணத்தின் மனோ நிலை ஆனாலும்
2.குருநாதர் காட்டிய அருள் வழியில் நாம் எண்ணும் பொழுது உடனடியாக அங்கே டச் (TOUCH) ஆகும்.

குருநாதர் 2000 சூரியக் குடும்பங்களுக்கும் மனதைப் பாய்ச்சும் படி செய்கின்றார். அங்கே மனதைப் பாய்ச்சப்படும் பொழுது
1.ஒவ்வொரு சூரியக் குடும்பமும் என்ன செய்கின்றது...?
2.அதிலே ஒதுங்கிய தூசிகள் என்ன செய்கின்றது...?
3.ஒன்றுடன் தொடர்பு கொண்டு ஒன்றுடன் ஒன்று ஒத்துழைத்து எப்படி வாழுகின்றது...? என்பதை உணர முடிகிறது.

மரம் செடி கொடிகள் இருந்தாலும் எதுவும் தனித்து வாழ முடியாது. ஒரு செடி உருவானாலும் அதனுடன் இணை சேர்த்த தாவரங்கள் மறைந்தால் இதற்குச் சத்து குறைந்து விடும்... இதுவும் வீழ்ச்சியடையும்.

சில தாவர இனங்களுடைய சத்துகள் கலந்து புதுப் புதுச் செடிகள் உருவாகி இருக்கும். அப்படிக் கலந்த செடிகளின் இனங்கள் மறைந்து விட்டால்... இந்தச் செடி சிறிது காலம் தான் வளரும்.

1.காரணம் அந்தச் சத்து தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருந்தால் இதுவும் வளரும்... அது இல்லை என்றால் மடியும்.
2.இதையெல்லாம் குருநாதர் எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றார்.

காட்டுப் பகுதிக்குள் எம்மை அழைத்துச் சென்று காடுகளில் தாவரங்கள் எப்படி வளர்கின்றது...? மடிகின்றது...? இதை போன்ற உணர்வுகளைத் தெளிவாகக் காட்டிக் காட்டி மனிதன் எப்படி வாழ வேண்டும்...? என்று உணர்த்துகிறார்.

மனிதன் சிறிது காலம் வாழ்ந்த பின் அவனுடைய கடந்த கால உணர்வுகள் அழிந்து விடுகின்றது... ஆனாலும் கல் மண் இவைகளில் அது பதிவாகின்றது.

மனிதன் எல்லாவற்றையும் கலந்து சேர்த்துக் கொண்ட உணர்வுக்கொப்ப வரப்படும் பொழுது பதிவாகிறது. அவ்வாறு பதிவான கடந்த கால மனிதனுடைய உணர்வுகளை மறுபடியும் அதை ஆயிரம் மடங்கு பெருக்கினால் இந்த உணர்வின் அதிர்வும் அவருடைய உருவத்தையும் புகைப்படமாக எடுக்க முடியும்.

கம்ப்யூட்டர் என்ற எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் சாதனங்கள் மூலம்
1.ஆஸ்பத்திரி கேட் மேலே தாவி ஒருவன் தப்பிச் சென்றான் என்று அதிலே பதிவான உணர்வு கொண்டு கண்டுபிடித்து
2.அவனுக்கு ஒரு கண் இல்லை (ஒற்றைக் கண் சிவராசன்) என்று உணர்வின் ஒலி அதிர்வுகளை எடுத்து
3.இந்த உணர்வின் அதிர்வுகளைக் கூட்டப்படும் பொழுது அவனுடைய ரூபத்தைக் காட்டுகின்றது... விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கின்றனர்.

அதே விஞ்ஞான அறிவு கொண்டு 1500 வருடம் மனிதன் வாழலாம் என்று இதையும் சொல்கின்றார்கள்.

1.ஆனால் அத்தகைய பிழைகள் வந்து வரும் பொழுதெல்லாம் துருவ நட்சத்திரத்தின் சக்தியை நுகர்ந்து நுகர்ந்து நுகர்ந்து
2.வாழ்க்கையில் எப்பொழுதெல்லாம் தவறு என்று தெரிகின்றதோ அந்தத் தவறு விளையாதபடி
3.துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெற வேண்டும் என்று இணைத்து விட்டால்
4.இந்த வாழ்க்கையில் வரும் நிலைகளை தணித்து அருள் உணர்வுகளைப் பெருக்க முடியும்.

இது தான் வாழ்க்கையே தியானம் என்பது.

1.நான் சும்மா உங்களிடம் கொடுக்கவில்லை...
2.குருநாதர் எமக்குச் சும்மா கொடுக்கவில்லை.
3.இந்த உணர்வுகள் உங்களுக்குள் பதிவானால்... அந்த நினைவின் தன்மை கொண்டு தான் அதை எடுக்க முடியு .

ஆனால் இந்த உடலின் இச்சைக்கு வாழக் கற்றுக் கொண்டால்... உடலை வளர்க்கவும் கௌரவத்தை வளர்க்கவும்... "அதை வைத்து என்னை மெச்சிக் கொள்ள வாழ வேண்டும் என்று எண்ணினால்" இந்த உடலுக்காகத் தான் நாம் வாழ முடியும். அப்போது குருநாதர் கொடுத்த சக்திகள் பயனற்றதாக ஆகிவிடும்.

ஆகவே இந்த உடலில் இருக்கக்கூடிய உணர்வுகள் உடலின் இச்சைக்குச் செல்லாதபடி எல்லோருக்கும் இந்த அருள் சக்தி கிடைக்க வேண்டும் என்று அந்த ஆசையைத் தூண்டுதல் வேண்டும்.

நீங்கள் அந்த உயர்ந்த சக்தி பெற வேண்டும் என்று எண்ணினால் நான் முதலிலே பெறுகின்றேன். உங்களுக்குப் பெற வேண்டும் என்று எண்ணும் பொழுது நான் பெறுகின்றேன்.

அதைத்தான் குருநாதர் எமக்குள் உருவாக்கினார்.

1.இந்தப் பேருண்மையின் உணர்வுகளை உங்களுக்குள் பதிவாக்கி...
2.அந்தப் பதிவின் நினைவை உங்களுக்குள் வளர்ப்பதற்குத் தான் இதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகின்றேன்.
3.வாழ்க்கையையே ஒவ்வொரு நொடிப்பொழுதும் தியானமாக அமைக்க வேண்டும் என்று சொல்கின்றோம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

ஜீவன் பெற்று கோளின் தன்மை ஆனாலும் சந்திரன் பூமியின் அணைப்பிலே தான் ஓடுகின்றது. பூமியின் அணைப்பிலே ஓடினாலும் சூரியனின் ஒளி பூமியில் பட்டு அதனுடைய நிழல் படும்பொழுது சந்திரனை முழு நிலவாக ஆக்குவதில்லை.

சூரியனின் ஒளியை பூமி தனக்குள் ஒரு பகுதி அதிகமாக எடுத்துக் கொள்கிறது. அத்தகைய பூமியின் நிழல் சந்திரனில் படும் பொழுது இருள் சூழ்ந்த நிலையாக அங்கே வளர்கின்றது.

இருப்பினும் இந்தச் சூரியனின் நிலைகள் கொண்டு மற்ற கோள்களின் சக்தியை அது உணவாக எடுக்கும் பொழுது புதனோ மற்ற கோள்கள் வரப்படும் பொழுது சூரியன் நேர் பார்வையாக வரும் நேரத்தில் பூமிக்கு நேரே அந்தக் கோள்கள் மறைத்துக் கொண்டால்
1.பூமிக்கு வரும் செவ்வாய்க் கோளின் உணர்வின்... அதாவது நாதங்களை எழுப்பும் உணர்வுகள் இதற்குக் கிடைப்பதில்லை.
2.ஒரு நிமிடம் மாறி விட்டால்... மனிதனாக விளைந்த நாத சுருதிகள் மாறும் பொழுது
3.இந்த மனிதனுக்குப் புத்தி பேதம் ஆகிவிட்டது என்று சொல்வார்கள்...
4.நாதங்கள் சுருங்கி விடுவதும்... பின் பல நோய்களும் வந்து விடும்.

மெய் ஞானிகள் இதை எல்லாம் தெளிவாக உணர்த்திய நிலைகள்.

ஒரு சூரியக் குடும்பத்தில் ஒதுங்கிய கழிவுகளை "வால் நட்சத்திரம்" என்று சொல்வார்கள்.

மற்ற நட்சத்திரங்களுடன் சேர்ந்து மற்ற கோள்களுடைய நிலைகள் பூமிக்குள் வராதபடி இந்த உணர்வின் அலைகள் உந்தப்பட்டு பிரபஞ்சமே அல்லாதபடி "ஒரு தனி இடத்திலே" அது ஒதுங்கி நிற்கும்.

ஒரு கட்டிடத்திலே சுழிக் காற்று அடித்தால் தூசிகள் எப்படி ஒரு பக்கம் ஒதுங்குகின்றதோ அது போன்று
1.மற்ற கோள்கள் உமிழ்த்தும் (கழிக்கும்) நிலைகள் அது எதனுடைய ஈர்ப்புக்குள்ளும் செல்லாதபடி
2.ஒவ்வொரு சூரிய குடும்பத்திலும் இடைப்பட்ட இடத்திலே சுழன்று கொண்டிருக்கும்.

மற்ற ஈர்ப்பு எதுவும் இல்லாதபடி "கடும் நஞ்சின் தன்மையாக" அடைந்திருக்கும் நேரத்தில்... அது போகும் பாதையில் ஏதாவது சூரியக் குடும்பம் எதிர்பட்டால் என்ன ஆகும்...?

பிற மண்டலத்தில் இருந்து குவிக்கப்பட்ட தூசிகளைப் போன்றே அதற்குள்... சூரியன் ஈர்ப்பு காந்தத்தால் இதனின்று கலந்த அந்த நிலைகளும் வால் நட்சத்திரத்தில் உண்டு.

சூரியன் அதைக் கலந்து இழுக்கப்படும் பொழுது சூரியனுக்குள் சென்றால் அந்த நஞ்சினை மாற்றி அமைத்து விடுகின்றது

ஆனால் நட்சத்திரத்திங்களுக்கும் சிக்காது அதிலிருந்து விலகி இடைப்பட்ட நேரங்களில் கோள்கள் இருக்கும் பக்கமாகச் சென்று அதற்குள் விழுந்தால் அங்கே "எரிமலையும்... வெடிப்பும்" ஏற்படும்.

அதே சமயத்தில் கோள்கள் தடுக்காதபடி நம் பூமி போகும் பாதைக்குள் நுழைந்து... பூமியின் ஈர்ப்புக்குள் வந்தால் அது எந்தப் பிரதேசமோ அங்கே அரசாட்சி செய்யும் அரசனுக்கு "ஆகாது..." போய்விடும்.

அதாவது
1.நஞ்சின் தன்மையாக அங்கே கலக்கப்பட்டு
2.அந்த நாடுகளுக்குள் மக்களிடையே கலவரங்களும் சோர்வடையும் நிலைகளும்

3.அரசர்களுக்குள் சிந்திக்கும் திறன் இழக்கப்பட்டு அதனால் நாட்டுக்கு நாடு போர் முறைகளும் மூளும்.

பூமிக்குள் வரும் போது நடு மையத்தில் கொதிகலனாக ஏற்பட்டு சிறுகச் சிறுக விளைந்து சில பகுதிகளில் பூகம்பங்கள் கிளம்பும். அதே சமயத்தில் ஹைட்ரஜன் என்று நீருக்குள் இந்தச் சக்திகள் கலந்து மோதப்படும் பொழுது சுழல் காற்றாக உருவாகிப் புயலாக மாறிவிடும்.

இதுகள் எல்லாம் "விஞ்ஞானிகளுக்கு அப்பாற்பட்ட நிலைகளை" நான் (ஞானகுரு) சொல்கிறேன் என்று யாரும் எண்ண வேண்டாம்.

மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் காட்டிய நிலைகள் கொண்டு விண்ணுலக ஆற்றலும் அதனின் அணுக்களின் செயலும் எவ்வாறு உருவானது...? என்பதை என்னால் அறிய முடிந்தது.

அதனின்று வடிக்கப் பெற்று உருப்பெறச் செய்யக்கூடிய தகுதி பெற்ற மனித உடலில்... இன்று ஜாதகம் என்ற பெயரால் மதம் இனம் குலம் என்ற பெயரால் நாம் வடித்துக் கொண்ட நிலைகள்
1.இந்த உடலில் இருந்து ஒளியின் சரீரமாகப் பெறும் தகுதியை இழந்து
2.மனித உருவையே அழித்து விடும் எண்ண உணர்ச்சிகள் வளர்ந்து விட்டது.

மதம் இனம் மொழி என்ற பேத நிலைகளாகி... நஞ்சின் தன்மை சுவாசிக்கப்பட்டு... பச்சிளம் குழந்தைகள் தவறே செய்யாத நிலை இருந்தாலும்... வெறி கொண்டு கொன்றிடும் நிலை வளர்ந்து கொண்டுள்ளது.

மனிதனுடைய உடலுக்குள் நஞ்சு கலந்து கலந்து அழித்திடும் உணர்வுகள் ஊடுருவிச் சென்று இந்தப் பூமியே முதுமை அடைந்து "மனிதனை மனிதனே கொன்று புசிக்கும் நிலை வந்து விட்டது..."

1.மனிதனைக் கொன்று அவன் வைத்திருக்கும் செல்வத்தைத் திருடுகின்றனர்
2.ஒரு மனிதன் கையில் சிக்கினால்... தன் பசியைப் போக்க அவனையே ரோஸ்ட் செய்து சாப்பிடும் நிலையும் இன்று வந்துவிட்டது.



மனிதனுடைய உடலுக்குள் நஞ்சு கலந்து கலந்து அழித்திடும் உணர்வுகள் ஊடுருவிச் சென்று இந்தப் பூமியே முதுமை அடைந்து "மனிதனை மனிதனே கொன்று புசிக்கும் நிலை வந்து விட்டது..."



மும்முனையாக நமக்குள் இயக்கும் சில உணர்வின் இயக்கங்கள்

ஒருவரை நண்பன் என்று நாம் கருதிக் கொண்டிருக்கும் பொழுது அவனில் விளைந்த உணர்வு நாம் ஏற்றுக் கொண்ட உணர்வு இவை இரண்டும் கலந்து ஊழ் வினையாகப் பதிவாகும் பொழுது அந்த நண்பனை அணுகி அவனுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்...? என்று எண்ணுகின்றோம்.

அந்த நண்பன் பால் நாம் ஒருங்கிணைந்த நிலைகள் கொண்டு பற்றுடன் பதிவு செய்த உணர்வுகள் அந்த நண்பன் ஒரு தவறு செய்திருப்பான் என்றால்
1.அதாவது இன்னொருவனுக்கு எதிர்நிலையான தவறுகளைச் செய்திருப்பார்
2.அவர் எனக்கு இப்படித் துரோகம் செய்தார் என்று அவர் நம்மிடம் சொன்னாலும்
3.நண்பன் துரோகி அல்ல எனக்கு நல்லவனாகத் தான் இருக்கின்றான் அவன் நல்லவனே...! என்று

4.இந்த உணர்வின் தன்மை வினைக்கு நாயகனாக... அவன் உணர்வு நமக்குள் பதிவு செய்தது இவ்வாறு தான் இயக்கும்.

இன்னொருவன் கூறிய கூற்றை ஏற்றுக் கொள்ளாது.

ஆனாலும்... அவன் பேசிய உணர்வுகள் நமக்குள் பதிவான பின் அவனை ஏற்றுக் கொள்ளாத நிலைகள் கொண்டு அவனை நினைக்கும் போதெல்லாம் நண்பனைக் குற்றவாளியாகப் பேசினான் என்ற உணர்வுகள் நமக்குள் பதிவாகும்.

இருந்தாலும் நம் நண்பன் ஒரு சந்தர்ப்பத்தில் ஏதோ அவருடைய சூழ்நிலை காரணமாக நாம் சொன்னதை அந்த நண்பன் செய்யவில்லை என்றால் என்ன ஆகிறது...?

அந்த இன்னொருவன்... வேண்டாதவன் நம்மிடம் கூறினான் அல்லவா...! அந்த உணர்வு நம் ஆன்மாவில் கலந்தே இருக்கும்.
1.ஊழ் வினையாக நமக்குள் வித்தானாலும் ஆன்மாவில் கலந்து இருக்கும்.
2.இது இரண்டையும் கலந்து நாம் சுவாசிக்கும் போது அவன் கடுமையாக நண்பனைக் குற்றம் கூறிய உணர்வு கலந்த பின்
3.நண்பனைக் குற்றவாளி என்று நாமும் கருதும் நிலைக்கு வந்து விடுகின்றோம்.
4.அப்படி வந்து விட்டால் சிறிதளவு அந்த எதிர்ப்பு நிலைகள் பதிவாகி விட்டது என்றால் "மும்முனையாக..." அது இயங்கத் தொடங்கி விடும்.

பாலுக்குள் பாதாமைப் போட்டாலும் சுவையாகத் தான் இருக்கின்றது. அதில் சிறிதளவு காரத்தை இணைத்து விட்டால் இந்தக் காரத்தின் சுவையைத் தனித்துப் பிரித்தே காட்டுகிறது.

1.ஒருவன் தவறு செய்யும் உணர்வுகள் அவன் நண்பன் என்று இருந்தாலும்
2.நண்பன் மீது குறை கூறிய உணர்வுகளோ நண்பனுடன் பற்று கொண்டதுடன் இணைத்த உணர்வுகள்
3.மும்முனையால் இயக்கப்பட்டு மாற்று வித்தாக ஊழ்வினையாகப் பதிவாகின்றது.

பதிவான உணர்வுகள் அந்த நண்பன் வெளியிட்ட உணர்வலைகளைச் சூரியனுடைய காந்த சக்தி கவர்ந்து வைத்திருக்கிறது. நம்முடன் நட்பு கொண்ட உணர்வும் இங்கே பதிவாகி இருக்கின்றது.

ஆனால்
1.நட்பின் நிலைகள் ஓங்கி இருப்பினும்
2.சந்தர்ப்பத்திற்கு எதிர்ப்பு உணர்வுகள் ஏற்பட்டிருந்தால்
3.அதைச் சொல்லி இதனுடன் இணைத்து நாம் கேட்டிருந்தால்
4.அப்படிப் பதிவான நிலைகள் வந்து விடுகின்றது... பகைமையாக நமக்குள் உருவாக்கி விடுகின்றது.

இதையெல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

ஜாதகம் குறிப்போர்... நட்சத்திரத்தின் நிலைகள் வைத்துப் பூமியின் நிலையை அந்த இயக்கச் சக்தியை மனித உயிரணுவிற்குள் இணைக்கப்பட்டு எழுதி வைத்துள்ளார்கள்... "ஞானிகளுக்குப் பின் வந்தோர்..."

ஆனால் மனிதன் என்பவன் முழுமை பெற்றவன் – முழு முதல் கடவுள்... உருவாக்கும் திறன் பெற்றவன். இருந்தாலும் ஜாதகக் கணிப்புகளை வைத்து இன்று எதைச் சிருஷ்டித்துக் கொள்கின்றார்கள்...? என்று பார்ப்போம்.

ஒரு குழந்தை பிறக்கிறது என்றால் (அந்த நேரப்படி)
1.இன்ன நேரத்தில் இன்னென்ன நட்சத்திரங்கள் இன்னென்ன கோள்கள் வந்தது
2.ஆகவே இன்னென்ன கோள்கள் இன்னென்னதற்கு ஆகாது என்பார்கள்.

அதற்குண்டான சாஸ்திரங்களை எழுதி வைத்திருப்பார்கள். அதன் அடிப்படையில் வைத்து ஜாதகங்களை எழுதிக் கொடுப்பார்கள். எந்த மதமானாலும் ஜாதகம் எழுதாதவர்கள் யாரும் இல்லை.

விண்வெளியின் ஆற்றலை (வான இயல்) இயக்கத்தின் நிலைகளை அந்தந்த நாட்டிலே தோன்றிய தத்துவ ஞானிகள் மதத்துடன் இணைத்து இது கடவுளின் அவதாரம்... கடவுளின் செயல்... என்றும் இன்ன நட்சத்திரங்கள் இன்னது தான் ஆகும் என்றும் அவரவர்கள் உணர்வுக்கொப்ப அந்தந்த நாட்டிற்குத் தகுந்த மாதிரி மதங்கள் அமைத்து மதத்திற்குத்தக்க கடவுளை அமைத்துள்ளார்கள்.
1.அதன் அடிப்படை ஆச்சாரப்படி வழி நடத்தும் உணர்வின் தன்மை கொண்டு
2.ஜாதகக் குறிப்புகளை வைத்துக் கொண்டிருப்பார்கள்.

குழந்தை பிறந்து விட்டால் அவர்கள் வகுத்துக் கொடுத்த சட்டப்படி காலண்டரை... பஞ்சாங்கத்தை அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் பார்க்கின்றோம்.

இன்ன நட்சத்திரத்தில் இந்த நிலையில் குழந்தை பிறந்து இருக்கின்றது. இதைக் குறிப்பாக எடுத்துக் கொடுத்தவுடன் அந்தச் சட்டத்தை அவன் வாசிப்பான்.

அவர்கள் எதை எதையெல்லாம் எழுதி வைத்திருக்கின்றார்களோ...
1.இது ஆகாது... இது இப்படி இருக்கின்றது... கஷ்ட காலம் இன்ன நேரத்தில் வரும்...
2.ஏழரை நாட்டான் சனி வருகின்றான் இப்பொழுது பிறந்து விட்டால் உங்கள் குடும்பத்திற்கு ஆகாது என்றும்.
3.அதனால் வியாபாரம் கெடும்... குழந்தை பிறந்த இந்த நேரத்திற்குக் குடும்பத்தில் வரிசையாக சிக்கல்கள் வரும் நோய்கள் வரும் என்று
4.வரிசையாகச் சொல்லிக் கொண்டே போவார்கள்.

அவர் சொல்வதை எல்லாம் "ஒரு கம்ப்யூட்டரில் பதிவு செய்து... எப்படித் திருப்பி இயக்குகின்றோமோ..." அதைப் போன்று நமக்குள் அவர் சொன்னதைப் பதிவு செய்து கொள்கின்றோம்.

பின் அந்தக் குழந்தையை நினைக்கும் பொழுதெல்லாம் எந்த வியாபாரத்திற்கு சென்றாலும் "ஏழரை நாட்டுச் சனி இருக்கின்றானே... ஆகையினால் எப்படி வியாபாரம் செய்வது...?" என்ற எண்ணங்களையே வளர்த்துக் கொண்டு வருவோம்.

இதை எல்லாம் யார் சிருஷ்டித்துக் கொடுத்தது...?

தன் மதத்தை வளர்த்துக் கொள்ள... அதன் கீழ் அரசன் வாழ்ந்திட... மக்களை ஒன்று சேர்க்க... அதன் கீழ் நல்லது கெட்டது என்ற நிலைகள் கொண்டு... அதற்கெல்லாம் தெய்வத்தைக் கொடுத்து... பிழைகள் ஏற்பட்டால் அந்த தெய்வத்திற்கு யாகத்தைச் செய்து விடு...! என்று ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமான முறைகளைப் பின்பற்றுகின்றனர்.

எல்லா மதங்களுமே இப்படித்தான்...!

"ஜாதகக் குறைகள்" ஏற்பட்டு விட்டால் மதத்தின் அடிப்படையில் காட்டிய நிலைகள் கொண்டு இதை நீக்கிட

1.ஆண்டவனுக்கு இதைச் செய்... அல்லது மற்றவர்களை வைத்து இதை ஓதச் செய்.
2.ஆண்டவனிடத்தில் இதற்காக வேண்டி யாகத்தைச் செய்து பரிகாரம் செய்... என்று சொல்வார்கள்.

இப்படி அவர்கள் குறித்து வைத்ததை மதத்துடன் இணைக்கப்பட்டு நமக்குள் பதிவு செய்யப்படும் போது "அது கடவுளாக..." நாம் எண்ணியதை உயிர் படைத்து விடுகிறது... நமக்குள் ஆழமாகப் பதிவாகி விடுகின்றது.

உணர்வைப் பதிவு செய்து கொண்ட பின் என்ன நடக்கும்...?
1.குடும்பத்தில் குழந்தை பிறந்ததிலிருந்து வியாபாரம் மந்தமாகும்
2.சகோதரர்களுக்குள் பகைமையாகும்... கொடுக்கல் வாங்கலிலே தடை ஏற்படும்.
3."எதுவும் உருப்படியாகாது..." என்ற நினைவு எண்ணியவுடனே அலைகளாக மாறி விடுகின்றது.

வெளியிலே எங்கே சென்றாலும் இந்த ஜாதகக் குறிப்பை நினைவுபடுத்தி வைத்துக் கொள்வோம். எண்ணியவுடனே இந்த வாசனை வந்துவிடும்.

யாரிடமாவது வியாபாரம் பேசச் சென்றால் "இவர் என்ன சொல்வாரோ...?" இந்த சந்தேக உணர்வுடன் தான் போவோம். எப்படியும் ஜீவித்து வாழ வேண்டுமே என்று அவரிடம் பேசப்படும் பொழுது நாம் எதையாவது ஒன்று சொன்னால் "அவர் காதிலே கேட்ட பின்" இந்த உணர்வின் இயக்கமாகி அவர் நம்மைப் பார்க்கப்படும் பொழுது நாம் எத்தகைய சந்தேக உணர்வை எண்ணி எடுத்தோமோ அந்த உணர்வின் மணம் முன்னாடி நிற்கும்.

இதை நுகர்ந்த பின் அவருக்குள் என்ன நடக்கிறது...?
1.முதலில் நமக்கு எப்படிக் கலக்கமானதோ
2.அங்கேயும் கலக்கத்தை ஏற்படுத்தி அவருடைய உணர்வுக்குள் கலந்த பின் "பார்ப்போம்...!" என்ற நிலைகள் வந்துவிடும்.

இதற்கு முன்னாடி எல்லாம் சரியாகக் கொடுத்திருப்பார்... ஆனால் இப்பொழுது ஏதாவது காரணத்தைச் சொல்லி அப்புறம் பார்ப்போம் என்பார். ஆனால் நாம் என்ன நினைப்போம்...?

1.ஜாதகத்தில் சொன்னது சரியாக இருக்கிறது
2.எல்லாம் அப்படியே நடக்கின்றதே என்று

3.நமக்குள் பதிவு செய்ததையே திரும்ப எண்ணி அதையே நமக்குள் வளர்த்துக் கொள்கின்றோம்.

காரணம் நாம் எண்ணுவதைத் தான் உயிர் படைக்கின்றது... உணர்வின் செயலை மாற்றுகின்றது.

ஆனால் வியாபாரம் மந்தமாகும் பொழுது வேதனைப்படுகின்றோம் எதிர்காலத்தில் அடுத்து என்ன செய்வது...? என்று சோர்வடைகின்றோம். இதையெல்லாம் கொடுத்தவுடனே அதையும் உயிர் படைத்து விடுகின்றது.

வியாபாரத்தை மந்தமாக்கி... அழகான உடலுக்குள் நோயாக்கி... சுருதியின் திறன் குறைந்து விடும். வீணை வாசிக்கப்படும் பொழுது அதில் இருக்கக்கூடிய நரம்பு கொஞ்சம் தளர்ந்து இருந்தால் கணீரென்று சப்தம் கொடுத்த நரம்பு டொய்ய்ய்ங்ங்... என்று சுருதி மாறிவிடும்.

இது போன்று நமது சொல்லின் தன்மையும் எடுத்துக் கொண்ட உணர்வின் அலைகள் நாதங்கள் சுருதிகள் மாறி... அந்த சுருதிகள் மாறி வெளிப்படும் பொழுது கேட்டு நுகர்வோர் உணர்வுகளிலும் அது இயக்கி... நம்மைத் தாழ்த்திக் கொண்டே தான் இருக்கும்.

இப்படித்தான் ஜாதகக் குறிப்புப் பிரகாரம் சிருஷ்டித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் மனிதன் முழு முதல் கடவுள் என்கிற போது நாம் எதைச் சிருஷ்டிக்க வேண்டும்...? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

ஆக... நம்மை அறியாமலே வேதனையும் துன்பத்தையும் வாழ்க்கையில் நமக்கு நாமே தடை விதித்துக் கொண்டு செல்கின்றோம். இதிலே மதம் இனம் குலம் என்று பிரிக்கப்பட்டு இது என் குலத்திற்கு ஆகாது அல்லது அவர்கள் குலத்திற்கு ஆகாது என்போம்


சம்பந்தங்கள் செய்யும் பொழுது இந்தக் குடும்பத்தாருடன் சம்பந்தம் செய்தால் தான் குலத்துக்கு ஆகும். வேறு குடும்பத்தில் கல்யாணம் செய்தால் ஆகாது என்றெல்லாம்
1.எத்தனையோ வகைகளில் பேதங்களை உருவாக்கி
2.பகைமைகளையே வளர்த்துக் கொண்டு அழித்திடும் உணர்வுகளாகத் தான் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

யாரும் தவறாக எண்ண வேண்டாம்...!

கம்ப்யூட்டரில் பதிவு செய்வது போன்று நம் உடலுக்குள் எது பதிவாகின்றதோ நாம் எண்ணியது மீண்டும் அதை நினைவுபடுத்தப்படும் பொழுது அது தான் நம்மை இயக்கிக் கொண்டுள்ளது.

மனிதன் முழு முதல் கடவுள்... அவனுக்கு ஜாதகம் இல்லை...!





ஓ...ம் நமச்சிவாய...! ஹரி ஓ...ம் நமோ நாராயணா...!

மதத்தின் அடிப்படையில் ஆண்டவன் நாமத்தை ஜெபித்துக் கொண்டே இருந்தால்.. அந்த ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டேயிருந்தால் “இறைவனை அடையலாம்...” என்ற நிலையில் அன்று செயல்பட்டவர்கள் பலர் உண்டு.

சிவத் தத்துவப் பிரகாரம்
1.ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய...! என்று தொடர்ந்து ஜெபித்து இந்த உணர்வை இயக்கப்படும் பொழுது
2.இந்த உடல் எப்படி இருந்ததோ இந்த உணர்வின் இயக்கத்தைத் தொடர்பு கொண்டு
3.தன் உடலில் உள்ள அணுக்களைத் தன்னுடன் இணைக்கக் கற்றுக் கொள்கின்றார்கள்.

அந்த உணர்வின் ஒலிக் கற்றைகள் மூடிவிட்டாலும் இதே உணர்வுகள் நுகரப்பட்டு
1.வெப்பத்தின் துணை கொண்டு உடலில் இயங்கிக் கொண்டே இருக்கும்.
2.இந்த உணர்வுகள் எதுவோ கடைசி நிமிடம் இந்த உணர்வுகள் எல்லாவற்றிலும் உயிரைப் போல இந்த உணர்வுகள் அடங்கிவிடும்.
3.அதாவது.. ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய... ஒலியின் உணர்வுகள் மீண்டும் வந்து கொண்டிருக்கும்... அதன் இயக்கமாக மாற்றி விடுகின்றது.

இந்த உணர்வின் ஒலி அதிர்வுகள் உடலில் உள்ள அணுக்களுக்குள் ஆனபின் "உடல் இருக்கும்... ரசங்கள் குன்றும்... உடல் நலியும்... ஆனால் அதற்குள்ளே தான் இருக்கும்..."

இது எப்படி இருக்கிறது...? என்பதை எனக்குக் காட்டுவதற்குத் தான் இமயமலைச் சாரலில் இரண்டு மூன்று இடங்களுக்கு குருநாதர் அழைத்துச் செல்கிறார்.

முதலில்... மரத்தின் அடியில் இருந்து வெளிவரும் நிலையும்... அதற்காக வேண்டி வெள்ளத்தை வரவழைக்கச் செய்து அதனால் கரைந்து வரப்படும் பொழுது ஓம் நமச்சிவாய என்று உடலுக்குள் தான் சிறைப்பட்டுள்ளார். அதற்கு மேல் தெரியாது... உடலின் உணர்வுக்குச் செல்கின்றார்.

கரைத்த பின் வேறு வழி இல்லை. அடைப்பட்ட நிலையில் அங்கே எதிரொலி இந்த உணர்வின் ஒலி வரப்பப்படும் பொழுது அவருக்கு மிகக் கஷ்டமாகின்றது.

அவரை நீ நேரடியாகப் பார்க்காதே...! என்றார் குருநாதர். காரணம் அவர்கள் வலுப்பெற்றவர்கள்.
1.அவரை எண்ணி இந்த உணர்வை எடுத்தால் அவருக்குச் சேரும்.
2.அதிகாலை 4 மணிக்கு அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை எடுத்து
3.அவர் பெற வேண்டும் என்று இந்த உணர்வைச் செலுத்தப்படும் பொழுது அவர்

ஈர்ப்பார்.
4.இந்த உடலை விட்டு ஆன்மா வெளி வரும்.
5.இருளுக்குள் அடைந்திருந்த உணர்வுகள் ஒளியாக மாறும் சந்தர்ப்பம் வரும்.

அதை நீ செய் என்றார்.

இதே போன்று ஜோஸ்மெட்டிற்கு மேலே என்னை அழைத்துச் செல்கின்றார். அங்கே புதையுண்டிருக்கின்றார்கள். அந்த இடம் ராணுவப் பாதுகாப்பிலே இருக்கின்றது.

அங்கே ஒரு பெரிய ஓடை வருகின்றது... அதிலே திட்டுகள் இருக்கின்றது. மழை பெய்தால் நீர் வரும். ஆனால் திட்டுகளின் ஓரங்களில் அடங்கியுள்ளார்கள்.

ஹரி ஓம் நமோ நாராயணா... ஹரி ஓம் நமோ நாராயணா...! என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அதாவது ஹரி ஓம் நமோ நாராயணா என்றால் சூரியனின் இயக்க நிலை. இந்த ஒலியை எடுத்து உணர்வாக இந்த உடலிலேயே அடங்கி இருக்கின்றார்கள்.
1.இது எல்லாம் குருநாதர் நேரடியாகக் காட்டிய நிலைகள்.
2.செவியை வைத்து அந்தச் சப்தங்களைக் கேட்கும்படி சொல்கின்றார் குருநாதர்.

அப்பொழுது அந்த ராணுவத்தினர் தமிழ் தெரிந்தவர்கள் என்ன பார்க்கின்றீர்கள்...? என்று என்னிடம் கேட்கின்றார்.

ஆனால் "அந்தச் சப்தத்தை நான் கேட்கின்றேன்..." என்று அவரிடம் சொல்ல வேண்டாம் என்று குருநாதர் சொல்லிவிட்டார். சும்மா தான் பார்க்கின்றேன்... இந்த ஊரில்... மலை பிரதேசங்களில் ஏதாவது நிலநடுக்கம் வருகின்றதா...? என்று அவரிடம் சொல்கின்றேன்.

அப்படியா...! என்று கேட்டுக் கொண்டார். அந்தக் குளிர் பிரதேசத்தில் அவர்கள் எல்லோரும் சட்டை அணிந்து இருக்கின்றார்கள். நான் வெறும் கோவணத் துணி தான் கட்டிக் கொண்டு செல்கின்றேன்.

குருநாதர் சொன்ன உணரவின் ஒலியை எடுக்கப்படும் பொழுது எனக்கு அந்தக் குளிர் பாதிக்கவில்லை. இதையெல்லாம் பார்த்துவிட்டு... ராணுவத்தினர் என்னிடம் ஆசீர்வாதம் வாங்க வருகின்றார்கள்.

அங்கே என்னிடம் வேறு ஒன்றும் இல்லை. அங்கிருந்த மணலைத் தான் எடுத்து ஆசீர்வாதமாகக் கொடுத்தேன்... உங்களுக்கு நல்லதாகும் என்று சொன்னேன். சந்தோஷமாக வாங்கிச் சென்றார்கள்.

ஹரி ஓம் நமோ நாராயணா... ஹரி ஓம் நமோ நாராயணா... என்று சொன்னாலும் சூரியனின் தொடப்ரில் தான் வருகிறது.
1.இந்தக் கூட்டை விட்டு வெளியே வந்தால் சூரியனுடைய சக்தியால் தான் மீண்டும் கவரப்படும்.
2.அவர் எந்த ஒலியின் உணர்வைப் பெற்றாரோ அதன் உணர்வின் தன்மை தான் மீண்டும் வரும்.

இந்த உடலுக்குள் எப்படி அவர்கள் ஒடுங்கினார்களோ இன்னொரு உடலுக்குள் சென்றால் அங்கேயும் இதே நிலையைத் தான் உட்கார வைக்கும். அந்த உடலில் மீண்டும் இதே முயற்சியை எடுக்கும்.

ஹரி ஓம் நமோ நாராயணா...! என்கிற பொழுது
1.நாராயணன் செயல் இயக்குகிறது என்று அந்த உணர்வின் தன்மையை அங்கே தியானம் இருக்கும்படி குருநாதர் சொன்னார்.
2.அந்த உணர்வினை அங்கே அவர்களுக்கு ஊட்டும்படி சொன்னார்... அவர்களுக்கு அது தெரியும்...
3.தெரிந்த உணர்வு கொண்டவர்கள் எடுத்தால் அவர்கள் விண் செல்ல உதவும்.
4.அதற்காக வேண்டிச் சிலதுகளைச் சொல்லி... இந்த உணர்வின் எக்கோவை (எதிரொலி) கொடுக்கும்படி சொன்னார்.

இப்படி இமயமலைச் சாரலில் ஏராளமானோர் இன்னும் அந்தக் கூட்டுடன் உடலுடன் தான் புதையுண்டுள்ளார்கள். இது எல்லாம் குருநாதர் எமக்குக் காட்டிய பேருண்மைகள்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

சப்தரிஷி மண்டலங்களையும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியையும் நாம் தியானித்து இந்த உடலில் வலுப்பெற்ற பின்
1.எந்த மூதாதைகளின் குல உணர்வுகள் நமக்குள் இருக்கின்றதோ
2.உடலை விட்டுப் பிரிந்து சென்ற அந்தச் சூட்சம சரீரம் ஆனவர்களை உந்தித் தள்ளி
3.சப்தரிஷி மண்டலங்களுடன் இணைக்கச் செய்ய வேண்டும்.

மகரிஷிகள் தங்கள் வாழ்க்கையில் வந்த இருளைப் போக்கி உணர்வுகளை ஒளியாக மாற்றி உடல் பெறும் உணர்வுகளைக் கரைத்து எப்படி ஒளியின் சரீரம் ஆனார்களோ... அதே போன்று மூதாதையர்களை அங்கு அனுப்பப்படும் பொழுது அந்த உயிராத்மாக்கள் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் வாழ்வதும்... ஆறாவது அறிவை ஏழாவது ஒளியாக மாறி வாழத் தொடங்கும்.

விண்ணிலே அந்த உயிரான்மாக்களைச் செலுத்தப்படும் பொழுது அவர்கள் உணர்வின் அறிவே நமக்குள் உண்டு. நாம் எண்ணும் போதெல்லாம் அந்த விண்ணின் ஆற்றலை எளிதில் பெற்று... வாழ்க்கையில் வரும் துன்பங்களை நாம் அகற்றிக் கொள்ள முடியும்.

முதலில் துருவ நட்சத்திரத்தின் உணர்வை நமக்குள் வலுவாக்கி அதன் துணை கொண்டு மூதாதையர்களை விண் செலுத்த வேண்டும்.

நம் முன்னோர்கள் எத்தனையோ துயரப்பட்டுத் தான் நம்மை வளர்த்தார்கள். அவர்களின் உடல் பெறும் உணர்வுகளை அங்கே கரைக்கப்படும் பொழுது உயிருடன் ஒன்றி ஒளியாக மாறுகின்றார்கள்... வேகாநிலை...!

உணர்வின் தன்மைகள் சாகாக்கலையாக இயக்கினால் அந்த விஷத்திற்குத்தக்க மீண்டும் உடலை அமைத்துவிடும். ஆகவே இதை மாற்றி விண் செலுத்த வேண்டும்.

குருநாதர் காட்டிய அருள் வழியில் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் நாம் மூதாதையர்களைச் செலுத்தவும்... ஞானிகள் உணர்வுகளை வலுவாக்கி... தியானத்தின் வலுவின் துணையால்
1.அந்த உடலை விட்டுப் பிரிந்து சென்ற ஆன்மாக்களை
2.நம் பூமியின் துருவத்தின் எல்லை ஓரத்தில் இருந்து சுழன்று கொண்டிருக்கும்
3.துருவ நட்சத்திரத்துடன் சப்தரிஷி மண்டலத்துடன் இணைய ஏதுவாக இருக்கும்.

அதன் வழியில் இணைத்து விட்டால் உடல் பெறும் உணர்வுகள் கரைந்து விடுகின்றது. அவர்களும் சப்தரிஷிகளாக ஆகிவிடுகின்றார்கள்.

அவர் உயிர் பெற்று உணர்வின் தன்மை உடல் பெற்ற பின் அவர்களும் உயிருடன் ஒன்றிய உணர்வு ஒளியாக்கப்படும் பொழுது இந்த உணர்வினை நாம் எளிதில் பெற்று வாழ்க்கையில் வரும் துன்பங்களை நாம் அகற்ற முடியும்.

அத்தகைய தன்னம்பிக்கையை ஊட்டத்தான் இதிலே பல அனுபவங்களையும்...
1.உயிரான்மாக்களை எப்படி விண் செலுத்துவது...? என்று அனுபவ ரீதியிலே கொண்டு வந்ததனால்
2.உங்களில் இந்த உணர்வைக் கூட்டி... "ஆயிரக்கணக்கோர் இந்த உணர்வுடன் துணை கொள்ளும் பொழுது" எளிதில் விண் செலுத்த முடியும்.

ஆனால் இதற்கு முன் அதைச் செய்யத் தவறி விட்டோம் இப்பொழுது இங்கே சொல்லும் முறைப்படி முன்னோர்களை விண் செலுத்தலாம்.

1.இன்னொரு உடலுக்குள் சென்றிருந்தாலும் அங்கே ஆவியாகத்தான் இருக்கும்
2.அந்த உடல் மடிந்த பின் அந்த உடலைக் கடந்து வெளியே வந்தால் மிருக உடலைப் பெற்று விடும்
3.மிருக உடல் பெற்றால் அவர்களை நாம் யாரும் மாற்ற முடியாது.

ஒரு உடலுக்குள் ஆவியின் நிலையாக இருக்கும் போது நாம் விண் செலுத்துவதற்காகப் பாய்ச்சும் உணர்வுகள் அவர்கள் சுவாசிக்கும் உணர்வுடன் கலக்கின்றது. (ஏனென்றால் சுவாசத்தில் கலந்து தான் அந்த ஆவியின் இயக்கமும் வருகிறது).

சுவாசித்த உணர்வு அவர்களுக்குள் செல்லப்படும் பொழுது இன்னொரு உடலுக்குள் ஆவியாக இருக்கும் முன்னோரின் ஆத்மாவிற்குள் இது சேர்க்கப்பட்டு உடல் பெறும் உணர்வை மாற்றி அமைக்கும் அமைப்புகள் வருகின்றது.

1.இப்படி அமைத்த பின் உடலை விட்டு அந்த ஆன்மா வெளியே வந்தால்
2.காலை துருவ தியானத்தில் துருவ நட்சத்திரத்தினுடைய வலுவை நாம் சேர்த்துக் கொண்டு
3.உடலை விட்டுப் பிரிந்து சென்ற முன்னோர்கள் ஆன்மாக்கள் சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று செயல்படுத்தினால்
4.அந்த ஆன்மாக்களை நாம் எளிதில் பிறவி இல்லா நிலை அடையச் செய்ய முடியும் (மிருக உடல் பெறுவதை மாற்றி அமைக்க முடியும்).

ஆனால் செய்யத் தவறினால் என்ன ஆகும்...?

அவர் வாழ்ந்த காலத்தில் அவர் பட்ட துயரமும் அவருடைய உணர்வின் எண்ணங்களும் நமக்குள் பதிவாகி இருக்கும். அவருடைய நினைவாற்றலும் நமக்கு அடிக்கடி வரும்... அவர் வாழ்ந்த காலத்தையும் நாம் எண்ணுவோம்.

1.அப்போது அவர் பட்ட வேதனை நமக்குள் உருவாகும்... பரம்பரை நோயாக உருவாகி விடும்.
2.நமக்குப் பின் வரும் சந்ததிகளுக்கும் இதே உணர்வு வந்துவிடும்.
3.ஆக... குல வழியில் ஒரு பக்கம் கெட்டது என்றால் அந்த கெட்ட உணர்வின் தன்மையே நமக்குள் வளர்த்து விடும்

இது போன்ற நிலையில் இருந்து எல்லாம் விடுபடுவதற்கு நமது குருநாதர் காட்டிய அருள் வழியில் மூதாதையர்களை விண் செலுத்த முயற்சி எடுங்கள்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தோறும் அதற்காகத்தான் இதை உபதேசிக்கப்பட்டு எல்லோருடைய உணர்வுகளையும் அங்கே குவிக்கச் செய்து உங்களுக்குள் வலு சேர்க்கின்றோம்.

அந்த உணர்வினைக் கொண்டு தியானித்து சப்தரிஷி மண்டல உணர்வுகளை ஏங்கிப் பெற்று "முன்னோர்கள் மூதாதையர்களின் ஆன்மாக்களை விண் செலுத்தப் பழகிக் கொள்ளுங்கள்..."



சப்தரிஷி மண்டலங்களையும் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியையும் நாம் தியானித்து இந்த உடலில் வலுப்பெற்ற பின் எந்த மூதாதைகளின் குல உணர்வுகள் நமக்குள் இருக்கின்றதோ உடலை விட்டுப் பிரிந்து சென்ற அந்தச் சூட்சம சரீரம் ஆனவர்களை உந்தித் தள்ளி சப்தரிஷி மண்டலங்களுடன் இணைக்க வேண்டும். இதற்கு முன் செய்யத் தவறி விட்டோம். இப்பொழுது இங்கே சொல்லும் முறைப்படி முன்னோர்களை விண் செலுத்தலாம்.



சமீபத்தில் விண் சென்ற கோலமாமகரிஷியின் அருள் சக்தியை நாம் அனைவரும் பெறுவோம்

அம்மா அப்பா அருளால்... மிகவும் சக்தி வாய்ந்த சப்தரிஷிகளின் அருள் சக்தியையும் கோலமாமகரிஷி வளர்த்த அந்த அருள் சக்தியையும் நமக்கு முன் படர்ந்திருப்பதை நாம் கவர்ந்து நம்மில் இணைப்போம்.

அந்தத் தத்துவ மகரிஷி உலக இயல்புகளை எவ்வாறு கண்டுணர்ந்தார்...? அவருக்குள் எவ்வாறு விளைய வைத்தார்...? என்று
1.அவரில் விளைந்த அருள் ஞான வித்தை நமக்குள் பதிவு செய்து
2.உண்மையான மெய் உலகில் அவர்கள் சஞ்சரித்த அந்த இடங்களுக்கு நாமும் சென்றடையத் தியானிப்போம்.
3.அதற்குத் தான் கொல்லூருக்கு வந்து தியானிப்பது.

அகஸ்தியன் சந்தர்ப்பத்தால் தனக்குள் கண்டறிந்தது. ஆனால் கோலமாமகரிஷியோ அழியாப் பெரு வாழ்வு என்ற நிலையைப் பெற வேண்டும் என்று அவர் எண்ண வலுவால் தனக்குள் நுகர்ந்தறிந்தார்.

இன்னொரு சரீரம் வேண்டியது இல்லை என்ற வலுவான எண்ணத்தை அவர் எடுத்துக் கொண்டு... என்றும் அந்தச் சப்தரிஷிகளுடன் இணைந்து விட வேண்டும் என்ற தன் எல்லையை வகுத்துக் கொண்டார்.

தன் வாழ்க்கையில் வந்த தீமைகளை அகற்றி மெய் ஞானிகள் உணர்வைத் தனக்குள் வளர்த்து அவர் விண்ணுலகம் சென்றார்.
1.மிகக் குறுகிய காலத்தில் இவையெல்லாம் 2000 – 3000 ஆண்டுகளுக்குள் நடந்த நிகழ்ச்சிகள்.
2.சமீபத்தில் அவருக்குள் விளைந்த உணர்வுகள்... எங்கெங்கு அவர் தவம் இருந்தாரோ
3.அந்த அலையின் தன்மை இங்கே பரவி உள்ளது... அதை நாம் பருகுவோம்.

கோலமாமகரிஷியை எண்ணி அவர் அருள் சக்தி பெற வேண்டும் என்று நாம் ஏங்கித் தியானிப்போம்.

அவர் தன் உடலில் பெற முடியாத அச்சக்தியை தொக்கியுள்ள காலத்தில் அதைப் பெறும் தகுதியாக ஆதிசங்கரர் உடலில் புகுந்து எஞ்சிய சக்தியைத் தான் பெற்று விண்ணுலகம் சென்றடைந்தார்... சப்தரிஷி மண்டலத்துடன் கலந்தார். அந்தச் சக்திகள் இங்கே படர்ந்துள்ளது.

1.தீவினைகளை நீக்கி உயிருடன் ஒன்றி ஒளியின் சரீரமாக நிலை கொண்ட
2.அவருடைய சக்தியை நாம் அனைவரும் பெறுவோம்.

சப்தரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா... கோலமாமகரிஷி பெற்ற அந்தச் சக்தி வாய்ந்த அருள் சக்தி நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா என்று ஏங்கி நாம் தியானிப்போம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

கருணைஸ்வரூபா:-

"கருணைஸ்வரூபா" என்றால் நாம் எதையெல்லாம் எண்ணி எடுக்கின்றோமோ "அந்த உணர்வின் ரூபமாக என்னை மாற்றுபவன் உயிர் குரு..." நாம் எண்ணியதையெல்லாம் ஈசனாக இருந்து உருவாக்குவது உயிர்.
உணர்வின் தன்மை எதை உருவாக்குகின்றோமோ... உருவான இந்த மனித உடலுக்கும் உடலுக்குள் இருக்கும் அனைத்து குணங்களுக்கும் "உயிரே குரு..."

என்னை ஆட்கொண்டருள்வாய் ஈஸ்வரா:-

என்னை ஆட்கொண்டருள்வாய் ஈஸ்வரா என்றால்
1.நீ உயிராக இருந்து ஒளியை எப்படி உருவாக்குகின்றாயோ... உணர்வின் அறிவாக எப்படித் தெரிவிக்கின்றாயோ அதைப்போல
2.எனது உணர்வுகளும் இந்த உடலில் இருக்கும் அனைத்தும் மாறி
3.உன்னுடன் அரவணைத்து அதுவாகவே என்னை மாற்று...!
4.ஒளியாக மாற்றும் அந்த அருளை எனக்குள் உருவாக்குவாய் என்றுதான் பொருள்.

ஆதிசக்தியின் அருள் பெற்ற ஈஸ்வரா குருதேவா:-

ஆதிசக்தியின் அருள் பெற்ற ஈஸ்வரா குருதேவா என்றால் "விஷத்தின் தாக்குதலால் தான்" துடிப்பாகி வெப்பமானது நம் உயிர். விஷம் என்ற நிலை ஆனாலும் அதன் நிலை வருகின்றது.
வெப்பத்தின் உணர்வு கொண்டு அனைத்தையும் உருவாக்கும் சக்தி பெற்றாய். அருள் ஒளியை அறிந்திடும் ஆறாவது அறிவாக ஆனாய். உணர்வின் தன்மை தெளிவாக்கும் உணர்வை எனக்குள் உருவாக்கினாய்.
1.இது எல்லாம் அவனே தான் நாம் அல்ல.
2.அவனே தான் நாம்... அவன் உணர்வின் தன்மை அவனோடு இணையப்படும் பொழுது அவனாக நாம் மாறுதல் வேண்டும்
3.அவன் நானாகி... நான் அவனாக வேண்டும்.

இப்பொழுது நானாகி அவனாகும் நிலை வேறு...! ஆனால்
1.அவனாகி அவன் நானாகுதல் வேண்டும்.
2.அவன் நானாகி... நான் அவனாகுதல் வேண்டும் என்பதுதான் இதனின் பொருள்.

என் இசையில் நீ இசைப்பாய் என் நினைவில் நீ வருவாய்:-
நமது உயிர் அரங்கநாதனாக இருக்கின்றது. நாம் நுகரும் உணர்வுகள் உயிரிலே பட்ட பின் அந்தந்த உணர்வின் இயக்கமாக நம்மை இயக்குகின்றது. ஆக எந்த குணத்தை எண்ணுகின்றோமோ அந்த உணர்வின் இசையாக அவன் இயக்குகின்றான்.
1.உயிர் எப்படி ஒளியாக இருக்கின்றதோ இருளை அகற்றுகின்றதோ
2.அந்த உணர்வின் இசை எனக்கு வேண்டும்.

நான் சொல்வதைக் கேட்ட பின் ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சி வர வேண்டும். தெளிவான மனம் அவன் பெற வேண்டும்... தெளிவாக வாழ்ந்திடும் வாழ்க்கை வர வேண்டும்... எனக்குள் தெளிவான உணர்வுகள் வர வேண்டும். எனக்குள் இருக்கும் அணுக்கள் அனைத்தும் அந்தத் தெளிந்த நிலைகள் பெற வேண்டும்.

ஒளியாக இருக்கும் அந்த உணர்வின் தன்மை வரும் போது... என் உடலில் இருக்கக்கூடிய அணுக்கள் அனைத்தும்
1.அந்த ஒளியின் சிகரமாக இருளை அகற்றிடும் நிலையாக
2.அருள் வழி வாழ்ந்திடும் நிலையாக எனக்குள் வளர வேண்டும் என்பதுதான் பொருள்.

உன் அருளைப் பெற்றிடவே என் நினைவைத் தந்துவிட்டேன்:-
உயிர் எப்படி ஒளியாக இருக்கின்றதோ அதைப் போல என் நினைவுகள் அனைத்தும் ஒளியாகும் உணர்வாக வருவதற்கு... என் நினைவுகள் எல்லாவற்றையும் "உன்னிடமே ஒப்படைத்து விடுகின்றேன்..."
நீ எப்படித் தெளிவாக அறிவாக இந்த உலகை அறிவிக்கின்றாயோ அதைப் போல உலக அறிவை அறிந்திடும் அந்த சக்தி எல்லாம் உன்னுடன் ஒன்றி அதன் வழி தெளிந்து வாழ வேண்டும்.

ஓம் ஈஸ்வரா... ஓம் ஈஸ்வரா:-
நாம் எண்ணி ஏங்கியதையெல்லாம் ஓ...ம் ஈஸ்வரா...! என்று பிரணவமாக்கி அதை ஜீவ அணுவாக உயிர் மாற்றிக் கொண்டே உள்ளது. உயிரைப் போலவே அணுவாக உருவாக்குகின்றது.
அதைத் தான் "ஓம் ஈஸ்வரா" என்று அடிக்கடி சொல்வது.

நான் இல்லை நீ இல்லா இவ்வுலகில் எல்லா நினைவையும் பெற்றிடவே எனக்கருள் செய்வாய்:-

நான் இல்லை நீ இல்லா இவ்வுலகில் என்றால் இந்த உயிர் இந்த உடலான உலகில் இல்லை என்றால் நான் இருக்க முடியுமா...?
புழுவில் இருந்து மனிதனாக வரும் வரையிலும் தீமைகளில் இருந்து விடுபட வேண்டும் விடுபட வேண்டும் என்ற உணர்வின் தன்மையை எடுத்து எடுத்துத் தான் இந்த உடலை உருவாக்கினாய்.

1.நீயே தான் என்னை உருவாக்கினாய்
2.நீ எல்லாவற்றையும் அறிந்திடும் உடலை உருவாக்கினாய்
3.நீ இல்லை என்றால் நான் இல்லை.

பல கோடிச் சரீரங்களில் தீமையிலிருந்து விடுபட வேண்டும் என்று உணர்வைப் பெற்ற... தீமையிலிருந்து விடுபடும் உடலைப் பெற்ற நாம்... இந்த உயிரான ஈசனுடன் ஒன்றுதல் வேண்டும்.

உயிரிலே பட்ட பின் தான் "தீமை என்று அறிகின்றோம்..." தீமையை அறிந்து கொண்ட பின் அதன் அறிவாக
1.ஆறாவது அறிவின் தன்மை கொண்டு தீமையை நீக்கிடும் வலிமையான உணர்வு எனக்கு முன் வந்து
2.தீமையை நீக்கிடும் அந்த அருள் சக்தி நான் பெற வேண்டும்.

அவனால் உருவாக்கப்பட்ட அறிவின் தெளிவு பெற்ற பின்... அந்த அறிவின் தெளிவு கொண்டு உணர்வின் தன்மை ஒளியாக மாற்றும் அந்தத் திறன் நான் பெற வேண்டும்.

பாட்டை மட்டும் பாடிவிட்டுப் பல நினைவில் நான் இல்லாமல் பரிபக்குவ நிலை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா:-
எண்ணையைக் காய வைத்து நாம் வடையைச் சுடுகின்றோம். பக்குவ நிலை இல்லாதபடி வடையை டப்... என்று போட்டால் கொதிக்கும் எண்ணெய் நம் மீது பட்டுச் சுட்டுவிடும்.
அதே சமயத்தில் பாத்திரத்தில் பொங்கி வரும் பொழுது பக்குவ நிலை கொண்டு துணியை வைத்து அதை இறக்கினால் சுடாது.

நமது வாழ்க்கையில் எந்த நன்மையைச் செய்தாலும் பிறருடைய தீமைகளை உணர்ந்த பின்பு தான் உதவி செய்கின்றோம். இருந்தாலும்
1.அந்தத் தீமை தனக்குள் வராதபடி பரிபக்குவமாக
2.நம்மைக் காத்திடும் உணர்வினை நாம் செலுத்திப் பழகுதல் வேண்டும்.

சாதாரண வாழ்க்கையில் நாம் எண்ணிய உணர்வின் தன்மைகளை உயிர் உருவாக்கி... அதன் வழி நமக்குள் குருவாகி அதன் வழியே தான் நம்மை வழி நடத்தும்.

அப்பொழுது பரிபக்குவம் எப்படிப் பெறுவது...?

1.துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைப் பெற்று தீமை தனக்குள் புகாதபடி தடுத்து
2.அதன் உணர்வின் தன்மை நமக்குள் உருவாக்கிப் பழகுதல் வேண்டும்.
3.தீமை என்று கண்டாலே அதை நீக்கிடல் வேண்டும்.

கையில் அழுக்குப்பட்டால் அடுத்து கையைக் கழுவி விட்டுத் தான் சாப்பிடுகின்றோம். உடலில் அழுக்குப் பட்டால் குளித்து விடுகின்றோம்.

இதைப் போன்று பிறிதொருவருடைய உணர்வுகள் நம் ஆன்மாவிலே பட்டு அழுக்காகும் பொழுது... அந்த அழுக்கை நீக்க அருள் உணர்வை உடலுக்குள் செலுத்தி இருளை நீக்கிப் பழகுதல் வேண்டும்.

சிந்தனையற்ற நிலைகள் வராதபடி தடுக்க துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை உள் புகுத்தி நம்மை அறியாது வரும் இருளை நீக்கித் தெளிந்த மனம் கொண்டு வாழ முடியும்.

அதுதான் பக்குவ நிலை...!

பிறர் கஷ்டப்படுவதைப் பார்த்து அவருக்கு நாம் உதவி செய்கின்றோம். அந்தப் பக்குவம் இல்லை என்றால் அவருடைய கஷ்டம் நமக்குள் வந்துவிடும். அப்போது
1“நான் எல்லோருக்கும் உதவி செய்தேனே எல்லாம் செய்தேனே”
2.ஆனால் எனக்கு இப்படி நடக்கிறதே...! என்று இத்தகைய பாட்டைத் தான் நாம் பாடுகின்றோம்.

அதனால் தான் பாட்டை மட்டும் பாடிவிட்டுப் பல நினைவில் நான் இல்லாமல் பரிபக்குவ நிலை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா என்று வேண்டுதல் வேண்டும்.

என் ஆசை என்னுள்ளே வளர்ந்து விடாமல் என்னுள்ளே என்றும் நீ இருந்துவிடு ஈஸ்வரா:-

என் ஆசை என்னுள்ளே வளர்ந்து விடாமல் என்றால் நான் என் பிள்ளைக்கு இதைக் கொடுத்தேன்.. ஆனால் அவன் இந்த மாதிரி செய்கின்றானே...! அவன் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்துத் தான் கொடுத்தேன்... இப்படி இருக்கின்றான் என்று இந்த உடலின் ஆசை தான் வருகின்றது.

ஒருவருக்குக் கடன் கொடுத்தேன்... அவர் கடனைத் திரும்ப கொடுக்கவில்லையே...! என்ற இதைப் போன்ற பற்று தான் வருகின்றது. இந்த உடலை வளர்க்கும் ஆசைதான் வருகின்றது.

1.இதைப் போன்ற ஆசை எனக்குள் வளராதபடி

2.என்னுள்ளே என்றும் நீ இருந்து விடு ஈஸ்வரா.

உயிர் எப்படி ஒளியாக இருந்து இருளை நீக்குகின்றதோ தெளிவாக்குகின்றதோ ஆறாவது அறிவை உருவாக்கியதோ இதைப் போல என்றும் இருள் சூழா நிலைகள் கொண்டு உயிருடன் ஒன்றிய நிலைகள் கொண்டு "அவனுடனே நாம் ஐக்கியமாகுதல் வேண்டும்..."

இராமாயணத்தில் சீதா... இராமா...! அந்த உணர்ச்சிகள் எண்ணங்களாக இயக்கினாலும் பல துன்பங்கள் அது பட்டாலும்... தான் எண்ணிய உணர்வுகள் உயிருடன் இணைந்து விஷ்ணுவுடன் ஐக்கியமாகின்றது. யார்...? சீதா...!

உடலென்ற உணர்வின் சத்து தனக்குள் எடுத்துக் கொண்ட பின் அந்த சீதா என்ற சுவை மண்ணைப் பிளந்து மண்ணுடன் மண்ணாகி விடுகிறது.

1.சீதா என்ற உணர்வின் உணர்ச்சிகள் உயிருடன் ஒன்றி ஒளியின் சரீரமானது.


2.மனிதனின் வாழ்க்கையில் மகிழ்ச்சி என்ற உணர்வு தோன்றி உயிருடன் ஒன்றி ஒளியாக வாழும் தன்மை தான் "சீதா.."

ஆகவே சுவைக்கொப்ப எண்ணங்களும் உணர்ச்சிகளும் எப்படி இயக்குகிறது...? என்ற நிலையை இராமாயணக் காவியத்தில் தெளிவாகக் கூறுகின்றனர்.


இந்த மனித வாழ்க்கையில் உயிருடன் என்றுமே ஒன்றி வாழும் நிலை வர வேண்டும்.

1.இந்த உடல் அனைத்தும் ஒளியின் சரீரமாக என்றும் நிலையான சரீரமாக உன்னுடனே ஒளியின் உணர்வாக நான் இருக்க வேண்டும்

2.இன்னொரு உடல் எனக்கு வேண்டாம் ஈஸ்வரா...!



உடலில் இருக்கும் அணுக்கள் அனைத்தும் ஒளியின் சிகரமாக இருளை அகற்றிடும் நிலையாக அருள் வழி வாழும் நிலையாக எனக்குள் வளர வேண்டும் ஈஸ்வரா.



துருவ நட்சத்திரத்தின் சக்தியை எந்த நேரத்திலும் பெற நாம் பசித்திருக்க வேண்டும்

இந்த மனித வாழ்க்கையில் நாம் விழித்திருப்பது மிகவும் நலம். இந்த நினைவாற்றல் கொண்டு தெளிவாக்கி அந்த அருள் மகரிஷிகளின் உணர்வுகளை நமக்குள் வலுவாக்கச் செய்ய வேண்டும்.

நாம் போகும் பாதையில் தவறு செய்யாமலேயே பிறருடைய நிலைகளை நுகர்ந்தறிய நேருகின்றது. தீமையிலிருந்து விடுபடும் நிலைகள் வருகின்றது. 1.ஆனால் தீமையிலிருந்து விடுபட்டுச் சென்றாலும் நுகர்ந்த தீமையான

அணுக்கள் நமக்குள் வளர்ந்து
2.தீமையை உருவாக்கும் நிலையாக தீமையையே உணவாக ஏங்கி எடுத்துத் தன் இனத்தைப் பெருக்கத் தொடங்கிவிடும்.
3.அந்த இனத்தைப் பெருக்காது நாம் தடைப்படுத்த நாம் விழித்திருப்பதே நல்லது.

தனித்திரு... நீ விழித்திரு...! என்று சொல்வார்கள். எப்பொழுதுமே பிறிதொரு தீமையின் உணர்வுகள் நமக்குள் கலக்காது "தனித்த அந்த ஞானியின் உணர்வை நமக்குள் சேர்க்கப்படும் பொழுது" பிறருடைய உணர்வுகள் நமக்குள் கலந்திடாது அந்த மகரிஷியின் உணர்வுடன் ஒன்றி நாம் தனித்து வாழ முடியும்.

இல்லையென்றால் பிறருடைய தீமை செய்யும் உணர்வுகள் நம்மை இயக்கிவிடும். அதனால் தான் ஒவ்வொரு நிலைகளிலும்.. நீ விழித்திரு நீ தனித்திரு என்று காரணங்களைச் சொல்லி ஞானிகள் கூறுகின்றார்கள்.

அருள் ஞானிகள் உணர்வை விழித்திருந்து அந்த உணர்வினைத் தனக்குள் வளர்த்துக் கொண்டால் பிறிதொரு தீமை செய்வோர் உணர்வுகள் நம்மை இயக்காது.. நாம் தனித்து தனித்தன்மையில் வாழ்கின்றோம்.

தனித்தன்மை கொண்டு துருவ நட்சத்திரம் அந்த ஒளியின் சுடராக
1.மற்றொன்று இதை இயக்கிடாது... அதைத் தனக்குள் இயக்கப்பட்டு ஒளியின் தன்மையாக "தனித்தன்மையாக அது எப்படி வளர்கின்றதோ..."
2.இந்த மனித வாழ்க்கையில் எவரொருவர் அதனைப் பின்பற்றி அதைப்போல விழித்திருந்து செயல்பட்டாரோ
3.இன்றும் அவர்கள் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் ஒளியின் சுடராக
4.அவரவர் நிலைக்கொப்ப தனித்தே வாழ்கின்றார்கள் தனித்தன்மை கொண்டு.

ஆகவே நாம் இந்த மனித வாழ்க்கையில் நாம் எதனின் தன்மை கொண்டு நுகர்கின்றோமோ அடுத்தவர்களுடன் தொடர்பு கொண்டு தான் நாம் வாழ்கின்றோம்.

ஒருவருக்கொருவர் இணை சேர்த்து ஒருவருக்கொருவர் ஒன்றி வாழுகின்றோம். கோள்களும் அதே போன்று தான் அதனதன் நிலைகள் வளர்ந்து அதனதன் தனித்தன்மையில் வளர்ந்தாலும்... அதனின் விஷத்தன்மைகள் வளர்கின்றது.

1.ஆனாலும் சூரியன் தனித்தன்மை கொண்டு வரும் நஞ்சினை எல்லாம் பிரித்து விட்டு ஒளியின் சுடராக மாற்றுகின்றது.
2.இதைப் போன்று தான் நாம் தனித்திருந்து விழித்திருத்தல் வேண்டும்.

எத்தகைய தீமையான உணர்வாக இருந்தாலும் ஒவ்வொரு நொடியிலும் அது உள் சேராது சூரியன் நஞ்சினைப் பிரித்து அதனுடைய தனித் தன்மையை எப்படிக் காட்டுகின்றதோ... தனித்த நிலைகள் அதனுடைய ஒளியின் தன்மையாக அது எப்படிச் செயல்படுகின்றதா இதைப் போன்று தான் நமக்குள் தனித்து இருத்தல் வேண்டும்... விழித்திருத்தல் வேண்டும்.

1.இந்த மனித வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியிலும் நல்லவர்களுடைய உணர்வுகளை அறிந்தாலும்
2.அவர்கள் உணர்வுக்குள் சிக்கி நாம் அடிமையாகாது தனித்திருப்பது நல்லது... தனித்திருப்பது என்றால் நாம் விழித்திருப்பது நல்லது.

தீமைகள் நமக்குள் ஊடுருவாது மகரிஷிகளின் உணர்வுகளை நாம் நுகர்ந்து அந்த உணர்வின் ஆற்றலைப் பெருக்கித் தனித்தன்மையாக... நமது நிலைகள் உணர்வுகள் பிறருடைய தீமைகளிலிருந்து விடுபட்டுத் "தீமையற்றவராக வாழும் நிலை பெற வேண்டும்..."

மகரிஷிகள் தனித்திருந்து விழித்திருந்ததனால் தனித்திருக்கும் நிலை பெற்றார்கள். அதனின் உணர்வை நாம் நுகர்ந்தோம் என்றால் நமது வாழ்க்கையில் விழித்திருக்கும் உணர்வும் தனித்து வாழும் நிலைகளும் தீமையற்ற நிலைகளும் நமக்குள் வளர்ந்திடும் நிலை பெறுகின்றது.

அதை நினைவுபடுத்தும் நன்னாள் தான் சிவன் ராத்திரி.

1.நம் உடலுக்குள் இருளாக இருப்பதை அருள் ஞானிகள் ஒளிச்சுடரைச் சேர்த்து
2.இருள் சூழும் நிலையை நீக்கி இருளற்ற உணர்வினைத் தனக்குள் வளர்த்து
3.மெய் உணர்வுடன் ஒன்றிய நிலைகளை நமக்குள் பெருக்க வேண்டும்.
4.அந்த அருள் ஞானிகள் உணர்வை நமக்குள் சேர்க்க வேண்டும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

குருநாதர் காட்டிற்குள் அழைத்துச் சென்று யானைகள் வரும் இடமாக என்னைப் போகச் சொல்கின்றார்.
1.யானையின் மணத்தை நுகர்ந்து உனக்குள் வலுவாக்கினால்

2.யானையின் மணம் உனக்குள் வந்த பின்
3.மணத்தால் நுகர்ந்து அறியக்கூடிய அந்த மிருகங்கள் உன்னை ஒன்றும் செய்யாது.
4.நீ பயம் கொண்டு சென்றால் யானைகள் நிச்சயம் அடிக்கும்
5.ஆகையினால் பயத்தின் உணர்வு இல்லாதபடி அதனின் மணத்தினை நுகர்ந்து செல்ல வேண்டும் என்றார்.

உதாரணமாக யானைப்பாகனாக இருந்தாலும் அவனும் யானையைக் கண்டு பயந்தான் என்றால் அந்த யானை அவனைத் திருப்பி அடிக்கும். உணர்வின் தன்மை யானையின் மணத்தின் வலுவைக் காட்டப்படும் பொழுது தான் அது அடங்கும்.

ஆகவே குருநாதர் சொன்ன முறைப்படி காட்டிற்குள் செல்லப்படும் பொழுது யானை அருகே நான் சென்று விட்டேன். யானை தன் காதை விடைத்து விட்டால் அடுத்து மனிதனை அடிக்கத்தான் செய்யும். ஏனென்றால் ஏற்கனவே வேட்டைக்குச் சென்று எனக்குப் பழக்கம் உண்டு.

அப்போது காதை விடைத்தவுடன் எனக்குப் பயம் வருகின்றது. குருநாதர் சொன்னபடி யானையின் மணத்தை நுகர்ந்தேன்... இருந்தாலும் அடுத்து... "யானை என்னை அடித்து விடுமே..." என்ற பயத்தைத் தான் நுகருகின்றேன்.

யானையின் உணர்வின் மணம் எனக்குள் வரவேண்டும்... அந்த வலுப்பெற வேண்டும் என்று நான் எண்ணவில்லை. அது என்னை அடித்து விடும் என்ற மணம் வரப்படும் பொழுது எனக்குள் நடுக்கம் ஆகிறது.

அப்பொழுதுதான் "முன் வைத்த காலைப் பின் வைக்காதே...!" என்று குருநாதர் சப்தமிடுகின்றார். நான் கூறிய உணர்வை நினைவில் வை...! என்றார்.

அவர் சொன்னபடி
1.பயம் வரும் பொழுது அந்த யானை உணர்வின் மணத்தை நுகர்வதற்கு அவர் சொன்ன சில முறைகள் உண்டு
2.அதை வைத்து அதனுடைய மணத்தை எடுக்கப்படும் பொழுது யானை என்னை ஒன்றும் செய்யவில்லை.

யானையை விரட்டக்கூடிய பச்சிலையையும் குருநாதர் கையிலே எனக்குக் கொடுத்து இருக்கின்றார். அதை எல்லாம் நான் மறந்து விட்டேன் இந்த

உணர்வின் நினைவே எனக்கு வரவில்லை. யானை அடித்து விடும் என்று நினைவு தான் ஓங்கி வந்தது

இதை மாற்றப்படும் பொழுது அவர் சொன்ன உணர்வுகள் நுகரப்பட்டு அந்த மணம் அங்கே ஆகும் பொழுது அது தன்னுடைய வலுவை இழக்கிறது.

1.அதாவது துப்பாக்கியையும் கையில் வைத்துக் கொண்டு
2.புலி வருகிறது... புலி வருகிறது...! என்று நடுங்கிக் கொண்டிருக்கின்ற மாதிரி...
3.அந்த இடத்தில் அவ்வாறு எனக்குக் காட்டுகின்றார்.

சுடும் மார்க்கத்தைக் காட்டியிருந்தாலும்... அதை அடக்கும் தன்மை இருந்தும்... இல்லாதபடி ஆகிவிட்டது. இதை எல்லாம் அனுபவரீதியிலே குருநாதர் கொடுத்தது.

அவர் சொன்ன முறைப்படி நுகர்ந்த பின் யானை என்னை ஒன்றும் செய்யவில்லை ஆனால் அந்த கூட்டத்தோடு வந்து ஒரு குட்டி என்னைத் இடித்துத் தள்ளுகின்றது... தொடுகின்றது... என்னை இழுக்கின்றது.

பெண் யானை என்ன செய்கின்றது...? அப்படியே முறைத்து நிற்கின்றது. என் மனதைக் கொண்டு... உள்ளபூர்வமாக நீ போ சாமி...! என்று இந்த உணர்வலைகளை வெளிப்படுத்தும் போது... அந்தக் குட்டி யானை அதனின் தாய் இழுத்துக் கொண்டு சென்று விட்டது.

இயற்கை உண்மை நிலைகளை அறிவதற்குத் தான் என்னை இப்படிக் காடு மேடலாம் குருநாதர் என்னை அலையச் செய்தார்... சாதாரணமாக அல்ல...!

உங்களிடம் இப்போது பேசுகிறேன் என்றால் அந்தக் குரு வழியினை நான் கடைப்பிடிக்கவில்லை என்றால் இருளுக்குள் தான் நான் சிக்க முடியும். உடலின் ஆசை தான் எனக்குள் வளரும்.

இந்த உடலில் ஆசை ஆனால் காட்டிற்குள் செல்லப்படும் பொழுது பல மிருகங்கள் இருந்தும் மரணம் அடைய வேண்டி வரும்.

இதற்கு அடுத்து என்னைத் திருப்பதிக்குச் செல்லும்படி சொல்கின்றார். நாரதர் மன்றம் என்று ஒன்று உண்டு அதையும் கடந்து தாண்டி செல்லச் சொல்கின்றார்.

பழங்கள் காய்க்கும் மரங்கள் ஏராளமாக அங்கே உண்டு. வருடம்தோறும் ஒவ்வொரு காலத்திற்கு எத்தனையோ கனிகள் அதிலே உருவாகும். கொய்யா... நவாப்பழம் போன்று எத்தனையோ வரும். அத்தனையும் அங்கே உருவாகின்றது.

துறவறம் பூண்டு தவத்திற்காகச் செல்பவர்களுக்கு அது தான் அங்கே உணவு. பழங்களை உண்டு தான் அங்கே தவத்தை மேற்கொண்டார்கள். அந்த இடத்திற்கு என்னைப் போகச் சொல்கின்றார்.

கனிகளை பறித்துச் சாப்பிட்டு அங்கே இருக்கலாம் என்றாலும் அந்தக் கனிகளை உட்கொள்ள அதைத் தேடி கரடி போன்ற மிருகங்கள் வருகின்றது... குரங்குகளும் வருகின்றது...!

அவைகள் அதைப் பறித்துச் சாப்பிடுகின்றன. நான் மரத்தில் ஏறித் தான் சாப்பிட வேண்டும் அல்லது கீழே விழுந்ததை எடுத்துச் சாப்பிட வேண்டும்.

ஒரு கரடிக் கூட்டம் அங்கே வருகின்றது.
1.முதலில் பயம் வந்தது..
2.பின் குருநாதர் சொன்ன முறைப்படி அந்த மணத்தை எடுத்தவுடன்... பேசாமல் முர்ர்...முர்ர்...முர்ர்.. என்று உறுமிக் கொண்டே போய்விட்டது.

எல்லாமே அனுபவ ரீதியில் தான் குருநாதர் கொடுக்கின்றார்.

பகலிலே குரங்குகள் கூட்டம் கூட்டமாக இருக்கின்றது. ஒரு ரவுடிக் குரங்கு எல்லாவற்றையும் துரத்தி அடித்து விரட்டுகின்றது. ஆனால் அங்கே இன்னொரு குரங்கு குட்டி போடுகின்றது.

அதனுடன் சேர்ந்த குரங்குகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து குழந்தை பிறந்த பிற்பாடு முத்தம் கொடுக்கின்றது. ரவுடிக் குரங்கிடமிருந்து பாதுகாப்பாகவும் இருக்கின்றது.

ஆனால் அது ரவுடித்தனம் செய்தாலும் குழந்தைப் பாசத்தால் "குட்டிக்கு அதுவும் முத்தம் கொடுக்க ஆசைப்படுகின்றது..." அதனுடைய பாசத்தால் இச்.. இச்.. என்று குழந்தையை நாம் கொஞ்சவது போன்று கொஞ்சம் கொஞ்சமாகக் குழந்தையை நோக்கி நகர்ந்து வருகின்றது.

அது நகர நகர... மற்ற குரங்குகள் அனைத்தும் உஷாராகின்றது. ஆனால் தாய் குரங்கு வெவ்வேவ்வே... என்று கத்த ஆரம்பிக்கின்றது. அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி... குட்டியிடம் சென்று தொட்டு முத்தம் கொடுக்கின்றது.

ஏதாவது ஆனால் எல்லாக் குரங்குகளும் அதைத் தாக்குவதற்கு உஷாராக இருக்கின்றது. ஆனால் குட்டிக்கு ஒன்றும் தெரியாது. இதை குருநாதர் பார்க்கும்படி செய்கிறார்.

குரங்கு தன் குட்டியை எவ்வாறு பாதுகாக்கின்றது...? அதனுடைய இனங்கள் எல்லாம் எப்படிப் பாதுகாப்பாக இருக்கின்றது...? என்று காட்டுகின்றார்.

அப்பொழுது குடும்பத்தின் பால் என் நினைவுகள் செல்கின்றது மனைவியை விட்டு விட்டு வந்தோம்.. பெண் குழந்தைகளையும் விட்டு விட்டு வந்தோம். ஒரு பிள்ளையை மட்டும் தான் கட்டிக் கொடுத்தது. பாக்கி யாரையும் கட்டிக் கொடுக்கவில்லை. ஒரு கைக்குழந்தையும் இருக்கின்றது.

குரங்கையும் அதன் குட்டியையும் பார்த்தவுடன் என் ஞாபகம் அங்கே செல்கின்றது
1.அந்த ஆசை வரப்படும் போது என்னைப் பாதுகாக்கும் உணர்வு போய்விடுகின்றது... பயமும் மற்ற நிலைகளும் வருகின்றது.
2.கரடி அடித்து விடுமோ... பாம்பு கொத்தி விடுமோ... புலி அடித்து விடுமோ...! இந்த உணர்வெல்லாம் வருகிறது.

ஆனால் அந்த உணர்வை நுகராது இருக்கும் வரை பயமில்லை. என் குழந்தைகளைக் காக்க வேண்டும் என்ற ஞாபகம் வந்த பின் பயம் எல்லாம் வருகின்றது. இந்த உணர்ச்சியை ஊட்டி அனுபரீதியாக எனக்கு அங்கே காட்டுகின்றார்.

1.நான் கொடுத்த சக்தியை நீ எப்படிப் பயன்படுத்துகின்றாய்...?
2.நான் எப்படிப் பயன்படுத்தும்படி சொன்னேன்...? என்று வினாக்களை எழுப்பி எனக்கு உண்மைகளை உணர்த்துகின்றனர்.

அது மட்டுமல்ல. இன்னொரு வேலையும் குருநாதர் செய்கின்றார். சிறிது நகர்ந்து ஒரு இடத்தில் உட்கார்ந்தேன். உட்கார்ந்த இடத்திலே அந்தக் காலத்து அரசர்கள் மண்ணிலே புதைத்து வைத்த காசு அங்கே வெளியே வருகிறது.

அதுவாக வந்ததா...! அல்லது குருநாதர் அப்படி வரும்படி வரவழைத்தாரா...? அது எப்படி...? என்று எனக்குத் தெரியாது. பார்த்தால் தங்கக் காசாக இருக்கின்றது. மொச்சைப் பயர் அளவு தடிமனாகவும் வட்டமாகவும் நீளமாகவும் இருக்கின்றது.

அதை எடுத்தவுடன் ஆசையை ஊட்டுகிறார். இது எதற்காகச் சோதிக்கின்றாரோ... தெரியவில்லை...! எனென்றால் குழந்தையை அந்த நேரத்திலே நினைக்கின்றோம் அல்லவா...!

இதை எடுத்துக் கொண்டு போய்க் குழந்தைகளுக்குக் கொடுத்து விட்டு வரலாமா என்ற இந்த எண்ணத்தை ஊட்டுகின்றார்.
1.அப்பொழுது அந்த இடத்தில் எனக்குள் மனப்போராட்டமாகின்றது.
2.குருநாதர் சொன்ன வழியில் ஞானத்தின் வழியில் செல்வதா அல்லது காசைப் பார்த்த பின் இந்த ஆசையின் வழி செல்வதா...?
3.குடும்பத்தில் குழந்தைகளைக் காக்க வேண்டுமே...!

குரங்கு தன் குட்டியைப் பாதுகாத்தது. அது போல் இதை எடுத்து என் குழந்தைகளுக்கு கொடுத்து விட்டு வரலாமா...? என்று மனப் போராட்டத்தைக் கொடுக்கின்றார்.

இத்தனையும் நான் ஜெயித்து வர வேண்டி இருக்கின்றது. பின் அதற்கப்புறம் நான் அதை எடுத்து அந்தக் காசை எல்லாம் திருப்பதி உண்டியலில் கொண்டு போய்ப் போட்டேன்.

இது நடந்தது 1972 அல்லது 1973ல் இருக்கும். பத்திரிகைகளில் கூட நீங்கள் பார்த்திருக்கலாம். ஏனென்றால் குருநாதருடைய பரிசோதனை
1.“அவர் கொடுத்த சக்தியைச் சீராக நான் பயன்படுத்துகின்றேனா...? என்று
2.பல வகைகளிலும் மனப் போராட்டங்கள் வருகின்றது.
3.இத்தனையும் வென்று தான் நான் வர வேண்டி இருக்கிறது.

இதைக் கடந்த பின் மூன்று லட்சம் பேரைச் சந்தித்து ஒவ்வொரு மனிதனும் எவ்வாறு துன்பப்படுகின்றான்...? என்ற நிலையையும் காட்டுகின்றார்.

இப்படி எத்தனையோ சிரமப்பட்டு அனுபவங்கள் பெற்ற பின் தான் உங்களுக்கு ஞானத்தின் வழித் தொடராக மெய் ஞானிகளின் உணர்வுகளைப் பதிவாக்கிக் கொண்டு வருகின்றேன்.

உங்கள் நினைவினை மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் பால் செலுத்தி அவர் நமக்குக் கொடுத்த அருளும்... ஞானிகள் பெற்ற உண்மையையும் நாம் அறிந்து இந்த வாழ்க்கையைச் சீர்படுத்தவும்... துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியைப் பெறவும்... அதன் ஈர்ப்பு வட்டத்தில் உள்ள சப்தரிஷி மண்டலத்தின் சக்திகளைப் பெறத் தகுதி உடையவர்களாகவும் உங்களை நீங்கள் மாற்ற வேண்டும்.

அதற்காக உங்கள் உயிரைக் கடவுளாக வணங்கி உடலைக் கோவிலாக எண்ணி அவனால் உருவாக்கப்பட்ட இந்த ஆலயம் பரிசுத்தமாக வேண்டும் ஈசனுக்கு நற்பணிகளைச் செய்ய வேண்டும் என்று செயல்படுத்திக் கொண்டிருக்கின்றேன் (ஞானகுரு).

1.அதன் வழியில் நல்ல உணர்வுகளை நுகர்ந்து உங்களை நீங்கள் பாதுகாத்தால்
2.உயிரான ஈசனுடன் ஒன்றி ஒளியின் சரீரம் பெறக்கூடிய தகுதி நீங்கள் பெறுகின்றீர்கள்.

இந்த ஆசையைத்தான் குருநாதர் எனக்கு ஊட்டினார்...!



மெய் ஞானிகளின் உணர்வுகளை உங்களிடம் பதிவாக்குகின்றேன். உங்கள் நினைவினை மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் பால் செலுத்தி அவர் கொடுத்த அருளும் ஞானிகள் பெற்ற உண்மையையும் நாம் அறிந்து இந்த வாழ்க்கையைச் சீர்படுத்தவும்... துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெறவும்... அதன் ஈர்ப்பு வட்டத்தில் உள்ள சப்தரிஷி மண்டலத்தின் சக்திகளைப் பெறத் தகுதி உடையவர்களாக நாம் மாற வேண்டும்.



நாம் எதை எண்ணுகின்றோமோ “அதைத் தான்... அதுவாகத் தான்...” உயிர் நம்மை ஆக்கிவிடும்

பிறர் தீயவர்களாக இருப்பினும் அவர்கள் நல்லவராக மாற வேண்டும் என்ற இந்த உணர்வினை நுகர்ந்தால் நமக்கு நல்லது.
1.ஒருவர் தீயதைச் செய்கின்றார் அவர் நல்லவராக மாற வேண்டும் என்று நாம் எண்ணினால்

2.நமக்குள் அந்த நல்ல உணர்வைக் கொண்டு வருகின்றது... நல்ல உடலாக அது மாற்றுகின்றது.
3.நல்ல சொல்லாகவும் நம்மைச் சொல்லும்படி வைக்கின்றது.

ஆனால் நல்லவர் என்று எண்ணினாலும் அவரின் கோபமான உணர்வை நாம் நுகரப்படும் பொழுது அது தீமை ஆகி விடுகின்றது. பாலிலே பாதாமைப் போட்டாலும் அதில் ஒரு துளி விஷம் பட்டு விட்டால் அந்தப் பாதாமிற்குச் சக்தி இல்லை.

நாம் நல்லதை எண்ணிச் செயல்பட்டாலும் கெட்டவன் என்று இருந்தால் அவனைக் கேட்டுத்தான் நாம் உணர்கின்றோம். அப்படி உணரப்படும் பொழுது அந்த வலிமை நம் உடலுக்குள் சேர்ந்து விடுகின்றது.

ஆகவே தான்
1.தீயவர்கள் என்பது எவரும் இல்லை.
2.சந்தர்ப்பம் தான் தீய செயலைச் செயல்பட வைக்கின்றது.
3.அந்தச் சந்தர்ப்பம் உடலில் தீய உணர்வுகளாக விளைகிறது.

தீய அணுக்கள் விளைந்து இந்த உடலிலேயே தீயவனாக மாற்றி இந்த உடலுக்குப் பின் மனிதன் அடுத்து மனிதனல்லாத உடலாக உருவாக்கி விடுகின்றது.

எத்தனையோ கோடி உடல்களைக் கடந்து மனிதனாகப் பிறந்த பின் மனிதன் எப்படி வாழ வேண்டும்...? என்பதற்குத்தான் சாஸ்திரங்களை ஞானிகள் கொடுத்துள்ளார்கள்.

ஆதிமூலம் என்ற உயிர் தான்... பல கோடி உடலில் தீமைகளை நீக்கி நீக்கித் தீமையிலிருந்து தப்ப வேண்டும் என்ற உணர்வை எடுத்து இப்படிப் பல கோடி உடல்களைக் கடந்து இன்று நம்மை மனிதனாக உருவாக்கியது..

ஆகையினால் தான்... முன் சேர்த்துக் கொண்ட வினைகளுக்கு நாயகனாக நம்மை மனிதனாக உருவாக்கியது விநாயகா. வினைக்கு நாயகனாக நல்ல உடலாக உருவாக்குகின்றது.

மனிதனான பின் தீய உணர்வை நுகர்ந்து விட்டால்...
1.அந்தத் தீய உணர்வு வினைக்கு நாயகனாகித் தீய செயலும் செயல்பட வைத்து

விடுகின்றது...
2.தீய சொல்களையும் சொல்ல வைத்துத் தீய உடலாக மாற்றி விடுகின்றது.

நாம் எதை எண்ணுகின்றோமோ அதை நமது உயிர் இயக்கிக் காட்டுகின்றது... உடலாக்குகின்றது... அதையே ஆளுகின்றது நமது உயிர்.
1.ஆண்டவனாக இருப்பதும் உயிர்
2.எண்ணியதை இயக்குவதும் உயிர்...
3.எண்ணியதை உருவாக்குவதும் உயிர்
4.எண்ணியதை உடலாக்குவதும் உயிர்

இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

ஒரு சமயம் எதிரி என்ற நிலை உருவாக்கப்படும் பொழுது ஒரு மரத்தைக் காட்டுகின்றார் குருநாதர். ஒரு சொல்லைச் சொல்லும்படி சொன்னவுடன் அந்த மரம் தூக்கி வீசப்பட்டுப் பறந்து போய் விழுகிறது.

யாராவது எதிரிகள் வந்தால்... இப்படி எண்ணினால் அவனைத் தூக்கி எறிந்து விடலாம்... வெற்றி பெறலாம்... நம்மை யாரும் எதிர்க்க முடியாது...! என்ற உணர்வுகள் எனக்கு வருகின்றது.

ஒருவன் சிறிது தவறு செய்தாலும் இதே உணர்வை நீ பாய்ச்சப்படும் போது அந்த வலிமை தான் வரும். "உனக்குள் இருக்கக்கூடிய நல்ல குணங்களை... அது அடித்துச் சென்றுவிடும்...!" என்றார் குருநாதர்.

காற்று வேகமாக வீசினால் என்ன செய்யும்...?
1.தனியாகக் கெட்டதை மட்டும் தூக்கிச் செல்லுமா...?
2.சேர்த்து நல்லதையும் தான் தூக்கிச் செல்லும்.
3.அந்த நல்லதையும் குப்பையுடன் சேர்த்துக் கலக்கத்தான் செய்யும்.

இதைப் போன்ற நிலைகளைக் காட்டி நீ எடுத்துக் கொண்ட உணர்வுகள் உன் உடலுக்குள் என்ன செய்யும்...? என்பதை அங்கே தெளிவாக்குகின்றார்.

குருநாதர் எனக்குச் சக்தி கொடுத்த பின்... ஆஹா...! என்னை யாரும் எதிர்க்க முடியாது என்ற நினைவு வருகிறது. பல முறை அதைச் சோதித்துப் பார்க்கும்படி சொன்னார். இன்னும் சோதித்துப் பார்...! என்றார்

பல முறை செய்த பின்... அந்த வேக உணர்வு தான் தோன்றுகின்றது

1.அந்த உணர்வின் தன்மை வரப்படும் பொழுது தீமைகளை உருவாக்கும் உணர்வுதான் உனக்குள் வரும்.
2.அப்போது இந்தத் தீமைகளை யார் அடக்குவது...? யார் நீக்குவது...? என்று நிலைகளை வினா எழுப்புகின்றார்.

உன் ஆறாவது அறிவைக் கொண்டு...
1.தீமையை நீக்கும் உணர்வை எடுத்து அதனுடைய செயலாக்கங்களை மாற்று...!
2.அப்பொழுது தான் அது அடங்கும் என்றார்.

அடுத்து இன்னொரு வேலையும் குருநாதர் செய்தார்.

ஒரு இரும்புக் கரண்டியை வாங்கி வரச் சொன்னார்... ஈயக்கட்டியையும் வாங்கி வரச் சொன்னார். மலைக் காட்டிற்குள் அழைத்துச் சென்றார். அவருக்குத் தெரிந்த பல பச்சிலைகளையும் குப்பைகளையும் எல்லாம் "இதிலே கொஞ்சம்... அதிலே கொஞ்சம்..." என்று எடுத்து வரச் சொன்னார். அங்கங்கே உள்ள தூசிகளையும் போடச் சொன்னோர்.

ஒட்டு மொத்தமாகக் கரண்டியில் போட்டு அதைத் தீயை வைத்து எரிடா..! என்றார்.
1.எரிந்த உணர்வுகள் அதில் வரும் வெப்பத்துடன் கலக்கின்றது.
2.அது கலந்த பின் என்ன செய்கிறது...? ஈயம் "பள... பள..." என்று மின்னுகிறது.

எப்படிடா இருக்கிறது...? என்று கேட்டார். சாமி...! தக...தக... என்று இருக்கின்றது...! என்று சொன்னேன்.

மீண்டும் எப்படிடா இருக்கின்றது என்றார்...? தக...தக... என்று இருக்கிறது என்று சொன்னேன்.

விட்டார்... ஓங்கிப் "பளார்..." என்று ஒரு அடி கொடுத்தார். எப்படி இருக்கிறது...? சொல்லுடா...! என்றார்.

மீண்டும் தக...தக... என்றேன். என்னடா தக...தக...?

அப்புறம் “தங்கம் போல இருக்கின்றது சாமி” என்று சொன்னேன்.

தூ...! என்று சொல்லி அது எல்லாவற்றையும் மூடுடா என்றார். சூடு எல்லாம் ஆறிய பின்பு பார்த்தால் நல்ல “சொக்கத் தங்கமாக” இருக்கிறது.

இதைக் கொண்டு போய்க் கடையில் விற்கச் சென்றால்.. “நீ பைத்தியக்காரிடம் சுற்றிக் கொண்டிருந்தது எதற்காக...? என்று இப்பொழுது தான் தெரிந்தது...! தங்கம் செய்யும் வித்தையைக் கற்றுக் கொண்டாய். தங்கம் எவ்வளவு வேண்டுமானால் கொண்டு வா... உனக்குக் காசு தருகிறேன்...! என்றார்.

இன்னொருவர் என்ன சொல்கின்றார்...! நீங்கள் செய்து கொடுத்தால் உங்களுக்கு மாட மாளிகை கட்டித் தருகிறேன். நீங்கள் விற்க வேண்டாம்...! என்று இப்படிச் சொல்லிக் கொண்டு என் பின்னாடி சுற்றித் திரிந்தவர்கள் ஏராளம்.

விற்றுவிட்டு வந்த பின் குருநாதர் என்ன செய்தார்...? காசை எல்லாருக்கும் ஒவ்வொரு ரூபாயாகக் கொடுத்து விட்டார்.

முதலில் அவர் தங்கம் செய்யச் சொல்லும் போது எல்லாவற்றையும் நான் பார்த்தேன் அல்லவா. அவர் இல்லாத பொழுது நான் தனியாகத் தங்கம் செய்து பார்க்க வேண்டும் என்று முயற்சி செய்தேன்

அதே மாதிரித் தங்கம் வந்துவிட்டது.

ஆசை வந்துவிட்டது அல்லவா...! இரண்டாவது இதை விற்று விட்டு வரலாம் என்று கடையிலே சென்று கொடுத்தேன். எவ்வளவு வேண்டுமானாலும் கொண்டு வா என்றார்கள்.

குருநாதர் அங்கிருந்து வந்தார். உனக்கு இப்பொழுது எப்படி இந்த ஆசை வருகின்றது...?

1.உன் மனதைத் தங்கமாக்குவதற்கும் அதே சமயத்தில் பாதரசத்தில் மணியைச் செய்யும்படி சொன்னேன்.

2.எல்லா உணர்வுகளையும் சேர்த்து உயிர் எப்படி ஒளியானதோ அது போன்று உணர்வின் தன்மை ஒளியாக்கச் சொன்னேன்

3.தங்கத்தை போன்று மனம் ஆகி மங்காத நிலையாக உருவாகி உணர்வின் தன்மை தெளிவாக்கி

4.அந்தத் தெளிவின் தன்மை உயிர் ஆக்கப்படும் பொழுது இது பாதரசங்களாக மாறும்.

இதன் உணர்வை எல்லாம் சேர்த்து... இங்கே ஈயத்திற்குள் எப்படித் தங்கமாக மாறியதோ... இதைப் போன்று தான் தாவர இனங்களைச் சாரணையாக்கி உணர்வின் தன்மை ஒளி ஆனது. மனித உடலை உருவாக்கக் காரணமானது என்று அறிந்தவன் போகன்.

உணர்வின் தன்மை சிலையாக உருவாக்கி அதிலே சாரணை ஏற்றி மணத்தை வெளிப்படுத்தும் போது...
1.வரும் மக்கள் தீமைகளிலிருந்து விடுபடுவதற்கு அந்த முருகன் சிலையைப் பார்த்து நுகரும் போது
2.நல்ல நிலைகள் உருவாகி... மகிழ்ச்சி என்ற உணர்வு வரும்.
3.அதன் நினைவாக இதை எடுத்து "தன் மனதைத் தெளிவாக்க" இப்படி ஒரு உபாயத்தைச் செய்தான் போகன் அன்று...!

ஆனால் நீ என்ன செய்கின்றாய்...? உன் ஆசை தங்கம் செய்து அதை விற்றுக் காசை சம்பாதிக்கலாம் என்று வந்துவிட்டாய். இந்த ஆசை வந்தால் நீ அடுத்து எதை எடுப்பாய்...? உன் உடலுக்கு உதவும். எல்லோரும் வரவேற்பார்கள் ஏகபோகத்தில் செயல்படுத்துவார்கள். நீ எங்கேடா போகிறாய்...? என்று கேட்டார்.

தங்கம் மங்காது என்று சொன்னீர்கள்... தங்கத்தை நோக்கிச் செல்கிறேன் என்றேன்.

1.உன் ஆசை என்ன செய்கின்றது...? தங்கம் செய்து செய்து விற்கத்தான் செல்கிறது...?
2.அப்போது உன் மனது தங்கம் ஆகுமா...? ஆகாது...!
3.தங்கத்தின் மீது ஆசை அதிகமாகும்...!
4.விற்று வளர்ந்துப் பல தவறுகளைச் செய்யும்படிச் செய்யும்
5.கடைசியில் இந்த மனித உடலை அது அழிக்கத்தான் உதவும்.

இரண்டாவது தரம் தங்கம் செய்தவுடன் இதைத்தான் எனக்கு உபதேசித்தார். தங்கம் எப்படிச் செய்ய வேண்டும்...? என்பதைக் காட்டவும் செய்தார். அதனால் வரும் பின் விளைவுகள் என்ன...? என்பதையும் காட்டினார்.

ஆகையினால் அவர் சொன்ன முறைப்படி நீங்கள் எல்லாம் உயர்ந்த நிலை பெற வேண்டும்... அந்த உயர்ந்த மனம் பெற வேண்டும்...! என்ற எண்ணத்தில் நான் செயல்படுத்தும் போது... நீங்கள் வெளிப்படுத்தும் மகிழ்ச்சி எனக்கு உயர்ந்த சத்தாகிறது.

எல்லோருக்கும் அது கிடைக்க வேண்டும் என்று நீங்களும் அதே போன்று எண்ணினால் உங்களுக்கும் அது உயர்ந்த சத்தாகும்.
1.நான் ஒருவன் மட்டும் செய்து பெருமையைக் காட்டினால் நல்லது நடக்குமா...?
2.அருளைப் பெருக்கினால் தான் இருள் விலகும்... அந்த உயர்ந்த நிலையை நாம் பெற முடியும்.

உன்னுடைய ஆசைகள் அதனதன் வழியில் செல்லப்படும் பொழுது அதனுடைய பின் விளைவுகள் என்ன ஆகின்றது...? கடைசியில் நிராசையாக எப்படி மாறுகிறது...?
1.அந்த நேரங்களில் எல்லாம் உன் மனதை எப்படிப் பண்படுத்த வேண்டும்...? என்று
2.ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்படித்தான் அனுபவமாக எனக்குக் கொடுத்தார் குருநாதர்.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

கம்ப்யூட்டரில் எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் என்ற உணர்வின் அதிர்வுகளை வைத்து அதில் எதன் அதிர்வோ அதை வைத்து மாற்றி அமைக்கும் பல வேலைகளை விஞ்ஞானி கொண்டு வருகின்றான்.

பாஷைகளை எழுதினால்... அல்லது பேசினால்...
1.எலக்ட்ரிக் எலக்ட்ரான் என்ற நிலையில் அதனுடைய மோதல்களுக்கு ஒப்ப உணர்வின் அறிவாக எழுத்தின் ரூபத்தைக் கொடுத்து
2.ஒரே நிலையில் ஒரே அழுத்தத்தின் தன்மை கொண்டு தமிழ் இந்தி தெலுங்கு ஆங்கிலம் என்று

3.உலகில் உள்ள எத்தனையோ நூறு பாஷைகளில் அதை மொழி பெயர்த்து
4.அதனுடைய உருவத்தின் அமைப்பைக் கொடுக்கின்றான் கம்ப்யூட்டரின் துணை கொண்டு.

“அதிர்வின்” நிலைகள் கொண்டு தான் அதைச் செயல்படுத்துகின்றான். இதையெல்லாம் நாம் இன்று கண்கூடாகப் பார்க்கின்றோம் அல்லவா.

எதன் விஷத்தின் தன்மை அதிலே கலக்கின்றானோ அந்த உணர்வுக்கொப்ப அதில் இணைத்தால் இன்ன ரூபமாகும் என்று ஒரு நொடிக்குள் கொண்டு வருகின்றான்,

ஆனால் நாம் அந்த பாஷைகளை எல்லாம் கற்றுணர்ந்து மொழி பெயர்ப்பை எல்லாம் தெரிந்து அதை எழுத்து வடிவிற்கு நாம் கொண்டு வருவதற்கு முன்பு... அதிவேகமாக மொழி பெயர்க்கக் கூடிய சக்தி பெற்றிருக்கின்றான் விஞ்ஞானி.

இதே போன்றுதான்
1.அருள் உணர்வின் தன்மை பெற்று ஒரு நொடிக்குள் எதையும் ஒளியாக மாற்றிடும் திறன் நாம் பெற வேண்டும்.
2.அத்தகைய திறன் பெற்றவன் தான் அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷி ஆகி துருவ நட்சத்திரமாக ஆனது.

அந்தத் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் ஆறாவது அறிவை ஏழாவது ஒளியாக மாற்றியவர்கள்... சப்தரிஷி மண்டலங்களாக வாழுகின்றனர்.

மனிதனானவன்... தன் இனமாக வாழப்படும் போது அந்தத் துருவ நட்சத்திரத்துடன் உணர்வைப் பெற்று நம் முன்னோர்களை ஒளிச் சரீரம் பெறச் செய்ய வேண்டும்.

தாய் தந்தையர்... மூதாதையர்கள்... அவர்களின் குல வழியில் வந்தவர்கள் தான் நாம் அனைவருமே. அவர்கள் சப்தரிஷி மண்டலம் செல்லவில்லை என்றாலும்
1.அவர்கள் பெறத் தவறிய சக்திகளை நாம் பெற்று
2.அந்த ஆன்மாக்கள் இன்னொரு உடலுக்குள் சென்றிருந்தாலும்... அல்லது செல்லவில்லை என்றாலும்
3.துருவ நட்சத்திரத்தின் சக்தியை எடுத்து நம் உடலுக்குள் செலுத்தி... அந்த வலுவின் தன்மை கொண்டு அவர்களை விண் செலுத்த முடியும்.

எங்களுடன் வாழ்ந்து வளர்ந்து உடலை விட்டுப் பிரிந்து சென்ற குலதெய்வங்களின் உயிரான்மக்கள் சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று அவர்களை உந்தித் தள்ளி... பிறவி இல்லாத நிலையை அடைய வைக்க முடியும்.

நம் மூதாதையர்கள் தங்களைக் காக்க எத்தனையோ வேதனைகள் பட்டனர். பரிவு கொண்டு நம்மையும் காத்தார்கள். நம்மை வளர்ப்பதற்காக எத்தனையோ வேதனைகளை அவர்கள் நுகர்ந்தார்கள்.

அவருடைய கிளை வழி விழுதுகள் நாம் அவர்களைச் சப்தரிஷி மண்டலத்துடன் இணையச் செய்து... உடல் பெறும் உணர்வுகளைக் கரைக்க வேண்டும்.

ஆனால் இன்று பிள்ளை இல்லை என்றால் "எங்களுக்குக் கொள்ளி வைப்பதற்கு ஆள் இல்லை... அதனால் தத்துப் பிள்ளை எடுக்கின்றோம்..." என்று செயல்படுத்துகின்றார்கள். ஏனென்றால் "இவன் தான் கொள்ளி வைத்து என்னைச் சொர்க்கத்திற்கு அனுப்புவான்..." என்று எண்ணுவார்கள்.

முதலில் எனக்குப் பிள்ளை இல்லையே என்றிருப்பார்கள். ஆனால் வளர்த்துக் கொண்டு வரப்படும் போது... அந்தப் பிள்ளை சுகமாக வளர்ந்த பின் "அதைக் கெஞ்ச வேண்டும்..."

1.பிள்ளையை எண்ணி வேதனை உணர்வுகளை எடுத்து வளர வளர அவன் மீது இருக்கும் பற்றே அற்றுவிடும்
2.கடைசியில் நான் வளர்த்து ஆளாக்கினேன்... எல்லாம் செய்தேனே... என்று வேதனைப்பட்டு இறந்த பின்
3.அங்கே கொள்ளி வைக்க வேண்டிய பிள்ளை என்பதற்கு மாறாக அவன் உடலில் இந்த ஆன்மா புகுந்து அவன் நிலையே தான் ஆகும்.
4.மீண்டும் பிறவிக்குத் தான் வர முடியும்

நன்றாக யோசனை செய்து பாருங்கள். இதிலிருந்து எல்லாம் நாம் தப்ப வேண்டுமாக இல்லையா...?

காற்று மண்டலமே இன்று நச்சுத்தன்மையாக உள்ளது. மனிதனுக்கு மனிதன் சிந்தனை இழந்த நிலையில் உள்ளான். தீவிரவாதம் என்றும் கொலை கொள்ளை என்றும் மனிதனை மனிதனே இரக்கமற்று அழித்திடும் நிலைதான் இருக்கின்றதே தவிர மனிதனைக் காக்கும் நிலை இல்லை.

1.மனிதர்களைக் காத்திடும் நல்ல உணர்வுகளைப் பெறுவதற்கு ஆலயங்களை ஞானிகள் உருவாக்கிக் கொடுத்திருந்தாலும்...
2.அதிலேயும் ஏமாற்றித் தன் பிழைப்புக்காக நல் வழி பெறக்கூடிய தகுதியை இழக்கச் செய்யும் நிலை தான் இன்று உள்ளது.

அல்லது ஆண்டவன் பெயரைச் சொல்லி நரபலி கொடுத்து அதிலே சக்தி பெற்று விடுவோம் என்று இப்படி மந்திர தந்திரங்களில் வருகின்றார்கள். ஏமாற்றித் தந்திரமாக அழைத்துச் சென்று "நரபலி கொடுத்தால்" மெச்சித் தனக்கு அந்தத் தெய்வம் கொடுக்கும் என்று...!
1.ஆனால் அப்படி நரபலி கொடுத்தாலும் அந்த உடலை விட்டு பிரிந்த ஆவி
2.கொன்றவன் உடலுக்குள்ளே வரும் என்பதை மறந்து விட்டான்.

அதாவது... எவன் கொலை செய்கின்றானோ அவன் உடலுக்குள்ளே தான் அந்த ஆன்மா செல்லும். பின் அதே நிலைகளில் "அவனையும் ஆட்டிப் படைத்து வீழ்த்தும்..." என்பதை மறந்து விட்டான்.

ஏனென்றால் எந்தெந்த வழியில் இன்று உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

1.ஊரை ஏமாற்றலாம்... உலகை ஏமாற்றலாம்...
2.இந்த உயிரிடம் மட்டும் யாரும் ஏமாற்ற முடியாது... யாரும் இதை மறந்து விடக்கூடாது.
3.நான் அதைச் செய்வேன்... யானையைச் செய்வேன்... பூனையைச் செய்வேன்... என்று ஏமாற்றலாம்
4.ஆனால் நுகர்ந்த உணர்வின் அறிவு எதுவோ... அதன் வழி நமக்குள் அணுவாக உருவாக்கி
5.உடலில் அதைச் சேர்த்து வளர்த்துக் கொண்டே இருப்பான் உயிர்.

கீதையிலே நீ எதை எண்ணுகின்றயோ நீ அதுவாகின்றாய்...! பிறரைக் கொலை செய்ய வேண்டும் என்றால் அந்தக் கொலை செய்யும் உணர்வு வளர்ந்து மனிதனாக உருவாக்கிய அணுக்களை எல்லாம் அது கொன்று விடும்.

1.கொலை செய்து அவனைக் கொன்று போட்டேன் என்று எண்ணலாம்
2.ஆனால் அவன் வேறு எங்கும் போக மாட்டான்
3.கொலை செய்தவன் உடலுக்குள் வந்துவிடுவான்.

நுகர்ந்த கொன்றிடும் உணர்வுகள் அனைத்தும் இரத்தத்தில் கலந்து பிரம்மம் ஆகின்றது. அதன் உணர்வு கொண்டு துரித நிலையில் கடைசி நேரத்தில் இந்த உடலிலே மாற்றங்கள் ஏற்படும். இதிலிருந்து யாரும் தப்பவே முடியாது...!

1.நானும் இப்பொழுது உபதேசிக்கின்றேன்
2.உபதேசித்து விட்டுத் தவறான வழியில் சென்றால் நானும் என் உயிரிடமிருந்து இருந்து தப்ப முடியாது.

ஆகவே... குரு இட்ட கட்டளைப்படி உங்கள் ஒவ்வொரு உயிரையும் கடவுளாக மதிக்கின்றேன்... உங்களை அறியாது சேர்ந்த தீமையிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும் என்ற ஆசையில் தான் இதைச் சொல்கிறேன்.

நான் கொடுத்த சக்தியை அதற்குத் தான் பயன்படுத்த வேண்டும் என்று "குருநாதர் இப்படித்தான் எனக்கு அதை உணர்த்தினார்..."



ஊரை ஏமாற்றலாம்... உலகை ஏமாற்றலாம்... உயிரிடம் மட்டும் யாரும் ஏமாற்ற முடியாது. நான் யானையைச் செய்வேன்... பூனையைச் செய்வேன்... என்று ஏமாற்றலாம். ஆனால் நுகர்ந்த உணர்வின் அறிவு எதுவோ... அதன் வழி நமக்குள் அணுவாக உருவாக்கி உடலில் அதைச் சேர்த்து வளர்த்துக் கொண்டே இருப்பான் உயிர்.



குருநாதர் காட்டிய அருள் வழியில் ஞானியாக நீங்கள் மாறியே ஆக வேண்டும்

1.இவ்வளவு பெரிய உண்மையைச் சொல்கிறேன்...! எவனும் என் சொல்லைக் கேட்க மாட்டேன் என்கிறான் என்று
2.நீங்கள் இப்படிச் சொல்லி மற்றவர்களைக் கோபித்துக் கொண்டால் என்ன ஆகும்...?
3.இந்த உணர்வை அவர்களால் ஏற்க முடியவில்லை.... நம்மால் நல்லதை வளர்க்க முடியவில்லை...! என்ற இந்த நிலை தான் வருகின்றது.

அதைப் போன்ற நிலை இல்லாதபடி குருநாதர் சொன்ன அருள் வழிப்படி
1.அவர் கண்ட அகண்ட நிலையைப் போல்
2.நீங்கள் ஒவ்வொருவரும் அருள் ஞானிகளாக மாறியே ஆக வேண்டும்.

யாம் கொடுக்கும் அருள் சக்திகளை நீங்கள் எடுத்தால் உங்களுக்குள் சிந்திக்கும் ஆற்றல் வரும். வாழ்க்கையில் கஷ்டமோ நஷ்டமோ வந்தால் அதை ஈடுகட்டும் உணர்வின் வலு வரும்.

சிந்தனையுடன் செயல்படும் சக்திகள் பெருகும்... குடும்பத்தில் அன்புடன் பண்புடன் வாழும் இந்த உணர்வுகள் வளரும். ஞானத்தின் தன்மை பதிவாக்கி உணர்வின் தன்மை செயலாக்கப்படும் பொழுது அன்புள்ள குடும்பமாகவும் அருள் ஞானத் தெய்வீக குடும்பமாகவும் நாம் மாற முடியும்.

ஆக நீங்கள் எல்லோரும் பிறருக்கு எடுத்துக்காட்டாக வளர வேண்டும். கஷ்டத்தையும் நஷ்டத்தையும் விடுத்து விட்டு அருள் செல்வத்தைக் கூட்டி இருளைப் போக்கும் சக்தியாக வளர்ந்து அருள் வழியில் பண்புடன் வாழ்வோம்.

நீங்கள் தான் அனைவருக்கும் அருள் ஞானிகள் உணர்வுகளை எடுத்துச் சொல்ல வேண்டும். காரணம்
1.உங்களை வழி நடத்துவதற்கு அனைத்தையும் எடுத்துச் சொல்லி விட்டேன்.
2.நீங்கள் அதை எடுத்து வளர்த்துக் கொள்வதில் தான் இனி இருக்கின்றது.
3.வளர்த்தால் நாம் வளர்கின்றோம்... நஞ்சின் தன்மையிலிருந்து மீளலாம்.... பிறவி இல்லாத நிலை அடைய முடியும்.

நல்லதைப் பேசினேன்... தெரிந்து கொண்டேன்... என்ற நிலையில்
1.நான் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன் என்று எண்ணினால் ஏமாந்து விடுவோம்.
2.தெரிந்து கொண்டே தான் இருக்கின்றோமே தவிர முழுமையாக நான் தெரிந்து கொண்டேன் என்று எவருமில்லை.

சொல்லின் உணர்வின் தன்மை அறிந்து கொண்டாலும் முழுமையாக நாம் ஒரேடியாகத் தெரிந்து கொள்ள முடியாது... ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு விதமான உணர்வுகள் இயக்கும். அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கு நாம் அருளைச் சேர்த்துச் செயல்படுத்த வேண்டும்.

1.வெயில் அடிக்கும் பொழுது ஒரு உணர்வு
2.மழை பெய்யும் பொழுது ஒரு உணர்வு
3.குளிர் அடிக்கும் போது ஒரு உணர்வு
4.காற்று அடிக்கும் போது ஒரு உணர்வு

கால நிலைகள் இப்படி நமக்குள் மாறிக் கொண்டே தான் இருக்கும். “எந்த நேரத்தில் எதைச் செயல்படுத்த வேண்டும்...?” என்ற உணர்வினை அறிந்து அந்த ஞானத்தின் வழிப்படி நாம் வாழ்வோம்.

அனைவரையும் அந்த அருள் வழியில் வாழ வைப்போம். அருள் வழி செல்வோம் இந்த உடலுக்குப் பின் ஒளியின் உணர்வாக முழுமையான நிலையை நாம் அடைவோம். ஒளியின் சரீரமாக நாம் பெறுவோம்... பத்தாவது நிலையான கல்கி அடைவோம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

ஆண்டவன் பெயரைச் சொல்லி... சாமி பெயரைச் சொல்லி...
1.நான் அதைச் செய்து தருகின்றேன் ஆண்டவனயே என் கையில் வைத்திருக்கிறேன்... தெய்வத்தைக் கைவல்யப்படுத்தி வைத்திருக்கின்றேன்
2.உனக்குப் பல கோடி கிடைக்கும் என்று ஆசைகளை ஊட்டுவோர் வழியில் சிக்கி மனித ரூபத்தையே இன்று சிதறடித்துக் கொண்டுள்ளோம்.

ஏனென்றால் கடைசி நிலையாக இருக்கக்கூடிய நாம் இன்று எதைப் பெறுகின்றோம்...? என்று சிந்தித்துப் பாருங்கள். மனித உடலில் சகலத்தையும் உருவாக்க முடியும் என்று அரச நிலைகள் கொண்டு சாகாக்கலை ஆகின்றோம்.

ஆனால்
1.ஞானிகள் வேகாநிலை பெற்றவர்கள்.
2.மீண்டும் ஒரு உடலுக்குள் புகாது ஒளியின் சரீரமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

வேகாக்கலை என்றால் நாம் தீயிலே குதித்தாலும் இந்த உயிர் அது வேகுவதில்லை. உணர்வுகள் கருகுகின்றது... உணர்ச்சிகள் மாறுகின்றது உடல்கள் கருகுகின்றது.

உடலை விட்டுச் சென்ற பின் அந்தக் கருகிய உணர்வை உயிர் எடுத்துக் கொண்டு அந்த உணர்வுக்குத் தக்கவாறு “எரி பூச்சியாக” அடுத்து உருவாக்கி விடுகிறது.

ஆனால் அதே சமயத்தில் இறக்கும் தறுவாயில் நண்பா..! நான் போகின்றேன்...! என்று பாசத்துடன் எண்ணப்படும் பொழுது அந்தப் பற்று கொண்ட உடலுக்குள் சென்று... எரிச்சல் தாங்காது நண்பனையும் கருக்கும் நிலைகளுக்கே கொண்டு சென்று விடுகிறது... தற்கொலை செய்யும்படி ஆகிவிடுகின்றது.

நன்றாக யோசனை செய்து பாருங்கள்...!

இந்த வாழ்க்கையிலே நம்மால் தாங்க முடியவில்லை என்றால் உடனே தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் வருகின்றது செய்யும் போது நண்பன் மீது மிகுந்த பாசத்துடன் இருந்தால் அந்த உடலுக்குள் சென்று அவனையும் தற்கொலை செய்யும்படி உணர்ச்சிகளைத் தூண்டுகின்றது.

சில வீடுகளில் ஆக்ஸிடென்டுகள் ஆகட்டும்.
1.ஐயோ...! இப்படி ஆகிவிட்டதே... இறந்து விட்டாரே...! என்று சொல்லப்படும் பொழுது
2.விபத்தான அதே உணர்வுகளை எடுத்தால் மீண்டும் மீண்டும் விபத்துக்களை அங்கே உண்டாக்கிக் கொண்டே இருக்கும்.

என்ன வாழ்க்கை...? என்று தாங்க முடியாது தற்கொலை செய்து இருந்தால் அந்த உணர்வின் தன்மை வந்து குடும்பத்தில் எதிர்பாராத நிகழ்வுகளும் விபத்துக்களும் வந்து கொண்டிருக்கும்.

இதெல்லாம் சில குடும்பங்களில் இன்று பார்க்கலாம். இதையெல்லாம் தடுப்பது யார்...? மந்திரம் தந்திரம் எந்திரம் செய்து மாற்றிவிடலாம் என்றால் முடியுமா...?

சம்பாதித்த காசை எல்லாம் அவனுக்குக் கொடுத்து விட்டு “எல்லாவற்றையும் செய்தேன்... ஒன்றும் முடியவில்லை” என்ற உணர்வு கடைசி முடிவாகித் தற்கொலைக்கு அழைத்துச் செல்கின்றது.

உயிரால் வளர்க்கப்பட்ட மனித உடலின் வளர்ச்சியைக் கொன்று விட்டு நாம் எங்கே தப்ப முடியும்...?

இந்த உணர்வினைத் தனக்குள் எடுத்துக் கொண்ட பின் உயிர் கடைசியில் ஆனபின் இதே உணர்வின் நிகழ்ச்சிகள் வரும். அடுத்து அதற்குத்தக்க அடுத்த உடலாக மாறும்.

பாம்புகளை எடுத்துக் கொண்டால் அதனின் கடைசிக் காலத்தில் "தாங்க முடியவில்லை" என்றால் தன் உடலில் தானே கொத்திக் கொண்டு மரணம் அடைகின்றது. அதாவது
1.விஷத்தின் ஆற்றலை அது உருவாக்கப்படும் பொழுது தன்னால் முடியவில்லை என்றால்
2.கடைசி நிமிடம் இந்த உடலிலே வேதனைப்படுவதற்கு மாறாக தன்னையே கொத்தித் தீண்டி விடும்
3.விஷங்கள் பட்டபின் மடிந்துவிடும்.

விஷத்தின் தன்மை உணவாக உட்கொண்டு உணர்வின் தன்மை அந்த விஷமே ஜீரணிக்க உதவினாலும்... உடலில் மேல் இந்த விஷத்தன்மை பட்டபின் அது விஷத்தன்மைகள் ஊடுருவி அந்தப் பாம்பும் மரணம் அடைகின்றது.

நல்ல பாம்பின் விஷத்தை நாம் சாப்பிட்டால் நம்மை ஒன்றும் செய்யாது. அதே சமயத்தில் நம் உடல் மீது எங்காவது புண் இருந்து... அந்த விஷம் இதிலே லேசாகப்பட்டால் போதும்... ஊடுருவி நம்மைக் கொன்று விடும்.

இதைப் போன்ற உணர்வின் இயக்கங்கள் எப்படி இருக்கின்றது...? என்று ஞானிகள் கண்டுணர்ந்தனர். அதைப் பின்பற்ற வேண்டுமா இல்லையா...?

யாரும் தவறு செய்யவில்லை. அன்பு கொண்டு பரிவு கொண்டு பண்பு கொண்டு பாசம் கொண்டுதான் வாழுகின்றோம்.
1.அந்தப் பாசத்தால் பிறர்படும் துயரத்தை நுகர்ந்து அறிகின்றோம் நம் உயிரிலே படுகின்றது.
2.அவன் உணர்வு இரத்தத்தில் கருவாகி இந்திரலோகமாகின்றது
3.பின் இங்கே அதை உருவாக்கி விடுகின்றது.

அவன் உடலில் விளைந்த விஷத்தின் உணர்வுகள் எல்லா அணுக்களிலும் ஊடுருவி இதன் உணர்வின் தன்மை கருவாக்கி நல்ல அணுக்கள் மாற்றமாகும் தன்மையே பெறுகின்றது.

இதை மாற்றுவதற்கு என்ன வைத்திருக்கின்றோம்...?

சர்வ தீமைகளையும் நஞ்சினையும் வென்றவன் அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷியாகி துருவ நட்சத்திரமாக ஆனது. உயிர் தோன்றி மனிதனாக வளர்ச்சி பெற்ற பின்... அகஸ்தியன் என்றும் ஒளிச் சரீரமாக துருவ நட்சத்திரமாக இருக்கின்றான்.

1.அந்தத் "துருவ நட்சத்திரத்தின் சக்தி" – இன்றும் என்றும் பூமிக்குள் நமக்கு முன் வந்து கொண்டே உள்ளது.

2.அதைக் கவர்ந்து அந்த நம் உடலில் சேர்த்துக் கொண்டால்... இருளை அகற்றி நாம் ஏகாந்தமாக வாழ முடியும்

இந்த விஞ்ஞானிகள் பல மருந்துகளை மனித உடலுக்குள் செலுத்தப்பட்டு மனிதனை 1500 வருடங்கள் வாழ வைக்க முடியும் என்று சொல்கின்றார்கள்.

ஆனால் துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை வளர்த்துக் கொண்டால்

1.பல ஆயிரம் ஆண்டுகள் உயிருடன் ஒன்றி ஒளியாக வாழ முடியும்

2.இந்தச் சூரியன் அழிந்தாலும்... பிரபஞ்சமே காணாமல் போனாலும்

3.இந்தப் பிரபஞ்சத்திலிருந்து... அகண்ட அண்டத்தில் வரும் தூசிகளை நுகர்ந்து ஒளியாக மாற்றிடும் திறன் பெற்று விடுகின்றோம்.

மனிதனான பின் அந்த வளர்ச்சிக்கு நாம் போக முடியும்.



துருவ நட்சத்திரத்தின் உணர்வை வளர்த்துக் கொண்டால் என்றுமே ஒளியாக வாழ முடியும். சூரியன் அழிந்தாலும்... பிரபஞ்சமே காணாமல் போனாலும் அகண்ட அண்டத்தில் வரும் தூசிகளை நுகர்ந்து ஒளியாக மாற்றிடும் திறன் பெற்று விடுகின்றோம்.



என் குடும்பத்தைச் சிரமப்பட வைத்துத் தான் உலக மக்கள் வாடுவதைப் பற்றி எனக்கு உணர்த்துகிறார் குருநாதர்

ஆரம்பத்திலே என் மனைவி நோயால் வாடியது... பின் குரு அருளால் நலம் அடைந்து எழுந்தது. அதற்கு அப்புறம் குருநாதர் காட்டிய அருள் வழியில் உலக அனுபவம் பெறுவதற்கு நான் வெளியிலே சென்று விடுகிறேன்.

ஆனால் குடும்பத்தில் எத்தனையோ கஷ்டங்கள் வருகிறது. இந்த உணர்வுகள் உன்னை எப்படித் தாக்குகிறது...? நான் கொடுத்த சக்தி கொண்டு அதிலிருந்து குடும்பத்தை எப்படி மீட்ட வேண்டும்...? என்று குரு காட்டுகின்றாற்.

நான் வெளியில் சென்ற பின் என் குடும்பத்தில் எத்தனையோ அவஸ்தைகள் பட்டார்கள். ஆனால் அன்று அவர்களுக்கு நான் எதையும் செயல்படுத்த முடியவில்லை.

1.ஒவ்வொரு மனிதரும் வாழ்க்கையில் சந்தர்ப்பத்தில் எத்தனையோ

அவஸ்தைகள் படுகின்றார்கள்.
2.அது எல்லாம் எப்படி ஏற்படுகின்றது...? அதிலிருந்து அவர்களை மீட்டும் வழி என்ன...? என்பதைத் தெரிந்து கொள்வதற்குத்தான்
3.என் குடும்பத்தை இப்படிச் சிரமப்பட வைத்து... அதை வைத்து எம்மை அறியும்படி செய்கின்றார் குருநாதர்.

ஆசை என்ற நிலையில் என் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றால் குருநாதர் கொடுத்த சக்தியை நான் சுயநலத்திற்குப் பயன்படுத்த வேண்டும்... மற்றவர்களை ஏமாற்ற வேண்டும். ஆனால் அப்படி நான் செய்யவில்லை...!

வீட்டிலே பட்டினியாக இருக்கின்றார்கள். இன்றைக்கும் அதையெல்லாம் யாம் எண்ணினோம் என்றால் அழுகை தான் வரும்.

சுற்றுப்பயணம் செய்துவிட்டு வீட்டிற்கு வருகின்றேன்.
1.பார்த்தால் மூன்று நாட்கள் நான்கு நாட்கள் பட்டினியாக இருக்கின்றார்கள்.
2.அனைவருமே அப்படியே இறுகிப் போய் இருக்கின்றார்கள் யாரிடம் பணம் கேட்பது...? என்ற நிலை இல்லாதபடி...!

நான் மங்களூரில் இருந்து வரும் பொழுது அங்கே எனக்கு உதவி செய்பவர்கள் பணத்தைக் கொடுப்பார்கள். பஸ்ஸிலே வந்து கொண்டிருந்தேன். ஒருவன் பணம் இல்லை என்றான்.. அவனிடம் அதைக் கொடுத்து விட்டேன்.

மற்றவர்கள் கேட்கும் பொழுது கொடுத்து விடுகின்றேன்.
1.என் வீட்டுக்குப் போக வேண்டும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற நினைப்பு வரவில்லை.
2.ஏனென்றால் குரு அவ்வாறு செயல்படுத்திக் காசை அங்கேயே கொடுக்கும்படி செய்கின்றார்.

நான் வீட்டிற்கு வந்தால் வெறும் பாக்கெட்டாகத் தான் வருகின்றேன். வீட்டிற்கு வந்து தான் நான் சாப்பிட வேண்டும்.

வெளியிலே நான் எந்த வீட்டிற்குச் சென்றாலும் சாமி வாருங்கள்.. நீங்கள் சாப்பிடுங்கள் என்று சொல்கின்றார்கள். எனக்குச் சாப்பாடு கிடைக்கின்றது.

1.ஆனால் என் குடும்பத்தில் பட்டினியாக இருக்கின்றார்கள்... எல்லோரும் வாடுகின்றார்கள்.

2.அப்பொழுது இதை வளர்ப்பதா...? அதை வளர்ப்பதா...? நான் எதைச் செய்வது...? என்று சிக்கலான நிலையை குருநாதர் கொண்டு வருகின்றார்.

பட்டினியாக இருப்பதைப் பார்த்தபின் என் உறவினர்களிடம் நண்பர்களிடம் சென்று "வீட்டிலே பட்டினியாக இருக்கின்றார்கள் ஒரு ஐந்து ரூபாய் கொடுங்கள்..." என்று கேட்கின்றேன்.

எங்களுக்கும் அவர்கள் பணம் தர வேண்டும். இருந்தாலும் என்ன சொல்கிறார்கள்...?

ரூபாய் என்றால் நீ என்ன நினைக்கின்றாய்...? ஐந்து ரூபாய் என்றால் சும்மா வந்துவிடுமா...?

நாங்கள் நன்றாக இருக்கும் போது எங்களிடம் பணம் வாங்கி இருக்கின்றீர்கள். அதிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் கொடுத்து உதவி செய்யலாம் அல்லவா என்று கேட்கின்றேன்.

நீ நினைத்தவுடன் ஐந்து ரூபாய் வந்துவிடுமா என்று இப்படிக் கேட்கின்றார்கள். (குருநாதர் அங்கே உணர்த்துகிறார்)

குழந்தைகள் பட்டினியாக இருக்கிறார்கள்... ஒரு வேளை சோறாவது சாப்பிட வேண்டும் அல்லவா. நான் வந்து இப்பொழுது தான் அதைப் பார்க்கின்றேன் என்று சொல்கின்றேன். எனக்குத் தெரிந்தவர்கள் எல்லோரிடம் இப்படிக் கேட்கின்றேன்.

நீங்கள் கேட்கும் பொழுது எங்களிடம் கொடுப்பதற்குப் பணம் இல்லையே என்று இப்படித்தான் சொல்கின்றார். நீங்கள் கேட்டவுடன் ரூபாய் வந்துவிடுமா...?

நன்றாக இருக்கும் பொழுது எங்களிடம் வாங்கினீர்கள். இந்தக் கஷ்டமான நேரத்தில் அதைக் கொடுத்து உதவி செய்யலாம் அல்லவா என்று கேட்டால் இதெல்லாம் எங்களிடம் நீங்கள் கேட்கக் கூடாது என்கிறார்கள்.

நாங்கள் கொடுக்கிறோம் என்று தான் சொல்கிறோம். ஆனால் இப்பொழுது எங்களிடம் பணம் இல்லை. நீங்கள் ஏன் சும்மா அதைக் கேட்கிறீர்கள்...?

யாராவது இதற்கு சிபாரிசு செய்து பணத்தைக் கொடுங்கள் என்று சொன்னால் நீங்கள் யார் இவருக்குப் பணம் கொடுக்கச் சிபார்சு செய்வது...? என்று அவர்களுடன் சண்டைக்குச் செல்கின்றார்.

காரணம்

1.இது எல்லாம் குருநாதர் அனுபவத்தில் காட்டிய நிலைகள்.
2.ஒரு மனிதன் இயற்கையில் வாழ்க்கையில் வலுப் பெறும் பொழுது எப்படி வாழ்கின்றார்கள்...?
3.ஆனால் அதிலே தாழ்ந்த பின் என்ன நடக்கிறது...?
4.மனிதன் வாழ்க்கையில் உண்மையின் உணர்வின் தன்மை தெளிவாக வேண்டும் என்றால் அது எப்படி...? என்று எம்மை அறியும்படி செய்தார்.



தற்கொலை செய்த ஆன்மாவைக் கூட நாம் விண் செலுத்த முடியும்

நம் முன்னோர்களின் உயிரான்மக்களை இதற்கு முன் விண் செலுத்தவில்லை... பழகவில்லை. ஆகையினால் அந்த உயிரான்மாக்கள் இன்னொரு உடலில் இருக்கும்.

அப்படி... மற்ற உடலில் இருந்தாலும்
1.அவர்களை நம் குருநாதர் காட்டிய அருள் வழியில் முறைப்படுத்தி விண்ணிலே

2.சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்ற உணர்வலைகளைப் பாய்ச்சப்படும் போது
3.எந்த உடலுக்குள் இருந்தாலும் இந்த உணர்வுகள் அங்கே வட்டமிடும்.

ஏனென்றால் அவர்கள் உணர்வு தான் நமது உடல். ஒரு நண்பன் நமக்கு நன்மை செய்தான் என்றால் அந்த உணர்வுகள் விக்கலாகப் பாய்கிறது. இதே போல உடலை விட்டுப் பிரிந்தவர்கள் இன்னொரு உடலில் இருந்தாலும் "நாம் செலுத்தும் உணர்வுகள் அங்கே போய் இயக்கும்..."

அந்த உடலில் ஆவியாகத்தான் இருக்கும். ஆனால் "மனிதனல்லாத உடலுக்குள் சென்று விட்டால்... நாம் ஒன்றும் செய்ய முடியாது...!"

பொதுவாக... இறந்த பின் யார் மீது பற்றிருக்கின்றதோ அந்த உடலுக்குள் தான் ஆன்மா செல்கின்றது.
1.உடலுக்குள் சென்றாலும் ரத்த நாளங்களில் தான் அது சுழன்று கொண்டிருக்கும்.
2.நாம் அந்த ஆன்மா சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று எண்ணினால்
3.எந்த உடலில் இருக்கின்றார்களோ அந்த உடலுக்கு முன்னாடி நம்முடைய உணர்வுகள் சுற்றும்.

சந்தர்ப்பத்திலே அவர்கள் இறக்கப்படும் பொழுது முன்னோரின் ஆன்மாவும் வெளிவரும்.
1.நாம் தினசரி எண்ணி அவர்களை விண் செலுத்திய உணர்வுகள் கொண்டு
2.அந்த ஆன்மா சப்தரிஷி மண்டலத்துடன் இணையும்.

இதுகள் எல்லாம் ஒரு சிலருக்குத் தெரிய வரும்.

காரணம் அந்த இன்னொரு உடலில் இருந்து இந்த ஆன்மா வெளிவந்த பின்... நம்முடைய உணர்வு தாக்கப்பட்ட பின் நினைவு வரும். "என்னை ஏன் விண் செலுத்தவில்லை...? விண் செலுத்து...! என்று அந்த உணர்ச்சிகள் உந்துவதைக் கூடத் தெரிந்து கொள்ளலாம்.

அவருடைய உணர்வு நமக்குள் இருப்பதால் நினைவுபடுத்தி அந்த ஆன்மாக்களை விண் செலுத்தும்படி செய்யும்.

ஒருவர் நோயுடன் சென்று இருக்கலாம்... திடீரென்று அகால மரணத்துடன் சென்றிருக்கலாம்... வெறுப்பின் தன்மை கொண்டு தற்கொலை கூட செய்து இருக்கலாம்.

1.அப்படித் தற்கொலை செய்திருந்தாலும் கூட அந்த ஆன்மாக்களை நாம் விண் செலுத்த முடியும்.
2.காரணம் மனிதன் தான் அதைச் செயல்படுத்த முடியும்.

சப்தரிஷி மண்டலத்துடன் அந்த ஆன்மாக்கள் இணைக்கப்பட்டு உடல் பெறும் உணர்வு கரைக்கப்பட்டு அவர்களைப் பிறவியில்லா நிலை அடையச் செய்தல் வேண்டும்.

வான் வீதியில் தோன்றிய உயிரணுக்கள் தான் நம் உடலில் சேர்கிறது. மனிதனான பின் உணர்வுகளை ஒளியாக மாற்றி ஒளியின் சரீரம் பெற்றது துருவ நட்சத்திரம்.

அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை நாம் பெறும் போது நாமும் அந்த நிலை பெறுகின்றோம். அந்த வலுவின் துணை கொண்டு நம் முன்னோர்கள் மூதாதையரின் உயிரான்மாக்களை அங்கே ஒளிச்சரீரம் பெறச் செய்ய வேண்டும்.

துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் வளரும் பொழுது அவர்கள் பிறவியில்லா நிலை அடைகிறார்கள். இதை நாம் வளர்த்துக் கொண்டே வந்தால் அந்த வலுக் கொண்டு நாம் எப்பொழுது உடலை விட்டுப் பிரிந்து சென்றாலும் உயிர் நம்மை அங்கே அழைத்துச் சென்றுவிடும். காரணம்...
1.எந்த உணர்வின் தன்மை வலுப் பெறுகின்றதோ அதனுடைய தொடர் வரிசை பூமியில் இருப்பதால்
2.அதன் ஈர்ப்புக்கே நம்மை அழைத்துச் செல்கின்றது.



மெய் ஞானிகள் உணர்வை உங்களுக்குள் வளர்க்கச் செய்வது தான் ஆத்ம சுத்தி

மகரிஷிகளின் அருள் சக்திகளை ஒவ்வொரு நொடிப் பொழுதும் ஏங்கி எடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள். நான் எடுத்தேன்... ஆனால் மீண்டும் வரவில்லை என்று எண்ண வேண்டாம்.

துணிகளில் அழுக்குப் பிடித்து விட்டது என்றால் சோப்பைப் போட்டு அதை நீக்குகின்றோம். அதைப் போல் ஒரு பொருளைச் செய்யும் போது சரியாக வரவில்லை என்றால் அதைச் சீர்படுத்துகின்றோம்.

உதாரணமாக ஒரு உலோகத்தை உருக்கிக் கொண்டு வரும் பொழுது சரியாக அது வரவில்லை என்றால் மீண்டும் அதை உருக்கிச் சரியான பருவத்திற்குக் கொண்டு வருகின்றான் மனிதன்.

இதைப் போலத் தான்
1.அந்த மெய் ஞானிகள் உணர்வைத் திரும்பத் திரும்ப எடுத்து ஆத்ம சுத்தி என்ற நிலைகள் கொண்டு உடலுக்குள் செலுத்தி
2.அதைச் சீராக வளர்த்திடும் அந்த எண்ண வலுவைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

அதற்குத்தான் கூட்டுத் தியானங்களை ஏற்படுத்துகின்றோம். அதன் வலு கொண்டு எண்ணிக் “காற்றிலிருந்து அந்தச் சக்திகளை எடுக்கப் பழகுவதற்கு ஆத்ம சுத்தி...”

தையல் கலையைக் கற்றுக் கொள்கின்றார்கள். அப்படிக் கற்றுக் கொண்டவர்கள் மற்றவர்களுடன் பேசிக் கொண்டே சீராகத் தைக்கின்றார்கள். ஆனால் புதிதாகக் கற்றுக் கொள்ள நாம் அதைக் கூர்ந்து கவனித்தாலும் நம்மால் நேராகத் தைக்க முடியாது.

ஆனால்...
1.நம்முடைய கூர்மையான உணர்வை அதற்குள் செலுத்தி
2.அது சீராக வைக்கும்படி நம் உணர்வுகளை வளர்த்துக் கொண்டால்
3.அந்த வேலை செய்யும் எண்ணமே அதைச் சீராக நம்மைச் செயல்படுத்தும்படி செய்துவிடும்.

உதாரணமாக கண் பார்வை இழந்தவர்கள் தன் உணர்வின் ஆற்றலால் பிளாஸ்டிக் வயர்களை வைத்துப் பின்னிப் பழகுகின்றார்கள். அந்த உணர்வின் இயக்கமே அளவுகோலைக் குறித்து...
1.கண் தெரிந்தவர்கள் நாம் அதைப் பின்னுவதைக் காட்டிலும்
2.கண்ணற்றவர்கள் பழகி அழகாகக் கலரையும் இணைக்கின்றார்கள்... பின்னலையும் தெளிவாக உருவாக்குகின்றார்கள்.

கண்ணற்றவன் தடவிப் பார்த்துக் கலரைப் பார்க்கின்றான்.

இதைப் போல நமது உணர்வின் ஆற்றலைத் தெளிவாக்கிப் பெருக்கிக் கொள்வதற்குத் தான் உங்களுக்கு ஆத்ம சுத்தி என்று பழகிக் கொடுக்கிறோம்.

உங்கள் உடலில் எத்தகைய நோய் இருந்தாலும் அதை நீக்க உங்கள் எண்ணத்தால் கவர்ந்து உங்கள் உயிருடன் இணைக்கச் செய்யும் பொழுது அதைப் பாய்ச்சி ஜீவன் பெறச் செய்து அந்தச் சக்தியை வளர்த்து விடுகின்றது.

ஒவ்வொரு நொடியிலும்
1.உங்களுக்குள் குறை உணர்வோ அல்லது பலவீனமான எண்ணங்களோ வந்தால் அதை மனதில் ஏற்றுக் கொள்ளாது
2.மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்ற ஆத்ம சுத்தி செய்து
3.உங்களுக்குள் இணைந்த தீமை விளைவிக்கும் உணர்வுகளைத் தணித்து
4.மெய் ஞானிகள் உணர்வை உங்களுக்குள் வளர்க்கச் செய்வது தான் ஆத்ம சுத்தி.

இதுதான் உண்மையான தியானம்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

இருபத்தியேழு நட்சத்திரங்களின் சக்தியும்... நவக்கோளின் உணர்வுகளையும்... நவக்கோள்களால் விளைந்த தாவர இனங்களையும் சேர்த்து... சிலையாக போகன் உருவாக்குகின்றான்.

சூரியனிலிருந்து வெளிப்படும் பாதரசம் தான் எல்லாவற்றிலும் கலக்கிறது. பாதரசம் எதனைக் கவர்கின்றதோ அது விந்தாக மாறி அதன் உணர்வே கருவாகி உருவானது என்பதை சாஸ்திரங்கள் தெளிவாகக் கூறுகின்றது.

பாதரசத்தை வைத்து நவக்கோள்களில் உருப்பெற்ற பாஷாணத்தையும் இணைத்து ஒரு உருவமாக மனிதனைப் போன்று வடிக்கின்றான். இதன் உணர்வைக் கவர்ந்த பின் ஒவ்வொரு தாவர இனங்களிலும் இந்த ரசங்கள் உண்டு. அதை எல்லாம் அந்தச் சிலைக்குள் "சாரணையாகக்" கொடுக்கின்றான் போகன்.

தாவரங்களை ஆடு மாடுகள் தின்றாலும்... புலி அதை அடித்துச் சாப்பிட்டாலும்... இந்த உணர்வு அதிலே எப்படியும் அதற்குள் கலக்கின்றது. அதனின் உணர்வுகள் சிறுகச் சிறுகக் கலவைகள் ஆகி... தீமைகளை நீக்கும் மனித சரீரமாக உருவாக்குகிறது என்பதனை உணர்ந்தவன் அருள் ஞானி போகன்.

1.ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இதை உணர்ந்தவன்.
2.ஆனால் ஆதியில் கண்டுணர்ந்தவன் அகஸ்தியன்

அகஸ்தியன் துருவ நட்சத்திரமாக இருப்பினும் அவனுடைய அறிவு கொண்டு போகன் செயல்படுத்தினான். அதன் வழி முருகன் சிலையை உருவாக்கிப் பழனி மலையில் ஸ்தாபித்தான்.

1.அந்தச் சிலையின் மீது சிறிது நீரை விட்டால் போதும்
2.அது வெப்பமாகும்.. ஒரு ஆவியின் தன்மை கிளம்பும்...
3."அதை நுகர்ந்து நமது ஆன்மாவாக ஆக்கிடல் வேண்டும்..."

அதாவது... நாம் கீழிருந்து மேலே படியில் ஏறும் போதே அதைப் பெற வேண்டும் என்று ஏங்கினால் "முருகன் சிலையிலிருந்து வெளிப்படும் அந்த மணங்களைச் சுவாசிக்க நேர்கின்றது..."

இடையிலே இடும்பன் மலை என்றும் வைத்திருப்பார்கள்

காரணம்... மேலே ஏறிச் செல்ல வேண்டும் என்கிற போது வேதனையென்ற உணர்வாகி விட்டால் கை கால்களை முடங்கச் செய்து விடுகின்றது... அப்படி இடைமறித்துத் தடுப்பதை இடும்பன் என்று காட்டினார்.

மீண்டும் ஏக்க உணர்வுகளை மேலே செலுத்தி... களைப்பை நீக்கி அவன் அருளைப் பெற வேண்டும் என்று கிரிவலம் வந்தால் அங்கே தூப ஸ்தூபி இருக்கும்.
1.அதற்கு நேராக நின்று வானை நோக்கி எண்ணி
2.அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளைப் பெற வேண்டும் என்ற உணர்வை நுகர்வதற்காக அதை வைத்தார்கள்.

அந்த உணர்வுடன் ஆலயத்திற்குள் சென்று அவன் அறிவின் தொடர் கொண்டு... முருகன் சிலையிலிருந்து வரும்... தீமைகளை நீக்கிடும் ஆவியின் தன்மையை நுகர்தல் வேண்டும்.

1.சிலையைக் கண் கொண்டு உற்றுப் பார்த்து நாம் பதிவாக்கப்படும் பொழுது கண்ணன் வெண்ணையைத் திருடுகின்றான்.
2.சிலையைப் பதிவாக்கிய பின் அதிலிருந்து வரக்கூடிய மணத்தைக் கண்ணுடன் சேர்ந்த காந்தப்புலன் கவர்கின்றது

3.நுகர்ந்து உயிரிலே பட்டபின்... இந்த உணர்ச்சியின் தன்மை தீமையை நீக்கும் சத்தாக
4.போகன் வடித்த உணர்வை... அந்த வெண்ணையை...
5.நம் கண் திருடி... நம் உடலுக்குள் தீமையை நீக்கிடும் சக்தியாகப் பரவச் செய்கின்றது.

வெண்ணை என்றால் நெய்யாக நம் உடலுக்குள் அது எப்படிச் சத்தாக ஆகின்றதோ... அதே போல் சிலையிலிந்து வரும் மணத்தின் சத்தை நாம் வடிக்கப்படும் பொழுது... நம் உடலில் தீமையை நீக்கும் அருள் சக்தி கிடைக்கின்றது.

கண்டுணர்ந்த மெய் ஞானியான போகன்... கண்ணின் இயக்கமும் உயிரின் இயக்கமும் உடலின் அமைப்பும் என்ற நிலையில்
1.சாதாரண மக்களும்... தன்னைத் தான் தனக்குள் இயக்கும் நிலைகளை அறிந்து கொள்ள
2.தீமையை நுகரும் பொழுது என்ன நடக்கின்றது...? என்றும்
3.தீமையை நீக்கிய அருள் ஞானிகள் உணர்வுகளை நுகரப்படும் பொழுது
4.இந்த உடலில் என்ன விசித்திரங்கள் நடக்கிறது...? என்பதையும் காட்டினான்.

ஏனென்றால் தீமையான உணர்வுகளை நல்ல குணம் கொண்டோர் நுகரும் பொழுது அது எத்தகைய விஷத்தன்மையாக மாறுகிறது...? நல்ல குணங்கள் எப்படி மாறுகின்றது...? உடல்கள் எப்படி நலிகின்றது...? என்பதை அறிந்த போகன் தன் இன மக்களுக்கு அதிலிருந்து மீட்டிக் கொள்ளும் உயர்ந்த சக்தி கிடைக்க வேண்டும் என்று அன்று செயல்பட்டான்.

தன் இன மக்கள் என்றால் சாதாரணமாக எண்ணவில்லை...!

ஒவ்வொரு மனிதனின் உயிரும் கடவுள்.. அவனால் அமைக்கப்பட்ட ஆலயம் அந்த உடல். அந்த ஆலயத்தைத் தூய்மைப்படுத்தி மகிழ்ச்சியை ஏற்படுத்தவே அதைச் செய்தான் போகன்.

ஏனென்றால் உயிரே கடவுள்... அவனே உள்ளிருந்து ஆளுகின்றான்... "பிறருடைய நிலைகளை அந்த ஆண்டவன்..." என்று எண்ணிச் செயல்படும் பொழுது... மகிழ்ச்சி என்ற உணர்வை வெளிப்படுத்தும் போது... எல்லோரும் அதன் உணர்வின் தன்மை பெறுவதற்க்காக போகன் அந்த வழியில் செய்தான்.

1.யாரெல்லாம் போகனை எண்ணி அதைச் செயல்படுத்துகின்றனரோ
2.ஆயிரக்கணக்கானோருக்கு அந்த ஆலயத்தில் நலம் பெறும் சக்தியாகக் கிடைக்கின்றது.

மனித உடலில் இருக்கும் போது தான் இத்தகைய வேலைகளைச் செய்தான்.

தீமைகளை நீக்கிய உணர்வின் தன்மை பெற்று... ஆறாவது அறிவை ஏழாவது ஒளியாக மாற்றி... ஒளியின் சரீரமாக... துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் சப்தரிஷி மண்டலமாக போகன் இன்றும் உள்ளான்.

1.அவன் ஒளியான உணர்வை நாம் நுகரப்படும் பொழுது
2.அவன் சென்ற பாதையில் நமக்குள்ளும் அந்த அருள் உணர்வுகள் பெருகி
3.இருளை நீக்கிடும் அருள் சக்தி பெற்று இந்த உடலுக்குப் பின் அவன் வழியிலே அங்கே (சப்தரிஷி மண்டலம்) செல்ல முடியும்.
4.போகன் அதைப் பெறவே... அதன் உணர்வைப் பெற்று அங்கே பெற்றான்.
5.அவன் வழியில் செல்லப்படும் போது... நாமும் அங்கே செல்ல முடியும்.

போகன் காட்டிய தூப ஸ்தூபியின் முன் நின்று அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும். அதை வட மேற்காக வைத்திருப்பார்கள். விநாயகரை வைத்தது போலேயே முருகன் சிலையையும் போகன் அவ்வாறு தான் வைத்துள்ளான்.
1.நாம் வட கிழக்காகப் பார்த்து அந்தத் துருவ நட்சத்திரத்தினை எண்ணும் பொழுது
2.அவன் காட்டிய முறைப்படி நாமும் நஞ்சை வென்று... அவன் அடைந்த எல்லையை அடைய முடியும்.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

முருகனுக்குப் பல பழங்களைப் போட்டுப் பஞ்ச அபிஷேகம் செய்கின்றோம் ஐந்து கனிகளைப் போடும் பொழுது வெப்பம் காந்தம் விஷம்... இதெல்லாம் சேர்ந்து தான் சத்தின் தன்மை (பொருளை) எடுத்துக் கனியின் தன்மை அடைந்தது.

அதாவது எதன் பொருளை எடுத்துக் கவர்ந்து கொண்டதோ புலனறிவு ஐந்தாகின்றது.
1.ஆறாவது அறிவின் தன்மை கொண்டு அங்கே முருகனுக்குப் பஞ்சபிஷேகம் நடக்கிறது என்றால்
2.அதைப் போன்ற மணங்கள் பெற வேண்டும்... அந்தச் சுவையின் தன்மை பெற வேண்டும் என்று ஏங்கி
3.அந்த உணர்ச்சிகளை நம் உயிரில் இணைத்து அபிஷேகம் செய்தால்
4.அது எப்படி ஐந்து விதமான சுவைகளை ஊட்டிப் பஞ்சாமிர்தமாக ஆனதோ
5.அந்த ஐந்து வகையான அமிர்தங்களாக நமக்குள் சுவை ஊட்டுகின்றது.

நம்முடைய ஐந்து புலனறிவினாலும் துருவ நட்சத்திரத்தின் உணர்வைக் கவர்ந்து கொண்டால் இவை அனைத்தும் "பஞ்ச அமிர்தம்" என்று வருகின்றது. அது தான் காயத்ரி.

துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெற வேண்டும் என்று அந்த எண்ணத்தை இயக்கினால் இதற்குப் பெயர் வசிஷ்டர்...! அந்த உணர்வின் தன்மை உயிரிலே படும் பொழுது அந்த உணர்ச்சிகளின் இயக்கமாக நம்மை இயக்குகின்றது.

உடலுக்குள் செல்லப்படும் போது...
1.அன்று அகஸ்தியன் எப்படித் தீமைகளை நீக்கினானோ அதை எப்படி வென்றானோ
2.அந்த உணர்வின் ஆற்றல் நம் உடலில் சேர்கின்றது.

தசரதச் சக்கரவர்த்திக்கு வசிஷ்டர் பிரம்மகுரு... தீமைகளை வென்றிடும் சக்தி பிரம்மமாகிறது. அதனின் இயக்கமாக நம்மைத் தீமையிலிருந்து விடுபடச் செய்யும். அதன் சக்திக்கு அருந்ததி என்று காரணப் பெயர் வைக்கிறார்கள்.

இதை எல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பத்தாவது நிலை அடையக்கூடிய மனித உடலில் நாம் சந்தர்ப்பத்தால் நுகர்ந்த உணர்வுகள் எப்படி எல்லாம் சேருகின்றது என்று.

அருந்ததி என்றால் எதன் உணர்வின் தன்மை பிரம்மமாகி உடலாக ஆனதோ... அதனுடன் இணைந்து வாழும் சக்தி என்று தெளிவாக்கப்படுகின்றது.

ஆறாவது அறிவு கொண்ட மனிதன் – முருகு மாற்றி அமைக்கக்கூடிய சக்தி பெற்றவன். எப்படி...?

கருணைக்கிழங்கு இருக்கிறது என்றால் அதை வேக வைத்து அதில் உள்ள விஷத்தை நீக்குகின்றோம். புளி உப்பு காரம் என்று பல பொருட்களைச் சேர்த்து அதைச் சுவையாக உருவாக்குகின்றோம்.
1.சுவையாக அதை உணவாக உட்கொள்ளும்போது...
2.நம் உணர்ச்சிகள் அது பஞ்ச அபிஷேகமாக அந்த உணர்வுகள் நல்ல உணர்ச்சிகளைத் தூண்டுகிறது.
3.அந்த உணர்ச்சிகள் நம் உயிரிலே பட்டு அந்த உணர்வின் அமிலங்களாக உருவாக்குகின்றது
4.அந்த அமிலங்கள் உமிழ் நீராக மாறுகின்றது.

உணவாக உட்கொள்ளும் சக்திக்குள் மகிழ்ச்சியூட்டும் உணர்வுகளை ஊட்டப்படும் பொழுது அது நம் இரத்த நாளங்களில் கலந்து அந்த அணுக்களின் மலமாகி நம் உடலில் நல்லதாகி... நம்மை ஆரோக்கியமாக்கும் நிலை வருகின்றது.

ஆகையினால்
1.ஆறாவது அறிவால் விஷம் அடக்கப்படுகின்றது... மகிழ்வாகனா (மயில்வாகனா)
2.மயில் தோகை விரித்து அது மகிழ்ச்சியாக ஆடுகின்றது... நஞ்சினை விழுங்குகின்றது
3.அது உடலில் உள்ள உறுப்புகள் அந்த நஞ்சை அடக்குகின்றது.

விஷத்தைக் காலடியில் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக "உருவம் அமைத்து அருவ நிலையைக் காட்டி..." அதனுடைய இயக்கத் தொடர் பரிணாம வளர்ச்சியில் எப்படி எல்லாம் நாம் வளர்ந்து வந்தோம்...?

1.பல கோடிச் சரீரங்களில் ஒன்றன் பின் ஒன்றாகத் தீமைகளை நீக்கி நீக்கி
2.இன்று மனிதனாக வளரக் காரணமானது என்பதைக் காட்டுவதற்கு
3.மயிலின் காலடியில் பாம்பைப் போட்டு உணர்த்துகின்றார்கள்... இந்த உண்மையைக் கண்டுணர்ந்த ஞானிகள்.

நாம் இந்த உண்மைகளை உணர்ந்தறிவதற்காக வேண்டி எல்லாவற்றுக்கும் காரணப் பெயர்களை வைத்து
1.எது எதனுடன் இணைக்கப்படும் பொழுது
2.எதன் வழியில் நாம் எப்படி நல்லதாக உருவாக்க வேண்டும் என்று காட்டினார்கள்.

விஞ்ஞானி ஒரு பொருளைக் கண்டுபிடித்த பின் அவன் அதற்கென்று ஒரு காரணப் பெயரை வைத்து... அதில் இன்னென்ன பொருள்கள் கலக்கப்படும் பொழுது இன்னது இன்னது தான் செய்யும் என்று அனுபவ ரீதியிலே தெரிந்து அதைச் செயல்படுத்துகின்றான்.

இது இதற்குக் காரணம் ஆகும்.... இது மற்றதை இப்படி உருவாக்கும் என்று பல வகையிலும் அதைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருகின்றான்

அதே போல் பல பல திரவ(க)ங்களை விஞ்ஞான அறிவில் புதிதாக உருவாக்குகின்றார்கள். சிறுநீரில் அதை இணைத்துக் காய்ச்சப்படும் பொழுது சிறுநீரில் உள்ள சர்க்கரைச் சத்தின் அளவைக் காட்டுகின்றது. அதே போன்று இரத்தத்தில் உள்ள சர்க்கரைச் சத்தையும் காட்டுகின்றது.

விஞ்ஞான அறிவு கொண்டு இதையெல்லாம் காணுகின்றார்கள் அது போன்றுதான்
1.இயற்கையின் இயக்கத்தின் உண்மையின் உணர்வைச் சாதாரண மக்கள் அறிந்து உணர்வதற்காக
2.ஒவ்வொன்றுக்கும் ஞானிகள் காரணப் பெயரை வைத்து நாம் தெளிந்து தெரிந்து தெளிவான நிலையில் வாழும்படி வழி காட்டுகின்றார்கள்.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

1.நாம் எத்தனையோ கோடிச் சரீரங்களில் தன்னைக் காத்திடும் உணர்வுகளைச் சேர்த்து சேர்த்து

2.நூறு குணங்கள் ஒன்றாகித் தீமைகளை நீக்கிடும் உடலாக்கியது.

நாம் உணவாக உட்கொள்ளும் உணவுக்குள் மறைந்திருக்கும் நஞ்சினை மலமாக வெளியேற்றி... நல்ல மகிழ்ச்சி பெறும் உணர்வின் தன்மையை அறியும் அறிந்திடும் அறிவாக வைத்தது. இது ஆண்பால்... முருகா...!

பல கோடித் தீமைகளை நீக்கிடும் சக்தியாக... தீமைகளை நீக்கிடும் வலிமை பெற்றது இந்த மனித உடல். தீமைகளை நீக்கிடும் அந்த உணர்ச்சிகள் அது பெண்பால்... வள்ளி...! (வலிமைமிக்க சக்தி – வல்லி)

மனித உடலில் இருந்து நஞ்சை மலமாக்கும் தன்மை வரப்படும் பொழுது அது ஆண்பால். அதிலிருந்து அந்த உணர்வின் அறிவாக இயக்கப்படும் பொழுது பெண்பாலாக. ஆகின்றது.

அதற்குக் காரணப் பெயர் என்ன வைக்கின்றார்கள்...? "வள்ளி" அந்த வலிமைமிக்க சக்தியைப் பெண்பாலாக அப்படி வைக்கின்றனர்... வள்ளி.
1.அந்த வலிமைமிக்க சக்தி கொண்டு தான்
2.(அடுத்து) வலிமைமிக்க சக்திகளை நாம் பெற முடியும்.

அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷியாகி... தீமைகளை நீக்கிடும் அந்த வலிமைமிக்க சக்தி பெற்றுத் துருவ நட்சத்திரமாக ஆனான் என்பதனை மனிதனின் அறிவில் தெரிந்து கொண்ட ஞானிகள்...
1.இதை நமக்கு அறிவிக்க அந்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார்கள்.
2.அதை நாம் பதிவாக்கி விட்டால் அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெற முடிகின்றது.

ஞானிகள் தன்னுள் கண்டுணர்ந்த உணர்வின் தன்மையை முருகனாக வடிவமைத்து... அருவத்தின் சக்திகளை நாம் பெறுவதற்கு வழி காட்டினார்கள். ஏனென்றால் உயிரணு தோன்றி பல தீமைகளையும் கொடுமைகளையும் வென்று விஷத்தின் ஆற்றலை மாற்றி ஒளியின் சரீரமாகப் பெற்றது துருவ நட்சத்திரம்.

பாம்பினங்களோ தன் உடலில் உருவான விஷத்தை இன்னொரு உடலிலே ஊடுருவச் செய்து... அந்த விஷத்தின் இயக்கமாக அந்த உடலில் உள்ள விஷத்துடன் இதைப் பாய்ச்சி அதனுடன் ஐக்கியமாக்கி... அதை விழுங்குகிறது.

விழுங்கிய பின் ஜீரணித்து...
1.இந்த உணர்வின் தன்மை தனக்குள் எடுத்து மீண்டும் விஷத்தின் சேமிப்பாகி
2.அதன் உணர்வின் தன்மை வலிமையாக்கப்படும் போது... அது உறையும் தருணம் வந்தால்
3.சேமிக்கப்பட்ட அந்த விஷமே "நாகரத்தினமாக" மாறுகின்றது...!

பாம்பு பல உயிரினங்களின் விஷத்தினை அடக்கி... அதை எப்படி நாகரத்தினமாக (ஒளியாக) மாற்றுகின்றதோ... இதைப் போன்று பல கோடிச் சரீரங்களில் தீமைகளை நீக்கி நீக்கி நாம் எடுத்துப் பழகிக் கொண்ட உணர்வுகள்... நஞ்சினை மலமாக மாற்றிடும் உடல் அமைப்பாக உருவாகியது.

ஆக...
1.வலிமைமிக்க சக்தி கொண்டு நஞ்சினை நீக்கிடும் அந்தச் சக்தி பெற்றது மனிதச் சரீரம்.
2.அதனால்தான் அந்த வலிமை மிக்க சக்தியை வள்ளி என்று காட்டினார்கள் ஞானிகள்.

இதைப் போல் அகஸ்தியன் தன் வாழ்நாளில் நஞ்சினை வென்று உணர்வின் தன்மை ஒளியாக மாற்றினான். அகஸ்தியன் ஒளியாக ஆன ஆற்றலை வலிமைமிக்க சக்தி கொண்டு தான் நாம் அதைப் பெற முடியும்.
1.அதைப் பெற வேண்டும் என்று இப்போது நாம் ஏக்கம் கொண்டால்
2.நமக்குள் அந்தச் சக்திகள் அதிகமாகச் சேருகின்றது

அது தான் வசிஷ்டர்... கவர்ந்து கொண்ட சக்தி.

எந்த்த துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பெற வேண்டும் என்று நாம் இச்சைப்பட்டுக் கவர்கின்றோமோ... அது நமக்குள் இணைந்து அருந்ததியாக
1.அவன் எப்படி நஞ்சினை ஒளியாக மாற்றினானோ
2.அதே வழியில் நாமும் அந்த அகஸ்தியனைப் போன்று ஒளியின் தன்மை பெற முடியும்.



வள்ளி... வலிமைமிக்க சக்தியை வள்ளி என்று காட்டுகின்றனர். அதை வைத்துத் தான் அடுத்து வலிமைமிக்க சக்திகளை நாம் பெற முடியும். அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷியாகி... தீமைகளை நீக்கிடும் வலிமை மிக்க சக்தி பெற்றுத் துருவ நட்சத்திரமாக ஆனான் என்பதை அறிந்த ஞானிகள் இதை நமக்கு அப்படி வெளிப்படுத்துகின்றார்கள். அதை நாம் பதிவாக்கினால் துருவ நட்சத்திரத்தின் சக்தி பெற முடிகின்றது.



நஞ்சாக எது வந்தாலும்... அது எனக்குள் ஒளியின் அறிவாக மாற வேண்டும் ஈஸ்வரா

“ஆதிசக்தியின் அருள் பெற்ற ஈஸ்வரா குருதேவா...” என்றால் ஆதியில் விஷத்தின் தன்மை வலிமையாகும் பொழுது... தாக்குதலில் வெப்பமும் காந்தமும் உருவாகி ஒரு இயக்கச் சக்தியாக மாறியது.

நமது உயிரும் அவ்வழியிலே சக்தியாக உருவானாலும்
1.நமது உயிரின் இயக்கம் எதிர் நிலையாகி
2.ஆதி சக்தியின் அருள் பெற்று அனைத்தையும் உருவாக்கும் சக்தி பெற்றது.

அதனால் தான் ஆதி சக்தியின் அருள் பெற்ற ஈஸ்வரா கருணைசொரூபா என்னை ஆட்கொண்டருள்வாய் ஈஸ்வரா...!

எல்லாவற்றையும் உணர்வின் அறிவாகத் தெரிந்து நடக்கும் அறிவின் உணர்வாக எனக்குள் நீ எப்படி அறிவிக்கின்றாயோ அதைப்போல இருளை நீக்கி உணர்வின் தன்மை ஒளியாக்கும் அந்த அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும்.

1.நஞ்சன்ற நிலைகள் வரப்படும் பொழுது அதன் தாக்குதலால் ஒளியான பின்
2.எந்த நஞ்சு என்றாலும் உணர்வின் தன்மை எனக்குள் ஒளியின் அறிவாக மாறுதல் வேண்டும்.

விஷத்தின் தன்மை தாக்கினாலும் சூரியன் தனது பாதரசத்தால் மோதி வெப்பத்தின் தன்மை கொண்டு அந்த விஷத்தை எப்படிப் பிரிக்கின்றதோ இதைப் போல உணர்வின் தன்மை கொண்டு "இருளை நீக்கி உணர்வின் அறிவாக நான் தெளிவாக வர வேண்டும்..." என்பதுதான் ஆதி சக்தியின் அருள் பெற்ற ஈஸ்வரா கருணைசொரூபா.

இப்படி ஏங்கி அந்த அருள் உணர்வை நுகர்ந்தால் அந்த உணர்வின் அறிவாக நம் உயிர் நம்மை இயக்கும்.

ஆனால் வேதனை என்ற உணர்வினை நுகர்ந்தால் வேதனை உணர்வின் அறிவாக வேதனைப்படுபவனாக நம்மை மாற்றிவிடும்... வேதனைப்படும் தன்மையைத் தான் உடலில் உருவாக்கும்.

வேதனையான அணுக்கள் உடலில் உருவான பின் இந்த உடலைச் சிறுக்கச் செய்யும். உடல் சிறுத்த பின் உறுப்புகள் சிறுக்கின்றது. உறுப்புகள் சிறுத்த உணர்வு கொண்டு மற்றதை வேதனைப்படுத்தி உணவாக உட்கொள்ளும் அத்தகைய உடலாக உயிர் உருவாக்கி விடும்.

ஆதி சக்தியின் அருள் பெற்ற ஈஸ்வரா கருணைசொரூபா என்னை ஆட்கொண்டருள்வாய் ஈஸ்வரா.
1.நீ ஒளியாக இருக்கின்றாய்... அதைப்போல என் உணர்வுகள் அனைத்தும்

ஒளியாக ஒளியின் மயமாக
2.இருளை விலக்கிச் செல்லும் சக்தி நான் பெற வேண்டும் என்பது தான் இந்தப் பாடலின் உள்நோக்கம்.

என் இசையில் நீ இசைப்பாய்... என் நினைவில் நீ வருவாய்...!

நான் எதை எண்ணுகின்றேனோ அந்த உணர்வின் செயலாக என்னை இயக்குகின்றாய். எப்போதுமே நீ அறிவாக இயக்கித் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் உயிராக நீ இருப்பதனால்
1.உன் நினைவு எப்படி இருக்கின்றதோ எதனின் உணர்வை நீ அறிவிக்கின்றாயோ
2.அதைப் போல தெளிந்த மனம் பெறும் "அந்த உணர்வின் இசை" எனக்குள் வரவேண்டும்.

என் சொல்லைப் பிறர் கேட்கப்படும் பொழுது இருளை நீக்கி ஒளியின் தன்மையாகப் பெறுதல் வேண்டும். எதன் உணர்வை நான் நுகர்கின்றேனோ இருளை நீக்கிடும் அருளைப் பெறும் அந்தச் சக்தி பெற வேண்டும்.

அது தான் என் இசையில் நீ இசைப்பாய் என் நினைவில் நீ வருவாய்.

நீ எப்படி ஒளியாக இருந்து உணர்வின் தன்மை அறிவாக அறியும் ஆற்றலை எனக்குள் தெளிவாக்குகின்றாய அதன் வழி...
1.என் உணர்வு
2.என் நினைவுகள் அனைத்தும்
3.என் உடலின் அணுக்களும் அவ்வழியே
4.உன்னைப் போன்றே ஒளியாக மாற வேண்டும் என்பதுதான்
5.என் இசையில் நீ இசைப்பாய் என் நினைவில் நீ வருவாய் உன் அருளைப் பெற்றிடவே என் நினைவைத் தந்து விட்டேன் என்பதன் பொருள்.

எப்படி உலகையெல்லாம் அறியும் தன்மையாக நீ அறிவிக்கின்றாயோ இதைப் போல
1.உலக இருளை நீக்கிடும் ஒளியின் உணர்வாகப் பெறப்படும் அனைத்தையும் "உன்னிடமே விட்டு விடுகின்றேன்..."
2.அந்த அருளால் நீ என்னை இயக்குவாய்... இருளை அகற்றிடும் அரும்பெரும் சக்தியாக மாற்றுவாய்.

அந்த நிலை தான் எனக்கு வேண்டும்.

நான் இல்லை நீ இல்லா இவ்வுலகில் எல்லா நினைவையும் பெற்றிடவே எனக்கருள் செய்வாய் ஈஸ்வரா. நான் இல்லை நீ இல்லா இவ்வுலகில் என்றால் உயிர் இந்த உடலில் இல்லை என்றால் நான் ஏது...? உயிர் இல்லாத உலகில் நாம் வாழவே முடியாது... உடல் நிலையாக இருப்பதில்லை.

எல்லா நினைவையும் பெற்றிடவே எனக்கருள் செய்வாய் ஈஸ்வரா என்றால் இந்த உயிர் எத்தனை வகை உடல்களைப் பெற்றதோ உடலைக் காக்கும் சக்தியினைப் பெற்றுத் தான் வளர்ந்து வந்தது.

அந்தந்த உடலைக் காக்க வேண்டும் என்று உணர்வின் தன்மை கொண்டு மனிதனான நிலையில் இந்த உடலைக் காக்கும் சக்தி பெற்றுள்ளது.

தீமைகளை நீக்கிடும் உணர்வின் தன்மை பெற்ற பின் தீமையை நீக்கும் அந்த அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும். ஒவ்வொரு உடலிலும் தீமையிலிருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வினை நுகர்ந்தோம்.

1.அந்தத் தீமையிலிருந்து விடுபடும் மனித உடலாக அமைத்தாய்.
2.இதைப்போல எல்லா உடல்களில் இருந்தும் தீமைகளை நீக்கிய அந்த அரும் பெரும் சக்தி எனக்கு வேண்டும்.

காரணம்... இந்த வாழ்க்கையில் எல்லாவிதமான உணர்வுகளும் வருகின்றது அந்தத் தீமைகள் நம்மைத் தாக்கப்படும் பொழுது அதிலிருந்து விடுபடும் இந்த அருள் சக்தி பெற வேண்டும்.

ஒவ்வொரு உடலிலும் தீமைகளிலிருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வைச் சேர்த்துச் சேர்த்து உணர்வுக்கொப்ப பரிணாம வளர்ச்சி எப்படி அடைந்ததோ... தீமையிலிருந்து விடுபடும் உணர்வின் தன்மை முழுமை அடைந்த நான் "கடந்த கால நினைவுகள் கொண்டு... தீமைகள் வராது தடுக்கும் அந்தப் பேரருளை நாங்கள் பெற வேண்டும் ஈஸ்வரா..."

பாட்டை மட்டும் பாடிவிட்டுப் பல நினைவில் நான் இல்லாமல் பரிபக்குவ நிலையை நாங்கள் பெற அருள்வாய் ஈஸ்வரா.

நம் குழந்தையைச் செல்லமாக வளர்ப்போம். செல்லமாக வளர்க்கும் போது அந்த உணர்வுக்குத் தக்க அவன் தவறு செய்வான். அப்பொழுது அவனைப் பரிபக்குவமான நிலைகள் கொண்டு திருந்தி வாழச் செய்ய வேண்டும்.

ஆனால் பக்குவம் தவறினால்... அவனுடைய தீமை நமக்குள் விளைந்து அவனைத் “தொலைந்து போடா...” என்று தான் சொல்ல வரும். அவனைக் காப்பதற்கு மாறாகச் சாபமிட்டு அவன் நல்ல குணங்களைச் செயலிழக்கச் செய்யும் தன்மையும்... அதனால் வெறுக்கும் தன்மை தான் வருகின்றது.

என் பையனுக்கு அப்படிச் செய்தேன்... இப்படிச் செய்தேன்... ஆனால் இப்படி இருக்கின்றானே...! என்போம். கோவிலுக்குச் சென்று உனக்கு இத்தனையும் செய்தேனே... உன்னை நான் தினமும் வணங்கிக் கொண்டு வருகின்றேனே... என் குழந்தை தவறு செய்கின்றானே...! என்று தான் எண்ணுகின்றோம்.

ஆனால் அந்தக் கோவிலில் காட்டப்பட்ட நல்ல குணங்களை... அந்தத் தெய்வீக பண்புகளை என் குழந்தை பெற வேண்டும் என்ற இந்த உணர்வு மட்டும் நமக்கு வருவதில்லை.

1.சாமியிடம் முறையிட்டுக் குறைகளைச் சொல்லி நீ செய் என்று தான் சொல்கின்றோமே தவிர
2.அவன் அறியாமல் செய்யும் தீமை நமக்குள் வராதபடி அவனும் திருந்தி வாழ வேண்டும் என்ற நிலை வருவதில்லை.

ஒருவர் நம்மிடம் பணம் கேட்டிருப்பார்... நாம் கடன் கொடுத்து உதவி செய்திருப்போம். ஆனால் அவன் பணத்தைத் திரும்பத் தரவில்லை என்றால் எல்லா வகையிலும் அவன் தீமை செய்கின்றான் என்று தான் சொல்ல முடிகிறது.

சரி... ஏதோ சந்தர்ப்பத்தால் அவனால் கொடுக்க முடியவில்லை...! அவனுக்கு அந்த வலுவான நிலையில் வருமானம் வர வேண்டும். தெளிந்த மனம் பெற்று தொழிலில் முன்னேற்றம் அடையும் சக்தி பெற வேண்டும் என்று எண்ணினால் இந்த உணர்வு அவனை ஊக்குவிக்கும்.

அவன் சோர்வு வேதனையாக நமக்குள் வராதபடி அப்போது தடுக்கப்படுகிறது. அவன் எதிர்காலம் சிந்தித்துச் செயல்படும் சக்தியும் நல்ல வளர்ச்சி பெறும் தன்மை வந்தால்
1.நமக்குள்ளும் நல்லது நடக்கின்றது.
2.இந்த உணர்வுகள் அவரைச் சிந்திக்கவும் செய்கின்றது.

நல்ல நிலையில் வாழ வேண்டும்... அந்த அன்பு பெருக வேண்டும்... தொழில் முன்னேற்றம் அடைவீர்கள் என்று சொல்லிப் பாருங்கள். இந்த ஊக்கத்தால் பணம் திரும்ப வரும்.

ஆனால் சகஜ வாழ்க்கையில் கடன்காரனைப் பார்த்த பின் வாங்கிய பணத்தை இவன் கொடுப்பானா...? என்று எண்ணும் பொழுது அவன் நம்மைப் பார்த்த பின் உடனே பொய் பேசத் தொடங்குவான்.

பணத்தைத் திரும்பக் கொடுக்கலாம் என்று தான் வந்தேன்... ஆனால் அதற்குள் பையன் பணத்தை வாங்கிச் சென்று விட்டான். எனக்கு வர வேண்டிய பணத்தைத் தருகிறேன் என்று சொன்னார்கள்... ஆனால் அவர்கள் தரவில்லை என்று தான் பொய் சொல்வார்கள்.

காரணம்... இந்தப் பக்குவம் தவறும் பொழுது நமது வாழ்க்கையும் யாருக்கு நாம் பணத்தைக் கொடுத்தோமோ அவர்கள் வளர்ச்சியும் நம்மால் தடைப்படுத்தப்படுகின்றது.

அதனால் தான் பாட்டை மட்டும் பாடிவிட்டுப் பல நினைவில் நான் இல்லாமல்... என்று சொல்கிறோம்.

நான் எல்லோருக்கும் நன்மை செய்தேன். பார்... ஆண்டவன் என்னைச் சோதிக்கின்றான் என்று நிலையைத்தான் நாம் சொல்ல முடிகின்றது.
1.ஆக சோதிப்பது யார்...?
2.நமது எண்ணம்தான்.

எதன் உணர்வின் தன்மை நமக்குள் இயக்குகின்றதோ அந்த உணர்வின் தன்மையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இந்த வாழ்க்கையில் எந்த நிலையைச் செய்தாலும் பக்குவமாக நடந்து கொள்ளும் அந்த அருள் சக்தி பெற வேண்டும்.

ஒரு கம்ப்யூட்டரில் தப்பு என்ற நிலைகள் வந்தால் உடனே அதைத் திருத்தும் நிலை அங்கே வருகின்றது.

இதைப் போன்று தான் நம் உயிரிலே படும் பொழுது எலக்ட்ரிக் எலக்ட்ரானிக். உயிரிலே பட்ட பின் அந்த உணர்வு தவறு என்ற நிலைகளை உணர்த்துகின்றது.
1.ஆனால் அந்தத் தவறிலிருந்து திருந்தி நல்ல வழி வர வேண்டும் என்ற

உயர்ந்த உணர்வை எடுத்தால்
2.நமக்குள்ளும் நன்மையாகின்றது அவர்களையும் நல்லதாக்கச் செய்கிறது.

இதைத்தான் நாம் செய்ய வேண்டும்.

என் நினைவை எங்கெங்கோ அலையவிட்டு என் ஆசை என்னுள்ளே வளர்ந்திடாமல் என்னுள்ளே என்றும் நீ இருந்துவிடு ஈஸ்வரா.

இந்த உடல் ஆசை எனக்குள் வளராதபடி என்னுள்ளே இருந்து விடு ஈஸ்வரா.
1.நீ ஒளியாக இருக்கிறாய் இந்த உணர்வின் தன்மை என் உணர்வெல்லாம் ஒளியாக மாற்ற வேண்டும்.
2.நீ ஒளியாக இருப்பது போன்று என் உணர்வெல்லாம் ஒளியாக இருத்தல் வேண்டும்.

உடல் ஆசை வராதபடி உயிர் ஆசை வேண்டும் என்று... உயிர் எப்படி ஒளியாக இருக்கின்றதோ அந்த ஒளி என்ற தன்மை வரப்படும் பொழுது இருள் அண்டிடாது ஒளியின் உணர்வாகப் பெருக முடியும்.

ஆக மொத்தம் உயிர் நாம் எண்ணியதைத்தான் உருவாக்குகின்றது. நாம் இப்பொழுது எடுத்துக் கொண்ட அந்த உயர்ந்த எண்ணங்கள் அனைத்தையும் கருவாக்கி அதுவாக நம்மை உருவாக்குகின்றது.

“உயிரான ஈசனிடம் வேண்டியபடி...” உணர்வின் தன்மை ஒளியாக மாற்றி ஒளியின் தன்மை பெற்ற அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷியாகி துருவ நட்சத்திரமான உணர்வை அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை நாம் பெற்றோம் என்றால்... அகஸ்தியன் அகண்ட அண்டத்தின் உணர்வைக் கண்டறிந்து இருண்ட உலகை நீக்கி ஒளி என்ற அறிவாக அந்தத் தெளிந்த நிலைகள் அவன் மனைவிக்கு ஊட்டியதை...
1.இருவருமே அதைக் கருவாக்கி ஒன்றென இணைந்து அந்த ஒளியான உணர்வுகளை
2.துருவத்தில் இருந்து வரும் ஒளியின் கதிர்களை நாம் அனைவரும் பெறுவோம்.வ்



நாம் எடுக்க வேண்டிய பெரு மூச்சு (பெரும் மூச்சு)

விண்ணிலிருக்கும் அருள் ஞானிகளைப் பற்றி உங்களிடம் அடிக்கடி உபதேசிக்கின்றோம். அதைப் பெற வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டி மேல் நோக்கிச் சுவாசியுங்கள்.

1.எதையெல்லாம் உயர்வாக எண்ணுகின்றீர்களோ... அப்படி எண்ணும் போது...

2.உங்களுக்கு அது கிடைக்க வேண்டும் என்ற (பெரும் ஏக்கமான) பெரு மூச்சாகக் கிடைக்கும்.

ஆனால் எம்மைச் சந்திக்க வரும் பொழுது என் காலிலே விழுந்து பாத நமஸ்காரம் செய்யும் போது... என்ன...? இப்படிச் செய்கிறார்களே...! என்று பார்க்கும் பொழுது
1.மேலிருந்து உயர்ந்த சக்தியை எடுத்து உங்களுக்குக் கொடுப்பதற்குப் பதில் நான் கீழ் நோக்கியே பார்க்க வேண்டி இருக்கின்றது.
2.அதைச் சாதாரண மனிதனின் உணர்வைத் தான் நானும் அதைச் சுவாசிக்க நேர்கின்றது.

ஆனால் விண்ணின் ஆற்றல் எல்லை கடந்து பரவி உள்ளது.

ஆகவே அதை நோக்கி எண்ணி ஏங்கி எடுத்து அந்த சக்தி உங்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கும்... உங்களை உயர்ந்த நிலைகள் கொண்டு நான் பார்ப்பதற்கும் அது சரியாக இருக்கும்.

பாத பூஜை... பாத நமஸ்காரம்... என்று சாதாரண வாழ்க்கையில் நாம் அடிபணிந்தே பழகி விட்டோம். நமக்குள் வரும் ஆசை... நம்மை அறியாமல் இருள் சூழச் செய்யும் "இந்த வினையின் தத்துவத்தை" நாம் அடிபணியச் செய்ய வேண்டும்.

அதாவது... மெய் ஒளியைப் பெறும் உயர்வான எண்ணங்களை நாம் எடுத்து எடுத்து தீமைகளை அடிபணியச் செய்யப் பழக வேண்டும்.

நான் யார் வீட்டுக்காவது சென்றால்... "சாமி உங்களுக்குக் கும்ப அபிஷேகம் செய்கிறோம்..." என்று குடத்தைத் தூக்கிக் கொண்டு வருகின்றார்கள். அந்த உயர்வு தேவையில்லை.

நமக்குள் உயர்ந்த உணர்வுகளை எடுக்க வேண்டும் அதுதான் நமக்குத் தேவை. நாம் உயர்ந்த உணர்வின் தன்மையைச் சுவாசிக்கின்றோமோ அந்த உயர்ந்த நிலைகளைப் பெறும் ஆர்வத்தின் உணர்ச்சியை நாம் தூண்ட வேண்டும்.

1.பிறரைப் போற்றுவதற்கோ... அந்தப் போற்றுதலால் தன்னை மதிக்க வேண்டும் என்ற நிலைகள் நமக்கு அறவே கூடாது.
2.விண்ணிலிருக்கும் அந்த மகரிஷிகளின் அருள் வட்டத்தில் நாம் இணைந்து

3.பேரானந்தப் பெருவாழ்வாக வாழும் அந்த மேல் நோக்கிய சுவாசமே...
4.நமக்குள் உயர்ந்த மூச்சாக... பெரும் மூச்சாக அமைய வேண்டும்.



தொழில் ரகசியம்

தொழிலைப் பற்றிய ரகசியங்களை உங்களுக்கு வேண்டிய நண்பர்களுக்குச் சொல்வதற்கு முன்பு "அவர் எப்படி உங்களுடன் பழகுகின்றார்...?" என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

தொழிலில் என்றைக்குமே கை மூடியே வைக்க வேண்டும். வாழ்க்கையை ஓட்டுவதற்கு ஓரளவுக்கு வருவாய் வந்து கொண்டிருக்கின்றது என்று இதை மட்டும் சொல்லலாம்.

நடப்பது அனைத்தையும்...
1.நான் இந்தப் பக்கம் போய்த் தொழில் செய்தேன்... பின் இந்தப் பக்கம் சென்றேன்...
2.எனக்கு அதில் வருமானம் இப்படி எல்லாம் வந்தது என்று சொல்லக் கூடாது.

ஆனால் உங்கள் கூட்டாளியாக இருப்பவரிடம் போகும் பாதைகளை இப்படி இருக்கின்றது... இதை எப்படி வழி நடத்தலாம்...? என்று இரண்டு பேரும் சிந்தனை செய்து செயல்படுத்துவது நல்லது.

இருவரும் கூட்டாளியாக இருந்து செயல்படுத்தும் போது ஒரு சிறு விஷயத்தை மறைத்து விட்டால் அவருக்கு உடனே நம்மிடம் மறைக்கின்றார் என்ற சந்தேகம் வந்துவிடும். ஆகவே அவரிடம் விஷயங்களைச் சொல்லக்கூடிய கடமைகள் உண்டு.

அதே சமயத்தில் மனைவியிடம் இந்த உண்மைகளை வெளிப்படுத்தி அவர்களுக்கு சந்தோஷத்தை ஊட்டலாம்... தொழில் உயர வேண்டும் என்ற உணர்வை ஊட்டலாம்.

ஆனால் மிக முக்கிய நண்பராக இருந்தாலும்
1.ஏதோ உங்கள் ஆசியினால் தொழில் நன்றாக இருக்கின்றது...
2.உங்கள் ஆசி மீண்டும் தேவைப்படுகிறது என்று அவர்களை உயர்த்தி நாம் இப்படிக் கொண்டு வர வேண்டும்.

ஆனால் பப்ளிக்காக நாம் இதைச் சொல்ல தொடங்கினால் ஒருத்தருடைய உணர்வு விஷத் தன்மையாக இருக்கும். நாம் சொல்லும் பொழுதே அப்படியா...! என்று அவர்கள் கண்ணின் பார்வையும்... உற்று நோக்குவதும் இந்த நினைவாற்றலை அதற்குள்ளேயே நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஆகவே தொழிலின் ரகசியங்களை நாம் சொல்லவே கூடாது.

உலகிலேயே ஒரு புதிய தொழிலில் ஒரு பொருளைக் கண்டுபிடிக்கிறார்கள் என்றால் அதில் என்னென்ன சரக்கைப் போட்டிருக்கின்றோம்...? என்று

விளம்பரப்படுத்துவார்கள். ஆனால் முக்கியமான பொருளைக் காட்டவே மாட்டார்கள்.

1.அரசாங்கம் கட்டாயப்படுத்தினாலும் அதில் ஒரு முக்கியமான பொருளையும்
2.அதனுடைய கலவை விகிதம் எவ்வளவு என்று சொல்ல மாட்டார்கள்.
3.மற்றதையெல்லாம் இன்னென்ன அளவு என்று எழுதியிருப்பார்கள்.

ஆனால் முக்கிய பொருளை மாற்றி விடுவார்கள். அதிலே போட்டிருப்பது போன்று மற்றவர்கள் கலவை செய்து பொருளை உற்பத்தி செய்தால் தரம் சரியாக வராது... வித்தியாசமாகிவிடும்.

அரசின் சட்டப்படி சொன்னாலும் அதற்காக வேண்டி இவர்கள் அளவுகோல்களை மாற்றி விடுவார்கள். அதிலே இல்லாத சரக்கையும் சேர்த்து விடுவார்கள். மற்றவர்கள் செய்து பார்த்தால் கடைசியில் வராது. அவர்கள் கொண்டு வரும் தரத்தை இங்கே கொண்டுவர முடியாது.

தொழில் ரீதியிலே நாம் மறைத்துச் சொல்ல வேண்டி இருக்கின்றது.

ஆன்மீக ரீதியிலே நீங்கள் வளரக்கூடிய உண்மை நிலைகளைச் சொல்லலாம். அந்த ஆன்மீகத்திலும் கூட
1.எனக்கு இவ்வளவு பெரிய காட்சிகள் கிடைத்தது... சக்திகள் கிடைத்தது என்று சொன்னால்
2.பார்...! அவருக்குக் கிடைக்கின்றது... எனக்குக் கிடைக்கவில்லை...! என்று இதிலும் பொறாமை உணர்வு வரும்.

உங்களுக்கு எப்படி இவ்வளவு கிடைக்கிறது...?
1.சாமி உங்களுக்கு ஸ்பெஷலா கொடுக்கின்றாரா...? என்று ஒருவர் கிண்டலாகவும் கேட்பார்.
2.உனக்கு மட்டும் தெரிகின்றது... எனக்கு ஏன் தெரியவில்லை...? என்று பொதுத் தன்மையில் வருபவர்கள் சிலர் இப்படியும் வந்து விடுவார்கள்

ஆகவே எதைச் சொல்ல வேண்டும்...? எதைப் பேச வேண்டும்...? என்று உணர்வின் தன்மை முழுமை அடைய நம் எண்ணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

நாம் தெரிந்து கொண்ட உணர்வுகளைப் பக்குவப்படுத்த நாம் இப்படி இருக்க வேண்டும்... இப்படிச் செய்ய வேண்டும் என்று

1.உங்களுக்குள் தெரிந்த கருத்தை... நீங்கள் சொல்வதாக இருக்க வேண்டுமே தவிர
2.இந்தக் கருத்துக்கள் எனக்குத் தெரிந்தது என்று சொல்லக்கூடாது.

இதனால் பெரும் பிழைகளும் சந்தேகமும் அவமதிப்பும் சில நிலைகள் எல்லாம் ஏற்படும். இன்றைக்கு இருக்கும் சமுதாயத்திற்கு மத்தியில் இப்படி எல்லாம் நாம் வழி நடத்திச் செல்ல வேண்டி இருக்கின்றது.

பார்... அவருக்கு மட்டும் எல்லாம் தெரிகிறது...! அவர் என்னமோ உளறுகின்றார்... எல்லாம் தெரிந்த மாதிரிப் பேசுகிறார்...! என்று மற்றவரிடம் சொல்வார்கள்.

இதை நீங்கள் கேட்டால் என்ன செய்வீர்கள்...? ஆகவே உண்மை நிலைகள் தெரிந்தால்
1.அவர்களைப் பக்குவப்படுத்தக்கூடிய ஒரு ஞானத்தின் வழிகளிலே நீங்கள் சொன்னால்...
2.நீங்கள் சொல்வதாகத் தெரிந்து கொள்வார்கள்.

எனக்குத் தெரிந்தது இப்படி நீங்கள் நடந்து பாருங்கள்...! என்று சொன்னால் பிழையாகும். ஆன்மீகத்திலும் இப்படி ஒரு நிலை. மனிதனின் உணர்வுகள் எலக்ட்ரிக் எலக்ட்ரானிக் உணர்வின் தன்மை அழுத்தமான பின் இன்னொரு மனிதன் இதைத் தாங்கும் நிலை இல்லை.

அவருக்கு அதைத் தாங்க முடியவில்லை என்றால் எதிர்மறை பொறிகளாகிவிடும்... அவர் உடலுக்குள் அந்த எதிர்ப்புகள் ஏற்படும். ஆனால் அவர்களுடைய குற்றம் அல்ல.

யாரும் வேண்டுமென்று அவ்வாறு சொல்வதில்லை.

ஆனால் இந்த உணர்வின் அழுத்தங்களாகும் பொழுது உணர்ச்சிகள் மாறுபட்டுவிடும். அழுத்தமாகும் போது அவர் உடலுக்குள் எதிர்ப்பு நிலைகள் உருவாகும் பொழுது வித்தியாசமாக வந்துவிடும். இது எல்லாம் உணர்வின் இயக்கம் தான்.

ஆகவே நீங்கள் பக்குவப்படுத்தி நடந்து கொள்ளுங்கள்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நாம் பார்த்து கேட்டு நுகர்ந்த தீமையின் உணர்வுகள் நம்மை இயக்காதபடி தடுக்க வேண்டும் என்றால் அடுத்த கணமே அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை துரிதமாக எடுத்து உடலுக்குள் செலுத்தினால் தீமைகள் புகாது தடுக்க உதவும்.

இதை எல்லாம் அதிகாலையில் நாம் அதிகமாகப் பெருக்கி வர வேண்டும்
1.அருள் உணர்வுகளை நமக்குள் சேர்க்கச் சேர்க்கச் சேர்க்க துருவ நட்சத்திரத்தின் பற்று நமக்குள் அதிகரிக்கிறது.
2.இந்தப் புவியின் பற்றை நாம் தகர்த்துக் கொண்டே வருகின்றோம்.
3.இந்த உடலுக்குப் பின் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்திற்கு உயிர் நம்மை அழைத்துச் செல்கின்றது.

இந்த உயிர் உடலில் சேர்த்த தீமையின் உணர்வுகளை... துருவ நட்சத்திரத்தின் அருகில் இந்தத் தீமைகள் செல்லப்படும் பொழுது
1.உடலில் பெற்ற தீமையின் உணர்வுகளைக் கருக்கிவிட்டு இருளை ஒளியாக மாற்றும் திறன் பெறுகின்றது
2.எத்தகைய நஞ்சாக இருந்தாலும் அது மாற்றி விடுகின்றது.

பாம்பு விஷத்தைப் பாய்ச்சி மற்ற உயிரினங்களை உணவாக உட்கொண்டாலும்... அந்த விஷம் அதற்குள் மீண்டும் சேமிக்கப்பட்டு நாகரத்தினமாக மாறுகின்றது.

அது போல் நமது வாழ்நாளில் அருள் மகரிஷிகளின் உணர்வுகளைச் சேர்க்கச் சேர்க்க... நம் உணர்வுகள் அனைத்தும் உயிருடன் ஒன்றி ஒளியின் சரீரமாக மாறுகின்றது.

மனிதர்களாக இருக்கக்கூடிய நாம் தான் இதைச் செயல்படுத்த முடியும்.

மிருகங்கள் தான் வாழ தன்னைக் காட்டிலும் வலுவான உணர்வுகளைச் சுவாசிக்கப்படும் பொழுது அந்த உணர்வை வளர்த்து... அந்த உடலுக்குப் பின் மாற்று உடலாகப் பரிணாம வளர்ச்சிக்கு வருகின்றது.

மனிதரான நாம் அன்பும் பரிவும் கொண்டிருப்பினும் பிறருடைய நோய்களைக் கேட்டறிந்து உதவி செய்தாலும் அந்த நோயின் வலிமை மிக சக்தி வாய்ந்தது... விஷம் கலந்தது.

அதை நாம் நுகர்ந்தால் அந்த விஷத்தின் உணர்வுகள் நம் நல்ல குணங்களுடன் கலந்து விடுகின்றது... பின் அந்த நல்ல குணங்களையும் வீழ்த்தி விடுகின்றது.

இத்தகைய உணர்வுகள் கலக்கக் கலக்க மனிதனை உருவாக்கிய உணர்வுகள் அனைத்தும் நலிந்து அந்த அணுக்கள் மடியத் தொடங்கும்... உடல் உறுப்புகளும் குறையத் தொடங்கும்.

குறைந்த உணர்வின் தன்மை இந்த விஷத்தின் தன்மை பெருக்கப்படும் பொழுது உயிர் உடலை விட்டுச் செல்லும் பொழுது மனிதனல்லாத உருவை உருவாக்கிவிடும்.

ஆனால்
1.அருள் மகரிஷிகள் உணர்வைச் சேர்க்கச் சேர்க்க இந்த உடலை விட்டுச் செல்லும் ஆன்மா
2.எதன் வலுக் கொண்டதோ அதன் அருகில் அழைத்துச் செல்லும்.
3.அங்கே வெளிப்படும் தீமைகளைக் கருக்கிடும் உணர்வுகள் பட்ட பின்
4.இந்த மனித வாழ்க்கையில் நம் ஆன்மாவில் பட்ட தீமைகளைக் கருக்கி விட்டு
5.உயிரின் ஈர்ப்பு துருவ நட்சத்திரத்தின் பால் சென்று... பேரருள் பேரொளியாக அழியாத ஒளியின் சரீரமாகப் பெற முடியும்.

இந்த உயிர் தோன்றி மனிதனாக ஆன பின் தான் உயிர் முழுமை அடைகின்றது... ஒளியின் சரீரம் பெறுகின்றது. ஆகவே
1,நமது குருநாதர் காட்டிய அருள் வழியில்...
2.அந்த மகரிஷிகள் பெற்ற அழியா ஒளிச் சரீரத்தை நாமும் பெறுவோம்.

வாழ்க்கையில் வரும் இருளை அகற்றிப் பேரருள் பெற்று இல்லற வாழ்க்கையில் பேரின்பப் பெரு வாழ்வு என்று நீங்கள் வாழப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன் (ஞானகுரு).



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

"சப்தரிஷிகள்" தனது வாழ்க்கையில் தன்னை அறிந்து இருளை அகற்றிப் பேரருள் பெற்று பேரொளி என ஆன அவர் உடலில் விளைய வைத்த உணர்வுகள் வெளி வந்த அனைத்தும் இங்கே பரமாத்மாவாக நமக்கு முன் பரவி இருக்கின்றது.

மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் எமக்கு அருளிய அந்த அருள் வழியில் நானும் (ஞானகுரு) அதைக் கண்டுணர்ந்து... அந்த அருள் உணர்வை எனக்குள் வளர்த்து சொல்லாக இப்பொழுது வெளிப்படுத்துகின்றேன்.

சொல்லாக அப்படி வெளிப்படுத்தும் போது இந்தப் பூமியில் பரமாத்மாவாகப் படர்கின்றது.
1.சொல்லாகச் சொல்லும் போது யாரெல்லாம் இதைக் கவர வேண்டும் என்ற உணர்வுடன் நுகர்ந்தறிகின்றனரோ
2.கவர்ந்த உணர்வுகள்... அந்த உணர்வுகள் அனைத்தும் ஞான வித்தாகப் பதிவாகின்றது.

வித்துக்களைப் பண்படுத்தி நிலத்திலே ஊன்றிச் சீராக எப்படி வளர்க்கின்றோமோ... இதைப் போன்று மகரிஷிகளின் வித்துக்களை உணர்வுகளைப் பெறக்கூடிய சத்தாக உங்களுக்குள் "ஞான வித்தாகப் பதிவு செய்கின்றேன்..."

1."எந்த அளவிற்கு" நீங்கள் அதைப் பெற வேண்டுமென்று கவர்கின்றீர்களோ "அந்த அளவிற்கு" ஆழமாக உங்களுக்குள் பதிவாகின்றது
2.பதிவான நிலையை நினைவுக்கு கொண்டு வந்து மீண்டும் அந்த அருள் உணர்வை நீங்கள் கவர்ந்தால்
3.அருள் ஞானிகள் பெற்ற உணர்வினை உங்களுக்குள் வளர்க்க முடியும்.

வளர்த்த உணர்வின் துணை கொண்டு... அந்தச் சப்தரிஷிகள் எப்படி இருளை அகற்றிப் பொருள் கண்டுணர்ந்து வாழ்ந்து... பிறவியில்லா நிலையை அடைந்தனரோ... அந்த அருள் உணர்வை நீங்களும் பெற முடியும்.

எமது குருநாதர் எப்படிப் பல உண்மையின் உணர்வுகளை அறிந்தாரோ அதை எல்லாம் எமக்குள் பாய்ச்சி...
1.அந்த அருள் வழி வெளிப்படும்படி செய்து
2.அனைவருக்குள்ளும் ஞான வித்தாகப் பதிவு செய்து
3.அவர்களுக்குள் அறியாது சேரும் தீமைகளிலிருந்து விடுபடும் மார்க்கத்தைக் காட்டும்படி சொன்னார்.


அவர்கள் அவ்வாறு வளர்த்திடும் அந்தப் பேரருளை இந்தப் பூமியில் பரமாத்மாவாக பரவச் செய்ய வேண்டும். இங்கே வாழும் மக்கள் அனைவரும் வாழ்க்கையில் அவர்கள் சந்தர்ப்பத்தில் ஏற்படும் இருளை அகற்றி அவர்கள் அருள் வழி வாழ்ந்திட வேண்டும்.

இந்த உயிர் எத்தனை கோடிச் சரீரங்களைக் கடந்து மனிதனாக எப்படி வந்ததோ
1.உயிரைப் போன்றே உணர்வுகள் அனைத்தும் ஒளியாகி

2.ஒளியின் சரீரம் பெறக்கூடிய உணர்வைப் பெறச் செய்வதே
3.நமது குருநாதர் காட்டிய அருள் வழி நெறி தியானம்.

உங்களில் இப்போது பதிவு செய்ததை... அந்தச் சக்திகளைப் பெற வேண்டும் என்று நீங்கள் ஏங்கினால் "அதுவே தியானம் ஆகிறது..."





வியாழன் கோளிலிருந்து பூமிக்கு வந்தவர்கள் தான் நாம் (விஞ்ஞானிகள் கண்டு இனி சொல்வார்கள்)

நாம் வாழும் இந்த பூமி சீக்கிரம் அழியப் போகின்றது. காரணம் விஞ்ஞான உலகின் அணுக்கதிரியக்கங்கள் அதிகமாகப் பரவி விட்டது. சூரியனின் காந்த சக்தி அதைக் கவர்ந்து விட்டது. பூமியின் நடு மையத்திற்குள் இது ஊடுருவிச் சென்று கொண்டிருக்கின்றது.

அணுக் கதிரியக்கங்கள் சூரியனின் வெப்ப காந்தத்தில் கலந்த பின்
1.இந்த உணர்வுகள் அதில் இருக்கக்கூடிய காந்தமும்
2.பூமியிலிருக்கும் காந்தமும் உலோகத்தில் இருக்கக்கூடிய காந்தங்களுடன் மோதிய பின்
3.புயலடித்த மாதிரி இரும்பும் உருகுகின்றது... கதிரியக்கங்கள் மீண்டும் அது வளர்ச்சி பெறுகின்றது.

மற்றதெல்லாம் பிளந்து விட்டு ஊடுருவி அனைத்தையும் அழித்துவிட்டு
1.அதில் இருக்கக்கூடிய வீரிய சக்தி அடங்கும் வரையிலும் சுழிக் காற்று போன்று
2.செடி கொடி கல் மண் மரம் எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு செல்கின்றது.
3.பூமியில் இருக்கும் அணுவினைப் (கதிரியக்கம்) பிளந்து விஞ்ஞானிகள் செய்து கொண்ட நிலைகள் இது.

அதை வைத்து மின்சாரத்தை நாங்கள் உற்பத்தி செய்கிறோம். எத்தனையோ பல வேலைகள் செய்கிறோம் என்று சொல்லலாம். அதனுடைய தணிந்த உணர்வின் நிலைகள் வந்தாலும் இந்தச் சூரியனின் காந்த சக்தி கவர்ந்தே இருக்கின்றது.

பூமிக்குள் இருந்தால் தான் இதனால் விபத்து என்ற நிலை இருந்தாலும் பூமியைக் கடந்து பிரபஞ்சத்திலே பரிசீலனைக்காக வெடிக்கச் செய்தாலும் வான வீதியிலே இந்த அணுக்களின் தன்மை படர்ந்து "பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஓசோன் திரையைக் கிழித்து விட்டு..." இந்த விஷத்தின் தன்மை பூமியின் ஈர்ப்பு வட்டத்திற்குள் வந்து கொண்டு தான் இருக்கின்றது.

இது அனைத்தும் பூமியின் நடு மையம் சென்றடைந்து விடும். வெப்பத்தின் தணல்கள் கூடும்... பனிப்பாறைகள் அனைத்தும் உருகும். உருகிய நீர்கள் நிலங்களைக் குறையச் செய்யும்.

நீர்கள் கூடினாலும் வெப்பத்தினால் பனிப்பாறைகள் கரைய நீரின் தன்மை பரவிப் படர்ந்தாலும்
1.சூரியனை விட்டு இந்த பூமி நகர்ந்து செல்லும் சந்தர்ப்பம் உருவாகின்றது.
2.அப்படி நகர்ந்து சென்ற பின் பூமிக்குள் நீர்கள் அனைத்தும் பனிப் பாறைகளாக உறைந்து விடும்.
3.நம் உயிர்கள் எல்லாம் அதற்குள் அமுங்கிவிடும்.

கோழி முட்டையை ஐஸ் பெட்டிக்குள் வைத்துத் தேவை ஏற்படும் போது அதை எடுத்துக் குஞ்சாகப் பொரிப்பது போன்று ஆகிவிடும்.

ஏனென்றால் “வியாழன் கோளில் நம் உயிரணுக்கள் அனைத்தும் சிக்கப்பட்டு...” அதிலிருந்து மீண்டும் தெறிக்கப்பட்டு வான் வீதிக்கு வந்து இப்பொழுது மனிதனாக நாம் இங்கே இந்தப் பூமியில் பிறந்து இருக்கின்றோம்.

அதனால் தான் வியாழன் கோளைக் குரு என்று சொல்வது.

அதில் மனிதர்கள் வாழ்ந்து வளர்ச்சியாகி தவறு செய்து போர் முறையாகி அவர்கள் உபயோகித்த ஆயுதங்கள் எல்லாம் அங்கே உண்டு.

1.வியாழன் கோளில் இப்போதும் மண்ணைத் தோண்டி எடுத்தோம் என்றால்
2.இங்கிருக்கும் விஞ்ஞானிகள் செய்ததற்கெல்லாம் அப்பனாக அவர்கள் செய்து வைத்த ஆயுதங்கள் அங்கே அடியில் பதிந்துள்ளது.

இதை எல்லாம் குருநாதர் எமக்குக் காட்டி இருக்கின்றார்.

அங்கே ஏற்பட்ட பிரளயத்தால் பனிப்பாறைகளாக ஆகி அதிலே சிக்கிய உயிர்கள்... எடுத்துக் கொண்ட நிலைகள் தான் கதிரியக்கச் சக்தியாக மாறிப் பல நிலைகள் மாறியது.

பின் இதிலே வந்த ஒவ்வொரு உயிரணுவின் தன்மை மீண்டும் ஜீவன் பெற்று பல நிலைகள் வந்தது. வியாழனின் நிலைகள் நட்சத்திர நிலைகள் கொண்டு சில நிலைகள் வந்தது என்று எமது குருநாதர் காட்டியுள்ளார்.

1.விஞ்ஞானிகள் இதையெல்லாம் கண்டு கொள்வதற்குப் பல காலமாகும்.
2.ஆனால் இப்பொழுது யாம் சொல்வதைப் பின்னாடி ஒரு காலத்தில் சொல்வார்கள்.



பிறருக்கு உதவி செய்தாலும்... மறைமுகமாக வரும் தீமையிலிருந்து நம்மைக் காக்க வேண்டும்

குருநாதர் எமக்குச் சொன்னது...! வாழ்க்கையில் நீ நல்லதை எண்ணி ஏங்கினாலும் பிறர் செய்யும் தவறைப் பார்க்கப்படும் பொழுது
1.அதற்காக இரக்கப்பட்டோ... பரிவு கொண்டோ ஏங்கி அதைச் சுவாசித்து
2.ஏராளமான பணங்களைக் கொடுத்து... உடலைக் காக்க பொருளைக் கொடுத்து நீ உதவி செய்தாலும்
3.உனக்குள் வந்த அவரின் வேதனையான உணர்வின் தன்மையைத் துடைக்கவில்லை என்றால் என்ன ஆகும்...?

இந்த மனித வாழ்க்கையில் புகழ் கிடைக்கும் பேர் கிடைக்கும் இரக்கமானவர் நல்லவர் என்று போற்றுவார்கள்.
1.ஆனால் அதே சமயத்தில் நலிந்து போகும் பொழுது யாரும் நம்மைப் பார்க்க மாட்டார்கள்.
2.பின்... வேதனையான நிலைகள் கொண்டு நான் நல்லதைச் செய்தேன் எனக்கு

இப்படி ஆகிவிட்டது...! என்று
3.வேதனைக் குரலைத் தான் எழுப்ப முடியுமே தவிர நல்லதைச் சிந்திக்க முடியாது.

இந்த உணர்வை வளர்த்துக் கொண்ட பின் மனித இனத்தையே வெறுக்கும் நிலை வந்துவிடும்.

ஆனால் மனித உடலுக்குள் மீண்டும் சென்றாலும் அந்த உடலையும் அழித்து விட்டு வேதனை என்ற விஷத்தை அதிகமாகக் கூட்டி உடலை விட்டுச் சென்ற பின்... பரிணாம வளர்ச்சியில் வந்த விஷத்தைத் தாங்கிடும் மற்ற உயிரினங்களின் ஈர்ப்புக்குள் சென்று அந்த உடலாக உயிர் மாற்றிவிடும்.

இதையெல்லாம் குரு இயற்கையாக எனக்குக் காட்டினார். அதையெல்லாம் கண்டு தான் இந்த உண்மைகளை உங்களுக்கு உணர்த்துகிறோம்.

நீங்கள் செய்த நன்மையின் நிலைகள்... உங்களைக் காக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கூட்டுத் தியானங்களை வலுப்படுத்தி அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும் என்ற எண்ணத்தை ஓங்கிச் செலுத்த வேண்டும்.

பின் தியானத்தில் அமர்ந்திருக்கக்கூடிய அனைவரும் மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்
1.அவர்கள் உடல் முழுவதும் அந்த அருள் சக்தி படர வேண்டும்
2.அவர்கள் குடும்பத்தில் உள்ள இன்னல்கள் நீங்க வேண்டும்
3.அவர்கள் வாடிக்கையாளர்கள் நலம் பெற வேண்டும்
4.அவர்கள் வாழ்விலே மகிழ்ச்சி பெற வேண்டும்
5.என் பார்வை அவரை நல்லதாக்க வேண்டும் என்ற இந்த உணர்வுகளை உங்களுக்குள் செலுத்தினீர்கள் என்றால்
6.இந்த உணர்வின் சக்தி உங்களுக்குள் பாய்ச்சப்படுகின்றது.

இந்தச் சொல்லின் வாக்கும் உங்களுக்குள் விளைகின்றது. உங்கள் மூச்சு அவரை நலம் பெறச் செய்கின்றது. இதைத்தான் மனிதர்களுக்குள் பொறுமையாக இருந்து செயல்படுத்த வேண்டும்.

வயலிலே காய்கறிகளை விதைத்த பின் உடனடியாக அதைச் சமைக்க முடிவதில்லை. அது விளைந்த பின் பறிப்பவர் ஒருவர்... கடையில் வியாபாரம்

செய்பவர் ஒருவர்... கடைசியில் நாம் கடைக்குச் சென்று அதை வாங்கிச் சமைக்கும் நிலையாக இருக்கின்றது.

இதைப் போல அந்த உணவைப் பக்குவமாகச் சமைத்துச் சாப்பிடுவது போன்று நாம் எண்ணியதைக் கொண்டு அந்த உணர்வுகளை எல்லாம் சீர்படுத்திக் கொண்டு வருவது தான் யாம் சொல்லும் இந்தத் தியானம்.

1.அதற்கு அந்த மெய்ஞானிகள் அருள் சக்திகளைப் பெற்று அதை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
2.அதுவே நம்மைக் காத்திடும் அரும்பெரும் சக்தியாக அமையும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

ஒரு காரியத்தை மனமுவந்து செய்ய விரும்பினோம் என்றால் அதை எளிதில் செயல்படுத்த முடியும்.
1.ஒருவரைக் கட்டாயப்படுத்தி "நீங்கள் இதைச் செய்யுங்கள்..." என்று சொன்னால் அங்கே அந்த மனம் குறையும்.
2.இவர் என்ன சொல்வது...? நான் என்ன செய்வது...? என்று வந்துவிடும்.
3.சொல்லும் பொழுது அழுத்தமாகி... அதிர்வாகி... அந்த நிலை ஆகிறது.

ஆனால்... மனதை ஒன்று சேர்த்துச் செய்ய வேண்டும் என்று எண்ணும் பொழுது அந்த இயக்கம் வலிமை பெறுகின்றது.

ஒரு காரியத்திற்கு நண்பர்களாகச் செல்கின்றோம் என்று வைத்துக் கொள்வோம். "அவர் செய்கின்றார்... நாமும் செய்வோம்..." என்று எண்ணம் கொண்டு செயல்படுத்தத் தொடங்கினால் அங்கே மகிழ்ச்சி வருகின்றது.

நீங்கள் இருங்கள்... நான் செய்கிறேன்...! என்று சொல்வார். அது அல்லாதபடி நான் இதைச் செய்கிறேன்... நீ இதைச் செய்...! என்கிற பொழுது "நீ என்ன சொல்வது...?" என்ற அந்த உணர்வு வந்து விடுகிறது.
1.இருங்கள்... நான் செய்கிறேன் என்று சொல்லப்படும் பொழுது
2.இல்லை... நானும் செய்கிறேன்...! என்று சொல்ல வருகின்றது
3.அப்பொழுது ஒன்றுபட்டு இயங்கும் நிலை வருகின்றது.
4.தியானம் இருப்போர் நம் எண்ணங்களை இவ்வாறு சீர்படுத்திக் கொள்ள வேண்டும்.

குடும்பத்தில் கணவன் மனைவி இந்த உணர்வு கொண்டு ஒன்றி வரப்படும் பொழுது இந்த உணர்வின் நினைவாற்றல் பெருகப் பெருக... குடும்பப் பற்றும் வரும். கணவனும் மனைவியும் ஒன்று சேர்த்து வாழும் தன்மை வரும்

அவ்வாறு வந்துவிட்டால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் தொழில் வளமும் மற்ற அனைத்துமே சீராக வரும். அனைவரையும் மகிழ்ந்து வாழச் செய்யும் சக்தியாக... நம்மையும் மகிழ்ச்சி பெறச் செய்யும் சக்தியாக... நம்மைப் பாதுகாக்கும் சக்தியாக வரும்.

1.இத்தகைய நல்ல உணர்வலைகள் வீட்டிற்குள் பரவப் பரவ நம் வீட்டின் தரைகளிலும் சுவர்களிலும் புவிஈர்ப்பிலே பதிந்து
2.நாம் பேசிய அந்தப் பேச்சு மூச்சும் அவ்வாறு பரவும் போது "நம்முடைய உணர்வே நமக்குப் பாதுகாப்பாக (ஓசான் திரையாக) மாறும்..."

நாம் வெளியில்... ரோட்டிலோ அல்லது வாகனங்களிலோ செல்லும் போது அசம்பாவிதங்களைப் பார்க்கின்றோம்... அல்லது பத்திரிக்கை டிவி வாயிலாக அதைப் பார்க்கும் போது அந்த விஷத்தின் தன்மை அதிகமாகக் கவர்ந்து விடுகிறோம்.

"அதே உணர்வுடன்" வீட்டிற்குள் வரும் பொழுது அத்தகைய அசுத்தமான உணர்வுகள் நம் வீட்டில் பதிவாகி விடுகின்றது.

அதே சமயத்தில் ஒரு அசுர உணர்வு கொண்டவர் பேசுவதைப் பார்ப்பதையும் கேட்பதையும் நுகர்ந்து... அந்த அறிவின் தன்மை வந்தால் நம் உடலுக்குள் வரப்படும் பொழுது இதே போன்ற மூச்சலைகளாக வீட்டிற்குள் பதிவாகி விடுகிறது.

அப்படிப் பதிவாகி விட்டால்...
1.வீட்டிற்குள் நாம் நுழைந்தாலே நம் நல்ல உணர்வைத் திசை மாற்றிவிடும் "நம்மை அறியாமலே..."
2.நாமல்ல...! சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும் அவரவர்கள் சந்திக்கும் நிலைகளுக்கொப்பத் தான் இதனுடைய நிலைகள் வருகின்றது.

இதை எல்லாம் மாற்றிட... ஒவ்வொரு நாளும் கூட்டுத் தியானம் இருந்து கணவனும் மனைவியும் ஒன்று சேர்த்து வாழ்ந்திடும்... ஒன்றான இயக்கத்தை உருவாக்கி விட்டால்... நம்மைச் சொர்க்கலோகத்திற்கு அழைத்துச் செல்லும்.

இல்லை என்றால் நுகர்ந்த உணர்வின் இயக்கமாக... பற்றென்ற நிலை வரப்படும் போது... நம்மை அறியாமலே விஷத்தின் தன்மையாகக் கவர்ந்து... கணவன் மனைவிக்குள் வேற்றுமை உருவாகி... நம் நல்ல உணர்வுகளை... ஒன்று சேர்த்து இயக்கும் தன்மை இழக்கப்படுகின்றது.

மன வேற்றுமை கொண்டு அடுத்து செயல்பட்டால் தொழிலும் சீராக வராது. நஷ்டமாகும் போது மீண்டும் அதிகமான சோர்வும் வேதனையும் தான் வரும்.

இதே உணர்வுகளைக் குழந்தைகள் மேல் பாய்ச்சப்படும் பொழுது இந்த குழந்தைகளும் நம்மை விட்டுப் பிரிந்து செல்லும் நிலை வரும்.... ஒன்று சேர்த்து வாழும் நிலை இல்லாது போய்விடுகிறது.

இதைப் போன்ற நிலைகள் இருந்தெல்லாம் நாம் விடுபடுவதற்குத் தான் உபதேச வாயிலாக உங்களுக்குத் தெளிவாக்கிக் கொண்டு வருவது.
1.அதன் வழியில் அருள் உணர்வுகளைப் பெருக்கிக் கொண்டு வாருங்கள்...
2.அதற்குண்டான முயற்சிகளை எடுங்கள்... முயற்சி எடுத்தால் தான் தீமைகளிலிருந்து மீள முடியும்.

ஒரு கட்டிடமே கட்ட வேண்டும் என்றால் மேடு பள்ளங்களைச் சமப்படுத்தித் தான் கட்டுகின்றோம். ஒரு இயந்திரத்தை இயக்க வேண்டும் என்றாலும் சமமான நிலைகள் கொண்டுதான் அதை இயக்க முடியும்.

இதே போன்று ஒரு குடும்பத்தில் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்றால் "நமது முயற்சி" கணவன் மனைவி ஒன்று சேர்த்து வாழ வேண்டும் என்ற நிலையில் இருவரும் ஒன்றி... அப்படி வளரச் செய்யும் பருவத்தைக் கொண்டு வர வேண்டும்.
1.அப்படிக் கொண்டு வந்தால் தான் குடும்பத்தில் வரும் சிக்கல்களை நீக்க முடியும்...
2.எதிர்நோக்கி வரும் சில தீமைகளையும் அகற்ற முடியும்
3.எத்தகைய நிலைகள் இருந்தாலும் அதை வெல்லும் சக்தியாக இருவருக்குள்ளும் வருகிறது.

பெண்களின் உணர்வுகளும் கணவனுடைய உணர்வுகளும் ஒன்றி வாழ்ந்தால் "எமனிடமிருந்து சாவித்திரி தன் கணவனை மீட்டினாள்..."

இப்படிப்பட்ட ஒன்றுபட்ட உணர்வு வரும்பொழுது தீமை என்ற உணர்வு குடும்பத்திற்குள் வந்து இருவரையும் பிரிக்கும் நிலையோ நோயாக மாறும் நிலையோ வராது.

ஆனால் என் மனைவி இப்படி இருக்கிறதே அல்லது என் கணவர் இப்படி இருக்கின்றாரே...! என்று எண்ணினால் வேதனையான உணர்வுகள் நமக்குள் ஊடுருவி அதீதமான தீமைகளாக விளைந்து அதுவே நோயாகிவிடும்.

இதைப் போன்ற நிலையிலிருந்து எல்லாம் ஒவ்வொருவரும் விடுபட வேண்டும். அருள் வழியில் பற்றை எப்படி வளர்க்க வேண்டும்...? என்று இருவருமே ஒன்று சேர்த்து

1.கணவன் ஒளி பெற்று உயர வேண்டும்
2.மனைவி அந்த அருள் ஒளி பெற்று உயர வேண்டும்
3.எங்கள் இரு மனமும் இருளை அகற்றிடும் அந்த அருள் சக்தி பெற வேண்டும் என்று இந்த உணர்வை எண்ணிப் பழக வேண்டும்.

இவ்வாறு "எவரொருவர்" குடும்பத்தில் செயல்படுத்துகின்றனரோ அவர்களுடைய வாழ்க்கையில் எல்லா உயர்வும் கிடைக்கும். குடும்பத்தில் அமைதியும் சாந்தமும் மகிழ்ச்சியும் வரும். குழந்தைகள் ஞானக் குழந்தைகளாக வளருவார்கள்.

நம்முடைய சொல் அனைவரையும் காக்கக்கூடிய சக்தியாக வரும். எந்தச் செயல்கள் செய்தாலும் அது எல்லாம் வளர்ச்சியின் பாதையிலே செல்லும் சீராக வரும். விவசாயம் செய்தாலும் பயிர்கள் நல்ல மகசூல் தரும்.

இதையெல்லாம் நாம்

1.குடும்பத்தில் கணவன் மனைவி ஒன்று சேர்ந்து நிரூபித்துக் காட்ட வேண்டும்
2.குரு கொடுத்த அருளின் துணை கொண்டு எல்லாவற்றையும் செயல் வடிவுக்கு கொண்டு வர வேண்டும்.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

அன்றாடம் நம் வீட்டை எவ்வாறு தூய்மைப்படுத்துகின்றோமோ அது போன்று நம் ஆன்மாவையும் அடிக்கடி தூய்மைப்படுத்த வேண்டும்.

1.வீட்டைத் திறக்காது சில காலம் பூட்டி வைத்து விட்டால் நெடி ஏறிவிடும்
2.அடுத்து அங்கே உள்ளே செல்ல வேண்டும் என்றால் "நுழையும் பொழுதே சங்கடமாக இருக்கும்..."

அதே போன்று நாம் தினசரி குளிக்காமல் இருந்தால் உடலில் அசுத்தங்கள் ஏறிவிடும்... மேலெல்லாம் அரிப்பாகிவிடும். நம்முடைய உடைகளையும் அவ்வப்போது தூய்மைப்படுத்தவில்லை என்றால் அழுக்கு ஏறி... துணியே இத்துப் போகும்.

அதைப் போன்று தான் நம் ஆன்மாவையும் அடிக்கடி அந்த அருள் ஞானிகள் உணர்வைக் கொண்டு அதைத் தூய்மைப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

1.எந்த அளவிற்கு நாம் தூய்மைப்படுத்துகின்றோமோ இவை அனைத்தும் நமக்குள் "பேரருளாக மாறும்..."
2.எதையுமே நல் சொல்லாகும் நல் செயலாகவும் நாம் செயல்படுத்தும் அந்த அருளாக மாறும்.
3.நமது வாழ்க்கை பிறருடைய தீமைகளை அகற்ற உதவும்.
4.நம் சொல்லின் உணர்வுகள் பிறருக்கு நன்மை செய்யும் உணர்ச்சிகளை ஊட்டும்.

பிறருடைய நிலைகளை மகிழச் செய்யும் பொழுது தான் "பேரொளி..." ஆக... அந்த உணர்வின் தன்மை நமக்குள் வளர்ந்து பேரொளி என்ற நிலை அடைகின்றது. ஒவ்வொருவரும் இதனை மனதில் வைத்து இல்லற வாழ்க்கையில் அருள் வழி வாழுங்கள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் கணவன் மனைவியும் ஒன்று சேர்ந்து வாழும் நிலைக்கு வரவேண்டும். அதற்குண்டான வழிகளை... உபாயங்களைக் கூட்டுங்கள்.

கணவன் மனைவி ஒன்று சேர்ந்து வாழ்ந்தால் அந்த ஊருக்கு மட்டுமல்ல... தெருவுக்கு மட்டுமல்ல... வீட்டுக்கு மட்டுமல்ல... எல்லோருக்கும் நன்மை பயக்கும் சக்தியாக வருகிறது.

இது போன்று
1.ஒரு பத்துக் குடும்பங்கள் ஒன்றுபட்டு வாழும் நிலை வந்தால் அந்தத் தெருவே பரிசுத்தமாகும்..
2.அங்கிருக்கக்கூடிய மக்களும் தெளிவடைவார்கள்.

3.ஒருவருக்கொருவர் அறியாது சேரும் பகைமை உணர்வை மாற்றிடும் சக்தி பெற முடியும்.

அந்த வீடோ தெருவோ ஊரோ சொர்க்கலோகமாக மாறும். மற்றவர்கள் அங்கே வந்தாலும் அவர்களுக்கும் அங்கே ஒரு மகிழ்ச்சி ஊட்டும் சக்தியாக வரும். ஆகவே... தெளிந்த மனதுடன் வாழ்ந்திடும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் குடும்பங்களில் முதலில் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் "இரண்டு பேரும் ஒன்று சேர்த்து வாழ வேண்டும்..." என்று முயற்சிகளைக் கொண்டு வாருங்கள்.

மனித வாழ்க்கையில் எத்தனையோ அன்பும் பண்பும் கொண்டு வளர்ந்த நாம்... பிறருடைய கஷ்டங்களைக் கேட்டறிந்து அதைப் பதிவாக்கி இருப்பதனால் பிறருடைய ஆன்மா... அதாவது உடலை விட்டு சென்ற பின் அது நம் உடலுக்குள் வந்து விடுகின்றது.
1.வந்த பின் அதனின் உணர்வை நம்மை அறியாமலே இயக்குகின்றது
2.நல்லதைப் பேசும் உணர்வுகளை அது மாற்றி விடுகின்றது.

ஆகவே எல்லோரும் ஒன்றுபட்ட உணர்வு கொண்டு கூட்டுத் தியானம் இருந்து அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்தியை வலுவாக எடுத்து "மன உறுதி" வரும்படி செய்ய வேண்டும்.

பின்... துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை அந்த ஆன்மா பெற வேண்டும்... அந்த உடலில் இருந்து அவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

யாருடைய உடலிலாவது இப்படி வித்தியாசமான மன நிலை இருந்தால் கூட்டுத் தியானங்கள் அமைத்து அவரை எண்ணி ஒரு பாலை வைத்துத் தியானம் இருக்கச் செய்ய வேண்டும்.

தியானித்து முடிந்த பின் அவருக்கு அதைக் கொடுத்து... பாலைப் போன்ற தெளிந்த மனம் பெற வேண்டும்... அந்த உடலில் இருக்கக்கூடிய ஆன்மா தெளிந்த மனம் பெற வேண்டும் என்ற இந்த உணர்வினை வளர்த்து அங்கே பாய்ச்சிப் பாருங்கள்.

இவ்வாறு செய்தால்
1.நமக்குள் எத்தகைய நிலை இருந்தாலும் அருள் வழியில் வலிமை பெற்ற அணுக்களாக மாற்ற முடியும்
2.உங்களை நீங்கள் நம்புங்கள்.

உங்கள் உயிர் ஈஸ்வரலோகமாக இருக்கின்றது... எண்ணியது எதுவோ அதன் உணர்வினைக் கருவாக உருவாக்கி வளர்க்கும் சக்தியாகச் செயல்படுகின்றது. மீண்டும் எண்ணும் பொழுது அதன் உணர்வையே வளர்க்கிறது

ஆகவே இந்த இல்லற வாழ்க்கையில் அருள் வாழ்க்கை வாழ்ந்து நாம் அனைவரும் பிறவியில்லா நிலை அடைவோம்.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நாட்டில் நடக்கும் அசம்பாவிதங்களும் விஷத்தன்மையான செயல்களையும் நாம் நுகரப்படும் பொழுது... அது நமது ஆன்மாவை... இந்த உடலுக்குப் பாதுகாப்பாக இருப்பதை... சுத்தமாக அதை வலு இழக்கச் செய்து விடுகின்றது.

காரணம் நம் உடலில் எதிர்ப்பு சக்திகள் என்று உண்டு. அந்த எதிர்ப்பு சக்தி கொண்ட அணுக்களை... அந்த அமிலத்தின் தன்மைகளைக் குறைந்து விடுகின்றது. ஆக...

1.எதிர்ப்பு சக்தி இல்லாததனால் தீமை செய்யும் உணர்வுகள் ஒரு நொடிக்குள் ஊடுருவி

2.உடலில் சீக்கிரம் நோய் வருவதும்... பல தொல்லைகள் கொடுப்பதுமாக வந்துவிடுகிறது.

இன்று உலகெங்கிலும் நடக்கும் மத பேதம் இன பேதம் மொழி பேதம் இது போன்ற அசுர உணர்வுகளைச் சூரியனின் காந்த சக்தி கவர்ந்ததனால்... நாம் கண் கொண்டு பார்த்து அவைகள் நமக்குள் பதிந்த பின் என்ன நடக்கிறது...?

விஷத் தன்மை கொண்ட கதிரியக்கங்கள் பரவி பூமியில் எப்படி ஓசான் திரை கிழிந்ததோ... இது போன்று மனித உடலுக்குள் நம்மைக் காக்கும் நமது ஆன்மா பாதுகாப்பான நிலைகளிலிருந்து அதுவும் பிளக்கப்பட்டுவிடுகிறது.

அதனால் மனிதனுடைய நல்ல சிந்தனைகளைச் சீர்குலைக்கச் செய்து விடுகிறது. மனிதன் உறுதியான உடல் பெற்று இருந்தாலும்

1.தீமைகளை எதிர்க்கும் சக்தி கொண்ட அந்த அமிலங்கள் குறைத்து விட்டதனால்

2.நம் உடலில் உள்ள பாதுக்காப்புக் கவசத்தை அது மறைந்து விடுகிறது.

அதை எல்லாம் மாற்றிடக் கண்ணின் நினைவை விண்ணிலே செலுத்தி... துருவ நட்சத்திரத்தின் பால் ஒன்றச் செய்து... அதிலிருந்து வரும் பேரருள் உணர்வுகளை ஏங்கிப் பெற்று நமக்குள் சேர்த்துக் கொண்டால் "நம் ஆன்மாவை... அந்தப் பாதுகாப்பு கவசத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம்..." தீமைகள் புகாது ஆன்மாவை வலுவாக்கிக் கொள்ளலாம்.

துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பெறும் விதமாக மாமகரிஷி ஈஸ்வராய குருதேவரின் உணர்வுகளை ஆங்காங்கு இந்த ஒளி அலைகளைப் பரப்பப்படும் பொழுது

1.எல்லோருக்கும் "அவருடைய உயர்ந்த சக்தி" கிடைக்க ஏதுவாகின்றது.

2.ஒன்று சேர்க்கும் உணர்வுகள் வருகின்றது
3.பகைமை உணர்வுகள் மாற்றப்பட்டு அன்பு கொண்டு அரவணைத்து வாழும் நிலைகள் வருகின்றது.
4.உயிரைக் கடவுளாக மதிக்கச் செய்கின்றது... உடலைக் கோவிலாக மதிக்கச் செய்கிறது
5.மனிதனுக்குள் உள்ள பண்பு கொண்ட உணர்வுகளைத் தெய்வமாக மதிக்கும் தன்மை வருகிறது
6.இன பேதம் அகற்றப்படுகின்றது... மன பேதம் அகற்றப்படுகிறது...
7.வெறுப்பு வேதனை போன்றவைகள் நமக்குள் நெருங்காது தடுக்க முடிகிறது.
8.அருள் உணர்வுகளை வளர்த்து நாளடைவில் பகைமை உணர்ச்சிகளை அறவே அழித்திடும் சக்தியாக நமக்குள் வளர்கின்றது.



கண்ணின் நினைவை விண்ணிலே செலுத்தி... துருவ நட்சத்திரத்தின் பால் ஒன்றச் செய்து... அதிலிருந்து வரும் பேரருள் உணர்வுகளை ஏங்கிப் பெற்று நமக்குள் சேர்த்துக் கொண்டால் "நம் ஆன்மாவை..." அந்தப் பாதுகாப்பு கவசத்தை வலுப்படுத்தித் தீமைகள் புகாது வலுவாக்கிக் கொள்ளலாம்.



எதையுமே உணர்வால் அறியும் ஆற்றலாக... அந்த அறிவின் ஞானம் உங்களுக்குள் வர வேண்டும்


இந்த மனித வாழ்க்கையில் எல்லோராலும் சில இதுகளை நாம் உணர்வால் உணர முடிகின்றது. ஆனாலும்
1.இந்தத் தியான வழியில் பெரும்பகுதி இந்த உடலுக்குள் செல்லும் நிலைகளை உணர வேண்டும்.
2.உணர்ச்சிகள் நமக்குள் எப்படி இயக்குகிறது என்று...?

நம் உடலுக்குள் சேர்ந்த உணர்வுகள்... மற்ற உணர்வு நம் மீது மோதிய பின் "எதனால் நம்மை இயக்கப்படுகின்றது...?" என்ற இந்த அறிவின் ஞானத்தை நமக்குள் வளர்க்க வேண்டும்.

இதை எல்லாம் நமக்குள் நுகர நுகர நம் உடலுக்குள் நாம் நுகரும் உணர்வுகள் இரண்டும் "ஒரு எலக்ட்ரிக் எலக்ட்ரானிக்..."
1.உயிரிலே மோதி உணர்வின் தன்மை நினைவுடன் இருக்கப்படும் பொழுது...
2.மற்றொரு உணர்வு சேர்ந்த பின்
3.அதனுடைய அழுத்தமும்... அதனுடைய இயக்கமும்... நம்முடைய உணர்வும்...
4.அதற்குக் கீழ் எப்படி இருக்கிறது...? என்ற நிலையை நாம் அறிந்து உணர முடிகின்றது.

இதைப் பழக்கப்படுத்துவதற்குத் தான்
1.எது நம்மை இயக்குகிறது...?
2.எதனால் நாம் இயங்கிக் கொண்டிருக்கின்றோம்...?
3.எதை நாம் வளர்த்துக் கொள்கின்றோம்...? என்ற உண்மையை நீங்கள் அறிந்து கொள்வதற்குத் தான்
4.தியானத்தில் காட்சியாகக் கொடுக்கப்பட்டதன் உண்மை நிலைகள்.

இது உங்களுக்குள் வளர்ந்தால் நல்லதாகும்.



உலக மக்களை அருள் ஒளியின் சுடராக மாற்றும் சக்தி பெறுங்கள்

எந்தச் செல்வமும் நமக்குச் சொந்தமாக வருவதில்லை. ஆனால் 1.அருள் ஞானத்தை நமக்குள் சொந்தமாக்கி விட்டால் இருளை வென்று ஒளியின் உணர்வாக ஆக்கும் தன்மை பெறுகின்றோம்.

2.அதையே இந்த மனித வாழ்க்கையில் நாம் சொந்தமாக்கிப் பயன்படுத்த வேண்டும்.

எந்த நிலையில் வாழ்ந்தாலும் இந்த உடலும் சொந்தம் ஆவதில்லை. இந்த உடலால் சம்பாதித்த செல்வமும் நிலைத்ததில்லை.

கோடிக் கோடிச் செல்வங்களைப் பெற்றாலும் பல ஆயிரம் பேரைக் கொன்று குவித்து நான் சுகமாக வாழ்வேன் என்றாலும் அப்படிப்பட்ட அரசனும் இன்று இருந்ததில்லை.

பேய் மனமாக அவன் சென்று விட்டான். அவன் உணர்வுகளும் பேய் மனமாக மாறி விட்டது.
1.அவன் ஆசையைப் பின்பற்றிய அனைவரும் அவன் வழியிலே சென்று மதம் என்ற வெறி கொண்டு
2.மனிதனை மனிதனே அழித்துக் கொண்டு கொன்று குவித்து அதைக் கண்டு மகிழும் நிலையை இன்று உருவாகிவிட்டது.

அரசன் சென்ற நிலையை இன்று உருவானது. அதன் உணர்வு கொன்று குவிக்கும் உணர்வாக வளர்ந்து விட்டது. மதம் என்ற போர்வையை அவன் உருவாக்கினான்.

அதே மதத்தின் அடிப்படையில் இன்று நஞ்சு கலந்த உணர்வாக மதத்திற்குள் இனமென்று வளர்ந்து விட்டது. தன் இனமே பெரிது என்றும் மற்ற இனத்தைப் பழித்துப் பேசினான். பழி தீர்க்கும் உணர்வுகளே இங்கு வளர்ந்தது.

மனிதனுக்கு மனிதனே உருக்குலையச் செய்யும் நிலையாகச் சிந்தித்து வாழும் நிலைகள் செயலிழந்து சிந்தனையற்ற செயலாகவே செயல்பட்டு... சிந்தனையற்ற செயல்களை நாம் நுகரும் பொழுது நஞ்சான உணர்வுகளை வளர்த்து நஞ்சை உணவாக உட்கொள்ளும் நஞ்சின் செயலாக்கங்களாக உருப் பெற்றுவிட்டது.

நஞ்சை வளர்த்திடும் நிலையே நமக்குள் வளர்கின்றது. இதைப் போன்ற நிலையில் இருந்து நாம் மீள வேண்டும்.
1.அதற்குத்தான் எனது குரு அருளை உங்களுக்குள் பதிவு செய்கிறேன்... நமது குரு என்ற நிலையில் அனைவரும் வாழ வேண்டும்.
2.முதலில் எமது குருவாக இருந்தார். இந்த உணர்வின் தன்மையை நீங்கள்

நுகர்ந்தறிந்து இந்த உணர்வின் வழி சென்றால்
3.”நமது குரு…” என்று நமக்குள் ஒன்று சேர்த்து வாழும் நிலை வரும்.

சாமியையும் குருவையும் பிரித்து விடாதீர்கள்…! நமது குரு என்று அருள் வழியில் ஒன்றி வாழ்தல் வேண்டும்.

இந்த உணர்வின் துணை கொண்டு உலக மக்கள் நஞ்சிலிருந்து விடுபட வேண்டும். அருள் ஞானம் பெறுதல் வேண்டும். இந்த உணர்வைத் தியானித்து அதை நாம் பெருக்க வேண்டும்.

பகைமை கொண்ட உணர்வுகள் இங்கே வந்தாலும் இந்தப் பகைமை வளராது தடுக்க அருள் ஒளியைப் பெற்று உலக மக்கள் அருள் ஞானத்தைப் பெற்று வாழ்ந்திட வேண்டும்.

1.இந்தப் பூமியை அருள் ஞானத்தை வளர்த்திடும் பூமியாக ஆக்கிட வேண்டும்.
2.அருள் ஞானிகள் பிறந்த பூமியில் அருள் ஒளியின் சுடரை எண்ணி வளர்த்து
3.இந்த இந்தியா என்ற எல்லையை எண்ணும் பொழுதெல்லாம் உலக மக்கள் மனம் மாறி
4.அருள் ஒளியின் சுடராக மாறும் நிலைக்கு வர வேண்டும்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

நாம் எந்தெந்த உணர்வின் ஒலியைப் (மொழி) பெருக்குகின்றோமோ அதற்குத்தக்கவாறு நம்முடைய நினைவாற்றலும் பல சக்திகளும் நமக்குள் உருமாறுகின்றது.

ஆகவே…
1.எந்த வகையிலும் எத்தகைய நிலை வந்தாலும்
2.துருவ நட்சத்திரத்தின் சக்தியை விடாது அதை எடுக்கப் பழகிக் கொண்டால்
3.இந்த வாழ்க்கையில் நமக்கு அது பேருதவியாக இருக்கும்.

ஏனென்றால் ஒருவர் அவர் பேசுவதை எங்கிருந்து எண்ணினாலும் அந்த உணர்வுகள் அலைகளாக நமக்குள் வருகின்றது… கவரப்படுகிறது.

அது போன்று துருவ நட்சத்திரத்தின் உணர்வை உங்களுக்குள் ஆழமாகப் பதிவு செய்ததனால்… அதை நீங்கள் மனதில் எண்ணி… உங்கள் வாழ்க்கையில் எப்போது சலிப்போ சஞ்சலமோ வெறுப்போ கோபமோ பயமோ மற்ற எந்த உணர்வை நுகர

நேர்ந்தாலும்
1.அப்படி நுகர்ந்த அந்த சக்தி உங்களுக்குள் பெருகுவதற்கு முன்
2.துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்று இதை உடலுக்குள் செலுத்தித் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
3.நாளை நடப்பதெல்லாம் நல்லதாக இருக்க வேண்டும்... நல் செயலாக இருக்க வேண்டும் என்று அந்த உணர்வுகளை மாற்றி அமைத்தல் வேண்டும்.
4.ஒவ்வொரு நாளும் இதைக் கடைப்பிடித்தால் வாழ்க்கையே தியானம் ஆகின்றது.

வராகன் தன் உணவுக்காகச் சாக்கடைக்குள் இருக்கக்கூடிய நாற்றத்தைப் பிளந்து நல்லதை நுகர்வது போன்று... தீமையான உணர்வுகள் உள் செல்லாதபடி துருவ நட்சத்திரத்தின் உணர்வைத் தனித்துப் பிரித்து நமக்குள் சேர்ப்பிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஒரு காரியத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று செல்லும் போதோ உணவு உட்கொள்ளும் பொழுதோ இரவு படுக்கைக்குச் செல்லும் பொழுதோ மற்றவர்களுடன் கலந்து பேசும் பொழுதோ அல்லது பேசிய பின்போ
1.ஒரு நொடி துருவ நட்சத்திரத்தினை நினைவுக்குக் கொண்டு வந்து
2.அதைக் கலந்து மாற்றிக் கொண்டே வந்தால் நமது உணர்வுகள் பூராமே தூய்மைப்படுத்தும் சக்தியாக வளர்கின்றது.

வராகன் சாக்கடைக்குள் இருக்கும் நாற்றத்தைப் பிளந்து நல்லதை எடுத்தது போன்று... வெளியிலிருந்து வரக்கூடிய மற்ற தீமைகளைப் பிளந்து விட்டுத் துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை ஒவ்வொரு நிமிடத்திலும் பெற முடியும்.

துருவ நட்சத்திரத்தின் வலுவை நமக்குள் நுகர்ந்து கொண்டே இருந்தால் கசடான உணர்வுகளைப் பிளந்து விட்டு நம் உயிர் ஒளியின் தன்மையாக மாறும்... பின் துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்திற்கு நாம் செல்ல இது உதவும்.

அன்று மெய் ஞானிகள் எப்படி இயற்கையின் இயக்கங்களைக் கண்டறிந்தார்களோ... அந்த இயற்கை வழியிலேயே தான் செயல்படுத்த வேண்டும். அதைத்தான் தியானம் என்று சொல்வது.

வரும் தீமைகளை அகற்றி அருள் ஒளி என்ற உணர்வைப் பெருக்கிப் பேரருளைப் பெற்று பேரொளியாக மாற முடியும். பேரருள் என்றால் இருளைப் போக்கும் சக்தி.

1.ஒவ்வொரு நொடியிலும் இப்படி எண்ணிப் பழகி விட்டால்
2.துருவ நட்சத்திரத்தின் சக்தி தன்னாலே தன்னிச்சையாக வந்து சேரும்.

இதில் ஒன்றும் சிரமமில்லை.

கோபமோ சலிப்போ வரும் போது நம்மை அறியாமலே அதன் வழிக்கு இழுத்துச் செல்லும். அதே போன்று துருவ நட்சத்திரத்தின் சக்தியை எடுக்கப் பழகிக் கொண்டால் தீமைகளை எளிதில் மாற்றிவிடலாம்.

ஒவ்வொரு நிமிடமும் துருவ நட்சத்திரத்தின் உணர்வை நுகர்ந்து வாழ்க்கையில் வரும் தீமைகள் புகாது தடுத்து இந்த வாழ்க்கையை அருள் வாழ்க்கையாக வாழ முடியும்.

1.உங்களுக்கு மன பலம் கிடைக்கின்றது.
2.உடல் பிடிப்பு வராது... செல்வத்தின் பிடிப்பும் அதிகமாக வராது.
3.அந்தப் பிடிப்பு வராது என்றாலும்... செல்வம் நம்மைத் தேடிக் கொண்டு வரும்... மகிழ்ச்சி வரும்...!
4.ஒளியான உணர்வைக் கொண்டு நம்மை காக்கும் சக்தியாக வளரும்

ஆனால் உடலை காக்க வேண்டும் என்ற எண்ணத்தில் "எனக்கு இப்படி ஆகிவிட்டதே..." என்று வேதனைகளைச் சுவாசித்தால் அந்த வேதனை வந்த பின் மகிழ்ச்சி பெறும் உடலாகக் கூட நாம் காண முடியாது.

அடிக்கடி "துருவ நட்சத்திரத்தின் ஒளி கொண்டு" நம்மைக் காத்திடும் சக்தியாக நாம் கொண்டு செல்ல வேண்டும்... பேரொளியாக நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

குரு அருள் உறுதுணையால் மகரிஷிகளின் அருள் சக்தியைப் பெறுவீர்கள். உங்கள் பேச்சு மூச்சும் புனிதம் பெறும்... இந்த உலகையும் நீங்கள் காக்க முடியும்.

ஏனென்றால்
1.சிறுகச் சிறுக அந்தத் துருவ நட்சத்திரத்தின் சக்தியை எடுத்து அதைப் பல லட்சம் பேர் குவிக்கப்படும் பொழுது
2.துருவத்தை நோக்கி ஒன்று சேர்த்து அந்தப் பகுதியில் ஓட்டையாகப்

பிளந்திருந்ததை நாம் அடைக்க முடியும்.
3.விஷத் தன்மைகள் பூமிக்குள் புகாது தடுக்கவும் முடியும்

எப்படி நம் ஆன்மாவில் தீமைகள் புகுவதைத் தடுத்து ஒரு பாதுகாப்புக் கவசம் உருவாக்குவது போன்று நம் எண்ணத்தைக் கொண்டு இந்த பூமிக்குப் பாதுகாப்பாக இருக்கும் "ஓசோன் திரை கிழிந்ததையும்" நாம் அடைக்கவும் முடியும்.


ஏனென்றால் அணு குண்டுகளும் கதிரியக்கங்களும் பல விஷமான உணர்வுகளும் பரவியதால் ஓசோன் திரை கிழிந்தது அதே சமயத்தில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நம் எண்ணத்தை அந்தத் திசை நோக்கிச் செலுத்தினோம் என்றால் அது நாளடைவில் நல்லதாகும்.

1.குருநாதர் இட்ட கட்டளைப்படி நம் அனைவரது எண்ணங்களையும் ஒருங்கிணைத்து
2.அந்தத் துருவத்தை எண்ணி குறித்த காலத்தில் அது அடைபட வேண்டும் என்று செயல்படுத்த முடியும்.



துருவ நட்சத்திரத்தின் ஒளி கொண்டு
நம்மைக் காத்திட வேண்டும்

துருவ நட்சத்திரத்தின் சக்தியைப் பல லட்சம் பேர் எடுத்துத் துருவத்தில் குவிக்கப்படும் போது அப்பகுதியில் ஓட்டையானதை நாம் அடைக்க முடியும். விஷத் தன்மைகள் பூமிக்குள் புகாது தடுக்கவும் முடியும். நம் ஆன்மாவிற்குப் பாதுகாப்புக் கவசத்தை உருவாக்குவது போல் "ஓசோன் திரை கிழிந்ததை" நாம் அடைக்கலாம்.



“பிராணன்...” (சுவாசம்) பற்றி ஞானிகள் சொன்னதன் உண்மை நிலைகள்

பிராணயாமம் என்று சொல்லி மூச்சை எடுத்து உடலுக்குள் அதிகமாகச் செலுத்தப்படும் பொழுது உடலில் எதன் வேக உணர்வுகள் அதிகமாகின்றதோ அதைக் கவர்ந்து விடும்.

சுவாசித்த உணர்வுகள் உயிரிலே ஃபில்டர் பண்ணக்கூடிய சளி அதை வடிகட்டும்... அதிகமானால் வெளியே தள்ளிவிடும். வடிகட்டிய நிலையில் தான் வருகின்றது.

ஆனால் சுவாசித்து உள்ளே செலுத்தும் போது உந்து விசை அதிகரிக்கப்படும் பொழுது சுவாசப் பைகள் மூலம் உடலுக்குள் அதிகமாகச் சென்று விட்டால் ஒரு பக்கம் உணர்த்தச் செய்து... செயல்படும் போது நாளடைவில் இந்த உறுப்புகளில் பலவிதமான இருமல்கள் வரும்.

1.இதே உணர்வு நுரையீரலில் அழுத்தப்பட்டு உடல் முழுவதற்கும் இந்த வாயுவை உந்தப்படும் பொழுது
2.வாயு மண்டலத்தை இழுத்துச் செல்லும் நரம்பு மண்டலங்களுக்குள் சென்றவுடன்
3.இவர்கள் எதை எடுத்தார்களோ அதன் உணர்வின் தன்மை விஷத்தன்மையாக மாறிக் கடு கடு... கிடு கிடு.. என்று ஓடும்.

பிராணயாமம் செய்பவர்களைக் கடைசியில் கேட்டால் இதையெல்லாம் சொல்வார்கள்.

பிராணயாமம் செய்வதை இவர்கள் கற்றுக் கொள்ளலாம். ஆனால் வேதனைப்படும் நேரங்களில் என்ன செய்கிறது...? என்று எடுத்துச் சுவாசித்துப் பார்ப்பார்கள். அந்த உணர்வு உடலுக்குள் வரும் பொழுது வேதனையை உருவாக்கும் உணர்வின் தன்மை வந்து விடும்.

பிராணயாமத்தின்படி இதை எடுத்துப் பிறருடைய உணர்வுகளைச் சுவாசித்துப் பார்ப்பது சரம்.
1.அவர் உணர்வுக்கும் நம் உணர்வுக்கும் என்ன மோதுகின்றது...?
2.அவர் என்ன நினைக்கின்றார்...? அவர் உடலில் என்ன இருக்கின்றது...? என்ற நிலையைச் சுவாசித்துப் பிராணயாமம்
3.உயிரிலே பட்டு உணர்ந்து கொண்டாலும் பிறருடைய எண்ணங்களைக் கவர்கின்றது.

இதைக் கவர்ந்து இந்த உணர்வின் தன்மை உடலுக்குள் சென்றால் வாயு மண்டலங்களில் விஷத்தன்மையாகிக் கை கால் குடைச்சல் என்ற நிலையாகிவிடும்.

இதே உணர்வுகள் வாயுவாக நேரடியாகச் சென்று ரத்த நாளங்களில் கலப்பதற்கு முன் சுவாசப்பை வழி சென்று உடலுக்குள் விஷத்தைப் பரப்புவது தான் இதெல்லாம்.

குருநாதர் இதை எல்லாம் தெளிவாகக் காட்டுகின்றார்.

நேரடியாகச் சுவாசித்து (வழக்கமான வழி) உமிழ் நீராகி அந்த உமிழ் நீர் உணவுடன் கலந்து அந்த உணவுக்குள் உயர்ந்த நிலை ஆன பின் இரத்தமாக மாறி
1.அந்த ரத்தத்தின் தன்மை வரப்படும் பொழுது எந்தக் குணத்தை எண்ணுகின்றோமோ அந்த உணர்வு வழி பிராணயாமம்.
2.அந்த உணர்வுகள் பிராணனை உருவாக்கி அதன் வழி நமக்குள் உருவாக்குதல் வேண்டும் என்பதுதான் முறைகள்.

இவர்கள் சொன்ன மாதிரி வடகிளை தென்கிளை என்று சுவாசித்து வடிகட்டும் திறனை இழந்து சூரிய கலை சந்திர கலை என்று அல்ல.

நுரையீரலில் பம்ப் ஒரு பக்கம் பிஸ்டன் இருக்கின்றது இன்னொரு பகுதியில் அடைக்கின்றது. சுவாசப்பைகளில் ஒன்று இழுத்துத் தள்ளியபின் அடைக்கும். மீண்டும் அது இழுத்து அதைத் தள்ளும்.

ஆகவே நமக்குள் பம்ப் செய்யும் முறைகளைப் பற்றி அந்த ஞானிகள் சொல்லி இருந்தாலும் அடைத்து இழுக்கிறது என்றால் "இவர்கள் மூக்கை அடைத்து இப்படிச் செய்கின்றார்கள்..."

கீதா உபதேசத்தினைக் கண்ணன் கூறுகின்றான் என்பார்கள். கண்களால் பார்க்கும் பொழுது எதன் உணர்வை நுகர்கின்றோமோ உயிரிலே படுகிறது. அப்போது கண்ணன் குருச்சேத்திரப் போரை வழிநடத்துகின்றான்.

உதாரணமாக...
1.ஒரு தீமையான உணர்வை நுகர்ந்தால் நம் கண் கருவிழி ருக்மணி அதைப் பதிவாக்குகின்றது.
2.கண்ணுடன் சேர்ந்த காந்தப்புலன் தீமையான உணர்வைக் கவர்கின்றது.

அது கவர்ந்து கொண்ட பின் உயிரிலே பட்ட பின் நமக்குள் இருக்கும் நல்ல குணங்கள் வலு குறைகின்றது. தீமையான உணர்வு உயிரிலே மோதியபின் உடலுக்குள் இருக்கும் உயிரே அதற்குக் குருவாக இருக்கின்றது.

அதைத்தான்
1.கண்கள் தீமை என்ற உணர்வை எடுத்து உயிரிலே பட்டுத் தீமை என்று அறிவிக்கச் செய்கின்றது.
2.கண்ணால் பார்த்தாலும் உணர்வால் உயிரிலே மோதும் பொழுது தான் கண்ணனின் சகோதரி திரௌபதை.

எதைக் கொடுத்தாலும் அதை வழிநடத்திச் செல்லக்கூடிய உயிர்... திரௌபதை என்று ஏனென்றால் கண்ணால் பார்க்கின்றோம் உயிரால் உணர்கின்றோம் என்பதைக் கண்ணனின் சகோதரி... திரௌபதை.

கண்கள் பார்ப்பதால்... அதை உணர்வால் நமக்குள் அறிவிக்கின்றது என்பதை நாம் உணர்வதற்காக இவ்வாறு செய்தனர்.

எல்லாவற்றிற்குமே காரணப் பெயரை வைத்து ஒவ்வொரு நிலைகளிலும் நம் உணர்வுகள் என்ன செய்கின்றது...?
1.உயிரின் இயக்கமும் கண்களின் இயக்கமும் உடலின் இயக்கமும் என்ற நிலைகளில்
2.இந்த உணர்ச்சிகளால் எப்படி இயங்குகின்றது...? என்ற நிலையை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்குச் சாஸ்திரங்கள் பல உண்டு.

ஆனால் அதைத் தவறான வழிகளில் இன்று மனிதனின் வாழ்க்கைக்காக "எத்தனையோ நீடித்த நாள் வாழலாம்..." என்று பிராணயாமம் செய்து தீமையின் நிலைகள் கொண்டு மீண்டும் எதை வளர்த்துக் கொண்டோமோ அதற்குத்தக்க "இன்னொரு உடல் பெறுவது திண்ணம்..."

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

யாம் (ஞானகுரு) உபதேசிப்பதை எல்லாம் புரியவில்லை என்று யாரும் எண்ணி விடாதீர்கள்.

குழந்தைகளுக்கு ஒன்றும் தெரியாது... ஆனால் சந்தர்ப்பத்தால் டிவியைப் பார்த்து அதற்குள் பதிவாகி விட்டால் அதன் உணர்வின் நினைவு கொண்டே குழந்தைகள் பாடவும் ஆடவும் செய்யும்.

மிருகங்களுக்கும் தெரியாது... ஆனால் நாம் சொல்லும் உணர்வுகள் பதிவாகி விட்டால் பின்... இங்கே வாடா...! என்றால் வருகின்றது போ...! என்றால் போகின்றது. நாயோ பூனையோ பெரிய மிருகங்கள் கூட மனிதனுடைய உணர்வைப் பாய்ச்சிய பின்... நம் பார்வையில் வைத்துக் கொண்டால் அதற்குத் தக்க அந்த மிருகங்களும் இயங்குகிறது.

இதைப் போன்று தான்
1.அருள் ஒளிகளை... மெய் ஞானிகள் உணர்வுகளை உங்களுக்குள் பதிவாக்குகின்றேன்
2.அந்தப் பதிவான உணர்வுகளை நினைவு கொண்டு... உங்கள் எண்ணத்தால் அதைப் பெற முடியும்... தீமைகளை அகற்ற முடியும்.

உங்களை நீங்கள் நம்ப வேண்டும்...!

காரணம்... எண்ணியதை இயக்குவதும் உங்கள் உயிரே...! எண்ணியதை உடலாக்குவதும் உங்கள் உயிரே...! ஆகவே துருவ நட்சத்திரத்தின் பேரருளை நீங்கள் பெறுங்கள்.

எத்தகைய விஞ்ஞான விஷத்தன்மைகள் உலகில் பரவி இருந்தாலும் அருள் உணர்வின் தன்மை பதிவான பின் தீமையை ஈர்க்கும் நிலைகள் மறந்து... பதிவு செய்த உணர்வு கொண்டு அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெருக்கினால் நமக்குள் விஷத் தன்மை வராதபடி தடுக்க முடியும்.

ஆகவே... இருளான உலகிலிருந்து நீங்கள் மீளுங்கள். இருளிலிருந்து அனைத்து மக்களும் மீள வேண்டும் என்று "ஒன்று சேர்த்த உணர்வை" வளர்த்துக் கொள்ளுங்கள். இந்தக் காற்று மண்டலத்தில் பரவி இருக்கும் நச்சுத்தன்மைகளை அகற்ற... அதற்குண்டான வலிமையைப் பெறுங்கள்.
1.கூட்டமைப்பாக அருள் உணர்வைப் பெருக்கிக் கொள்ளுங்கள்
2.அந்த உணர்வின் அதிர்வுகளை நாம் அனைவரும் ஒன்று சேர்த்து இந்தப் பூமியில் பரப்புவோம்.
3.நமக்கு முன் பரவிருக்கும் நச்சுத்தன்மைகளை அகற்றும் சக்தியாக நாம் செயல்படுவோம்.

அப்போது தீமை செய்யும் உணர்வுகளை நாம் ஈர்க்க மறுக்கப்படும் போது சூரியனுடைய காந்த சக்தி அதைக் கவர்ந்து மேலே கொண்டு சென்றுவிடும்.

அதே சமயத்தில் விஞ்ஞான அறிவில் வந்த தீமைகளையோ அசம்பாவிதங்களையோ கொலைகளையோ கேட்டறிந்த உணவுகள் நமக்குள் அணுவாக உருவாகாதபடி... காலை துருவ தியானத்தில் அந்த அருள் ஒளி பெற வேண்டும் என்று வலுவாக்கிக் கொள்ளும் ஒரு பழக்கத்திற்கு நாம் வர வேண்டும்.

1.துருவ நட்சத்திரத்தின் சக்தியை நாம் அனைவரும் ஒன்று சேர்த்து இழுக்கப்படும் பொழுது

2.காலை ஆறு மணிக்கெல்லாம் நாம் ஈர்க்க மறுத்த தீமை செய்யும் உணர்வுகளைச் சூரியன் கவர்ந்து மேலே எடுத்துச் சென்று விடுகின்றது.

எந்தச் சூரியனிலும் சிக்காது இருப்பதை... வெகு தொலைவில் இருக்கும் "வால் நட்சத்திரம்" என்று சொல்வதை... சூரியன் கவரப்படும் பொழுது அதை எடுத்து எவ்வாறு மாற்றிக் கொள்கின்றதோ... அதைப் போல் மனிதர்களாக இருக்கும் நாம் "தீமைகளை ஈர்க்கத் தவறினால்" அதைச் சூரியன் கவர்ந்து சென்று தனக்குள் இருக்கும் உணர்வு கொண்டு அதை மோதி அந்த நஞ்சினைக் கரைத்து "மாற்றுப் பொருளாக" உண்டாக்கி விடுகின்றது.

குருநாதர் காட்டிய அருள் வழியில் ஒவ்வொரு மனிதரும் ஆறாவது அறிவால் செயல்படும் உணர்வுகள் கொண்டு இந்த வாழ்க்கையில் தெளிந்த மனதுடன் வாழ்வோம்.

இந்த உடல் நமக்குச் சொந்தம் அல்ல... உடலால் தேடிய செல்வங்களும் சொந்தமல்ல.

1.இந்த மனித உடலில் நாம் தேடும் அருள் உணர்வுகளே நமக்குச் சொந்தமாகின்றது... இருளை அகற்றுகின்றது.

2.நமது வாழ்க்கையில் மகிழ்ச்சி ஊட்டும் சக்தியாக வளர்கின்றது

3.அந்த மகிழ்ச்சி என்ற உணர்வுகளை நமக்குள் சேர்த்து இனி அடுத்து என்றும் பேரானந்த நிலை என்ற

4.பெருவீடு பெருநிலை என்ற பெருவாழ்வு என்ற நிலை அடைய "இந்த மனித உடல் தான் சிறந்த இடம்..."

5.இதிலிருந்து தான் அந்த உயர்ந்த சக்திகளைப் பெற முடியும்

குரு காட்டிய அருள் வழியில் பேரின்பத்தைப் பெறுவோம்... பெரு வாழ்வாக வாழ்வோம்.



யாம் உபதேசிப்பது புரியவில்லை என்று எண்ணுவதற்கு மாறாக... அதைப் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்திற்கு வாருங்கள். பதிவின் நினைவு கொண்டு மெய் ஞானிகள் அருள் சக்திகளைப் பெற்றுத் தீமைகளை அகற்ற முடியும்.



யாம் உபதேசிக்கும் உண்மைகளை நீங்கள் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்

உங்களுக்குள் ஞானிகள் உணர்வுகளைப் பதிவு செய்கின்றோம்.
1.யாம் உபதேசிக்கும் உண்மைகளை நீங்கள் பிறருக்கு எடுத்துச் சொல்ல

வேண்டும்.
2.அந்த நேரத்தில் உங்களுக்குள் அந்த உண்மையின் உணர்வுகள் வளர்ச்சியாகும்.

யாம் சொன்னதை நீங்கள் கேட்டீர்கள். எது தீமை...? எது நன்மை...? என்பதை அறிந்து கொண்டீர்கள். எல்லோருக்கும் இதை எடுத்துச் சொல்லுங்கள். கோவிலுக்குச் சென்றால் எப்படி வணங்க வேண்டும் என்று வழிகாட்டுங்கள்...?

தாய் தந்தையரைத் தெய்வமாக வணங்குங்கள். குறைகள் இருந்தால் அவர்கள் மகரிஷிகளின் அருள் சக்தி பெற வேண்டும்... அவர்கள் ஞானியாக வேண்டும்... நல்லவனாக வேண்டும் என்ற உணர்வைச் சொல்லிப் பழகுங்கள்.

அவர்கள் சொல்லும் கஷ்டத்தைக் கேட்டால் அது உங்களுக்குள் வளராதபடி அவர்களுக்கு ஞானத்தை ஊட்டித் தெளிவாக்குதல் வேண்டும்.

ஆகவே தியானத்தைக் கடைப்பிடிக்கும் நீங்கள்
1.உங்களை யாம் எப்படிக் குரு வழியில் சீர்திருத்தம் செய்கின்றோமோ இதைப் போல
2.மற்றவர்களுக்கு இந்த வாழ்க்கையின் உண்மை நிலைகளை எடுத்துக் கூறி அவர்களைத் தெளிவானவர்களாக நீங்கள் மாற்ற வேண்டும்.
3.ஞானிகளைப் போன்று மாற்றும் சக்தி உங்களுக்குள் வந்தால் தீமைகளை மாற்றி அமைத்து
4.நன்மையின் நிலைகளை உங்களுக்குள்ளும் விளையச் செய்ய முடியும்.

கஷ்டம் என்று மீண்டும் மற்றவர்கள் சொன்னால் "நாம் சொல்வதை அவர்கள் கேட்கவில்லையே..." என்று வாதத்திற்கும் போக வேண்டாம் வேதனைக்கும் போக வேண்டாம்.

1.எப்படியும் அவர்கள் பெறுவார்கள் என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
2.சந்தர்ப்பம் வரும் பொழுது அவர்களும் அதைப் பெறுவார்கள்.
3.அவர்கள் அதைப் பெறும் பொழுது அந்த மகிழ்ச்சி உங்களுக்குக் கிடைக்கும்.

நான் சொல்லியிருந்தோம்... இன்று அவர்கள் அதை உணர்ந்து வந்து விட்டார்கள். அந்தச் சந்தர்ப்பங்கள் கஷ்டம் என்று வரும் பொழுது நல்வழியில் வழி நடத்தும்.

ஆக மொத்தம் கடவுள் செய்வார் சாமி செய்வார் சாமியார் செய்வார் என்று மற்றவர்களை எண்ணாதபடி உங்களை நீங்கள் நம்புங்கள்.

நீங்கள் எதை நினைக்கின்றீர்களோ அந்த உணர்வினை உங்கள் உயிர் உருவாக்கும். மற்ற யாரும் செய்து கொடுக்க மாட்டார்கள். நீங்கள் எண்ணியதை உங்கள் உயிர் தான் செயல்படுத்திக் கொடுக்கும்.

1.நான் (ஞானகுரு) செய்வேன் என்றால்... நல்லதாக வேண்டும் என்று சொல்லும் பொழுது எனக்குள் அந்த நன்மையின் தன்மை உருவாகின்றது.
2.அதே போல் நல்லது பெற வேண்டும் என்று நீங்கள் ஏங்கினால் உங்கள் உயிர் தான் அதை உருவாக்கிக் கொடுக்கின்றது.

வேறு யாரும் உருவாக்குவதில்லை...!

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

திட்டியவர்களைப் பற்றியோ வேதனைப்படுவோரைப் பற்றியோ உங்களுக்குள் பதிவானால்
1.அவர்களை நினைக்கும் போது கோபம் வருகின்றது
2.அதே சமயத்தில் எனக்குத் துரோகம் செய்தான் பாவி என்று கோபத்துடன் வெறுப்புடன் எண்ணினால் அங்கே புரை ஓடுகின்றது
3.நன்மை செய்தவனைப் பற்றி உயர்வாக எண்ணினால் அங்கே விக்கலாகி அவனுக்கு நன்மை ஆகின்றது... நமக்கும் நல்லதாகிறது.

பாசத்தால் தன் குழந்தையை எண்ணுகின்றோம். அவன் வெளிநாட்டில் இருக்கின்றானே... அவன் என்ன செய்கின்றான்..? என்று பதட்டத்துடன் குழந்தையைத் தாய் வேதனையான நிலையில் எண்ணிப் பார்க்கப்படும் பொழுது
1.கெட்டிக்காரனாக இருந்தாலும் அங்கே அவன் சிந்திக்கும் திறன் இழந்து அவன் தோல்வியைத் தழுவும் நிலை வந்து விடுகிறது.
2.தாய் வேதனையுடன் எண்ணும்போது இந்த உணர்வு தாக்கப்பட்டு அவன் நடந்து சென்று கொண்டிருந்தால் எதிரில் வரும் வாகனங்களை அறியாதபடி விபத்துகள் ஏற்பட்டுவிடும்
3.அல்லது வாகனத்தை ஓட்டிச் சென்றால் தாய் வேதனையாக எண்ணிய உணர்வுகள் குறுக்காட்டி... எதிரில் வரும் வாகனத்துடன் மோதி விபத்தாகிவிடும்.

இப்படி... மனிதனுக்கு மனிதன் நாம் தொடர்பு கொண்டு தான் வாழுகின்றோம். அதிலே நம்மை அறியாது வரும் தீமைகளிலிருந்து மீள வேண்டும் அல்லவா. அதற்குண்டான சிந்தனையாக உங்களுக்கு விட்டு விடுகின்றேன்.

“குருநாதர் துருவ நட்சத்திரத்தின் சக்திகளை எம்மை (ஞனாகுரு) எப்படிப் பெறச் செய்தாரோ” அதே போல் அந்த உணர்வின் தன்மையைப் பதிவாக்கி உங்களைக் காத்திடும் சக்தியாக அது வளர வேண்டும் என்பதற்குத்தான் இதைச் சொல்கிறேன். இந்தப் பதிவை நீங்கள் நினைவாக்கினால் உங்கள் உணர்வே உங்களைக் காக்கும்.

அகஸ்தியன் தீமைகளை வென்று இந்த மண்ணுலகில் நஞ்சினை வென்று உணர்வினை ஒளியாக மாற்றிக் கணவனும் மனைவியும் இரு உயிரும் ஒன்றென இணைந்து நம் பூமியின் துருவ எல்லையில் துருவ நட்சத்திரமாக வீற்றிருக்கின்றனர்.

அதிலிருந்து வெளி வரும் ஒளிக்கற்றைகளைச் சூரியனின் காந்த சக்தி கவர்ந்து அதை அலைகளாக மாற்றுவதும்... நம் பூமியின் துருவப் பகுதி வழியாக நாம் வாழும் பகுதிக்குள் கொண்டு வருவதும்... அதை நாம் இப்போது நுகர்வதும் ஓர் நல்ல சந்தர்ப்பம் தான்.

கடலுக்குள் செல்வோர்...
1.இரவாகி விட்டால் இந்தத் துருவ நட்சத்திரத்தினைப் பார்த்துத் தான் பாதைகளை அறிந்து செல்வார்கள்
2.துருவ நட்சத்திரம் எந்தத் திசையில் தோன்றுகிறதோ வடக்கு தெற்கு கிழக்கு என்ற நிலைகள் என்று திசைகளை அறிந்து செல்வார்கள்.

நிலப்பகுதியில் உள்ளது போன்று அங்கே ரோடு இல்லை... வழி காட்டி இல்லை. துருவ நட்சத்திரத்தைப் பார்த்துத் தான் அவர்கள் போக வேண்டிய திசைகளில் செல்வார்கள். நாம் எந்த ஊரிலிருந்து வந்தோம்...? எங்கே செல்ல வேண்டும்...? என்பதைக் கப்பலில் செல்வர் அனைவரும் இதை வைத்துதான் செயல்படுத்துகின்றனர்.

இன்று விஞ்ஞான அறிவு கொண்டு வடக்கு தெற்கு என்ற நிலையில் பாதரசத்தை வைத்து ஈர்க்கும் சக்தி கொண்டு தெற்கு வடக்கு என்ற நிலையில் இயந்திரத் துணை கொண்டு காணுகின்றார்கள்.

ஆனால் அன்று இயந்திரத் துணை இல்லாத பொழுது
1.துருவ நட்சத்திரத்தினை உற்று நோக்கி
2.அதையே எல்லையாக வைத்து வாழ்ந்தவர்கள் தான் பலர்
3.துருவ நட்சத்திரம் தான் அன்று அவர்களுக்கு வழிகாட்டி...!


ஏனென்றால் உங்கள் வாழ்க்கையில் எத்தனையோ வினாக்கள் தோன்றுவதை... அதற்குண்டான விடைகள் கிடைக்க வேண்டும்... எதிர்படும் தீமைளிலிருந்து விடுபட்டு உங்களுடைய சிந்தனைகள் தெரிந்து தெளிவாக செயல்பட வேண்டும்... தெளிந்த மனதாக மாற்றிப் பிறவி இல்லா நிலை அடைவதற்குத் தான் இதைக் காட்டுவது.

தீமை என்ற உணர்வுகள் மோதி அதனின் இயக்கமாக நீங்கள் மாறிடாது உங்கள் உணர்வை உங்களை இயக்கும். உங்களில் அது வளரும் அந்த தன்மை பெற வேண்டும் இனி வரும் எத்தகைய தீமையில் இருந்தும் உங்களை மீட்டிடும் சக்தி நீங்கள் பெற வேண்டும் என்பதற்குத் தான் அந்த துருவ நட்சத்திரத்தின் உணர்வைத் திரும்பத் திரும்ப உங்களுக்குள் பதிவாக்குவது

வானை நோக்கி நீங்கள் உற்றுப் பார்க்கும் பொழுது அந்தத் துருவ நட்சத்திரத்தில் இருந்து வரும் பேரருள் பேரொளியை ஏங்கிப் பெற முடியும்.



அகஸ்தியன் துருவனாகி துருவ மகரிஷியாகி துருவ நட்சத்திரமாகும் போது... அவன் நஞ்சினை ஒடுக்கி அதை எப்படி ஒளியாக மாற்றினானோ அவன் கண்டறிந்த அறிவுகள் அனைத்தையும் நாம் பெற முடியும். கற்று அல்ல... இந்தப் பதிவின் மூலமாக...! அதற்குண்டான சந்தர்ப்பத்தைத் தான் இப்பொழுது உருவாக்குகின்றோம்.



இந்த உடலையும் உயிரையும் “குருவே எப்போதும் வழிநடத்த வேண்டும்...”

குருநாதர் எம்மைக் காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று தாவர இனங்கள் எவ்வாறு விளைகின்றது...? உயிரணுக்கள் உயிரினங்கள் எவ்வாறு விளைகின்றது...? கோள்கள் மற்ற சத்துக்களைக் கவர்ந்து எவ்வாறு வளர்கின்றது...? என்ற நிலையைச் சாப்பாடு இல்லாதபடி காட்டிலே அமர்த்தி அதை எல்லாம் அறியும்படி செய்தார்.

விஞ்ஞானிகள் இயந்திரத்தின் துணை கொண்டு பல நிலைகளைக் கண்டு கொண்டே இருக்கின்றார்கள். ஆனால் முழுமையும் அவர்கள் காணவில்லை.

அன்று மெய் ஞானிகள் தனக்குள் வளர்த்துக் கொண்ட உணர்வின் ஆற்றலின் துணை கொண்டு
1.நம் குருநாதரும் அதை அறிந்து... அதை நாம் அறியும் நிலைக்கு எமக்குள் அதைப் பதியச் செய்கின்றார்.
2.பதிந்த உணர்வினை நினைவு கொண்டு நான் விண்ணை நோக்கும் பொழுது விண்வெளியில் நடக்கும் அதிசயங்களை உணரும்படி செய்கின்றார்.
3.சில நேரங்களில் காட்சியாகவும் பெறும்படிச் செய்கின்றார்.

குருநாதர் காட்டிய அருள் வழியில்
1.ஒவ்வொரு ரூபத்திலும் அவர் பதிய வைத்த உணர்வை... ஏட்டை நினைவு கொள்ளும் பொழுது இதை உணர்த்தி
2.அவரே தான் இந்த உடலை வழி நடத்துகின்றார்... ஏனென்றால் என்னுள் இருந்து அல்ல...!

நாடாக்களில் பதிவு செய்தது போன்று அவர் உணர்வுகள் எனக்குள் பதிவானது...!

1.அதை நான் எண்ணும் போது அந்த உணர்வுகள் இயக்கப்பட்டு அதைப் பெறப்பட்டு
2.அதை எல்லாம் நீங்கள் பெற வேண்டும் என்று அவர் செய்த உணர்வைத் தான் நான் செய்கின்றேன்.
3.அந்த உணர்வு தான் என்னை இவ்வாறு செயல்படுத்த வைக்கின்றது.

ஆகவே மாமகரிஷி ஈஸ்வராய குருதேவரின் அருளை நாம் அனைவரும் பெறுவோம். அவர் காட்டிய அருள் வழியில் செல்வோம்.

இந்த மனித வாழ்க்கையில் அருள் ஞானிகள் காட்டிய அருள் வழியில் செல்வோம். இந்த உடல் வாழ்க்கையிலே மகிழ்ச்சி பெறச் செய்வோம். நாம் பார்க்கும் அனைவரையும் மகிழச் செய்வோம். மகிழ்ந்த உணர்வுடனே வாழ்வோம்.

1.என்றும் பேரானந்த நிலை பெற்ற அந்த மகரிஷிகளுடன் ஒன்றி வாழ்வோம்
2.அவர்களுடன் ஒன்றி வாழும் நிலையை உருவாக்குவோம்... அவர்களுடனே வாழ்வோம் என்று பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

உங்களிடம் இதற்கு முன்பு படிப்படியாகச் சிறுகச் சிறுக சொல்லிக் கொண்டு வந்தேன்... இப்பொழுது விளக்க உரைகளைக் கொடுக்கின்றேன். பூரணமாகச் சொல்ல வேண்டும் என்றால் அதற்குண்டான கால நேரம் இல்லை.

1.குருநாதர் பதிவு செய்தது எண்ணிலடங்காதது.
2.அனைத்தையும் நாம் முழுமையாக அறிய வேண்டுமென்றால் இந்த மனித உடலுக்கு ஆயுள் பத்தாது.

அவ்வளவு பெரிய அண்டத்தின் உணர்வுகளைப் பதிவு செய்துள்ளார். அதை எல்லோரும் நீங்கள் பெற வேண்டும் என்ற நிலையில் அவ்வப்போது துணுக்குத் துணுக்காகக் கொடுத்து அந்த நினைவுகளை உங்களுக்குள் ஊட்டுகின்றோம்.

1.அவ்வாறு ஊட்டி உங்கள் உணர்வை ஒளியாக்கி அதனை எண்ணமாக்கி
2.உங்களுக்குள் இயக்கும் சக்தியாக அதைக் கொண்டு வருகின்றேன்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்
நமது உயிரின் தன்மை இயக்கப்படும் போது பிறரின் உடலிலிருந்து வரக்கூடிய உணர்வுகளைச் (நல்லதோ கெட்டதோ) சூரியனுடைய காந்த சக்தி அதைக் கவர்ந்தாலும்
1.கண்ணின் புலனறிவு நமது ஆன்மாவாக இங்கே மாற்றுகின்றது.
2.இதைத் தான் நாம் நட்சத்திரங்கள் என்று சொல்வது.

எதன் தன்மை வருகின்றதோ ஒன்றுக்கொன்று கலவையாகும் பொழுது அந்தக் கலந்த உணர்வுடன் நாம் சொல்வோம் “எனக்குப் பதட்டாமகிறது என்று...!”

தீமை செய்கின்றான் என்று அவன் உடலிலிருந்து வரக்கூடிய உணர்வுகள்... கண் அவனைப் பதிவாக்கி அந்த உணர்வின் தன்மையைத் தனக்குள் இழுக்கப்படும் பொழுது... அதாவது துருவம் எந்தப் பகுதியில் இருக்கின்றதோ அதனின் நேர் வரிசையில் தான் இழுக்கும்... அதே போன்று
1.நமது கண்ணின் பார்வை எதன் பாதையில் இழுக்கின்றதோ நாம் எண்ணிப் பார்க்கும் பொழுது
2.அதை இழுக்கும் அந்தப் பகுதி வழியாக அதன்வழி பதிவான பின் அந்த உணர்வுகள் ஆன்மாவாக மாற்றுகின்றது.

எந்த மனிதனை நாம் உற்றுப் பார்க்கின்றோமோ அந்த உணர்வு அந்த உடலில் இருந்து வெளி வருவதை இழுத்து நம் ஆன்மாவாக நம் ஈர்ப்பு வட்டதிற்குக் கொண்டு வந்து சேர்ப்பிக்கின்றது.

அப்படிச் சேர்ப்பிக்கும் போது பல விதமான உணர்வும் உள் அடங்கி உணர்வுகள் எதிர்த்து வந்த பின் கலக்கங்கள் வருகின்றது.
1.நல்ல உணர்வுகளும் அவருடைய தீமையான உணர்வுகளும் இங்கே கலக்கப்படும் பொழுது
2.நுகர்ந்த பின் நமக்குள் பதட்டம் ஆகின்றது.

இது எல்லாம் இயற்கையில் நடக்கக் கூடிய நிகழ்ச்சிகள் தான்.

அகஸ்தியன் இந்த உண்மைகளை உணர்ந்தவன். அவன் தன்னுடைய வளர்ச்சியின் பருவத்தில் வரப்படும் போது அவனுக்குத் திருமணத்தைச் செய்து வைக்கின்றார்கள்.

திருமணமான பின் தன்னுடைய மனைவிக்குத் தான் பெற்ற உணர்வுகள் அனைத்தையும் செவி வழி ஓதுகின்றான். உண்மையின் இயக்கம் இதுதான்... இதையெல்லாம் நீயும் பார்க்க வேண்டும் என்று உணர்த்துகின்றான்.

அதைக் கேட்டறிந்த மனையாளும் அதை ஏற்றுக் கொண்டு அதே வழியில் வழி நடந்து வருகிறது.

கணவனால் கண்ட உண்மைகள் தனக்குள் வளர்ந்து அதையெல்லாம் தன் கணவன் பெற வேண்டும் என்று எண்ணுகிறது.

தான் சொன்ன உணர்வுகள் மனைவி கண்டுணர்ந்ததை அகஸ்தியன் தன் மனைவி மீண்டும் உயர வேண்டும் என்று இரு உணர்வுகளும் ஒன்றாகும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.
1.இதுவும் ஒரு சந்தர்ப்பம் தான்.
2.இவ்வாறு இருவரும் இணையப்படும் பொழுது உயர்ந்த உணர்வாக அங்கே வளருகின்றது.

காரணம் ஆண் பெண் என்ற செடிகள் இருந்தால்தான் அது விளைகின்றது... நல்ல பலனைக் கொடுக்கின்றது.

நட்சத்திரங்களிலும் ஆண் பெண் என்ற நிலைகள் தான் உண்டு. ரேவதி கார்த்திகை ரோகிணி என்று ஆண் பெண் என்ற நிலையில் வரப்படும் பொழுது... அது மின்னலாக உருவாகி சந்தர்ப்பத்தால் ஒன்றுடன் ஒன்று மோதிப் பல அணுக்களாக மாறினாலும்... எந்த நட்சத்திரத்தின் துகள்கள் எதனுடன் எது கலக்கின்றதோ... அதற்கொப்ப தான் வளர்ச்சியும் இயக்கங்களும்.

பெண்பாலின் நட்சத்திரம் ஆனால் அது மற்றொன்றைக் கவர்ந்து செடிகளையோ பாறைகளையோ வளர்க்கும் தன்மை வருகிறது. அதன் வழி வளர்ந்த பின் மற்றதுடன் கலந்து இந்த உணர்வு வளர்ச்சி பெறும் தன்மை வருகின்றது.

இதைப் போன்று தான் நமது உயிரும்...!

கார்த்திகை நட்சத்திரத்தின் தன்மை ஆண் பாலாக இருந்தாலும் ரோகிணி நட்சத்திரம் என்று வைத்துக் கொள்ளுங்கள் அதன் உணர்வின் துகள்கள் தூசிகள் மோதப்படும் பொழுது இந்த மோதலில் அதனைக் கண்டு இது அஞ்சி ஓடுவதும்... வியாழன் கோளிலிருந்து வரக்கூடிய சத்து "குரு" – விஷத்தன்மையான கதிரியக்கங்கள் வரும்பொழுது இதைக் கண்டு இது அஞ்சி ஓடுவதும் கார்த்திகை நட்சத்திரத்துடன் மோதும் பொழுது அதற்குத்தக்க மோதி "ஒன்றுக்கொன்று துடிப்பின் நிலைகள் வருகின்றது..."
1.துடிப்பின் நிலை வரும் பொழுது மற்ற கோளிலிருந்து வரும் தூசிகளை இதை ஈர்க்கும் சக்தி வருகின்றது
2.ஈர்க்கும் சக்தி வந்த பின் அது அடைபட்டுவிடுகிறது... அந்தத் துடிப்பின் நிலையே உயிர்...!

எந்தெந்தக் கோளின் தன்மை அடைபட்டிருக்கின்றதோ துடிப்பால் ஈர்க்கும் நிலை வரும் பொழுது... உராய்ந்து.. அதே உணர்வின் தன்மை தனக்குள் இணைந்து அது அணுவின் தன்மையாக உருவாக்கி... அதன் மலத்தின் தன்மை கொண்டு அந்த உணர்வுக்கொப்ப உடலை மாற்றி அமைத்து விடுகிறது.

இதைப் போல் இந்த உணர்வின் தன்மை உருவான இந்த நிலைகளை அன்று அகஸ்தியன் தெளிவாகத் தெரிந்து கொண்டான். இப்படித்தான் உயிர் உருவானது என்று...!

மற்ற துகளின் தன்மைகள் ஒன்றுடன் ஒன்று கலக்கப்படும் பொழுது எதன் ஈர்ப்புக்குள் வருகின்றதோ சூரியன் ஒளிக்கற்றைகளால் தாக்கப்படுகின்றது.

அந்த உணர்வு பொறியாக மாறி அதன் உணர்வுக்கொப்ப பாறைகள் விளைகின்றது என்பதை அகஸ்தியன் அறிந்த அந்த உண்மைகளை நாமும் அறிந்து கொள்வது நல்லது.

விஞ்ஞான அறிவில் எத்தனையோ பாட நிலைகளை புரட்டிப் பார்த்து அவர்கள் படித்துணர்கின்றார்கள். ஒரு இன்ஜினியரிங் என்றால் நான்கு வருடம் படிக்கிறார்கள் பௌதீகத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்... டாக்டர் என்ற நிலைக்கு வர வேண்டும் என்றால் அதற்கு ஐந்து வருடம் என்று படிக்கின்றார்கள்... தெளிவாகத் தெரிந்து கொள்ளும் நிலை வருகின்றது.

ஆனால் இப்பொழுது உபதேசிப்பது அனைத்தும்
1.நான் படித்து வரவில்லை... கற்று வரவில்லை...
2.குரு காட்டிய உணர்வின் தன்மையை மோதலில் உணர்வின் உணர்ச்சியாக நான் அறிய முடிகின்றது.

குரு எனக்குப் பதிவாக்கியது போன்று... அதை நான் அதை நுகர்ந்தது போன்று...
1.அந்த இயற்கையின் உணர்வுகள் உங்களுடன் மோதப்படும் பொழுது அதை அறிந்திடும் அறிவாக உங்களுக்குள் வரும்.
2.ஞானம் என்ற நிலையில் உங்களுக்குள் வளர்ச்சியாகும்


விஞ்ஞானத்தால் வரக்கூடிய எத்தகைய விஷத்தன்மையிலிருந்தும் மீட்டிட... அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை நுகர்ந்தால் அதைப் பிளந்து நமக்குள் அறிவின் தன்மை கொண்டு காக்கும் தன்மையாக உங்களை மாற்றி அமைக்கும்.

அத்தகைய நிலை நீங்கள் பெற வேண்டும் என்றும் வளர்ச்சியின் பாதையில் நீங்கள் வரவேண்டும் என்று தான் என்பதற்குத்தான் இதை உங்களுக்கு தெளிவாக ஊட்டிக் கொண்டு வருகின்றேன்.

மனிதனாக உயிர் உருவாக்கிய பின் பிறவி இல்லாத நிலையை நீங்கள் அடைய வேண்டும். அப்படிப்பட்ட நிலை அடைந்தவன் தான் அகஸ்தியன்.



நான் படித்து வரவில்லை கற்று வரவில்லை. குரு காட்டிய உணர்வின் தன்மையை மோதலில் உணர்வின் உணர்ச்சியாக நான் அறிய முடிகின்றது. குரு எனக்குப் பதிவாக்கியது போன்று... அதை நான் அதை நுகர்ந்தது போன்று... அந்த இயற்கையின் உணர்வுகள் உங்களுடன் மோதப்படும் பொழுது அதை அறிந்திடும் அறிவாக உங்களுக்குள் வரும். ஞானம் என்ற நிலையில் உங்களுக்குள் வளர்ச்சியாகும்.



“உணர்வு... உணர்வு...” என்று எண்ணிலடங்காத தடவை சொல்கிறோம்... அதனின் சூட்சமம்

விஞ்ஞான அறிவு கொண்டு கரண்டினை உற்பத்தி செய்கிறோம் என்றால் அதிலே எத்தகைய நிலைகளை நாம் இணைக்கின்றோமோ...
1.வண்ண விளக்குகள் என்றால் அந்தக் கலர் வெளிச்சம் வருகின்றது.

2.மற்ற கருவிகளுக்குள் எதிலே இணைத்து இயக்குகின்றோமோ அதற்குத் தக்கவாறு இயந்திரங்கள் இயங்குகின்றது.

இதைப் போன்றது தான் நமது உயிரின் வேலையும்.

இயக்கச் சக்தி கொண்டு கரண்டை உற்பத்தி செய்தாலும் நாம் எண்ணிய உணர்வின் சத்தை உயிர் தனக்குள் எடுத்து ஜீவ அணுக்களாக அதை உருவாக்கும் தன்மை வருகின்றது.

இவ்வாறு நமது உயிர் நம் உடலுக்குள் இருந்து செயல்பட்டு வரும் இந்த நிலையில்
1.நம்மை அறியாதபடி சூட்சுமத்தில் மறைந்திருக்கும் நிலைகளைக் கண் கொண்டு பார்க்க முடிவதில்லை.
2.நாம் நுகர்ந்தறிந்த உணர்வுகள்... நாம் சுவாசித்து உயிரிலே உராயப்படும் பொழுது தான் அந்த உணர்வின் தன்மையை "உடலில் காண்பிக்கின்றது..."

கண் கொண்டு திடப்பொருளைக் காணுகின்றோம்... அதனை அறிகின்றோம். ஆனால் கண்ணின் காந்தப்புலனறிவோ... ஒரு மனிதன் தவறு செய்யும் உணர்வுகள் வெளிப்படுவதைச் சூரியனின் காந்த சக்தி கவர்ந்தாலும்... கண்ணுடன் சேர்ந்த காந்தப்புலன் யாரை உற்று நோக்குகின்றோமோ அவனின்று வெளிப்படும் உணர்வின் தன்மையை நம்மை நுகரச் செய்கின்றது.

1.நுகர்ந்த உணர்வுகள் உயிரிலே பட்டபின் அகக்கண்ணாக உடலுக்குள் பரப்பி நம்மை அறியச் செய்கின்றது.
2.கண்ணால் திடப்பொருளைக் கண்டாலும்... உணர்வால் உடலுக்குள் அது சென்று அதை உணரும் தன்மை வருகின்றது.

அத்தகைய உணரும் தன்மை வந்தாலும் நாம் சுவாசித்த உணர்வின் தன்மை நம் உயிர் அதை இயக்கியே காட்டுகின்றது. இயக்கிய உணர்வின் தன்மை உடலில் அதை இணைத்து விடுகின்றது.

இவ்வாறு தான்
1.சூட்சமத்தில் இருப்பதைப் பார்க்க முடியவில்லை என்றாலும்
2.உடலாக திடமான பின்... அதைக் காண முடிகின்றது.

எப்படி...?

இன்று நல்ல மனிதர்களாக நாம் காணுகின்றோம் அடிக்கடி வேதனை சோகம் என்று வரப்படும் பொழுது இந்த உணர்வுகள் அவர்கள் உடலில் பாய்ந்து... அந்த உணர்வின் இயக்கத்தால் அவர்கள் உடல்கள் சோர்வடைவதும்... நோயால் வேதனைப்படுவதையும் நாம் காணுகின்றோம்.

இது திடப்பொருளில் காணும் நிலைகள் தான். அதாவது
1.வேதனையான உணர்வு என்பது கண்ணுக்குத் தெரியாத சூட்சமம் என்றாலும்
2.உடலுக்குள் விளைந்த பின் நோயாக அதைக் காண முடிகிறது.

ஒரு சிலர் நன்றாக இருப்பார்கள்... உடல் நலமாக இருப்பினும் சந்தர்ப்பத்தால் தான் எடுத்துக் கொண்ட வேதனையான உணர்வுகள் அதிகரிக்க தான் சுவாசித்த நிலைகள் அவர் உடலிலே நிம்மதியற்ற நிலைகளாக அது ஓடிக்கொண்டே இருக்கும்.

காரணம்... அவர் எடுத்துக் கொண்ட உணர்வுகள் அது எந்த வித்தின் தன்மையாக அடைகின்றதோ இந்த வேதனை என்ற நஞ்சு கொண்ட வித்து
1.குழம்பைச் சீராக வைத்து அதில் நஞ்சான நிலைகள் கலந்தால் அதனின் சுவைகள் மறைந்து விடுவது போல
2.நம் உடலில் எத்தனையோ உணர்வுகள் இந்த எண்ணங்களாகப் பதியச் செய்து அது உடலாக சதாசிவமாக்கி கொண்டிருக்கும் இந்த நிலையில்
3.எந்தெந்த குணங்கள் எண்ணங்கள் அதிகரிக்கின்றதோ அது கணங்களுக்கு அதிபதியாக முன் நிற்கின்றது.
4.காரணம் அது எல்லா குணத்தையும் அடைக்கிடும் நிலைகள்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

விஞ்ஞான அறிவால் இந்த உலகமே நச்சுத்தன்மை அடைந்து கொண்டுள்ளது. ரேடியோ டிவி ஒலி/ஒளிக் கற்றைகளாக அது பரவிக் கொண்டுள்ளது. மனிதன் உற்றுப் பார்த்துக் கேட்டறியும் போது தனக்குள் பதிவாகி விடுகிறது.

எப்படி...?

1.கெமிக்கல் கலந்த உணர்வுகளை இயந்திரத்துணை கொண்டு எலக்ட்ரிக் எலக்ட்ரான் என்று ஒலி/ஒளிக்கற்றைகளாக மாற்றுகின்றனர்..
அதன் மூலம் உருவங்களைப் பார்த்து அந்த உணர்வின் ஒலிக்கற்றைகளை நாம் செவி வழி கேட்டு

3.உணர்வின் தன்மை நுகரும் பொழுது நம் உடலுக்குள்ளும் இது கலந்து விடுகின்றது.

ஒளிக்கற்றைகள் பரவப்படும் பொழுது கண்ணுற்று இந்த உணர்வுகளை நுகர்ந்து அந்த உணர்வின் அறிவாகத் தெரிகின்றோம். “எந்தக் கெமிக்கலில் கலந்து” இதைச் சேர்த்தானோ நிச்சயம் இது இயக்கும்.

எதிலே கலக்கின்றதோ விஷத்தின் உணர்ச்சிகளாக அது இயக்கப்படும் பொழுது இரத்த நாளங்களிலே சிறுகச் சிறுக... சிறுகச் சிறுகச் சேருகின்றது.

நம் உடலில் உள்ள அணு செல்களுக்கும் இந்த உணர்வின் விஷத்தன்மைகள் கலந்து விடுகின்றது
1.அதிகமாக டிவி கம்ப்யூட்டரைப் பார்த்தவர்களுக்கு தலைவலி நிச்சயம் வரும்
2.அதே சமயத்தில் கை கால் குடைச்சலும் அதிகமாக இருக்கும்.
3.சில நேரங்களில் அதைப் பார்த்த பின் இந்த உணர்வின் அழுத்தங்கள் ஆகி மோதலாகும்போது
4.நடந்து போகும் போது சில பேருக்கு தலை சுற்றும்... கீழே தள்ளுகின்ற மாதிரிக் கொண்டு போகும்.

ஆனால் டாக்டரிடம் சென்றால் இரத்தக் கொதிப்பு... அது... இது... என்று எதையெதையோ பரிசீலனை செய்து காசைப் பறிக்கும் நிலைகள் தான் வரும்.

ஏனென்றால் டி.வி. கம்ப்யூட்டர் போன்ற எலக்ட்ரானிக் கருவிகளை “நெருங்கி உற்றுப் பார்க்கப்படும் போது” இத்தகைய நிலை வருகிறது.

பார்க்கலாம்...! ஆனாலும் பார்த்த பின் மாற்றி அமைக்க துருவ தியானத்தில் எடுத்துக் கொண்ட உணர்வு கொண்டு துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்ற உணர்வை நுகர்ந்து அந்த வீரியத்தைத் தணித்துப் பழகுதல் வேண்டும்.

சாதாரணமாக... அசுத்தமான இடங்களை நம் கையை வைத்துத் தான் அதைத் தூய்மைப்படுத்துகின்றோம். ஆனால் அதற்குப் பின் அந்தக் கையில் இருக்கக்கூடிய அழுக்கைத் துடைக்கின்றோம் அல்லவா.

அதைப் போன்று
1.நுகர்ந்தறிந்த உணர்வின் தன்மையை அதை எல்லாம் மாற்றி அமைத்த
2.அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வை நாம் நுகர்ந்து பழகுதல் வேண்டும்.

இயற்கையின் இயக்க நிலைகளை ஆதியிலே அகஸ்தியன் கண்டுணர்ந்தான். நஞ்சை வென்றிடும் சக்தி பெற்றான். விஷத்தை ஒடுக்கிடும் சக்தியாக அவன் வெளிப்படுத்திய உணர்வுகளைச் சூரியனின் காந்தப் புலன் கவர்கின்றது.

அவன் எதை எதை எல்லாம் கண்டுணர்ந்து அந்த அறிவின் உணர்ச்சியாக மாற்றி அமைத்தானோ அதன் உணர்வுகள் இங்கே பரவிக் கொண்டுள்ளது. அதை எல்லாம்
1.நமது குரு துணை கொண்டு அவர் ஊட்டிய அந்த உணர்வின் தன்மையை உற்று நோக்கி
2.அதன் உணர்வைக் கவர வேண்டும் என்ற ஏக்கத்தால் அதைப் பெற்றுக் கொண்டதனால்
3.அகஸ்தியன் கற்றுணர்ந்த உணர்வின் அறிவும் எனக்குள்ளும் (ஞானகுரு) வருகின்றது.
4.அதை நீங்களும் பெற வேண்டும்... உங்களுக்குள்ளும் அது வளர வேண்டும்.
5.அவன் நஞ்சை ஒளியாக மாற்றிய ஆற்றலை நீங்களும் பெற வேண்டும்.
6.விஞ்ஞானத்தால் வரும் நஞ்சுகளை எல்லாம் வென்று அதை ஒளியின் சுடராக மாற்ற வேண்டும்.



அதிகமாக டிவி கம்ப்யூட்டரைப் பார்த்தவர்களுக்கு தலைவலி நிச்சயம் வரும்... கை கால் குடைச்சலும் அதிகமாக இருக்கும். சில நேரங்களில் அதைப் பார்த்த பின் இந்த உணர்வின் அழுத்தங்கள் ஆகி மோதலாகும் போது நடந்து போகும் போது சில பேருக்குத் தலை சுற்றும்... கீழே தள்ளுகின்ற மாதிரிக் கொண்டு போகும். டாக்டரிடம் சென்றால் இரத்தக் கொதிப்பு... அது... இது... என்று எதையெதையோ பரிசீலனை செய்து காசைப் பறிக்கும் நிலைகள் தான் வரும்.



பிரபஞ்சத்தின் சக்திகள் அனைத்தும் பூமிக்குள் பெருக்காகப் பெருகுவதே "ஆடி பதினெட்டு..."

1.ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு மாதத்திலும் மனிதன் எவ்வாறு தன் நினைவுகளைக் கூட்டிக் கொள்ள வேண்டும்...? 2.தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்...? உயர் ஞானத்தை எப்படித் தனக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும்...? என்பதற்குத் தான் ஆடிப் பெருக்கு.

வருடத்திற்கு 12 மாதம் என்றால் அந்த 12 மாதத்திலும் 12 ராசிகள் என்று சொல்வார்கள். 12 மாதங்களையும் 12 ராசிகளாகப் பிரித்தனர் ஞானிகள்.

ஒவ்வொரு மாதத்திலும் அந்த மாதத்தில் சூரியனிலிருந்து வெளிப்படும் கதிரியக்கங்கள் மற்ற கோள்களில் இருந்து வெளிப்படுத்தும் உணர்வுகளையும் மற்ற நட்சத்திரங்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளையும் "ஒவ்வொரு நட்சத்திரத்தின் தொகுதி... தொகுப்பு..." என்ற நிலையில் கொண்டு வருகிறது.

12 மாதங்களிலும் இதே போன்று தான்.

1.எந்தெந்த நட்சத்திரங்கள் அந்தந்த மாதங்களில் அருகிலே ஒன்றாகக் கலந்து
2.அது கவர்ந்து கொண்ட சக்திகளை மற்ற கோள்கள் கவர்ந்து அது நமது பூமிக்கு எவ்வாறு கிடைக்கின்றது...? என்ற நிலையும்
3.அதே உணர்வின் சக்தியை நாம் எவ்வாறு நமக்குள் பெருக்கிக் கொள்ள வேண்டும்...? என்ற நிலைப்படுத்தித் தான் மாதங்களை 12 ராசிகளாகப் பிரித்தனர்.

12 ராசிகள் என்றாலும் அதிலே ஒவ்வொரு ராசிக்கும்... இரண்டு நட்சத்திரம் மூன்று நட்சத்திரம் நான்கு நட்சத்திரம் என்ற அந்த அலைவரிசைகளில் அது கலந்து அது மற்றொரு நிலைகளில் கலந்து ஒவ்வொரு கோள்களும் தனக்குள் அதை கவர்ந்து வரும்.

அப்படித் தனித்தனியாக (தொகுப்பு) வரும் நேரத்தில் நமது பூமி அந்தந்த மாதத்தில் 12 மாதங்களிலும் அதை எவ்வாறு கவர்கிறது...? என்ற நிலையைத் தான் ராசி என்று பிரித்தனர்.

அவ்வாறு பூமிக்குள் வரும் அந்த அணுக்களின் தன்மையை தாவர இனங்கள் தனக்குள் எதைச் சேர்த்துக் கொண்டதோ
1.அதனதன் வளர்ச்சிகள் அந்த மாதங்களில் வரும் பொழுது அதனுடைய பெருக்குகள் பெருகி வருகின்றது.
2.தான் கவர்ந்து கொண்ட சக்திகளைப் பெருக்கிக் கொள்கிறது என்ற நிலையை நிலைப்படுத்துவதற்குத் தான்
3.12 விதமான ராசிகளாகப் பிரித்து காட்டினார்கள்.

27 நட்சத்திரங்களும் அதற்குள் ஒன்பது கோளின் நிலைகளையும் இப்படிப் 12 ராசிகளாகப் பிரிக்கப்பட்டு... நட்சத்திரங்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளும் ஒன்பது கோள்களும் அதை எடுத்து வெளிப்படுத்தும் போது சூரியன் தனக்குள் கவர்ந்து அதனுடைய ஒளிக்கதிர்களை வெளிப்படுத்துகிறது.

அவ்வாறு கலந்து அது வெளிப்படுத்தியதை
1.நமது பூமி சுழலும் போது பூமியின் துருவப் பகுதி (வடக்கு) எந்தெந்த நட்சத்திரத்திற்கு நேர்முகமாக இருக்கின்றதோ
2.அந்தச் சக்திகளை அதன்வழி கவர்ந்து நம் பூமிக்குள் கொண்டு வருகிறது.

அதிலே வளர்த்துக் கொண்ட நிலைகள் தான் தாவர இனங்களுக்கு ராசியாகப் பெறுகின்றது.

நட்சத்திரங்களின் சத்தை மற்ற கோள்கள் எடுத்தது ஒவ்வொரு தொகுதியும் தொகுப்புகளுக்கு எவ்வாறு...

1.அதாவது எல்லை வகுப்பு... மத்திய கோடு என்ற கோடு வரிசையில் வைத்து

2.இன்னென்ன பகுதிகளில் இன்னென்ன ராசிகள் இவ்வளவு வருகின்றது...

3.இன்னென்ன வகைகளில் இன்னன்ன நட்சத்திரங்களின் சக்திகளும் கோள்களின் சக்திகளும் இந்த அளவுக்குப் பெறும் தகுதியாகப் பரவுகின்றது என்று

4.கோள்களின் சக்தியும் நட்சத்திரங்கள் சக்தியும் அது கலந்து வந்து நமது பூமியில் தாவர இனங்களில் கலவை ஆகி

5.அதே சமயத்தில் பூமிக்குள் கலவைகளாகி பாறைகளும் மற்ற கல்களும் உருவாகி... பற்பல உலோகங்களாகி

6.உலோக சக்தியிலிருந்து பூமியிலிருந்து வெளிப்படும் உணர்வுகள் ஆவியாக வெளியாகி

7.அப்படி வெளிப்படும் உணர்வுகளை மீண்டும் சூரியனின் காந்த சக்தி கவர்ந்து

8.நமது பூமியில் எவ்வாறு அதனுடைய பெருக்கங்கள் வருகிறது...? என்ற நிலையே "ஆடி பதினெட்டு..."

இப்படி... பூமி முழுவதிலுமே எல்லா வகைகளிலும் இசைந்து ஆடி வருகின்றது.

ஆக... இயக்கத்தின் தன்மைகள் ஒன்றுடன் ஒன்று அசைந்து சென்று... ஒன்றுடன் ஒன்று மோதி... மோதலுக்குத் தக்க இசைகள் ஒவ்வொன்றும் மாறுகின்றது.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

வேதனை என்ற உணர்வு உட்புகுந்து உடலுக்குள் சென்று தீமைகள் செய்யாது தடுத்தல் வேண்டும். அவ்வாறு தடுக்க வேண்டும் என்பதற்காகத் துருவ நட்சத்திரம் ஒளியின் கற்றையாக இருக்கும் அந்த உணர்வின் தன்மையை உங்களுக்குள் பதிவாக்கி உள்ளேன்.

1.அதை எடுக்கும் திறன் உங்களுக்குள் வர வேண்டும் என்பதற்காக மணிக்கணக்கில் உபதேசித்து

2.ஒவ்வொரு உணர்வின் மாற்றங்களை நீங்கள் அறிந்திடவும்

3.அறிந்த உணர்வு (ஞானம்) உங்களுக்குள் பதிவாகவும்

4.அதனின் நினைவு கொண்டு தீமைகளை அகற்றிடும் அந்த வலிமை பெற வேண்டும் என்பதற்கே இதைச் சொல்கிறேன்.

எப்பொழுது தீமை என்ற உணர்வுகள் வருகின்றதோ அப்போது அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை எடுத்துப் பதிவாக்கிக் கொண்டால் இந்த உணர்வை எண்ணும் போது உயிர் எலக்ட்ரிக்... எண்ணங்கள் எலக்ட்ரானிக்.

கோபமான உணர்வைப் பதிவாக்கி விட்டால் அதை நினைக்கும் பொழுது அது எலக்ட்ரானிக்காக மாறி... கம்ப்யூட்டரில் இயக்குவது போன்று அவன் உணர்ச்சி கொண்டு நமது உணர்வின் குணங்கள் அப்படி இயங்கி விடுகின்றது.

ஆகவே தான் தீமை என்ற உணர்வு நமக்குள் உட்புகாதபடி தடுக்க உயிரான ஈசனை எண்ணிக் கண்ணின் நினைவைப் புருவ மத்தியில் செலுத்தி அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

பல முறை துருவ நட்சத்திரத்தின் உணர்வை உங்களுக்குள் பதிவு செய்துள்ளேன். அந்த உணர்வினை மீண்டும் எண்ணி... காற்றுக்குள் மறைந்திருக்கும் உணர்வின் தன்மை நீங்கள் கவர்ந்து இங்கே இடைமறித்தால் இந்த வேதனை உள்ளே புகாதபடி தடுத்து நிறுத்தப்படும்.
1.அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வு தனக்குள் பாதுகாப்புக் கொடுத்து...
2.தீமை செய்யும் அணுக்கள் அந்த அருள் ஒளி கண்ட பின் அது அடைபட்டு விடுகிறது.

ஒவ்வொரு அணுவின் தன்மையும் நம் இரத்தத்தில் சுழன்று வரும் போது தீமை செய்யும் உணர்ச்சிகளை உந்தினால் தான் அது தன் உணர்வை அதிகமாகக் கவரும்.

ஆனால்
1.துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளி பெற வேண்டும் என்று உள் செலுத்தினால்
2.உடலுக்குள் இருக்கும் நிலைகளை எல்லாம் இது மறைத்து விடுகின்றது.

தீமையான உணர்வு உள்புகாதபடி தடுத்து நின்ற பின் ஈஸ்வரா என்று உயிரை எண்ணி அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் யார் துன்பப்படுகின்றாரோ வேதனைப்படுகின்றாரோ அவர்கள் உடலில் அது படர்ந்து அவருடைய துன்பங்கள் அகல வேண்டும் என்று நம் உணர்வின் சொல்லால் அவர் செவிகளில் பாய்ச்ச வேண்டும்.

அப்பொழுது அவர் நம்மை உற்றுப் பார்த்தால் நம்மிடமிருந்து வெளிப்படும் உணர்வுகளை நுகர்ந்து அந்த உணர்வு உயிரிலே பட்டு அந்தத் தீமைகளை அகற்றும் சக்தியாக மாறும்.

இதைச் செய்... நீ துருவ நட்சத்திரத்தின் சக்தி பெறுவாய்...! என்றால் அந்த நினைவைக் கூட்டினால் அவர்களும் காக்கப்படுவார்கள்.

நடைமுறை வாழ்க்கையில் வேதனைப்படுகிறான் என்று நுகர்ந்தால் அந்த உணர்வின் தன்மை நமக்குள் பதிவானால்... அந்த உணர்ச்சிகள் உந்தி... கண் வழி ஆன்மாவாக மாற்றி... உயிருடன் இணைக்கச் செய்து... இரத்தத்தில் கலக்கச் செய்து... அதை உணவாக எடுத்து வேதனைப்படும் அணுக்களாகப் பெருகத் தொடங்கி விடுகின்றது. நல்ல அணுக்களுக்கு இடமில்லாது போய்விடுகிறது.

அதை மாற்றி அமைக்கக்கூடிய சக்தி நீங்கள் எல்லோரும் பெற வேண்டும் என்ற ஆசையில் இதைச் சொல்கிறேன்.
1.குரு அருள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்
2.அவரால் தான் நாம் இதை அறிய முடிகின்றது.
3.அவரின் உணர்வை உங்களுக்குள் பாய்ச்சுகிறேன்

அதை நீங்கள் ஏங்கிப் பெறும் போது நீங்கள் நுகர்ந்ததை உங்கள் உயிர் அதைக் கருவாக்கி உங்கள் உடலுக்குள் அணுவாக உருவாக்கிவிடும்.
1.அதன் துணை கொண்டு உங்களைக் காத்திடும் அரும்பெரும் சக்தியாக
2.குரு அருள் உங்களில் வளர வேண்டும் என்பதற்குத் தான் இதைச் சொல்வது.



குரு அருளை உங்களுக்குள் பாய்ச்சுகிறேன். அதை நீங்கள் ஏங்கிப் பெறும் போது நீங்கள் நுகர்ந்ததை உங்கள் உயிர் அதைக் கருவாக்கி உங்கள் உடலுக்குள் அணுவாக உருவாக்கி விடும். அதன் துணை கொண்டு உங்களைக் காத்திடும் அரும்பெரும் சக்தியாக குரு அருள் உங்களில் வளர வேண்டும் என்பதற்குத் தான் இதைச் சொல்வது.



உன்னைப் போலவே ஆகும் அந்த ஆசைதான் எனக்குள் வரவேண்டும் ஈஸ்வரா...!

நான் எல்லோருக்கும் உதவி செய்தேன்... இந்த வியாபாரம் செய்தேன்... எத்தனையோ தொழில் செய்தேன் என்றெல்லாம் அடிக்கடி நாம் எண்ணுகிறோம். இருந்தாலும் அதிலே சிறு தடைப்பட்டால் என்ன நினைக்கின்றோம்...? வேதனையைத்தான் எண்ணுகின்றோம்.

நல்லதை நினைக்கின்றோம்... நடக்கவில்லை என்றால் வேதனைப்படுகின்றோம். பையனுக்கு நல்லது செய்கிறோம் சொன்னபடி நடக்கவில்லை என்றால் வேதனைப்படுகின்றோம்.

கடன் கொடுக்கின்றோம்... கொடுத்தவர் திரும்பத் தரவில்லை என்றால் வேதனைப்படுகின்றோம். அப்பொழுது எந்த ஆசை வருகிறது...? வேதனை தான் வருகிறது... அதுவே இயக்குகிறது.

1.என் ஆசை என்னுள்ளே வளர்ந்திடாமல் என்னுள்ளே என்றும் நீ இருந்து விடு.
2.நீ உயிராக இருக்கின்றாய்... ஒளியாக இருக்கின்றாய்... இருளை அகற்றுகின்றாய்... பொருளைக் காண செய்கின்றாய்.
3.நீ எப்படி உயிராக இருக்கின்றாயோ ஒளியாக இருக்கின்றாயோ என் உணர்வெல்லாம் ஒளியாக இருக்க வேண்டும்.
4.இருளை அகற்றிடும் அந்த அருள் சக்தியாக இருக்க வேண்டும்
5.உன்னைப் போல் நான் ஆகும் அந்த ஆசைதான் எனக்குள் வரவேண்டும்.

நீ உயிராக இருக்கின்றாய் என் உணர்வுகள் அனைத்தும் ஒளியாக வேண்டும். அந்த ஒளியின் சரீரம் தான் நான் பெற வேண்டும்... கடைசி நிலையாக.

தட்டான் பூச்சி இருக்கின்றது பூவிலே முட்டையிடுகின்றது. முட்டையிட்ட பின் பட்டாம் பூச்சியாக வளர்கின்றது. பூச்சி வளர்ந்த பின் பூவைப் போன்றே மாறுகின்றது.

பட்டாம் பூச்சியாக ஆன பின் அதில் இருக்கும் தேனை உட்கொண்டு வேறு ஒரு இலை மீது உட்கார்கிறது. வெயில் காலத்தில் அந்த இலையிலே வெயில் அடித்த பின் இந்த வெயிலின் கடுமை அதற்குள் படுகின்றது. அதை அதிகமாகச் சுவாசிக்கின்றது.

1.சுவாசித்த பின் அதே உணர்வாகி அந்த இலையிலேயே ஒட்டிக் கொள்கின்றது... பார்க்கலாம்.
2.அந்த இலைகளுடன் ஒட்டியபின் இந்த உணர்வுகள் சேர்த்து அதனுடைய துடிப்பும் எல்லாம் சேர்ந்த பிற்பாடு அது ஒரு வண்டாக உருவாகின்றது.

அந்த உடலே பாம்பு சட்டையை உறித்த மாதிரி அதற்குள் இருந்தே கருவாகிறது. வேறு ஒரு பூச்சியாக மாறுகிறது.

இதைப் போன்று தான்
1.துருவ நட்சத்திரத்தின் சக்தியை நமக்குள் சேர்த்துச் சேர்த்து
2.இந்த உடலில் உயிர் எப்படி ஒளியாக இருந்ததோ அதைப் போன்று நாமும் ஒளியாக ஆக வேண்டும்.

அதனால் தான் என் ஆசை என்னுள்ளே வளர்ந்திடாமல் என்னுள்ளே என்றுமே இருந்து விடு ஈஸ்வரா என்று பாடுகிறோம். நீ எப்படி இருக்கின்றாயோ என் உணர்வெல்லாம் ஒளியாக வேண்டும்.

பூச்சிகளைக் குருவி கொத்தித் தின்றது என்றால் குருவின் உடலுக்குள் சென்று குருவியாக மாறுகின்றது.

உணவுக்காக நாம் ஆட்டின் மாமிசத்தை உட்கொண்டோம் என்றால் ஆட்டின் உணர்வு நமக்குள் வருகின்றது.. ஆட்டின் மணமே வரும். உடலை விட்டுச் சென்றால் ஆட்டின் ஈர்ப்புக்குள் தான் செல்ல வேண்டி வரும். நாம் எதை எதைச் சாப்பிடுகின்றோமோ அதற்குத்தக்க அது வேலை செய்து கொண்டே இருக்கும்.

இந்த உயிரின் வேலை அது தான்.நாம் சேர்க்கக்கூடிய உணர்வுக்குத் தக்கவாறு அடுத்த உடலை மாற்றிக் கொண்டே இருக்கும். ஆகவே நாம் எதை மாற்ற வேண்டும்...?

1.பிறவியில்லா நிலை அடைந்த அந்த அருள் ஒளியை நாம் பெற வேண்டும்
2.அந்த அருள் ஒளி பெற நமக்குப் பொறுமை தேவை.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

1.கிராமப்புறங்களில் இன்று படிக்காத மக்களாக இருந்தாலும்... கவனித்து ஒரு நிலை பெற்று...
2.சிலருடைய உண்மைகளைப் பேச்சிலிருந்து அறிந்து கொள்ளும் தன்மைகள் கொண்டுள்ளார்கள்.

கல்வி கற்றோரைக் காட்டிலும் கிராமத்தில் உள்ளவர் ஒரு சொல்லை கேட்ட பின் இவன் திருடன்... இவன் திருடன் அல்லாதவன்... என்ற நிலைகளைப். புரிந்து கொள்வார்கள்.

ஆனால் திருடன் என்ற நிலை வரப்படும் பொழுது அவனை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற உணர்வு வந்து விடுகிறது..

1.அந்தத் திருடும் அறிவை நீக்க வேண்டும்...
2.அவனை நல்லவனாக்க வேண்டும் என்று வந்தால் ஒழித்துக்கட்டும் உணர்வுகள் இங்கே வராது.

ஒழித்துக் கட்ட வேண்டும் என்று வரும் பொழுது அவன் அழிகின்றான். ஆனாலும் அவன் அழிந்த பின் அவன் வேகத்தின் உணர்வுகள் பரவுகின்றது. அதனால் தான் ஒரு அசுரன் இறந்தால் அதிலிருந்து பல அசுரர்கள் வருகிறார்கள் என்று காவியங்கள் காட்டுகின்றது.

ஒரு அசுரச் செயல் வளர்ந்து...
1.அந்த உணர்வின் தன்மையை நுகர்ந்து விளைய வைத்து விட்டால்
2.அந்த அசுர உணர்வின் அணுக்கள் அதை நுகர்வோரையெல்லாம் அதே செயல்களைச் செயல்படுத்த ஆரம்பித்துவிடும்.

மகாபாரதத்தில் இராமாயணத்திலும் இது காட்டப்பட்டுள்ளது.

அந்த அசுரன் இறந்த பின் அவனுடைய உணர்வின் அலைகள் எவ்வாறு பரவுகின்றது...? கேட்டுணர்ந்தோருக்கும் இதே செயல்களை எப்படிச் செயல்படுத்துகின்றது...? இதைப் போன்ற நிலையிலிருந்து நாம் எப்படி விடுபட வேண்டும்...? என்று காவியப் படைப்பாக நமது ஞானிகள் கொடுத்துள்ளார்கள்

அதனை நாம் சற்றும் சிந்திக்கவில்லை.

இன்று நான் என்ன செய்தாலும் நாளை என்னவோ...! என்ற நிலையில் நாளைக்காகச் சேமிக்க வேண்டும் என்றால் மற்றவர்களை இம்சித்துத் தன்னைப் பாதுகாக்கும் நிலை வருகின்றது.

நாளை என்னவோ...? சரி நடப்பது நடக்கட்டும்...! என்று இருப்போரும் உண்டு. ஆனால் "நாளைக்குச் சேமிக்க வேண்டுமே" என்ற ஏக்கத்தில் உள்ளவர்கள் தன்னிடமிருந்து பறித்துச் சென்றுவிடுவார்களே... என்ற துன்பத்தைக் கொண்டு... அந்த பணத்தைச் சேமிக்கும் நிலை வருகிறது.

அப்படிச் சேமிக்கும் தன்மை வரும் பொழுது... அதை மற்றவன் பறிக்கும் தன்மை வருகிறது. இதைப் போன்ற உணர்வுகள் மனிதனுக்குள் மாறி மாறி... மனிதனுடைய சிந்தனையை அழித்திடும் நிலைகள் பரவி வருகின்றது.

ஆகவே இத்தகைய நேரத்தில் குருநாதருடைய உணர்வுகளைத் தான் இங்கே வெளிப்படுத்துகின்றோம்.

1.அவருடைய உணர்வுகள் தான் செயல்படுத்துகிறது... நான் பேசவில்லை...!

2.குரு அருளைத்தான் உங்களுக்குள் பதிவு செய்கின்றேன்.

3.அவர் எனக்குத் தெளிவாக உணர்த்தினார்... அதையே தான் உங்களுக்குள்ளும் உணர்த்துகிறோம்

இன்று நல்லதை எண்ணி ஏங்கும் நிலைகள் அனைவர் உள்ளங்களிலும் தீமையான உணர்வுகள் புகுந்து அவருடைய நல்லதைச் செயலற்றதாக மாற்றிக் கொண்டுள்ளது... வேதனையில் துடிக்கின்றனர்.

1.நல்லதுக்காக ஏங்கும் அனைவரும் பிறர் செய்யும் தீமைகளை நுகர்ந்து நல்லதை வளர்க்க முடியாதபடி தடுக்கப்பட்டு

2.அதனால் கடும் நோயும் வேதனையும் வெறுப்பும் கொண்டு

3.என்ன வாழ்க்கை...? என்று கடைசி நிமிடத்தில் ஒதுக்கும் தன்மையை வருகின்றது.

அசுர உணர்வு கொண்டவர்களோ... மற்றவரைத் தாக்கித் தான் வாழ வேண்டும் என்று பிறரைத் துன்புறுத்தும் நோக்கிலேயே செயல்படுகின்றனர். மிருகங்கள் தன் பசிக்கு மற்றவைகளைக் கொன்று பூசிப்பது போன்று மனிதன் இரக்கம் இல்லாத மிருகமாக இன்று மாறிக் கொண்டுள்ளான்.

பிறரைத் தாக்கி அவரைக் கொன்று விட்டு அவன் செல்வத்தை அபகரித்து அதைக் கண்டு ரசித்து வாழுகின்றார்கள்... அவர்கள் மகிழ்ந்தே வாழ்கின்றார்கள்... அப்படி இருந்தால் மகிழ முடியும் என்ற நிலை தான் உருவாகி உள்ளது.

இது போன்ற நிலைகள் தான் இன்று அதிகரித்துள்ளது. இதிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

அதிலிருந்து காத்துக் கொள்ளும் சக்தியாகத்தான் குருநாதர் காட்டிய வழியில் அந்தத் துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை உங்களுக்குள் ஆழமாகப் பதிவு செய்கின்றோம். பதிவான நிலைகளை நீங்கள் எண்ணி ஏங்கி அந்தச் சக்திகளைப் பெற முடியும்.

1.காலை துருவ தியானத்தில் துருவ நட்சத்திரத்தின் சக்தியை நுகர்ந்து

2.உங்கள் வாழ்க்கையில் வரும் எத்தகைய கொடிய துன்பங்களையும் அகற்ற முடியும்.

அதற்காகத்தான் இதை எல்லாம் உங்களுக்குத் தெளிவாக உபதேசித்துக் கொண்டு வருவது.





எமது ஆசியைத் தாள் பணிந்து நீங்கள் பெறுவதல்ல... கண் கொண்டு நேர்முகமாகப் பார்த்துக் கவர வேண்டியதே அது...!

தீமையை விளைவிக்கும் சக்திகள் உங்களை அடிபணியும் நிலையாக உபதேசிக்கும் உணர்வுகள் உங்களுக்குள் ஓங்கி வளர வேண்டும் என்றே ஆசீர்வதிக்கின்றேன்.

உங்கள் தாய் தந்தையரைத் தாள் பணிந்து அவருடைய அருள் பெற வேண்டும் என்று எண்ணுங்கள்.

1.என்றைக்கும் உங்களுக்குக் குரு அவர்களே தெய்வமும் அவர்களே தாயின் உயிரே கடவுள்
2.ஒருக்கிணைந்து அவர்களை அடிபணிந்தால் உங்களுக்கு வழிகாட்டிய உணர்வின் தன்மை அவர்கள் சொல்லும் வாக்கை நாம் ஏற்றிடும் நிலையும்
3.நம்மைக் காத்திடும் உணர்வுகள் பதிவு செய்தது ஓங்கி வளர்ந்து தீமைகளை

அடிபணியச் செய்து
4.மெய் உணர்வைப் பெறும் தகுதியாக நாம் உருவாக்க வேண்டும்.

குருவிடம் கேட்பதெல்லாம்... உபதேசித்த உணர்வுகள் எனக்குள் ஓங்கி வளர்ந்து என்னை அறியாது இருள் சூழ்ந்த நிலைகளுக்கு அழைத்துச் செல்லும் அந்தத் தீமைகள் அடிபணிந்து
1.மெய் உணர்வைக் காணும் நிலையாகக் குரு அருள் பெற வேண்டும் என்று கண்ணைத் திறந்து
2.நான் ஆசி கொடுக்கும் போது நீங்கள் என்னை நேர்முகமாகப் பார்ப்பதுதான் முறை.

கொடுக்கும் அருள் வாக்கின் நிலையை "நேரடியாகக் கண்கொண்டு பார்த்தால்..." கண்ணின் காந்தப் புலன் என்னைப் படம் எடுத்தாலும் கண்ணின் கருவிழி அதனுடன் இணைந்த காந்தப்புலன் யாம் வெளிப்படுத்தும் அலைகளைக் கவர்ந்து உங்களுக்குள் சுவாசிக்கச் செய்து அருள் மகரிஷிகளின் சக்தியைப் பெறச் செய்யும்.

இந்த முறைப்படி தான் நீங்கள் ஆசி பெற வேண்டும்.

ஆனால் பெரியவரை நாம் வணங்காது எப்படி இருப்பது...? என்ற தவறான வழிகள் காட்டப்பட்டதை விடாது பிடித்துக் கொண்டுள்ளார்கள். பாத நமஸ்காரம் செய்யத் தான் வருகிறார்கள். அதை விடுத்துவிடுங்கள்.

யாம் உபதேசம் கொடுக்கும் பொழுதெல்லாம்
1.யாம் கொடுக்கும் அந்த அருள் சக்திகளை
2.கண் கொண்டு பாய்ச்சும் உணர்வலைகளை
3.உபதேச வாயிலாகச் சொல்லாகச் சொல்வதை நீங்கள் உற்று நோக்கி
4.அந்த அருள் ஞானிகளின் உணர்வை நீங்கள் பெற வேண்டும் என்ற ஏக்கத்துடன்
5.கூர்ந்து கவனித்து எடுத்தால் தான் அந்த உணர்வின் தன்மை உங்களுக்குள் ஆழமாகப் பதிவாகின்றது.

ஆகவே தயவு செய்து அதன் வழி செயல்படுத்துங்கள்.

யாம் கொடுக்கும் வாக்குகள் அந்தச் சக்தி வாய்ந்த எண்ண வித்தாக விளைந்து... உங்கள் எண்ணத்தால் தீமைகளை அகற்றி... உங்களுக்குள் நன்மை பெறும் நிலையும்... அருள் ஞானம் பெறும் தகுதியையும் பெறுகின்றீர்கள்.

அந்தத் தகுதியை நீங்கள் இழந்து விடக்கூடாது என்பதற்குத் தான் படிப்படியாகச் சொல்கின்றேன்.

உபதேசிக்கும்போது அதை ஏங்கிப் பெற வேண்டும் என்ற நினைவுடன் வரும் பொழுது தான்
1.என்னுடைய ஆசீர்வாதம் அருள் சக்தியாக உங்களுக்குள் விளைந்து உயர்ந்த ஆற்றலாகப் பெருகும்
2.மறவாது நீங்கள் இதைச் செய்ய வேண்டும் என்று பிராத்தித்துக் கொள்கின்றேன்.

ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

விஞ்ஞான அறிவு கொண்டு டிவிக்களில் மனித உருக்களைப் படமாக்கிக் காட்டுகின்றார்கள்... ஒலி/ஒளி அலைகளாகப் பரப்புகின்றார்கள். எந்த அலைவரிசையில் திருப்பி வைக்கின்றோமோ அந்தப் படக் காட்சிகளையும் அதிலிருந்து வரும் சொல்களையும் காண்கின்றோம்.

இதைப் போன்று தான் ஒரு தெய்வத்தை வழிபட்டு வருகிறோம் என்றால்... அதை நமக்குள் பதிவாக்கி விட்டால்
1.பதிவான உணர்வுகள் அங்கு இருப்பது கல் சிலை தான்
2.அதிலே பல நிறங்கள் பல ஆடைகள் பல ஆபரணங்கள் எத்தனையோ விதமான அலங்காரங்கள் எல்லாவற்றையும் கண்களால் உற்றுப் பார்த்து
3.அந்த உணர்வின் அலைகளாக மாற்றித்தான் நாம் நுகர்ந்து அதை அறிகின்றோம்.

அதாவது அதன் மீது சூரியனுடைய ஒளிக் கதிர்கள் படப்பட்டு எத்தகைய கலர்கள் இருந்ததோ அந்த உணர்வலைகள் கவரப்பட்டு அந்த அலைகளாகக் கவர்ந்து வெளி வருகின்றது.

அதன் உணர்வைத் தான் நம் கண்ணின் கருவிழி தனக்குள் இதைப் பதிவாக்குகிறது. கண்ணுடன் சேர்ந்த காந்தப்புலனோ சூரியனால் கவரப்படும் இந்த அலைகளைத் தனக்குள் எடுத்து இந்த பூமியில் பரவுவதைக் கருவிழி இங்கே பதிவாக்கியதனால் இதைக் கவர்ந்து கொள்கிறது.

கவர்ந்து நமது ஆன்மாவாக மாற்றி நம் உயிரிலே இணைக்கச் செய்து இந்த உணர்வின் அலைகளை உடலில் பரப்பச் செய்து அதன் உணர்ச்சிகள் எதுவோ அதன் செயலாக்கங்களை நம்மை அறியச் செய்கிறது.

மனிதனாக இருக்கக்கூடிய நாம் அறிந்து இதை கொள்ள வேண்டும்.

நான் (ஞானகுரு) படிக்காதவன் தான்...! குரு அருளைப் பதிவு செய்து அதன் வழி உணர்ந்து கொண்ட... தெரிந்து கொண்ட நிலையைத் தான் என்று வெளிப்படுத்துகின்றேன்.

சாமி என்னமோ சொல்கின்றார்...! விஞ்ஞானத்தைப் பற்றிப் பேசுகிறார்...! என்று எண்ண வேண்டியதில்லை.
1.விஞ்ஞான அறிவு கொண்டு எதைச் செய்கின்றார்கள்...? என்று குரு அருளால் இங்கிருந்து அதை நான் காண முடிகின்றது.
2.அந்த அலைகள் பரவி இருப்பதை என்னால் நுகரவும் அறியவும் முடிகின்றது.

காரணம்... விஞ்ஞானத்தின் அபரித வளர்ச்சியால் தீமைகள் பயக்கின்றது. அதிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும் என்பதற்குத்தான் உங்களில் இதைப் பதிவாக்குகின்றேன்.

நீங்கள் நினைவு கொண்டு அந்த அருள் ஞானிகளின் அருள் உணர்வை எடுத்து "விஞ்ஞான விஷத்தன்மையால் வரும் பேரழிவிலிருந்து... உங்களை நீங்கள் மீட்டிக் கொள்ள வேண்டும்..."

எப்படிப் பல ஸ்டேஷனில் இருந்து அலைகள் வந்தாலும் டிவி.யைத் திருப்பி வைத்தவுடன்... அந்த ஸ்டேஷனுக்குரிய அலைகளை மட்டும் பிரித்து எப்படி எடுக்கின்றதோ... அதைப் போல்
1.துருவ நட்சத்திரத்தில் இருந்து வரும் ஒளி அலைகளைச் சூரியனுடைய காந்தப்புலனறிவு கவர்ந்து அலைகளாக மாற்றி வருவதை
2.இப்பொழுது பதிவாக்கிப் பதிவு கொண்ட நிலையை நினைவைக் கூட்டி அந்த வலுவினை எடுத்துக் கொண்டால்
3.நாளைக்கு எத்தனை விபரீதங்கள் விஞ்ஞானத்தில் வந்தாலும் அதிலிருந்து பிரித்து
4.நீங்கள் அந்த துருவ நட்சத்திரத்தின் உணர்வைக் கவர்ந்து உங்களைக் காக்க முடியும்
5.உங்கள் சார்புடையோரையும் நஞ்சிலிருந்து மீட்க முடியும்.

அந்த நிலையை நீங்கள் எல்லோரும் பெற வேண்டும் என்பதற்குத்தான் குரு இட்ட ஆணையை... அந்த வழிப்படி செய்கின்றேன்

சூரியன் வாழ வேண்டும் என்றாலும் தனக்கு ஒத்த கோள்களின் தன்மை சமப்படுத்தினால் தான் இதுவும் வாழ முடியும். தனக்கொத்த நிலைகளில் வந்தால் தான் சூரியக் குடும்பமே ஜீவனுடன் இருக்க முடியும்.

உதாரணமாக குடும்பத்தில் குழந்தை பிறந்து வளர்ச்சியடைந்து திருமணமான பின் தனிக் குடும்பமாக செல்கின்றார்கள்.

இது போன்றுதான் இந்தச் சூரிய குடும்பத்தைச் சேர்ந்த நட்சத்திரங்கள் தனக்கென்று நிலையில் வரப்படும் பொழுது... கார்த்திகை நட்சத்திரத்துடன் சேர்ந்து ஏனைய நான்கைந்து நட்சத்திரங்கள் தனக்கென்று ஒரு குடும்பமாகச் சூரியக் குடும்பமாகப் பிரிந்து சென்று விட்டது.
1.அவை எடுத்துச் சமைத்து நம் சூரியனுக்குக் கொடுக்கும் உணர்வுகள்
2.சூரியனுக்குக் கிடைக்காது போய் விட்டது (அதனால் மங்கல் ஏற்பட்டுக் கொண்டுள்ளது).

இருப்பினும் நட்சத்திரங்களால் வெளிப்படுத்தப்பட்டு மின்னல்களாக வருவது... அதன் உணர்வுகள் பல நிலைகள் மாறினாலும் நமது பூமிக்குள் அந்த மின்னல்கள் தாக்கப்படும் பொழுது செடி கொடிகள் கருகி விடுகின்றது.

அதே மின்னல்கள் பூமிக்குள் ஊடுருவினால் எதிர் நிலையான நட்சத்திரங்களின் அலைகள் ஒரு இடத்தில் குவியப்படும்போது இங்கு எதிர் நிலைகள் உருவாகின்றது.

சாந்த குணங்களும் நல்ல பண்புகள் கொண்டிருக்கப்படும் பொழுது ஒருவன் பயமுறுத்தும் உணர்வினை வெளிப்படுத்துகிறான் என்றால் அதை நுகர்ந்தால் உடலையே அது எப்படிக் கலக்குகின்றதோ நம்மை அஞ்சச் செய்கின்றதோ... சிலருக்கு பேதி கூட ஆகிவிடும். அவன் தன்னைக் கொன்று விடுவான் என்றால் அந்த உணர்வின் தன்மை வந்தபின் பேதியாகி விடுகிறது.

இதைப் போன்றே நட்சத்திரங்களுடைய மின் கதிர்கள் ஊடுருவி விட்டால்
1.எதிர்நிலை கொண்டு கொதிக்கலனாக மாறுகிறது... பாறைகளை உருக்கி விடுகின்றது.
2.இந்த பாறைகள் உருகி வரும்பொழுது நட்சத்திரங்கள் தாக்கிய ஒளிக்கற்றைகள் அது பலவீனமாகும் வரையிலும் குழம்பாகி
3.ஒரு நொடிக்குள் ஒரு குலுக்கு குலுக்கி விட்டு நின்றுவிடும் (நிலநடுக்கம்).

அதன் பின் பார்த்தால்... சில பாறைகளில் வெடிப்பாக இருக்கும். உருகிக் குழம்பான ஆவியின் கற்றைகள் வெளிச் செல்லும் பொழுது பாறைகளில் பல பல உலோகத் தன்மைகளும் மருந்துத் தன்மையும் பாறைகளின் நிறங்கள் மாற்றம் கைரேகை போன்று இருக்கும்.

எங்கே வெடித்ததோ அந்த ஆவியின் தன்மை சேர்ந்து மறுபடியும் அந்த சந்தை அடைத்துக் கொள்ளும்.

இவைகள் எல்லாம் இயற்கையின் நியதிகள்... ஆதியிலே கண்டவன் அகஸ்தியன்.
1.அவனுடன் சேர்ந்து விஞ்ஞானிகள் கண்டுணர்ந்த உணர்வுகளை இணைத்துப் பார்த்து
2.உலகம் எப்படி இருக்கின்றது...? என்று உங்களை நீங்கள் அறிந்து
3.இனி வரும் விஷத்தன்மைகளிலிருந்து நீங்கள் மீண்டிட வேண்டும்.

அந்த அகஸ்திய மாமகரிஷியின் உணர்வுகளை நுகர்ந்து உங்களை நீங்கள் காத்துக் கொள்ள வேண்டும். உங்கள் எண்ணம் தான் அதற்கு உதவும். எந்தச் சாமியாரும் எந்தக் கடவுளும் நம்மைக் காப்பாற்றப் போவதில்லை.



ஞானகுரு கொடுக்கும் அருள் வாக்குகள்

இயற்கையின் உண்மையின் நிலைகளை எல்லாம் குருநாதர் என்னை (ஞானகுரு) அறியும்படியும் செய்தார். பல கஷ்டங்களைக் கொடுத்து வேதனைப்படவும்

செய்தார். பல சிரமப்பட்டுக் கஷ்டப்பட்டு அனுபவபூர்வமாகப் பெற்ற உண்மைகளைத் தான் உங்களிடம் சொல்லிக் கொண்டு வருகின்றேன்.

1.வேதனைப்பட்டதைச் சொல்லிக் கொண்டு வந்தால் என்ன ஆகும்...? வேதனை தான் வளரும்.
2.ஆனால் நல்லதாகும் என்று சொன்னால் நல்லதாகும்.

இதே மாதிரித் தான் குடும்பத்தில் கஷ்டங்கள் வந்தால் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும்... எங்கள் உடல் நலம் பெற வேண்டும்... நன்றாக இருக்க வேண்டும் என்று உயர்ந்ததாக எண்ண வேண்டும்.

ஆனால் பையன் படிக்கப் போனானே... என்ன ஆச்சோ...? போனானா வந்தானா... என்ன ஆனது...? என்று தெரியவில்லையே...! என்று எண்ணி அவன் சரியாகப் படிக்கவில்லையே... படிக்கவில்லையே...! என்று இந்த உணர்வை எடுத்தோம் என்றால் "அங்கே அவனால் சரியாகப் படிக்க முடியாது..."

பையன் சுட்டித்தனம் பண்ணுகின்றான்... அவன் செய்யும் குறும்புத்தனம் தாங்க முடியவில்லை...! என்று இப்படியே எண்ணினால்
1.அவனுக்குள் குறும்புத்தனம் செய்யும் உணர்வைத் தான் வளர்க்க முடியும்.
2.அவனைக் காணும் பொழுதெல்லாம் வெறுப்பு தான் வளரும்.

அதற்குப் பதிலாக... அவனுக்கு அருள் கிடைக்க வேண்டும் பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும் அவனுக்கு ஞானம் கிடைக்க வேண்டும் அவன் நன்றாகப் படிக்க வேண்டும் என்று சொல்லிப் பாருங்கள். "நாளடைவில் அவன் ஞானமாக வருவான்..."

ஏனென்றால் குடும்பத்தில் எத்தனையோ விதமான நிலைகள் இருக்கும் இன்றைக்கு இருக்கின்றோம்... நாளை எங்கே செல்கின்றோம்...? என்று யாருக்குத் தெரியும்...! என்ற நிலை தான் இருக்கின்றது.

சேர்த்து வைத்த சொத்துக்களோ சம்பாதித்து வைத்த பணமோ நம்முடன் வருகின்றதா...? இல்லையே.
1.ஆக நமக்கு அழியாச் சொத்து அந்த துருவ நட்சத்திரத்தின் உணர்வுகள் தான்...
2.அதை வளர்த்தால் அங்கே போகின்றோம்.

என் பிள்ளை இப்படி இருக்கின்றானே... என் பிள்ளைக்கு இப்படியெல்லாம் இடைஞ்சல் செய்தார்களே...! என்று
1.இது போன்று உணர்வுகளை யாரை எண்ணி அதிகமாக வளர்த்தோமோ
2.இந்தச் சொத்தை தேடி வைத்த நிலைகள் கொண்டு அவன் உடலுக்குள் தான் செல்ல முடியும்.

அவர்களையும் தரித்திரமாக்கி உணர்வின் தன்மை மாற்றிவிட்டு ஆடாகவோ மாடாகவோ பிறக்கத்தான் நேரும். இல்லையென்றால் அடுத்த உடலுக்குள் பேயாகச் சென்று அந்தக் குடும்பத்தையும் அழித்துவிட்டு நாயாகவோ பாம்பாகவோ தேளாகவோ பிறக்க வேண்டி வரும்... மீள முடியாது.

ஏனென்றால் இதைத்தான் குருநாதர் காட்டிற்குள் என்னை அழைத்துச் சென்று பல நிலைகளைக் காட்டி அந்த உண்மைகளை உணரும்படி செய்தார்.

இன்றைய விஞ்ஞான உலகில் கடுமையான விஷத்தன்மைகள் பரவிக் கொண்டுள்ளது. எந்தக் காரணத்தை கொண்டும் அந்த விஷம் நம்மை அழித்து விடக்கூடாது. உலகம் அழியப் போகிறது என்கிறார்கள்... விஷ உலகம் தான் அழிகின்றது

எம்மைச் சந்தித்த ஏராளமான குழந்தைகளுக்கு அருள் ஆசி கொடுத்துள்ளேன்... கருவுற்ற தாய்மார்களுக்கு ஆசி கொடுத்துள்ளேன்.

அந்தக் குழந்தைகள் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும்... உலகைக் காத்திடும் அருள் ஞானம் பெற வேண்டும் என்று அவர்கள் ஆர்வத்தில் வரும் பொழுது இதைக் கொடுத்துள்ளேன். அந்த மாதிரிக் குழந்தைகள் ஞானக் குழந்தைகளாக வருவார்கள்.

1.அகஸ்தியன் தாய் கருவிலே பெற்ற சக்தியின் துணை கொண்டு எப்படி உலகை அறிந்தானோ உலகைக் காக்கும் சக்தியாக வளர்ந்தானோ
2.அவன் உணர்வை எடுத்து இங்கே கர்ப்பமான பெண்களுக்குப் பாய்ச்சப்படும் பொழுது அந்த அறிவின் ஞானம் வளர்கின்றது
3.விஞ்ஞான உலகில் இருந்து மீட்கக் கூடிய சக்தியாக அவர்கள் வளர்வார்கள்
4.விஷத் தன்மைகள் அழிந்துவிடும்.. அரும் பெரும் ஞானிகள் தோன்றுவார்கள்.

காரணம் தென்னாட்டில் தோன்றியவன் தான் அகஸ்தியன். அதே தெற்கிலிருந்து தான் இந்த உலகை மீட்டிடும் சக்திகளும் வரப்போகின்றது.

விஞ்ஞானத்தால் பல பேரழிவுகள் வந்தாலும்... அகஸ்தியனின் உணர்வுகள் இங்கே பரப்பப்பட்டுப் பேரழிவிலிருந்து தப்பும் மனிதர்களாக உருவாக்கும். ஆகவே உங்களை நீங்கள் நம்புங்கள்.

இனிமேல் இதை எல்லாம் காணலாம்.

இன்றைய உலகம் எங்கோ போவதாகத் தெரிந்தாலும்... நாம் இந்த உடலை விட்டு எப்பொழுது பிரிந்தாலும் பிறவி இல்லா நிலை அடைதல் வேண்டும்.

ஒவ்வொரு நிமிடத்திலும் எத்தகைய துன்பங்கள் வந்தாலும்
1.துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி நாங்கள் பெற வேண்டும்
2.எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் என்று இதை மட்டும் கூட்டிக் கொள்ளுங்கள்.

நோயுற்றவர்களைக் காண நேர்ந்தால் அந்த நோயிலிருந்து அவர் விடுபட வேண்டும் அவர் உடல் நலம் பெற வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்.
1.அது தான் நாம் சொந்தமாக்க வேண்டியது
2.என்னை இப்படிப் பேசினானே... அவனைச் சும்மா விடுவதா...? என்று இதைச் சொந்தமாக்க வேண்டாம்.

அதைச் சொந்தமாக்கினால் மீண்டும் பிறவிக்குத் தான் அந்த உடலுக்குள் தான் செல்ல வேண்டி வரும்.

ஆகவே அருளை நாம் சொந்தமாக்குவோம். இருளை அகற்றுவோம்... மெய்ப்பொருளைக் காண்போம்... மெய் வழி வாழ்வோம்... அருள் ஞானம் பெறுவோம்... அருள் வாழ்க்கை வாழ்வோம்.



https://eswarayagurudevar.com/